ம.பொ.சி. யின் வாழ்க்கை வரலாற்று இலக்கியங்கள்

முனைவர் யோ. ஞான. சந்திர ஜாண்சன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

ம.பொ.சி.யின்
வாழ்க்கை வரலாற்று இலக்கியங்கள்

முனைவர் யோ. ஞான சந்திர ஜாண்சன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113

ம.பொ.சி. அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியோர் : பலர்)

வரிசை எண் : 11

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	Ma.po.ci.yi<u>n</u> vā<u>l</u>kkai varalā<u>rr</u>u ilakkiyaṅkaḷ
Author	:	Dr. Y. Gnana Chandra Johnson Associate Professor, Dept. of Tamil Madras Christian College Chennai - 600 059
General Editor	:	Dr. D. Renganathan Associate Professor Faculty of Tamil Language and Linguistics International Institute of Tamil Studies Tharamani, Chennai-600 113
Publisher & ©	:	International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus, Chennai-600 113 Ph: 22542992
Publication No.	:	642
Language	:	Tamil
Edition	:	First
Year of Publication	:	2009
Paper Used	:	18.6 Kg TNPL Maplitho
Size of the Book	:	1/8 Demy
Printing type used	:	10 Point
No. of Pages	:	viii+168
No. of Copies	:	1200
Price	:	Rs. 60/- (Rupees Sixty Only)
Printed by	:	United Bind Graphics 189-D, Royapettah High Road Mylapore, Chennai - 600 004.
Subject	:	Biographical sketches written by M.P. Sivagnanam

அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று.

பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

அணிந்துரை

ம.பொ. சிவஞானம் என்ற ம.பொ.சி. அவர்கள் தமிழகம் அறிந்த தமிழ்ச் சிந்தனையாளர். 1944ஆம் ஆண்டு 'கப்பலோட்டிய தமிழன்' எனும் நூல் எழுதிய இவர் 1995இல் வெளிவந்த 'எம்.ஜி.ஆருடன் எனக்கிருந்த தொடர்பு' எனும் நூல் எழுதிய காலம்வரை பல நூல்கள் எழுதியுள்ளார். வரலாற்று நூல்கள், இலக்கியம் பற்றிய நூல்கள், பயண நூல்கள், மொழிச் சிந்தனை குறித்த நூல்கள், விடுதலைப் போராட்டங்கள் குறித்த நூல்கள் எனப் பல தளங்களில் இவரது நூல்கள் வெளிவந்தன. 'எனது போராட்டம்' எனும் இவரது வாழ்க்கை வரலாற்று நூல் இரண்டு பாகங்களாக வெளிவந்துள்ளது. இந்நூலின் வழியே இவர் தமிழருக்கும் தமிழ்மொழிக்கும் ஆற்றியுள்ள உழைப்பு, தியாகம் போன்றவை நன்கு வெளிப்படும். இவர் தமிழுக்கும் தமிழருக்கும் உழைத்த உழைப்பைப் பதிவு செய்ததோடு தமிழ் இலக்கியத்துக்கும் தமிழருக்கும் பல நிலைகளில் உழைத்த உழைப்புக்களை எல்லாம் பதிவு செய்துள்ளார்.

கட்டபொம்மன், வள்ளலார், சிங்காரவேலர், வ.உ.சி., இராஜாஜி, கிருஷ்ணசாமி பாவலர் ஆகியோரது வாழ்க்கை வரலாற்றையும், தமிழ் மக்களுக்கும், தமிழ்மொழி வளத்துக்கும் அவர்கள் இலக்கிய வழி ஆற்றிய பங்களிப்புக்களையும் தெளிவாகப் பதிவு செய்துள்ளார்.

உழைக்கும் வர்க்கத்திலிருந்து காங்கிரஸ் பேரியக்கத்துக்குள் வந்து சேர்ந்தவர் இவர். தொழிலாளிகளின் பிரச்சினைகளுக்காகப் பல நிலைகளில் அவர்களுடன் சேர்ந்து தொடர்ந்து போராடி வந்த ஒரு நல்ல அரசியல்வாதியாக ம.பொ.சி. விளங்கினார். தோழர் ஜீவாவுடன் நல்ல தோழமை கொண்டவராக விளங்கியமை நல்ல சான்றாகும். எளிய வாழ்க்கை; கதர் ஆடை அணிந்து எப்போதும் காணப்படுபவர்; குட்டையான தோற்றம்; நரைத்த முறுக்கு மீசைக்குச் சொந்தக்காரர். தமிழக எல்லைகளை மொழிவாரியாகப் பிரிக்கும்போது இவரது பங்களிப்புகள் அளவிட முடியாதவையாக இருந்தன.

வேலூர், தஞ்சை எனப்பல ஊர்ச் சிறைச் சாலைகளில் பல்வேறு காரணங்களுக்காகத் தமிழ் மக்கள் நலன் குறித்த போராட்டங்களில் ஈடுபட்டதன் விளைவாகச் சிறை புகுந்த தியாகி இவர்.

ஏகாதிபத்தியத்தை வெளியேற்றாத நிலையில் வட இந்திய ஆதிக்கத்தை மட்டும் எதிர்த்துத் தமிழர் போராட்டம் நடத்தினால் அது ஏகாதிபத்தியத்துக்குத் துணைசெய்யும் உள்நாட்டுக் குழப்பமாக இருக்குமே யன்றித் தமிழருக்குப் பூரண விடுதலையளிக்கும் சுதந்திர இயக்கமாக இருக்க முடியாது

(இரண்டாம் பாகம், ப. 67)

எனும் இவரது தொலைநோக்குப் பார்வை நல்ல அரசியல்வாதியாக இவரைத் தமிழருக்கு அடையாளம் காட்டியது.

காந்தியவாதிகளோடும், மார்க்சியவாதிகளோடும் தேவையான காலகட்டங்களிலெல்லாம் இணைந்து போராடித் தமிழ்ச் சமூக மேம்பாட்டுக்காக நாள்தோறும் சிந்தித்து எழுதிய கருத்தோவியராகவும், செயலாற்றிய செயல் வீரராகவும் காணமுடிகிறது. இந்தச் சான்றுகளை இந்நூலின் பக்கங்கள்தோறும் நூலாசிரியர் எடுத்துக்காட்டிப் பதிவு செய்திருக்கின்றார். நூலாசிரியருக்கும் என் பாராட்டுக்கள் என்றுமுண்டு.

இந்நூலில் ஒரு பிழையேனும் வந்திடலாகாது எனும் நோக்கில் கவனங்கொண்டு திருத்தங்கள் மேற்கொண்ட இவ்வறக்கட்டளைப் பொறுப்பாளராக இருந்துவரும் இந்நிறுவன இணைப்பேராசிரியர் தா. ரெங்கநாதன் அவர்களின் உழைப்பு பாராட்டுதற்குரியது.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் **நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர்** அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளது.

தமிழ்ப்பணிகளுக்கு ஆற்றுப்படுத்தி வரும் **மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன்** அவர்களுக்கு எம் நன்றி என்றும் உரியது.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் **தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் திரு க. முத்துசாமி இ.ஆ.ப.** அவர்களுக்கும் நன்றி.

இச்சொற்பொழிவின் எழுத்துருவை மெய்ப்புத் திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதன் அவர்களுக்கும், இச்சொற்பொழிவு மற்றும் நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள் மற்றும் கணிப்பொறியாளர் திருமதி எ.ம. லட்சுமி ஆகியோருக்கும் எம் நன்றிகள் என்றுமுண்டு. இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தாருக்கு எம் பாராட்டுகள்.

இயக்குநர்

ஆசிரியர் குறிப்பு



இவர் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள திருத்தமுறைக் கிறித்தவர்களின் புண்ணியபூமி என்று அழைக்கப்படும் மயிலாடி (Mylaudy) எனும் ஊரில் பிறந்தவர். நாகர்கோவிலிலுள்ள தெ.தி. இந்துக் கல்லூரியின் மூலம் தமிழ் இலக்கியத்தில் முதுகலை (M.A.), இளநிலை ஆய்வு (M.Phil.), முனைவர் (Ph.D.) எனும் பட்டங்களைப் பெற்றவர். இவரது முனைவர் பட்ட ஆய்வின் பொருள் "நீல. பத்மநாபன் நாவல்களில் பாத்திரப் படைப்பு" என்பதாகும். தற்போது வரலாற்றுச் சிறப்புமிக்க சென்னைக் கிறித்தவக் கல்லூரித் தமிழ்த்துறையில் இணைப்பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். மேலும் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் செயல்பட்டுவரும் தேசிய மாணவர் படையின் (NCC) கப்பற்படைப் பிரிவின் (Naval Wing) அதிகாரியாகவும் செயல்பட்டு வருகிறார். இவரது மேற்பார்வையின் கீழ் 12 பேர் முனைவர் பட்டமும் 25 பேர் இளநிலை ஆய்வுப் பட்டமும் பெற்றுள்ளனர். கிறித்தவத் தமிழ் இலக்கிய ஆய்வுகளில் மாணவர்களை நெறிப்படுத்தியும் ஊக்கப்படுத்தியும் வருகிறார். தமிழ்க் கிறித்தவ இலக்கியங்களில் தணியாத தாகமும் குறிப்பாகக் கிறித்தவக் கீர்த்தனைகளில் மாளாத ஈடுபாடும் கொண்டவர். அரிய பல தகவல்கள் நிறைந்த "கிறிஸ்தவக் கீர்த்தனைக் கவிஞர்கள்" எனும் நூலைக் கீர்த்தனா பதிப்பகத்தின் மூலம் 2003 ஆம் ஆண்டு வெளியிட்டார். கன்னியாகுமரி மாவட்டத்தின் ஆதித் திருச்சபையாகிய மயிலாடித் திருச்சபையின் 200 ஆம் ஆண்டு விழாவின்போது வெளியிடப்பட்ட சிறப்பு மலரின் தொகுப்பாசிரியர். சாகித்திய அகாடமி 2008 ஆம் ஆண்டு "எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை" எனும் இவரது நூலை வெளியிட்டது. சென்னைக் கிறித்தவக் கல்லூரித் தமிழ்த்துறையின் மூலமாக வெளியிடப்பட்டு இரு தொகுதிகளாக வெளிவந்த "கிறித்தவத் தமிழியல் ஆய்வுக்கோவை" எனும் நூலின் பதிப்பாசிரியர். ஆசியவியல் நிறுவனம் 2008 இல் வெளியிட்ட "கிறிஸ்தவத் தமிழிலக்கியம் - ஓர் அறிமுகம்" எனும் நூலினை டாக்டர் அருள்திரு. தி. தயானந்தன் பிரான்சிஸ் அவர்களுடன் இணைந்து பதிப்பித்துள்ளார். கிறிஸ்தவக் கவிஞர் ஜான் பால்மர் எழுதிய "கிறிஸ்தாயனம்" எனும் கிறித்தவக் காப்பியத்தினை ஆசியவியல் நிறுவனத்தின் மூலம் பதிப்பித்தார். இவரது கிறித்தவத் தமிழ்ப் பணிகளைப் பாராட்டி உலகக் கிறித்தவத் தமிழ்ப் பேரவை இவருக்குத் தமிழ் மாமணி விருதினை வழங்கிச் சிறப்பித்தது. தமிழ்க் கிறித்தவ ஆய்வுகளில் தொடர்ந்து முனைப்போடு ஈடுபட்டு வருகிறார்.

நன்றியுரை

சிலம்புச் செல்வர் என்று அனைவராலும் அழைக்கப்படும் டாக்டர் ம.பொ.சிவஞானம் அவர்கள் ஒரு பல்கலைக்கழகமாகத் திகழ்ந்தவர். இவர் தனது கடின உழைப்பாலும், முயற்யாலும் வாழ்க்கையில் முன்னேறி, தானாக நூல்கள் பல பயின்று, ஏராளமான நூல்கள் படைத்து இலக்கிய உலகிலும், அரசியல் உலகிலும் சிகரத்தைத் தொட்டவர். சுமார் 140 க்கும் மேற்பட்ட நூல்களை எழுதிய இம்மாமனிதரின் ஆரம்பக்கால வாழ்க்கை ஏழ்மையானது. இவரது நூல்கள் வாயிலாக இராஜாஜி போன்ற பெரியோர்களைப் பற்றியும், விடுதலைப் போராட்டம் பற்றியும், தமிழ்மொழி பற்றியும், சிலப்பதிகாரம், கம்பராமாயணம் போன்ற இலக்கியங்கள் பற்றியும் மிகத் தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது. தன் வரலாறு மற்றும் பிறர் வரலாற்று நூல்கள் எப்படி எழுத வேண்டும் என்பதற்கு இவரது வாழ்க்கை வரலாற்று நூல்கள் சிறந்த எடுத்துக்காட்டுகளாகவும் வழிகாட்டுதல்களாகவும் திகழ்கின்றன. இவரது வாழ்க்கை வரலாற்று நூல்கள் பற்றிய திறனாய்வு நூல் ம.பொ.சி. அறக்கட்டளைச் சொற்பொழிவு மூலம் வெளிவருவது சிறப்புடையதாகும்.

ம.பொ.சி. யைப் பற்றி விரிவாக எனக்குத் தெரியாது. ம.பொ.சி. ஒரு விடுதலைப் போராட்ட வீரர், நூல்கள் பல எழுதியிருக்கிறார் என்று மட்டுமே தெரியும். புகுமுக வகுப்பில் "கம்பர் கவியின்பம்" எனும் நூலைப் படித்த காலத்தில் எனக்கு மட்டுமல்ல என்னுடன் படித்த மாணவர்கள் அனைவருமே அந்த நூலின் மூலம் ம.பொ.சி. யின் மீது அதிக மதிப்பு உடையவர்களாகக் காணப்பட்டோம். அதற்கு மற்றுமொரு காரணம் 'கம்பர் கவியின்பம்' நூலைப் பயிற்றுவித்த டாக்டர் அ. காக்கும் பெருமாள் அவர்கள். குறிப்பாக 'வாலியைக் கொன்றது நீதியா? அநீதியா?' எனும் இறுதிக் கட்டுரை எங்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றது. ஆசிரியர் பாடம் நடத்துவதற்கு முன்னரே நாங்கள் அந்நூலைப் படித்து முடித்து விட்டோம். பல ஆண்டுகளுக்குப் பின்னர் ம.பொ.சி. யைப் பற்றி விரிவாக அறிந்து கொள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் எனக்கு ஓர் அரிய வாய்ப்பு நல்கியதைப் பெரும் பேறாக எண்ணி மகிழ்கின்றேன்.

இந்த அறக்கட்டளைச் சொற்பொழிவை நிகழ்த்தி நூல் வெளியிடவும் காரணமாக இருந்த உலகத் தமிழாராய்ச்சி

நிறுவனத்தின் இயக்குநர் முனைவர் கரு. அழ. குணசேகரன் அவர்களுக்கும், டாக்டர் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அறக்கட்டளைப் பொறுப்பாளர் முனைவர் தா. ரெங்கநாதன் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்கு முந்தைய ம.பொ.சி. அறக்கட்டளைச் சொற்பொழிவினைத் 'தமிழக எல்லைப் போராட்டங்கள்' எனும் தலைப்பில் நிகழ்த்தியவர் மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறையின் இணைப்பேராசிரியர் டாக்டர் முகிலை இராசபாண்டியன் அவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் தன்னிடம் இருந்த ம.பொ.சி. பற்றிய அனைத்து நூல்களையும் எனக்குத் தந்து, உதவி செய்து, ஆலோசனை நல்கி, வழிகாட்டி ஊக்கப்படுத்தினார். அதற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இந்நூல் எழுதுவதில் எனக்குப் பலவகைகளிலும் உதவி செய்து ஊக்கப்படுத்திய பிரின்ஸ் ஸ்ரீவெங்கடேஸ்வரா கலை மற்றும் அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறை விரிவுரையாளர் டாக்டர் திருமதி பா. தனவந்தினி பிரகாசம் அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், பிரின்ஸ் ஸ்ரீவெங்கடேஸ்வரா கலை மற்றும் அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறை விரிவுரையாளர் திருமதி ஜோ. அந்தோணி ஜெயஷீலா அவர்களுக்கும், வரலாற்றுச் சிறப்புமிக்க சென்னைக் கிறித்தவக் கல்லூரித் தமிழ்த்துறையின் இணைப்பேராசிரியர் டாக்டர் சா. பாலுசாமி அவர்களுக்கும், புதுதில்லியிலுள்ள திருவேங்கடவன் கல்லூரித் தமிழ்த்துறையின் இணைப்பேராசிரியர் டாக்டர் சிவ. விவேகானந்தன் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிடைப்பதற்கு அரியதாகக் காணப்பட்ட சில நூல்களை நகல் எடுத்துத் தந்து உதவிய ம.பொ.சி. யின் பெயர்த்தி டாக்டர் திருமதி தி. பரமேசுவரி அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுபோன்று சில நூல்களைத் தேடித் தந்துதவிய பூங்கொடிப் பதிப்பக உரிமையாளர் திரு. சுப்பையா அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவண்,

யோ. ஞான சந்திர ஜாண்சன்

பொருளடக்கம்

		பக்கம்
1.	முன்னுரை	1
2.	வாழ்க்கை வரலாற்று இலக்கியம்	4
3.	எனது போராட்டம் (தன் வரலாறு)	14
4.	வீரபாண்டிய கட்டபொம்மன்	57
5.	வள்ளலார்	72
6.	சிங்காரவேலர்	92
7.	வ.உ. சிதம்பரம் பிள்ளை	102
8.	இராஜாஜி	116
9.	கிருஷ்ணசாமி பாவலர்	135
10.	ம.பொ.சி. யின் படைப்பாளுமைத் திறன்	149
பின்னிணைப்பு		163
துணைநூற்பட்டியல்		167

முன்னுரை

சிலம்புச் செல்வர் ம.பொ.சி. ஒரு மிகச் சிறந்த கல்விமான், ஓர் உயர்ந்த சிந்தனையாளர், ஒரு சுதந்திரப் போராட்ட வீரர். அரசியல், இலக்கியம், கலை ஆகியவற்றில் ம.பொ.சி.யின் பணி குறிப்பிடத்தக்கது. இவர் தமது படைப்புகளை இலக்கிய அறிவு, அனுபவ அறிவு எனும் இரண்டின் பின்னணியில் படைத்துள்ளார். ம.பொ.சி. அவர்கள் எளிய குடும்பத்தில் பிறந்து, நெசவுத் தொழிலாளியாக இருந்து பின்னர் அச்சுக் கோக்கும் தொழிலாளியாக வாழ்க்கையைத் தொடங்கி, பல துன்பங்களை அனுபவித்து, தமிழ் உணர்வு மிக்கவராகவும், தேசிய உணர்வு கொண்டவராகவும், காந்திய வாதியாகவும் வாழ்ந்து, தமிழக எல்லைப் போராட்டங்களில் மிகுந்த பங்கு கொண்டு, சுமார் நூற்று நாற்பதுக்கும் மேலான நூல்களைப் படைத்துள்ளமை இவரது உழைப்பையும் நுண்ணறிவுத் திறனையும் எடுத்துக்காட்டுகின்றன.

இவருடைய படைப்புகள் பல திறத்தன. அவற்றை வாழ்க்கை வரலாற்று நூல்கள், பயண நூல்கள், மொழிச் சிந்தனை பற்றிய நூல்கள், இலக்கியம் பற்றிய நூல்கள், விடுதலைப் போராட்டம் பற்றிய நூல்கள், ஆன்மீக நூல்கள், சொற்பொழிவுகளின் தொகுப்பு நூல்கள், கட்டுரைகளின் தொகுப்பு நூல்கள், பேச்சுக்கலை பற்றிய நூல்கள், இனவழி ஆராய்ச்சி நூல்கள், மாநிலத் தன்னாட்சி நூல்கள் எனப் பல வகைகளாகப் பகுக்கலாம். ம.பொ.சி. யின் முதல் நூல் 1944 ஆம் ஆண்டு வெளிவந்த கப்பலோட்டிய தமிழன் என்பதாகும். ம.பொ.சி. யின் கடைசி நூல் 1995 இல் வெளிவந்த எம்.ஜி.ஆருடன் எனக்கிருந்த தொடர்பு எனும் நூலாகும். இவருடைய ஐந்து நூல்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனது போராட்டம் எனும் இவரது வாழ்க்கை வரலாற்று நூல் இரண்டு பாகங்களாக வெளிவந்துள்ளது. இந்நூலில் ம.பொ.சி. யின் வாழ்வில் நடந்த பெரும்பாலான நிகழ்ச்சிகள் இடம்பெற்றுள்ளன. வள்ளலாரின் வாழ்க்கை மற்றும் அவரது கொள்கைகளில் ஈர்க்கப்பட்டு, அவருடைய திருவருட்பா மற்றும் பல நூல்களில் பெற்ற கருத்துகளால் சாகித்திய அகாடமியின் பரிசைப் பெறும் அளவிற்கு 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' எனும் 528 பக்கங்கள் உள்ள நூலை எழுதியுள்ளார். வள்ளலாரிடம் கொண்ட ஈடுபாட்டின்

காரணமாக வள்ளலார் குறித்து ஏழு நூல்களை எழுதியுள்ளார். சிலப்பதிகாரத்திற்கு முழுமையாக உரை எழுதியது மட்டுமன்றிச் சிலப்பதிகாரம் தொடர்பான பன்னிரண்டு திறனாய்வு நூல்களையும் எழுதியுள்ளார். சிலம்பின் மீதிருந்த ஆர்வம் மற்றும் புலமையின் காரணமாகச் சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் ம.பொ.சி. அவர்களுக்குச் சிலம்புச் செல்வர் எனும் பட்டத்தை வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் கம்பராமாயணத்திலும் நல்ல புலமை உடையவர். தமிழ் மொழிக் கல்வியை ம.பொ.சி. ஆதரித்தார். இதனால் தமிழ் மொழி தொடர்பாகப் பதினொரு நூல்களைப் படைத்துள்ளார்.

காந்தியடிகளிடம் தொடர்பு உடையவர். காந்தியத்தைத் தமது வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்து வந்தார். இதனால் இவர் காந்தியடிகள் தொடர்பாக ஆறு நூல்களை எழுதியுள்ளார். விடுதலைப் போரில் பங்கு கொண்ட அப்பழுக்கற்ற தேசியவாதியாகத் திகழ்ந்தார். இந்திய விடுதலைப் போரில் ஆறு முறையும், தமிழக வடக்கெல்லைப் போரில் இரண்டு முறையுமாக மொத்தம் எட்டு முறை சிறை சென்றார்.

முன்னாள் பிரதமர் மொரார்ஜி தேசாயின் முன்னிலையில் அறிஞர் கே. பாலசுப்பிரமணிய அய்யர் ம.பொ.சி. யை "இந்தியாவின் டெமாஸ்தனிஸ்" என வருணித்தார். டாக்டர், சிலம்புச் செல்வர், பத்மஸ்ரீ எனும் பல பட்டங்களை ம.பொ.சி. பெற்றுள்ளார். தமிழர்களின் நல்வாழ்வு ஒன்றையே தமது நோக்கமாகக் கொண்டு அதற்காக 1946 ஆம் ஆண்டு நவம்பர் 21 ஆம் நாள் தமிழரசுக் கழகத்தைத் தோற்றுவித்தார். தமிழ், தமிழர், தமிழ்நாடு, தமிழ் இனம் எனும் இந்நான்கும் ம.பொ.சி. யின் இலட்சியமாக இருந்தன.

பத்திரிகை ஆசிரியராக இருந்து சிறந்த இலக்கியப் பணியாற்றினார். கிராமணி குலம், தமிழ்முரசு, தமிழன் குரல், செங்கோல் எனும் இதழ்களைத் தொடங்கி அதன் ஆசிரியராக இருந்து தமிழ்ப்பணி யாற்றினார். ம.பொ.சி. 1950 ஆம் ஆண்டு டிசம்பர் முதலாம் நாள் செங்கோல் வார இதழைத் தொடங்கினார். ம.பொ.சி. யின் ஐம்பது ஆண்டுகாலப் பத்திரிகைப் பணியில் செங்கோல் எனும் வாரஇதழ் நாற்பத்து ஐந்து ஆண்டுகாலமாகத் தமிழ்ப் பணியாற்றியது. செங்கோல் இதழின் ஆசிரியராக ம.பொ.சி. இருந்தபோதிலும் தமிழன், தேசியவாதி எனும் புனைபெயர்களில் கட்டுரைகள் எழுதினார். 1995 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 13 ஆம் நாளுடன் செங்கோல் பத்திரிகை நின்று விட்டது.

மூதறிஞர் இராஜாஜி, பெருந்தலைவர் காமராசர், நாமக்கல் கவிஞர், அறிஞர் அண்ணாதுரை, கலைஞர் கருணாநிதி, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோரிடம் நெருங்கிப் பழகியவர். ம.பொ.சி. யின் ஐம்பதாம் ஆண்டு நிறைவு விழாவின்போது பல அறிஞர்களும், பல பத்திரிகைகளும் பாராட்டினர். ம.பொ.சி. யை ஆனந்த விகடன் இதழும் பாராட்டியது. அதிலிருந்து சில பகுதிகள்:

> திரு. சிவஞானம் கொள்கைக்காக உழைப்பவர்; துவேஷம், கட்சி வெறி இல்லாதவர். எழுத்தாளர் சங்கத்தின் தலைவராகப் பணியாற்றிய போது, தமது தமிழ்ப் பற்றின் காரணமாகவே தமிழகத்தில் தமிழே ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தார்..... ம.பொ.சி. பொதுவாழ்வில் இளம் வயதிலிருந்து ஈடுபட்டு மொழி, கலாசாரம், இலக்கியம், அரசியல் எனும் எல்லாத் துறைகளிலும், தமது சேவைகளைப் பிரசங்கமெனும் சக்தியினால் செய்து, இலட்சக்கணக்கான பெருமக்களின் மதிப்பைப் பெற்றிருக்கிறார். நல்லொழுக்கமும், தளராத உழைப்பும், செம்மையான மொழிப்பற்றும், தனக்கென்று தேடிக்கொள்ளும் மனப்பான்மை இல்லாமையும் அவர் செல்வாக்கை மிக உயர்த்தியிருக்கின்றன.
>
> (தமிழகம் தந்த ம.பொ.சி., ப. 42)

ம.பொ.சி. தன் வாழ்க்கை வரலாற்றை, "எனது போராட்டம்" எனும் நூலின் வாயிலாக விவரித்துள்ளார். இந்நூல் ஒரு சிறந்த வரலாற்றுப் பெட்டகமாகத் திகழ்கின்றது. மேலும் கட்டபொம்மன், வள்ளலார், சிங்காரவேலர், வ.உ.சி., இராஜாஜி, கிருஷ்ணசாமி பாவலர் ஆகியோர்களது வாழ்க்கை வரலாற்றைத் தனித் தனி நூலாக எழுதி வெளியிட்டுள்ளார். வரலாற்றுப் பெட்டகமாகத் திகழும் இந்நூல்களின் வாயிலாகத் தமிழகம், தமிழ்மொழி, சுதந்திரப் போராட்டம், அன்றைய அரசியல் போன்ற ஏராளமான செய்திகளைத் தெரிந்து கொள்ள முடிகின்றது.

வாழ்க்கை வரலாற்று இலக்கியம்

தமிழ்மொழியானது செம்மொழி எனும் சிறப்பைப் பெறுவதற்குத் தமிழ் இலக்கியத்தின் தொன்மையும் இலக்கணச் சிறப்பும் இலக்கியச் சிறப்பும் பரந்துபட்ட எல்லையும் காரணிகளாக அமைகின்றன. தமிழ் இலக்கியமானது சங்க இலக்கியம் தொடங்கி இன்றைய இலக்கியம் வரை பல்வேறு வகையினை உடையது. இத்தகைய தமிழ் இலக்கிய வகைமைகளுள் வாழ்க்கை வரலாற்று இலக்கியமும் ஒன்று. இவ்வகை இலக்கியத்தின் மூலம் மனிதர்களின் வாழ்க்கை அனுபவங்களை அறிந்து கொள்ளமுடிகிறது. வாழ்க்கையைப் பிரதிபலித்துக் காட்டும் கண்ணாடியாக விளங்குவது இலக்கியம் என அறிஞர்கள் கூறுவது இத்தகைய இலக்கிய வகைமைகளின் மூலம் மெய்ப்படுத்தப்படுகிறது.

வாழ்க்கை வரலாறு- சொல்லும் பொருளும்

ஒருவருடைய வாழ்க்கையின் வரலாற்றை விவரிப்பது வாழ்க்கை வரலாறு என்பதாகும். வாழ்க்கை எனும் சொல் தொல்காப்பியத்திலும்[1] வரலாறு எனும் சொல் பரிபாடலிலும்[2] காணப்படுகின்றன. மணிமேகலையில் வாழ்க்கை வரலாற்றினைக் குறிக்கத் திறம்[3] எனும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. சமுதாயத்தில், பொது வாழ்வில் ஏற்படுகின்ற அனுபவங்கள் வரலாறாக மாறும் போது அவை புதுப் பொலிவு பெறுகின்றன. ஆனால் வரலாறு எனும் சொல்லிற்குப் பதிலாகச் சரித்திரம், சரிதம், நினைவுகள், அனுபவங்கள், கதை, வாழ்க்கைக் குறிப்புகள் எனும் பல்வேறு சொற்களும் இடம்பெறுவதுண்டு.

வாழ்க்கை வரலாற்று இலக்கியம்

ஒருவரது வாழ்க்கை பிறருக்கு வழிகாட்டியாகவும், பயனுள்ளதாகவும் இருந்தால் அது வரலாறாக மாறும்போது இலக்கியமாக அமைகிறது. இவ்வகை இலக்கியம் பிறவகை இலக்கியங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகக் காணப்படு கின்றது. இத்தகைய இலக்கியத்தில் இடம்பெறும் மனிதனின் பிறப்பு, வாழ்வின் இயல்பான நிகழ்வுகள், இறப்பு ஆகிய செய்திகளைவிட அம்மனிதனின் செயல்பாடுகள், கொள்கைகள், உழைப்பின் முன்னேற்றம், சமூக முன்னேற்றத்தில் பங்கு, வாழ்வின் வெற்றி

ஆகியவற்றை விவரிப்பதாக வாழ்க்கை வரலாற்று இலக்கியம் அமைதல் நன்று.

வாழ்க்கை வரலாற்று இலக்கியத்தில், அம்மனிதனின் இறப்பு போன்ற செய்திகள் இடம்பெற வேண்டும் எனும் அவசியம் இல்லை.

> **உண்மை நிகழ்ச்சிகளையும் அவற்றின் புதிய வடிவங்களையும் கொண்டு மனிதாபிமான நோக்கோடு கோத்து அமைக்கப்படும் ஒரு தனிமனிதக் கதையே வாழ்க்கை வரலாற்று இலக்கியம்.[4]**

எனவே வாழ்க்கை வரலாற்று இலக்கியங்கள் உண்மை நிகழ்வுகளின் தொகுப்பாகும். பொதுமக்களிடையே கலை, அரசியல், இலக்கியம், அறிவியல் என எத்துறையிலேனும் அறிமுகமானவர்களின் வாழ்க்கை நிகழ்வுகளை, அனுபவங்களைச் சுவைபடத் தொகுத்தளிப்பது வாழ்க்கை வரலாற்று இலக்கியம் எனலாம்.[5]

> **தனிமனிதன் ஒருவரது வாழ்வு நிகழ்வுகளை நிரல்படச் செறிவு பெறக் கோத்து அவரது பண்புநலன்கள் பளிச்சிடக் கலைநலம் பொருந்தப் புடைக்கப்படுவதே வாழ்க்கை வரலாறாகும்.[6]**

பயண இலக்கியம்- வாழ்க்கை வரலாற்று இலக்கியம்

வாழ்க்கை வரலாற்று இலக்கியத்தைப் போன்ற மற்றோர் இலக்கிய வகைமை பயண இலக்கியமாகும். பயண இலக்கியம் ஒரு மனிதன் தான் பயணம் செய்தபோது பெற்ற அனுபவங்களைச் சுவைபடத் தொகுத்தளிப்பதாகும். இதைப் போன்றே ஒருவர் தன் வாழ்வில் இடம்பெற்ற நிகழ்வுகளை, அனுபவங்களைச் சுவைபட விளக்குவது வாழ்க்கை வரலாறாக அமைகிறது. இதில் சில சூழல்களில் ஒருவரது பயண அனுபவத்தை அவர் விவரிப்பதை அடிப்படையாகக் கொண்டு பிறர் எழுதுவதும் உண்டு. அதுபோல ஒருவரது வாழ்க்கை அனுபவங்களைப் பிறர் எழுதும் (பிறர் வரலாறு) வகையும் வாழ்க்கை வரலாற்று இலக்கியத்தில் உள்ளது. ஆதலால் பயண இலக்கியத்திற்கும், வாழ்க்கை வரலாற்று இலக்கியத்திற்கும் பல ஒற்றுமைகள் உள்ளன. இவை இவ்விலக்கியத்தின் சிறப்புக் கூறுகளாகும்.

வாழ்க்கை வரலாற்றிலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

வாழ்க்கை வரலாற்று இலக்கியம் ஒருவரைப் பற்றிய முழுமையான செய்தியைத் தருகிறது. சங்க காலத்தில் நடுகல் எனும்

முறையில், போரில் இறந்த ஒரு வீரனின் நினைவாக நடும் கல்லில் அவனது பெயர், வீரம், சிறப்பு முதலிய செய்திகளை எழுதி வைப்பர். இந்த நடுகல்லின் மூலம் அவ்வீரனைப் பற்றிய செய்திகளைப் பிறர் எளிதில் அறிய முடிகின்றது. இதைப் போன்று பாடல்களின் மூலமாகவும் சிலரின் வரலாற்றை அறியலாம். சான்றாக, பொருநராற்றுப்படையிலும் பட்டினப்பாலையிலும் கரிகால் சோழனின் வரலாற்றைத் தெரிந்து கொள்ள முடிகின்றது.

இராசராச சோழன் காலத்தில் தோன்றி வளர்ந்த ஓர் இலக்கிய வகை மெய்க்கீர்த்தி. இது மன்னனின் வரலாற்றுச் செய்திகளை அறியத் தருகிறது. ஓர் அரசனைப் பற்றித் தெளிவாகவும், விரிவாகவும் அறிந்து கொள்ள மெய்க்கீர்த்தி பயன்படுகின்றது. மெய்க்கீர்த்தியை வாழ்க்கை வரலாற்று இலக்கியத்தின் தொன்மை வடிவம் எனலாம்.[7] பிற்காலத்தில் தோன்றிய ஆனந்தரங்கம் பிள்ளையின் நாட்குறிப்பு 1736 ஆம் ஆண்டு முதல் 1760 ஆம் ஆண்டு வரையிலான செய்திகளைத் தருகிறது. இந்நாட்குறிப்பு முழுமையான ஒரு வரலாற்றிலக்கியமாகக் காணப்படாவிடினும், இந்நூலை ஆதாரமாகக் கொண்டு பின்னர் வாழ்க்கை வரலாற்று இலக்கியங்கள் விரிவடைந்தன.

> **அடிப்படையில் வாழ்க்கை வரலாறுகள் எழுதுவதன் உண்மையான கரணியமே மறைந்த சிறந்தோரை நினைவு கூர்தலே, நன்றி பாராட்டு முறையில் நலம் பாராட்டுதலே[8]**

எனும் கருத்து இங்குக் குறிப்பிடத்தக்கது.

வாழ்க்கை வரலாற்றிலக்கியத்தின் வகைகள்

வாழ்க்கை வரலாற்று இலக்கியம் இரண்டு வகைகளை உடையது. அவை,

1. தன் வரலாறு (Auto biography)
2. பிறர் வரலாறு (biography)

என்பனவாகும். தன்னைப் பற்றி தான் எழுதுவது தன் வரலாறு என்றும், தன்னைப் பற்றிப் பிறர் எழுதுவது பிறர் வரலாறு என்றும் குறிப்பிடப்படும். எனினும் இவ்விரண்டிற்கும் இடையே அழுத்தமான வேறுபாடும் உண்டு.

> **வாழ்க்கை வரலாற்றுக்கும் தன்வரலாற்றுக்கும் இடையே எத்தனை ஒற்றுமைக் கூறுகள் இருப்பினும், உண்மையில்,**

> அவை இரண்டுக்கும் இடையிலுள்ள வேற்றுமை வரலாற்றுக்கும் நாவலுக்கும் இடையிலுள்ள வேற்றுமையை ஒத்ததாகும். காரணம், வாழ்க்கை வரலாறு என்பது படிப்பு, ஆராய்வு, பேட்டி ஆகியவற்றின் மூலம் திரட்டப்படும் (நாயகனைப் பற்றிய) செய்திகளின் மீது உருவாகிறது; தன்வரலாறோ, உள்ளடங்கிப் போன நினைவுகளை மீண்டும் மன அரங்கில் மிதக்க விடுவதன் மூலம் உருவாகிறது[9]

எனும் கருத்தின் மூலம் பெறப்படுகிறது.

1. தன் வரலாறு

ஒருவர் தனது வரலாற்றைக் கால வரிசையில் முழுமை யாகவோ, முக்கியமான சில நிகழ்வுகளையோ, தான் சிறப்படை வதற்குரிய நிகழ்வுகளையோ, தனது அனுபவங்களையோ உணர்வுப் பூர்வமாக, கற்போருக்குச் சலிப்பு ஏற்படாத வகையில் தானே நீண்ட உரைநடை வடிவில் எழுதுவதைத் தன் வரலாறு எனலாம். இத்தகைய வரலாறு எழுதுபவர்கள் உண்மை நிலையில் நின்று எழுத வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. பல்வேறு துறைகளில் புகழ் பெற்றவர்கள் தன் வரலாறு எழுதித் தனது வாழ்க்கையின் உண்மையை, உழைப்பை, வெற்றியைப் பிறருக்கு வெளிப்படுத்தியுள்ளனர். அக்கால அரசியல் மற்றும் பிற துறைகளைப் பற்றியும், ஒருவர் உயர்வடைவதற்கான வழிமுறைகளைப் பற்றியும், ஒருவருடைய நண்பர்களைப் பற்றியும் இத்தகைய இலக்கியங்களின் மூலம் அறிந்து கொள்ளமுடிகிறது. மேலும் இத்தகைய இலக்கியம் படைப்பவர்களுக்குத் தங்களுடைய அனுபவங்கள் பிறருக்குச் சிறந்த வழிகாட்டியாக அமையும் எனும் நம்பிக்கையும் காரணமாகும். தன் வரலாற்று இலக்கியத்திற்கு மகாத்மா காந்தியடிகள் எழுதிய 'சத்திய சோதனை' எனும் நூல் சிறந்த சான்றாக அமைகிறது.

தன் வரலாற்று நூல்கள்

1893 ஆம் ஆண்டு எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை அவர்கள், "பாளையங்கோட்டை எச்.ஏ.கிருஷ்ணபிள்ளை கிறிஸ்தவரான வரலாறு" எனும் தன் வரலாற்று நூலை எழுதி வெளியிட்டார். கிருஷ்ணபிள்ளை தமது பிறப்பு (1827) முதல் 1865 ஆம் ஆண்டு வரையுள்ள 38 ஆண்டுக் கால வாழ்க்கை நிகழ்வுகளைத் தன் வரலாற்று நூலில் விவரிக்கிறார். 1900 ஆம் ஆண்டுவரை வாழ்ந்த கிருஷ்ண பிள்ளையால் எழுதப்பட்ட இந்நூலை 19 ஆம் நூற்றாண்டில் தமிழில் தோன்றிய ஒரே தன் வரலாற்று நூல் எனக் கருத

இடமிருக்கிறது.[10] இதைத் தொடர்ந்து சுமார் 45 நூல்கள் வெளிவந்துள்ளன. சான்றாக,

1. பாளையங்கோட்டை எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை கிறிஸ்தவரான வரலாறு (எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை)
2. சுயசரிதை (பாரதியார்)
3. நாடகமேடை நினைவுகள் (பம்மல் சம்பந்த முதலியார்)
4. என் சரித்திரம் (உ.வே. சாமிநாதையர்)
5. வாழ்க்கைக் குறிப்புகள் (திரு.வி.க.)
6. என் கதை (நாமக்கல் கவிஞர்)
7. சுயசரிதை (வ.உ.சி.)
8. எனது நாடக வாழ்க்கை (அவ்வை டி.கே. சண்முகம்)
9. வனவாசம் (கண்ணதாசன்)
10. நினைத்துப் பார்க்கிறேன் (ஜெயகாந்தன்)
11. ஓர் இலக்கியவாதியின் அரசியல் அனுபவங்கள் (ஜெயகாந்தன்)
12. இளமையின் நினைவுகள் (அ.மு. பரமசிவானந்தம்)
13. எனது வாழ்க்கை அனுபவங்கள் (ஏ.வி.எம். செட்டியார்)
14. சொக்கன் கதை (சாலை இளந்திரையன்)

முதலியவற்றைச் சுட்டலாம்.

தனித்தன்மைகள்

தன் வரலாற்று நூல்கள் பல சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு அமையும்போது தனித் தன்மை பெறுகின்றன. தன் வரலாறு எழுதுபவர்கள் நடுவு நிலைமையுடன் எழுதுவது சிறந்தது. பிறர் மீதுள்ள வெறுப்புணர்ச்சியை வெளிக்காட்ட இத்தகைய இலக்கியங்களைப் பயன்படுத்தக் கூடாது. ஒருவரின் வாழ்க்கையைப் பிரதிபலித்துக் காட்டும் கண்ணாடியாகத்தான் தன் வரலாற்றிலக்கியங்கள் திகழ வேண்டும்.

> இந்த நூலில் என் மதிப்பிற்குரிய தலைவர்களை, கட்சிகளை, சித்தாந்தங்களைத் தேவைப்படுமிடத்து தயவு தாட்சண்யமின்றி விமர்சித்திருக்கிறேன். அவர்களுடைய, அவர்கள்பால் பற்று கொண்டவர்களுடைய மனங்கள் புண்படக் கூடாது என்று எச்சரிக்கையுடன் வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்துக் கையாண்டிருக்கிறேன்[11]

எனும் ம.பொ.சி. யின் கூற்று இங்கு நினைவு கூரத்தக்கது. ஆங்கிலத்தில் 'பெஞ்சமின் பிராங்லின் வரலாறு' சிறப்புடையது. காந்தியடிகளின் 'சத்திய சோதனை', ஜவகர்லால் நேருவின் 'சுய சரிதை' ஆகியன மொழிபெயர்ப்பில் அமைந்துள்ள சிறந்த சுய வரலாற்று நூல்களாகும்.

2. பிறர் வரலாறு

சமுதாயத்தில் பிரபலமான தலைவர்களைப் பற்றியோ, இலக்கியவாதிகளைப் பற்றியோ, மக்கள் மனத்தில் நீங்கா இடம்பெற்றுள்ள மனிதர்களைப் பற்றியோ வேறு எவரேனும் எழுதும் நூலைப் பிறர் வரலாறு என்பர். இத்தகைய வரலாறு எழுதுபவர்கள் எழுதப்படுபவர் மீது மதிப்பு உடையவராகவும், அவருடன் நெருங்கிப் பழகியவராகவும் காணப்படுவர். எனினும், பழகாதவர்களும் அவரைப் பற்றி முழுமையாகத் தெரிந்து கொண்டு, அவர் எழுதிய நூல்களைக் குற்றமறக் கற்று, நூல்கள் எழுதுவதும் உண்டு.

> எண்ணங்களை வேகமாகவும் அழகாகவும் அப்படியே எழுதிக் காட்டும் நடை, வரலாற்றாய்வில் கவனம், அவரவர்கட்குள்ள சிறப்பியல்புகளை நுண்ணிதின் கண்டு நயமாகக் காட்டும் நல்லியல்புகள் கொண்டது பிறர் வரலாறு ஆகும்[12]

பிறர் வரலாற்று நூல்கள்

1868 இல் அச்சுதானந்த சுவாமிகளின் சீடரான சோமசுந்தர அடியவர் எழுதிய 'அச்சுதானந்த சுவாமிகள் வரலாறு' என்னும் நூல் முதல் வாழ்க்கை வரலாற்றிலக்கியமாகத் திகழ்கிறது.[13] இந்நூல் 86 செய்யுள்களாலானது. 1869இல் திருத்தணிகை சரவணப் பெருமாளையர் 'திருவள்ளுவர் சரித்திரம்' எனும் நூலைப் பல தனிப்பாடல்களை ஆதாரமாகக் கொண்டு உரைநடையில் வெளியிட்டார்.[14] ஆதலால், முதன் முதலில் உரைநடை வடிவில் வெளிவந்துள்ள பிறர் வரலாற்று இலக்கியம் திருவள்ளுவர் சரித்திரம் எனலாம். ஜே.ஏ. கதிர்வேலு பிள்ளை மொழிபெயர்த்து வெளியிட்ட 'லார்ட் கிளைவ் சரித்திரம்' 1871 ஆம் ஆண்டு வெளிவந்தது. இந்நூலைச் சிலர் தமிழில் வெளிவந்த முதல் வாழ்க்கை வரலாற்று இலக்கியம் எனவும் கூறுவர்.

பிறர் வரலாறு கூறும் நூல்களுள் உ.வே. சாமிநாதையரால் எழுதப்பட்ட 'மீனாட்சி சுந்தரம் பிள்ளை சரித்திரம்' எனும் நூல்

இலக்கிய வரிசையில் குறிப்பிடத்தக்கதாகும். திறனாய்வு நோக்கில் எழுத்தாளர் ம.பொ.சி. எனும் நூலை சி. ஞானமணி எழுதியுள்ளார். இதுவரை, தமிழில் 1790 பிறர் வரலாறு நூல்கள் வெளிவந்துள்ளன என 1985 ஆம் ஆண்டு வெளிவந்த தமிழ் வாழ்க்கை வரலாற்றிலக்கியம் எனும் நூல் குறிப்பிடுகின்றது.[15]

கழக வெளியீடு 'தமிழ்ப் புலவர் வரிசை' என்றும், சாகித்திய அகாதமி 'இந்திய இலக்கியச் சிற்பிகள்' எனவும், பழனியப்பா பிரதர்ஸ் 'நாட்டுக்கு உழைத்த நல்லவர்' எனவும் பிரேமா பிரசுரம் 'சிந்தனையாளர் வரிசை' எனவும் பிறர் வரலாறுகளை வெளியிட்டு இலக்கியத் தொண்டாற்றி வருகின்றன.

தனித்தன்மைகள்

பிறர் வரலாறு நூல்கள் பல தன்மைகளைக் கொண்டுள்ளன. பிறர் வரலாறு எழுதுபவர்கள் நேர்மைக்கு முதலிடம் கொடுத்து விருப்பு வெறுப்பின்றி எழுதுதல் வேண்டும்.

> காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண்
> ஆய்தல் அறிவுடையார் கண்ணதே- காய்வதன்கண்
> உற்றகுணம் தோன்றா தாகும்; உவப்பதன்கண்
> குற்றமும் தோன்றாக் கெடும்[16]

எனும் நேர்மையை மனத்தில் கொண்டு பிறர் வரலாறு எழுதுதல் சிறப்புமிக்கது. ம.பொ.சி. எழுதிய 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' எனும் நூலின் மலிவுப் பதிப்பு வெளியீட்டு விழாவில் டாக்டர் மு. வரதராசனார் கீழ்க்கண்டவாறு ம.பொ.சி. யின் ஆய்வுத்திறனைப் பாராட்டுகிறார்:

> ம.பொ.சி. மிகச்சிறந்த அரசியல்வாதியாவார். அப்படிப்பட்டவர் ஆராய்ச்சி நூலொன்றை வழங்குகிறாரென்றால் அது எப்படி முடிந்ததென்று நாங்களெல்லாம் வியப்படைகிறோம். பேராசிரியர்கள் ஆராய்ச்சி நூல் எழுதினால், விஷயங்களைப் பட்டியல் போட்டுத் தொகுத்து, குறிப்புகளைக் குவித்து, அதற்கு நூல் வடிவந் தருவார்கள். ஆனால், அரசியல் தலைவரான ம.பொ.சி. அப்படி எழுதவில்லை. மிக நுணுக்கமாக ஆராய்ந்து பார்த்து, எவர் மனதும் புண்படாத வகையில் தான் சார்ந்துள்ள அரசியல் கட்சி - தன் அரசியல் கொள்கைகள் ஆகியவற்றுக்கு அப்பாற்பட்டு நடுவுநிலைமையில் நின்று இந்த நூலை எழுதியுள்ளார்.[17]

மேற்குறித்த இக்கூற்றிலிருந்து வரலாற்று நூல்கள் எழுதுவதற்கு உதாரண ஆசிரியராக ம.பொ.சி. திகழ்ந்தார் என்பதைக் காணலாம். பிறர் வரலாற்று நூல்களில் ஒருவரின் பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள செய்திகள் அனைத்தும் இடம்பெற்றிருக்க வேண்டும் எனும் நியதி இல்லை. நூலாசிரியர் தனக்கு விருப்பமான செய்திகளை மட்டும் எழுதுவது உண்டு. மேலும் திறனாய்வு முறையிலும் பிறர் வரலாறு எழுதப்படுவதுண்டு. அரசியல், இலக்கியம், விடுதலைப் போராட்டம் முதலிய பல துறைகளில் ஒருவர் சிறப்புடையவராகக் காணப்படினும் ஏதாவது ஒரு துறையிலுள்ள செய்திகளை மட்டும் விவரிக்கும் நூல்களும் உண்டு. உதாரணமாக, சி. ஞானமணி எழுதிய 'எழுத்தாளர் ம.பொ.சி.' எனும் நூலைக் குறிப்பிடலாம். பிறர் வரலாறு எழுதப்படும்போது அதில் தனக்கும் அவருக்கும் இடையே இருந்த உறவினையும், கருத்து மோதல்களையும் எழுதுவது உண்டு. இவ்வகைக்கு ம.பொ.சி. எழுதிய 'நானறிந்த ராஜாஜி' எனும் நூலைச் சுட்டலாம்.

ஒருவரைப் பற்றி ஒருவரே பல நூல்கள் எழுதியிருப்பது

பிறரைப் பற்றி எழுதும் வாழ்க்கை வரலாற்று நூல்களில், ஒருவரைப் பற்றி ஒருவர் பல நூல்கள் எழுதியிருப்பதைக் காணலாம். ஒருவர் அரசியலிலோ, இலக்கியத்திலோ, நாட்டு விடுதலைப் போராட்டத்திலோ புகழ் பெற்றவராக விளங்கும்போது அவர் மீது கொண்ட மதிப்பின் காரணமாகப் பல நோக்குகளில் பல நூல்கள் எழுதுவது வழக்கம். சான்றாக, வ.உ.சி. யைப் பற்றிக் கப்பலோட்டிய தமிழன், தளபதி சிதம்பரனார், கப்பலோட்டிய சிதம்பரனார் எனும் மூன்று நூல்களை ம.பொ.சி. எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ம.பொ.சி. யின் வாழ்க்கை வரலாற்று நூல்கள்

அரசியலிலும், இலக்கியத்திலும் ஒன்று சேரப் புகழொளி வீச நற்பேறு பெறுபவர் தமிழகத்தில் ஒரு சிலரே. அவர்களுள் ம.பொ.சி. ஒருவர் என்பதற்கு அவருடைய நூல்கள் சான்று பகர்கின்றன.[16] ம.பொ.சி. தன் வரலாறும், பிறர் வரலாறும் எழுதியுள்ளார். இந்நூல்களின் வாயிலாக ம.பொ.சி. யின் அரசியல் வாழ்க்கை, சுதந்திரப் போராட்டம், எல்லைப் போராட்டம், இலக்கிய உணர்வு முதலியவற்றை அறிந்துகொள்ள முடிகின்றது.

ம.பொ.சி.யின் தன் வரலாற்று நூல்

ம.பொ.சி. தமது வரலாற்றை 'எனது போராட்டம்' எனும் தலைப்பில் இரண்டு பாகங்களாக வெளியிட்டுள்ளார். இரண்டாம்

பதிப்பாக வெளிவந்த இந்நூலின் முதல் பாகம் 423 பக்கங்களும், இரண்டாம் பாகம் 818 பக்கங்களுமாக மொத்தம் 1241 பக்கங்களை உடையது. தமிழ் வளர்ச்சித்துறையின் சிறந்த நூல்களுக்கான பரிசு 'எனது போராட்டம்' எனும் நூலிற்கு 1985ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.

ம.பொ.சி.யின் பிறர் வரலாற்று நூல்கள்

ம.பொ.சி. தனக்கு விருப்பமான விடுதலைப் போராட்ட வீரர்கள், அரசியல்வாதிகள் ஆகியோரைப் பற்றிப் பல நூல்கள் எழுதியுள்ளார். அவை பின்வருமாறு:

1. வீரபாண்டிய கட்டபொம்மன்
2. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு
3. தோழர் சிங்காரவேலர்
4. கப்பலோட்டிய தமிழன்
5. நானறிந்த ராஜாஜி
6. கிருஷ்ணசாமி பாவலர் வாழ்க்கை வரலாறு

இவற்றுள் வ.உ.சி., வீரபாண்டிய கட்டபொம்மன், வள்ளலார் பற்றிப் பல நூல்களை ம.பொ.சி. எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது. ம.பொ.சி. முதன் முதலாக எழுதிய நூல் கப்பலோட்டிய தமிழன் என்பதாகும். இந்நூல் 1944 இல் வெளிவந்தது. இவரது கப்பலோட்டிய சிதம்பரனார், வீரபாண்டிய கட்டபொம்மன், வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு எனும் பிறரைப் பற்றிய வரலாற்று நூல்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. மேலும், வீரபாண்டிய கட்டபொம்மன், கப்பலோட்டிய தமிழன், வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு ஆகிய மூன்று பிறர் வரலாற்று நூல்களும் உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்குப் பாடமாக வைக்கப்பட்டுள்ளன. 1966 ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதமியின் பரிசு 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' எனும் நூலிற்கு வழங்கப்பட்டது.

அடிக்குறிப்புகள்

1. தொல்காப்பியம், பொருளதிகாரம், 76:9.
2. பரிபாடல், 6-42.
3. மணிமேகலை, அறவணர்த் தொழுத காதை, அடி 29.

4. சாலினி இளந்திரையன், **வாழ்க்கை வரலாற்று இலக்கியம்**, ப. 53.

5. ச.வே.சுப்பிரமணியன், **தமிழ் இலக்கிய வகையும் வடிவும்**, ப. 637.

6. **Encyclopaedia Britannica**, Vol. III, P. 636.

7. ச.வே. சுப்பிரமணியன், மு.நூ., ப. 640.

8. மது.ச. விமலானந்தம், **வாழ்க்கை இலக்கியம்-ஒரு வளர்கலை**, ப.12.

9. John A. Garraty, **The Nature of Biography,** P.26. மேற்கோளாக வந்த நூல், சாலினி இளந்திரையன், மு.நூ., ப.57.

10. வீ.ஞானசிகாமணி, **எ.ஆ. கிருஷ்ணபிள்ளையின் நூல்கள்**, ப. 255.

11. ம.பொ.சிவஞானம், **எனது போராட்டம்**, முதல் பதிப்பின் முன்னுரை.

12. மது.ச.விமலானந்தம், **தமிழ் இலக்கிய வரலாறு**, தொகுதி 2, ப. 1547.

13. ச.சிவகாமி, **தமிழ் வாழ்க்கை வரலாற்றிலக்கியம்**, ப.49.

14. மேலது.

15. மேலது, ப. 165.

16. முனைப்பாடியார், **அறநெறிச்சாரம்**, பா. 41.

17. செங்கோல், 12-06-1988.

18. பெ.சு. மணி, **ம.பொ.சிவஞானம்**, ப. 129.

எனது போராட்டம்
(தன் வரலாறு)

உலகில் தோன்றிய மனிதர் அனைவரும் சில பல காலம் வாழ்வதும், ஒரு நாள் மடிவதும் இயற்கை. பிறப்பாலும் இறப்பாலும் ஒன்றுபடும் மனிதர் ஒவ்வொருவரும் வேறுபடுவது அவரவர் வாழும் வாழ்க்கையால்தான். அத்தகைய வாழ்வும் பிறர் அறிந்து கொள்ளக் கூடியதாகவும், பின்பற்றக் கூடியதாகவும், பாராட்டக் கூடியதாகவும் அமைவது கடினம். ஆனால் ம.பொ.சி.யின் வாழ்வு பிறரால் பின்பற்றத்தக்கதாகவும் பாராட்டத்தக்கதாகவும் அமைந்துள்ளது. போர்க்களமான மனித வாழ்வில் அவர் சந்தித்த போராட்டங்கள் அனைவரும் அறிய வேண்டிய ஒன்றாகும். ம.பொ.சி. தமது வாழ்க்கை வரலாற்றை ''எனது போராட்டம்'' எனும் தலைப்பில் இரண்டு பாகங்களாக வெளியிட்டுள்ளார்.

எனது போராட்டம்

குடும்பம், இலக்கியம், அரசியல் என மும்முனைத் தாக்குதலினால் உடல் நலிவுற்ற இவரை எதிர்க்கட்சியைச் சார்ந்தோர் ''நடமாடும் தெரு எலும்புக்கூடு'' என்று கேலி பேசி இருக்கின்றனர். ஆனால் மனித உடலில் எலும்பின் சக்தி என்ன என்பதனை ம.பொ.சியின் வாழ்க்கை உணர்த்திவிடுகிறது.

> **என் கடந்தகால வாழ்க்கை, போராட்ட மயமாகவே இருந்திருப்பதால் எனது விருப்பத்துக்கு மாறாக, போராட்டச் சூழ்நிலையிலேயே இந்தச் சமுதாயம் என்னை வைத்து விட்டதால், ''எனது போராட்டம்'' என்னும் தலைப்பையே நான் தேர்ந்தெடுக்கலானேன்.**
>
> (எனது போராட்டம், முதல் பாகம், முன்னுரை, பக். 3-4)

என்று தன் வாழ்க்கை நிலையைக் கூறுகின்றார். போராட்டமும், ஏமாற்றமும் நிறைந்த அவருடைய வாழ்க்கைப் போக்கு,

1. குடும்பம்
2. இலக்கியம்
3. அரசியல்

என்று மூன்று களன்களாகப் பிரிக்கப்படுகின்றது.

1. குடும்பம்

ம.பொ.சி. அவர்கள், பொன்னுசாமி - சிவகாமி எனும் பெற்றோருக்கு மூன்றாவது குழந்தையாய் 26.06.1906 அன்று பிறந்தார். சத்தியாகிரகம், சுயராஜ்யம், சுதேசி விரதம், விதேசி பகிஷ்காரம், வந்தே மாதரம், பாரதியார், வ.உ.சி. முதலிய சிறப்பம்பசங்கள் நாட்டில் வெளிப்பட்ட அவ்வாண்டில் தோன்றிய ம.பொ.சியும் பெரும் சிறப்பிற்கு உரியவராகின்றார்.

கிராமணி என்னும் பிரிவில் பிறந்து ''ஞானப் பிரகாசம்'' எனும் இயற்பெயரைக் கொண்ட இவர் பின்னாளில் ''சிவஞானம்'' என்று மாறி, ம.பொ.சி. என்று சுருங்கிய நிலையிலேயே தமிழகத்தில் அறியப்பட்டார்.

தமிழ் இலக்கியங்களிலே மூழ்கித் திளைத்த இவர், கற்றது ஒரு திண்ணைப் பள்ளியில் இரண்டாம் வகுப்பு வரை மட்டுமே ஆகும். பின்னர், மூன்றாம் வகுப்புக்குச் சென்ற ஏழு நாட்களுக்குள் புத்தகம் கொண்டு செல்லாததால் தந்தைக்கும் ஆசிரியருக்கும் இடையே ஏற்பட்ட சண்டையில் இவர் பள்ளி வாழ்க்கை முடிவிற்கு வந்தது. எனினும் அன்னை பெற்றிருந்த கல்வியறிவு, அன்னையை ஆசானாய், இல்லத்தைப் பள்ளியாய் மாற்றியது. இயற்கையாய் இருந்த சைவப் பற்றும், இயல்பாய்க் கேட்டுணர்ந்த பக்திப் பாடல்களும், பிற்காலத்தில் இணைந்து விட்ட அரசியல் மேடைப் பேச்சுகளும் இவருடைய அறிவுத் திறத்தை, இலக்கிய ஆர்வத்தை மேலும் மெருகேற்றின.

இளங்கோவடிகள் படைத்த சிலம்பை இவர் கரங்கள் தீண்டும் முன் இவர் கைபிடித்தது குத்துச் சண்டை, குஸ்தி, கொம்பு விளையாட்டு எனப்படும் சிலம்பத்தைத் தான். இக்கால மக்களின் வாழ்வில் 'கிரிக்கெட்' பெற்றிருக்கும் இடத்தை அக்காலத்தில் சிலம்பம் பெற்றிருந்தது.

> **குத்துச்சண்டை, குஸ்தி முதலிய பந்தயச் சண்டைகள் நடைபெறும் இடம் 'கோதா' எனப்படும். சிலம்பக் கலையில் ஆர்வமுடை யவர்கள் பணம்கொடுத்து டிக்கட் வாங்கி இந்தப் பந்தயச் சண்டைகளைப் பார்ப்பார்கள். இத்தகைய சண்டையில் ஈடுபடுபவர்கள் 'பயில்வான்கள்', 'வஸ்தாதுகள்' என்றெல்லாம் அழைக்கப்படுகிறார்கள்**
>
> (முதல் பாகம், ப. 31)

என்று அக்காலப் பொழுதுபோக்கைக் குறிப்பிடுகிறார். அது மட்டுமன்றித் தானும் ஒரு 'வஸ்தாது' ஆக விரும்பி அதற்கான

பயிற்சியும் மேற்கொண்டிருக்கின்றார். இராயப்பேட்டையில் இராமமூர்த்தி சாண்டோவின் சர்க்கசில் சேர்ந்து பெயருக்கேற்றாற் போல் விளங்கும் வீமன் என்பானுடன் மோதி முதல் முறை தோற்று மறுமுறை வென்றிருக்கின்றார். வீமனையே தோற்கடித்தவர் நடமாடும் எலும்புக்கூடு ஆனதும், பயில்வானாக விளங்கியவர் அரசியலில் இறுதிவரை வன்முறையற்ற காந்திய வழியைப் பின்பற்றியதும் அவர் வாழ்வில் காணப்படும் இயல்பான முரண்களாகும். புறத்தோற்றம் மாறினாலும் நெஞ்சுரமும் அகவலிமையும் மாற்றம் காணவில்லை என்பது பெறப்படுகிறது.

வறுமையும் வேலை வாய்ப்பும்

மனிதனுடைய வாழ்வில் கொடுமையானது இளமைப் பருவத்தில் எய்தும் வறுமை என்பர். அவ்வறுமையைக் கண்டு மனம் துவண்டு விடாமல், அதை எதிர்த்துப் போராடிச் செம்மையான, நேர்மையான வாழ்க்கை வாழ மனத்துணிவு அதிகம் வேண்டும். ம.பொ.சி.யின் மன வலிமைக்கு அவருடைய அரசியல் வாழ்வு பல இடங்களில் சான்றளிக்கின்றது. எச்சூழலிலும் கள் தொழிலில் ஈடுபடாதது இவரின் மனத்துணிவிற்கு அடிப்படை அமைத்துக் கொடுத்திருக்கிறது.

> முதல் முதலாக மவுண்ட் ரோடிலிருந்த ஒரு சிறிய அச்சகத்தில்தான் நான் அச்சு கோக்கும் தொழிலைப் பயின்றேன். அதன்பின் இரண்டொரு பெரிய அச்சகங்களில் மாதம் 5 ரூபாய் சம்பளத்திற்குப் பணி புரிந்தேன். 'இந்து' பத்திரிகாலயத்தில் இரண்டு மாத காலம் பேப்பர் மடிக்கும் பையனாக இருந்திருக்கிறேன் (முதல் பாகம், ப. 34)

என்று அவரே தன் வேலை வாய்ப்புப் பற்றிக் கூறுகின்றார். இவ்வாறு தொடங்கிய அவருடைய அச்சுப் பணி புரசைவாக்கம் கங்காதீசுவரர் கோயில் எதிரிலே 'சர்மா சகோதரர்கள் நடத்திய 'விநோதினி' என்னும் மாத இதழில் இரண்டாண்டுகள் தொடர்ந்தது. அதன் பிறகு டாக்டர் பி. வரதராசுலு அவர்கள் நடத்திய 'தமிழ்நாடு' எனும் நாளிதழில் தற்காலிகமாகப் பணியாற்றிப் பிறகு கம்பாசிடர் எனும் அச்சுக் கோக்கும் பணியில் ஈடுபட்டார். தன் குடும்ப வறுமைக்காகக் கல்வியும் கற்காமல் அச்சுத் தொழிலுக்கும் நெசவுத் தொழிலுக்கும் சென்றார். எனினும் தொழிலாளர்களுக்காகப் போராடுதலை விடவில்லை.

> எனக்குத் துணிவிருக்கிறது; அதற்குப் பஞ்சமில்லை. ஆனால், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளத் தோழர்களுக்குத் துரோகம் செய்ய நான் விரும்பவில்லை. (முதல் பாகம், ப. 55)

என்று தன் முதலாளி வரதராசுலுவிடம் கூறும்போது துணிவும் போராட்டக் குணமும் வெளிப்படுகின்றன. இப்போராட்டக் குணமும், வறுமையிலும் செம்மையாக வாழவேண்டிய துடிப்பும், எச்சூழலிலும் நேர்மை தவறாத திடமும் அவர் வாழ்வின் எல்லாப் பகுதிகளிலும் வெளிப்படுகின்றன.

திருமண வாழ்வு

இல்லறமே நல்லறம் என்று போற்றப்படும் நம் நாட்டில் பலதார மணம் வழக்கிலிருந்தது. ம.பொ.சி.யின் குடும்பத்தினரும் அதற்கு விதிவிலக்கல்ல.

> கிராமணி சாதியினரிலே ஒன்றுக்கு மேற்பட்ட மனைவி யருடன் வாழ்க்கை நடத்துவோர் மலிந்திருந்தனர் அந்த நாளிலே! என் தந்தையும் தம்பியும் கூட இதற்கு விலக்கல்லர்! என் குடும்பத் திலேயே நான்தான் ஏகபத்தினி விரதன் (முதல் பாகம், ப. 18)

என்று கூறிக்கொள்ளும் இவரும் இருமுறை திருமணம் செய்து கொண்டார். 1928-இல் தன் தாய் மாமன் மகளாகிய திலோத்தமையை இவர் மணந்தார். இவர்கள் திருமண வாழ்வு குறித்து,

> என் மனைவி பூப்படைந்த சில மாதங்களுக்குள்ளேயே எங்களுக்குத் திருமணம் நடந்தது. திருமணம் முடிந்து ஆறு மாதம் கழித்து சாந்தி முகூர்த்தம் நடைபெற்று, நாங்கள் கணவனும் மனைவியுமாக வாழ்க்கை நடத்தத் தொடங்கினோம். அவள் என் வீட்டுக்கு வாழ வந்து ....., காமர் மனைவி எனக் கலந்து நாங்கள் வாழத் தொடங்கிய ஐந்தாம் நாள் எதிர்பாராத விதமாக இருதய நோயால் அவளது வாழ்க்கை முடிந்து விட்டது. (முதல் பாகம், பக். 43-44)

என்று எழுதும் ஐந்து வரிகள் போலவே ஐந்து நாட்களில் முடிகிறது. அக்கால இளமைத் திருமணங்கள், மருத்துவ வசதியின்மை, இறப்பு விகிதம் அதிகமாக இருத்தல் முதலியவை இதன்மூலம் தெரிய வருகிறது.

ஐந்து நாட்களில் முடிவுற்ற முதல் திருமணத்திற்குப் பிறகு ஒன்பதாண்டு காலம் முழுமையான 'பிரம்மச்சரியம்' மேற்கொண்டார். தனியாக இருக்கும் மகன் 'கெட்டுவிடுவான்' என்கிற பெற்றோரின் பயமும், அரசியல் எதிரிகளால் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்கிற அவர்களின் அச்சமும், மகனுக்கு மீண்டும் ஒரு திருமணத்தைச் செய்விக்க வேண்டும் என்கிற எண்ணத்தை வலுப்பெறச் செய்தன. இதன் காரணமாகத் தன் 31ஆவது அகவையில் 17வயது மாமன் மகளை மணந்தார். மணப்பெண் இராசேசுவரி ம.பொ.சி.யை மணக்க

வேண்டும் என்பதற்காகத் தனக்குச் சொந்தமான ரூ. 20 ஆயிரம் ரொக்கம், ஓராயிரம் ரூபாய் மதிப்பிலான பித்தளைப் பாத்திரங்கள், ஐயாயிரம் ரூபாய் மதிப்பிலான நகைகளைத் துறந்திருக்கின்றார். அக்காலத்தில் பெருமதிப்புள்ள இச்செல்வத்தை விடுத்து வறுமையில் உழன்று கொண்டிருந்த தன் அத்தை மகளை மணந்தது இருவர் மாட்டும் இருந்த உள்ளார்ந்த அன்பை வெளிப்படுத்துகிறது. அன்பினால் மனம் ஒன்றிய இவர்களை,

> அந்தக் காலத்து காங்கிரஸ் வட்டாரத்தின் வழக்கப்படி ''வந்தே மாதரம்'' - ''மகாத்மா காந்திக்கு ஜே'' - ''பாரத் மாதா கி ஜே'' என்று என் காங்கிரஸ் தோழர்கள் எழுப்பிய ஜெயகோஷங் களுக்கிடையே என் மனைவியின் கழுத்தில் நான் தாலி கட்டினேன். அந்த நாளில் அதன் பெயர் தேசியத் திருமணம் (முதல் பாகம், ப. 152)

எனும் தேசியத் திருமணம் இணைத்தது. தேசியத் திருமணம் புரிந்து கொண்ட இவர் திருமணத்திற்குப் பிறகும் தேசியத்திற்காகவே உழைத்தார். வெள்ளையனை எதிர்த்தும், தன் உடல் நோயை எதிர்த்தும், அரசியல் எதிரிகளை எதிர்த்தும் தன் வாழ்க்கை முழுவதையும் போராட்டமாகவே கழித்த இவருக்குக் குடும்பப் போராட்டம் ஒரு பொருட்டல்ல. தேசியத்திலும் மொழியிலும் கரைந்து விட்ட இவருக்குத் தன் குடும்பம் என்பது கடலில் கரைந்த மழைத்துளி ஆகிவிட்டது. எனவேதான் ஆயிரம் பக்கங்கள் கடந்த தன் வாழ்க்கை வரலாற்றுப் புத்தகத்தில் அங்கொன்றும், இங்கொன்றுமாகத் தன் குடும்ப நிகழ்வுகளைக் குறிப்பிடுகின்றார்.

அமராவதி சிறையில் அடைபட்டிருந்தபோது தன் மகன் திருநாவுக்கரசனை நினைத்து எழுதிய முதல் கவிதை ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு ஆளாகி அழிந்து பட்டதைப் பெருமிதத்துடன் குறிப்பிடுகின்றார். தனக்கு இரண்டு மகள்கள் இருந்ததைக் குறிப்பிட்டுச் செல்கிறார். தன் ஆசைத் தங்கை ஒருவர் காலரா நோயால் பிணிக்கப்பட்டு இறந்ததை நினைத்து வருந்தினாலும் அதனால் சமூகத்திற்கு ஏற்பட்ட நன்மையை நினைவுகூர்கிறார். 1948-இல் சென்னையின் ஆல்டர் மேனாகப் பொறுப்பேற்றுக் கொண்ட இவர், 1953 இல் மாற்றுடை கூட இல்லாத வறுமை நிலையில், தன் தங்கை காலரா நோயால் மரணமடைந்த பிறகு,

> எனது தூண்டுதலால் சென்னை மாநகராட்சி மேற்கொண்ட அவசர நடவடிக்கைகள் காரணமாக நகரில் காலரா நோய் மூன்றே நாட்களில் கட்டுப்படுத்தப்பட்டது. அதனால், பலர் மரணத் திலிருந்து காப்பாற்றப்பட்டனர். இது

> தங்கையை இழந்ததால் எனக்கேற்பட்டிருந்த துக்கத்தைச் சிறிது குறைத்ததெனலாம் (இரண்டாம் பாகம், ப. 529)

என்று தீமையிலும் நன்மையைத் தேடும் மனம் படைத்தவராக இருந்துள்ளார். வாழ்க்கை முழுதும் துன்பத்தையே கண்டிருந்த இவருக்கு மகிழ்வைக் கொடுத்தது தன் பொன்விழாக் கொண்டாட்டம் மட்டுமே ஆகும்.

1956 சூன் 26 இல் தனது 51 ஆவது வயது பொன்விழாவாகக் கொண்டாடப்பட்டதை மகிழ்வுடன் நினைவுபடுத்துகிறார். எந்தவொரு அரசியல் கட்சியிடமோ கட்சி சார்ந்த செல்வந்தரிடமோ நிதி உதவி பெறாமல், பொது மக்களிடமிருந்து நிதி திரட்டி இவ்விழாவினைக் கழகத் தோழர்கள் நடத்தியுள்ளனர்.

இவ்விழாவிற்கு நிதியுதவி அளிக்குமாறு ‘ஆனந்த விகடன்’, ‘கல்கி’, ‘கலைமகள்’, ‘குமுதம்’, ‘கல்கண்டு’ ஆகிய இதழ்களின் தலையங்கம் மூலம் வேண்டுகோள் விடுத்தனர். இந்நிதி’யின் மூலம் சிறப்புற நடைபெற்ற இவ்விழா மேடையிலே தன் பெற்றோர் மாலை அணிவித்து மரியாதை செய்விக்கப்பட்டது பற்றியும், கலைக்காவலர் எம்.ஏ. வேணு என்பார் தனக்குப் பரிசளிக்கப் ‘பியட்’ கார் ஒன்றை வாங்கியிருந்ததையும் மகிழ்ச்சி பொங்கப் பெருமிதத்துடன் கூறிச் செல்கிறார்.

ஆனால், இவர் ஆங்காங்கே கூறிச் செல்வது போல முழுமையான இன்பத்தை இவரால் அனுபவிக்க இயலவில்லை. நாடே கொண்டாடிய இவ்விழாவிற்கு, எதிர்க்கட்சியைச் சார்ந்த அண்ணாதுரையும் நெடுஞ்செழியனும் வாழ்த்துச் செய்தி அனுப்பி யிருந்தனர். ஆனால், தான் காலம் முழுதும் உழைத்த காங்கிரஸ் கட்சியிலிருந்தோ, பெரும் மரியாதை வைத்திருந்த இராஜாஜி யிடமிருந்தோ வாழ்த்துச் செய்தி கூட வராதது மிகுந்த கவலையைக் கொடுத்தது. ரோஜாவில் முள் போல இப்புறக்கணிப்பு அவர் மனதில் நீங்காத வடுவினை ஏற்படுத்தியது.

பொன்விழாவில் ஏற்பட்ட வலி அன்னாரின் மணிவிழாவில் மறைந்தது இறைவன் செயலாகும். இவர் மக்கள் திருநாவுக்கரசு, கண்ணகி, மாதவி ஆகியோர் சேர்ந்து தன் தந்தைக்கு அறுபதாம் கல்யாணம் நடத்தினர். தமிழகமே திரண்டு வந்தாற்போல நடைபெற்ற இவ்விழாவிற்கு இராஜாஜி, காமராசர், அண்ணா, கலைஞர், எம்.எஸ்.எஸ்., கி.வா.ஜ., தெ.பொ.மீ. முதலியோர் வந்து பெருமை சேர்த்தனர்.

> போற்றப்பட வேண்டியவர்களால் - போற்றக் கடமைப் பட்டவர்களால் புறக்கணிக்கப்படும்போது, நான் பொறுமையிழப்பதில்லை. அவர்களை வெறுப்பதுமில்லை. ஏனெனில், நாட்டுக்குத் தொண்டாற்றுவது பிறர் போற்றுவதற்காக அல்ல, பிறவியெடுத்ததனால் ஏற்பட்ட கடமை என்பதற்காகத்தான் (இரண்டாம் பாகம், ப. 770)

என்று பொறுமையுடன் காத்திருந்து வெற்றியடைந்தது பற்றிக் கூறுவது அவரது அறிவு முதிர்ச்சியைக் காட்டுகிறது. அதே சமயம்,

> போற்றுதலை எதிர்பார்த்துத் தொண்டாற்றுவோர், போற்ற வேண்டிய பெரியவர்களால் சரியாகவோ, தவறாகவோ புறக்கணிக்கப்படும்போது, அவர்களைத் தூற்றுகிற தவறுக்கு இரையாகி, தங்கள் எதிர்காலத்தையே பாழாக்கிக் கொள்கின்றனர் (இரண்டாம் பாகம், ப. 770)

என்று இளம் சமுதாயத்தினருக்கு அறிவுரையும் கூறுகின்றார். 'பொறுத்தார் பூமி ஆள்வார்' என்பதற்கேற்பத் தானும் இருந்து பிறருக்கும் அறிவுரை கூறுவது இவர்தம் உயர் பண்பை விளக்கும். வறுமையிலே பிறந்து, வறுமையுடன் வாழ்ந்து, வறுமையுடன் போராடினாலும் செம்மையான வாழ்வை மேற்கொண்டார். பொது வாழ்வில் நேர்மைக்கும் அதற்கான போராட்டத்திற்கும் தன் சிந்தையை, நேரத்தைச் செலவிட்டதனால் குடும்பத்தைக் குறித்து, அதன் வளர்ச்சி குறித்து எண்ணவும் நேரமில்லாமல் போயிற்று என்கிறார்.

> ஆகவே, அதிலே (குடும்பத்திலே) வெற்றி தோல்விகளுக்கு நான் பொறுப்பேற்பதில்லை. ஆயினும், சமுதாயத்தின் முன்னே எனது சந்ததியார் தலைநிமிர்ந்து நடக்கத் தக்க வரலாற்றைப் படைக்கும் வகையில் எனது சொந்த வாழ்க்கையை நான் நடத்தி வந்திருக்கிறேன்
> (இரண்டாம் பாகம், ப. 816)

என்று வாக்குமூலம் அளிக்கின்றார். இவரைச் சமுதாயப் பொறுப்பு மிகுந்த நல்ல குடிமக்களை உருவாக்கிய குடும்பத் தலைவராகக் கருதுவது சாலப் பொருந்தும்.

2. இலக்கியம்

இரண்டாம் வகுப்பு வரை மட்டுமே பயின்ற இவர், சாகித்திய அகாதெமி விருது பெறுமளவிற்கு உயர்ந்துள்ளார். இதற்கு அவருடைய உழைப்பும் தனிப்பட்ட முயற்சியும் ஆர்வமுமே காரணங்களாக அமைகின்றன. தாயின் இறைப்பற்று இவருக்குச்

சைவ சமயத் தமிழ்ப் பாடல்களைப் பயிற்றுவித்தது. கேள்வி ஞானமே இவருக்கு மொழி ஆர்வத்தை ஊட்டியது. திருவொற்றியூரில் ஞானியாரடிகள் என்பவர் தொடர் சொற்பொழிவு நடத்துவார். அதைக் கேட்பதற்காக ஜார்ஜ் டவுனிலிருந்த 'தமிழ்நாடு' அலுவலகத்தில் வேலை முடித்து மாலை 5 மணிக்குப் புறப்பட்டு நடந்தே அங்குச் சென்று சொற்பொழிவினைக் கேட்டு மகிழ்ந்தார். அதில் வரும் சுவையான நிகழ்ச்சிகளைக் குறிப்பெடுத்து வைத்துக்கொண்டு தன் மொழி ஆற்றலை வளர்த்துக் கொண்டார். தன்னுடைய வருமானத்தில் ஒரு பகுதியைப் புத்தகங்கள் வாங்குவதற்குப் பயன்படுத்தி, தமிழ் மொழி இலக்கியங்களில் ஆர்வத்தைப் பெருக்கிக் கொண்டார்.

ஆகஸ்டு கிளர்ச்சியில் ஈடுபட்டதற்காகச் சிறையிலடைக்கப் பட்டபோது, அவ்வாழ்வைத் தமிழ் இலக்கியங்கள் பயில்வதற்கான வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டார். வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பர். ம.பொ.சி. எந்நிலையிலும் போராடும் வல்லவர். சிறை வாழ்வையும் தனக்குச் சாதகமாக இன்பம் தரத்தக்கதாகப் பயன்படுத்திக் கொண்டார்.

பாரதியார் பாடல்களைக் கற்றதோடு சிறையில் தன்னோடிருந்த தெலுங்கு இனத் தலைவர்களுக்கு அதை மொழிபெயர்த்துக் கூறினார். தனக்குத் தெரிந்த கலப்படம் நிறைந்த 'சென்னைத் தெலுங்கில்' பாரதியின் கவிதையிலுள்ள ஆவேசத்தையும் ஆழமான பொருளையும் எடுத்துரைத்து, பாரதியைப் போன்றதொரு கவிஞன் தங்கள் மொழியில் இல்லையே என்று அத்தெலுங்கர்களை வருத்தம் கொள்ளச் செய்தார்.

அமராவதிச் சிறையிலே எஸ்.சத்தியமூர்த்தி ஐயரின் வற்புறுத்தலுக் கிணங்க மாலை நேரத்தில் கம்பராமாயணச் செய்யுள்களைப் படித்துப் பொருளுரைக்கும் பணியை மேற்கொண்டார். கம்பனின் வரம்பு (எல்லை) மீறிய வர்ணனை ஒன்றினை ஆபாசமாகக் கருதியதால் மனம் வருந்தி அன்றோடு கம்பராமாயணம் படிப்பதையே நிறுத்தி விட்டதாகக் கூறுகின்றார். கட்டிக் கரும்பென இனிக்கும் கன்னித் தமிழை உயிரெனப் போற்றினாலும் எதற்கும் ஓர் எல்லையும் கட்டுப்பாடும் உண்டு எனும் இவர் குணம் வெளிப்படுகிறது.

கம்பராமாயணம் கற்ற இவர் வேதம் படிக்கத் தலைப்பட்டார். த.ப. இராமாசிப் பிள்ளை என்பவர் வடமொழியிலுள்ள சாம வேதத்தைத் தமிழில் மொழிபெயர்த்திருந்தார். அதைச் சிறைக்குத்

தருவித்து நேரம் கிடைத்த போதெல்லாம் பயின்றார். அதன்பிறகு இவரோடு டி. பிரகாசம், காளேஸ்வர ராவ் ஆகியோரும் சேரச் சாம வேத விவாதம் தமிழிலும் வடமொழியிலும் ஆரோக்கியமான முறையில் தொடர்ந்தது.

தன் சிறைத் தோழர் அரு. ராம். சொக்கலிங்கம் செட்டியாரின் மகன் மூலம் சங்க இலக்கியங்கள், திருக்குறள், சிலப்பதிகாரம், தேவாரம், திருவாசகம் ஆகியவற்றைச் சிறைச்சாலைக்குத் தருவித்துப் பயின்றார். அதன் பிறகு பனுவல்களிலும் குறட்பாக்களிலும் தம் மனத்தைப் பறிகொடுத்தார். அகமும் புறமும் காட்டும் தமிழனின் காதலையும் வீரத்தையும் நினைத்து இறுமாப்பு எய்தினார். அச்சம் தரும் உரையைக் காட்டிலும் எளிமையான மூலத்தைக் கொண்ட சிலப்பதிகாரத்திலே தன் நெஞ்சத்தைப் பறிகொடுத்தார். வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம் இருந்த வரலாற்று உண்மையை இலக்கியங்கள் வழி உணர்ந்தார். அத்தமிழகத்தையே தன் மனக் கண்ணில் கொணர்ந்து தமிழகத்தின் எல்லையை வரை யறுப்பதில் திசை தோறும் சென்று முழங்கினார்.

இறைவனையே குருவாகக் கொண்டு தன் சுயமுயற்சியால் கற்றுணர்ந்த தமிழ் மொழியின் இனிமையும், 'கலாநிலையம்' ஆசிரியரும் வழக்கறிஞருமான டி.என். சேஷாசலமும், பேராசிரியர் ரா.பி. சேதுப்பிள்ளையும் சொற்பொழிவு போல நடத்திய தமிழ் வகுப்புகளைக் கேட்ட அனுபவமும் அவருக்குப் பேரானந்தம் விளைவித்தன. அவை காரணமாகத் தானும் படித்துப் 'பண்டிதனாக' ஆசை கொண்டார்.

> ஜெயிலிலிருந்து விடுதலையான பின் எனது நிலை என்ன? பிழைப்புக்குத் திரும்பவும் அச்சுக் கோக்கும் தொழிலுக்குத் தானே போகவேண்டும்? போகாவிட்டால், குடும்பத்தின் கதி என்ன ஆவது? இதற்கு ஒரு வழி கண்டு பிடித்து விட்டேன்... ஜெயிலிலிருந்து விடுதலை பெற்ற பின், 'வித்துவான்' பரீட்சைக்குப் படித்துப் பட்டம் பெற்றால், தமிழ் வாத்தியார் வேலையேனும் கிடைக்குமல்லவா!
>
> (முதல் பாகம், ப. 296)

என்று சிறையிலிருக்கும் போது எழுதிய நாட்குறிப்பை மேற்கோளாகக் காட்டுகிறார். ஆனாலும் அவர் எண்ணம் ஈடேறவில்லை. நாட்டுக்கு உழைப்பதையே கடமையாகக் கொண்டவருக்கு வீட்டுக்கு உழைக்க வழி செய்யும் கல்வியைக் கற்க நேரமேது. எனவே முறையான தேர்வெழுதி 'வித்துவான்'

ஆகவில்லை. ஆனால் ''கண்டதைக் கற்க அரைப்பண்டிதன் ஆவான்'' எனும் மொழிக்கேற்பத் தமிழ்மொழியில் நல்ல ஆளுமை பெற்றார்.

மொழியில் பெற்ற ஆளுமையும் தனக்குச் சரியெனப் பட்ட உண்மைகளை நேர்மையுடனும் துடிப்புடனும் எடுத்துக் கூறும் நெஞ்சுரமும் இருந்ததால்தான் அவரால் இதழாசிரியராக, நூலாசிரியராகப் பரிணாமம் எய்த முடிந்தது. சாகித்ய அகாதெமி விருதினையும் பெற முடிந்தது.

கப்பலோட்டிய தமிழனாம் வ.உ.சி.யின் மீது அளவுகடந்த பற்றுக் கொண்டிருந்தார் ம.பொ.சி. அவரைப் பற்றிக் 'கப்பலோட்டிய தமிழன்' எனும் தலைப்பிலே நூலெழுதி அச்சிட்டு அட்டை இடாத நிலையில், நண்பர் டி.எஸ். கோவிந்தசாமி என்பவரிடம் கொடுத்து விட்டுச் சிறை சென்றார். அங்கிருந்த சி.என். முத்துரங்க முதலியாரிடம் மதிப்புரை பெறுவதற்காக அச்சிட்ட அந்நூல் பிரதியைச் சிறைக்குத் தருவித்தார். ஆனால் தணிக்கைக் குழுவிடம் அகப்பட்ட அந்நூல் வெளியிடப்படாத 'அரசியல் நூல்' என்ற பெயரால் பறிமுதல் செய்யப்பட்டது.

> **இதுபற்றிச் சிறையிலிருந்த எனக்கும் தகவல் வந்தது. எனது கன்னிப் படைப்பே ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறைக்கு இரையானதில் யான் பெரு மகிழ்ச்சி அடைந்தேன்.**
>
> (முதல் பாகம், ப. 280)

என்று தன்னிலையைக் குறிக்கின்றார். பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த மழலைச் செல்வம் கைகளில் வரும்போது யமனிடம் அகப்படின் அத்தாயின் மனநிலை எப்படியிருக்குமோ அந்நிலையை ம.பொ.சி. யின் மனம் அடைந்தது. முதல் நூலின் நிலை இதுவாயினும் இவர் மனமுடையவில்லை. தொடர்ந்து பலருடைய வாழ்க்கை வரலாற்றையும் தன் அனுபவங்களையும் நூலாக வெளியிட்டார். 1966 ஆம் ஆண்டிற்கான சாகித்ய அகாதெமி விருதினை ''வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு'' எனும் நூல் பெற்றது, இவருடைய முயற்சியை வெளிப்படுத்தும்.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போதும் ஆங்கில மொழி ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிட்ட போதும் பல நூல்களை எழுதி வெளியிட்டார். அவை,

1. தமிழா ஆங்கிலமா?
2. பாரதியாரும் ஆங்கிலமும்

3. காந்தியடிகளும் ஆங்கிலமும்
4. இன்பத் தமிழா, இந்தி - ஆங்கிலமா?
5. மாநில சுயாட்சியும் மொழிச் சிக்கலும்
6. ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு வரலாறு

என்பனவாகும். அது மட்டுமன்றிப் படித்தவர்களும் ஆங்கில மோகம் கொண்டு அலைவதை வன்மையாகக் கண்டித்தார். இவர் எச் சிக்கல் குறித்தும், எந்நிகழ்வைப் பற்றியும் உரத்த சிந்தனை கொண்டவர் என்பது ''தமிழ் முரசு'', ''செங்கோல்'' எனும் இரு இதழ்கள் மூலம் தெரியவருகிறது. குறிப்பாகப் ''பாமரன்'', ''பார்வையாளன்'' எனும் புனைபெயர்களில் அவர் எழுதியுள்ள கருத்துக்கள் அவர் சிந்தனையை, நெஞ்சுரத்தை வெளிப்படுத்துகின்றன.

> பாட்டாளி - பஞ்சமன் பாடுபட்டும் உணவின்றி, உடையின்றித் தலைமுறை தலைமுறையாக உள்ளங்குமுறிய போதெல்லாம் அவனை வாழவைக்க சர்க்காரிடமிருந்து சட்டம் புறப்பட வில்லை. தனியுடைமையாளரின் தயவு தோன்றவில்லை; கட்சிகளுக்கும் கருணை பிறக்கவில்லை. ஏழை துன்புற்றால், அது அவன் தலைவிதி; முன் ஜென்ம பாவம்; தெய்வத்தின் கோபம். பாட்டாளி மகன் பண்டம் வாங்கப் பணமில்லாமல் பசித்திருந்த போது - பருத்தி ஆடைக்குப் பரிதவித்தபோது, பார்த்திருந்த உலகம் அன்று படித்தவனுக்குப் பாலன்னமில்லை -யென்றால் - பணக்காரனுக்குப் பட்டாடை இல்லையென்றால், பஞ்ச மெனக் கூறிப் பரிவு காட்டுகிறது. (தமிழ் முரசு, சூன் 1946)
>
> (இரண்டாம் பாகம், ப. 172)

என்றும்

> அறிவாளிகளே! நாகரிகம் வாய்ந்த நகரத்தின் நடுவில் பாமரன் நடத்தும் நரக வாழ்க்கை உங்கள் பகுத்தறிவைப் பழிக்க வில்லையா? அதிகார வர்க்கமே! இருக்க இடமில்லாத ஏழை மக்களின் இன்னல் உன் இறைமாட்சியைச் சபிக்க வில்லையா? இனியேனும், பணக்காரர்களுக்குப் பங்களாவும், படித்தவர்களுக்கு மாடி வீடும் தேடித் தருவதுடன் நில்லாது, பாதை யோரத்தில் வாழும் பாமரனுக்கும் கூரை வீடேனும் கட்டித் தர முன் வருவாயா? (தமிழ் முரசு, ஜூலை 1946)
>
> (இரண்டாம் பாகம், ப. 175)

என்றும் தன்னுடைய மனக் குமுறலைப் பாமரன் மொழியில் வெளிப்படுத்துகிறார். அக்காலச் சமூக அவலம், இவருடைய மனக்

கொதிப்பு, அதை வெளிப்படுத்தும் நெஞ்சுரம் முதலியவை இதில் வெளிப்படுகின்றன. நம் சமுதாயத்தில் அன்றும் இன்றும் அதிக மாற்றம் இல்லை எனும் கசப்பான உண்மையும் இதன் மூலம் பெறப்படுகிறது.

ம.பொ.சி. என்றும் அழியாத் தீந்தமிழை, அதன் பெருமைகளை, தனி ஒருவனாக அல்லாமல் ஓர் அமைப்பின் மூலம் உணர்த்த வேண்டும் என்று விரும்பினார். அதற்காகத் தமிழ் நாடு காங்கிரஸ் அரியலூரில் நடத்திய மாநாட்டில் ''தமிழ் வளர்ச்சிக் கழகம்'' எனும் அமைப்பொன்றைக் கட்சியின் சார்பில் அமைக்க வேண்டும் என்றொரு தீர்மானம் இயற்றினார். ஆனால் தமிழ் மொழி வளர்ச்சி என்பது திராவிடக் கழகங்களோடு தொடர்புடையது என்று கருதிய காங்கிரஸ் தலைவர்கள் அதை மறுத்தனர். கட்சியின் கட்டுப்பாடு கருதி அதை வற்புறுத்தவில்லையெனினும், அவ்வெண்ணம் மனத்தில் ஆழப் பதிந்தது. எனவே தானொரு கழகம் தொடங்கிய பின்னர் மாநாடுகள், கூட்டங்கள் அனைத்திலும் தமிழ் மொழியின் பெருமைகளை உரைக்கத் தனி நாளொன்றை ஒதுக்கத் தலைப் பட்டார். அதில் தமிழ்மொழி இலக்கியங்களைக் குறிப்பாகச் சிலம்பின் பெருமைகளை எடுத்துரைத்து முழங்கினார்.

தமிழறிஞர்களின் சொற்பொழிவுகளைச் செவிமடுத்து, தமிழறிவை வளர்த்துக் கொண்ட இவர், தானே தொடர் சொற்பொழிவு நடத்துமளவிற்குத் தன் மொழி அறிவைப் பெருக்கிக் கொண்டார். இவருடைய மொழிகளில் கூறுவதானால்,

> 11.11.45 இல் சென்னை மண்ணடிப் பகுதியில் லிங்கிச் செட்டித் தெருவிலுள்ள ஒரு கட்டிடத்தில் ''புதிய தமிழகம்'' எனும் தலைப்பிலே தொடர் சொற்பொழிவைத் தொடங்கினேன்.
>
> ஞாயிறுதோறும் தொடர்ந்து 6 சொற்பொழிவுகள் நிகழ்த்தினேன். நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளைதான் இதனைத் தொடங்கி வைத்தார்.
>
> .....
>
> தென் சென்னையிலும் இதே பொருள்பற்றித் தொடர் சொற் பொழிவு நிகழ்த்த வேண்டுமென்று பலர் கேட்டுக் கொண்டதால், தியாகராய நகரிலுள்ள இந்தி பிரச்சார சபைக் கட்டிடத்தில் 1946 ஜனவரியில் தொடர்ந்து 4 சொற்பொழிவுகள் நிகழ்த்தினேன் (இரண்டாம் பாகம், ப. 12)

என்கிறார். சபை கொள்ளாத கூட்டம் சேர்ந்ததாலேயே சொற் பொழிவுகளை நிறுத்திக் கொண்டதாகக் குறிப்பிடுகிறார். அவர்

எத்துறையில் நுழைந்தாலும் அத்துறையில் முழு ஆளுமை பெற்றுச் சிறந்து விளங்கிட அவர்தம் போராட்டக் குணமே அடிப்படை யாகிறது.

நூல்கள் எழுதத் தொடங்கியதோடு, தன் சொற்பொழிவுகளையும் நூல்களாக்கினார். சிலப்பதிகாரம் குறித்த தன் சொற்பொழிவுகளைத் தொகுத்துத் 'தமிழரும் சிலப்பதிகாரமும்' எனும் பெயரில் நூல் வடிவம் கொடுத்தார். இந்நூல் இன்ப நிலையத்தாரால் வெளியிடப்பட்டது. ம.பொ.சி.க்கும் இன்ப நிலையத்தாருக்கும் இதுவே முதல் நூலாகும்.

அதன் பிறகு 1950 இல் 'கண்ணகி அச்சகம்' என்ற பெயரில் சொந்த அச்சகத்தைத் தொடங்கினார். ஆனால் கடன் பெற்றுத் தொடங்கப்பட்ட அவ்வச்சகத்தை, நம்பியோர் கைவிட்டதால் இழந்தார். எனினும் இன்ப நிலையத்தாரோடு அவருக்கிருந்த நட்புணர்வு மாறவில்லை.

த.சி. கங்காதர கிராமணியார் என்பவர் கைம்மாறு கருதாமல் கொடுத்த ஓர் இடத்தில் நூலகம் ஒன்று அமைத்தார். "தமிழ்த்தாய் நூல் நிலையம்" எனும் பெயரில் தண்டையார்பேட்டையில் அமைந்த அந்நூலகத்தில் ஓரளவு கல்வி அறிவு பெற்ற தொழிலாளர்கள் பெரும் பயன் அடைந்தனர்.

இவர் முறையான ஏட்டுக்கல்வி கற்கவில்லை. எனினும் கேள்வி ஞானமும் மொழியார்வமும் இருந்ததால் இவரால் தமிழும் தமிழால் இவரும் வளர்ந்து நாட்டுக்குப் பயன்பட்டனர்.

திரைப்படத் துறை

தேசியத்தையும் மொழியையும் இரு கண்களாகக் கொண்ட இவர் வீரத் தமிழர் வரலாறுகளை மக்கள் அறியச் செய்வதில் அதிக ஆர்வம் காட்டினார். பி.ஆர். பந்துலு அவர்கள் கட்டபொம்மன், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. ஆகியோரின் வரலாற்றைத் திரைப்படமாக்க விழைந்து ம.பொ.சி. யின் உதவியை நாடினார். இருவர் மாட்டும் அளவுகடந்த மரியாதை கொண்டிருந்த ம.பொ.சி. அத்திரைப்படங் களின் தயாரிப்பிற்கு உதவ முன் வந்தார். ஆனால் இதிலும் அவர் போராட்டத்தைச் சந்திக்காமல் இல்லை. தமிழினச் சுதந்திரத்திற்காகப் போராடிய தமிழினத் தமிழர்களைத் தமிழர்களே இழிவுபடுத்தத் தலைப்பட்டனர். கட்டபொம்மனைக் கொள்ளைக்காரனாக வருணித்துத் தமிழ்வாணன் தன் கல்கண்டு வார இதழில் கட்டுரை எழுதினார். சி.பா. ஆதித்தனார் அவர்கள் ஆற்காடு நவாப் அவர்களை

எதிர்த்துப் போராடிய புலித்தேவனைப் பற்றிய நாடகத்தில் கட்டபொம்மனைப் பற்றிய இழிவான வசனங்களைச் சேர்த்திருந்தார். இவை யாவும் கட்டபொம்மன் பற்றிய திரைப்படம் தயாரிக்கத் தொடங்கப்பட்ட பிறகு நடைபெற்றதாகும். இத்தனை எதிர்ப்பு களையும் தன் நாவன்மையாலும் எழுத்துத் திண்மையாலும் எதிர்த்தார். பொதுக் கூட்டங்கள் நடத்தி, கட்டபொம்மனின் பெருமைகளை எடுத்துக் கூறினார். இத்துணை எதிர்ப்புகளை மீறித் தமிழகத்தில் 1959 மே 16 ஆம் நாள் வெளியிடப்பட்ட கட்டபொம்மன் திரைப்படம் தொடர்ந்து 150 நாட்களுக்கும் மேலாக ஓடிப் பெரு வெற்றி பெற்றது. தமிழகத்தில் மட்டுமன்றி பி.ஆர். பந்துலு மற்றும் சித்ரா கிருஷ்ணசாமி அவர்களின் உழைப்பால் இலண்டனிலும் திரையிடப்பட்டது.

> எந்த ஏகாதிபத்தியம் வீரபாண்டிய கட்ட பொம்மனைத் தூக்கிலிட்டுக் கொன்றதோ, அவனுடைய பாஞ்சாலங் குறிச்சியைப் பாலைவனமாக்கியதோ, அந்த ஏகாதி பத்தியத்தின் தலைநகரான லண்டனிலேயே அந்த வீரனின் வரலாற்றுப் படம் திரையிடப்பட்டதிலே நான் மகிழ்ச்சி யடைந்தேன். என்னுடைய, என்னைப் பின்பற்றும் தமிழரசுக் கழகத் தோழர்களுடைய உழைப்புக்குக் கிடைத்த மகத்தான வெற்றியாக அதனை நான் கருதினேன்
> (இரண்டாம் பாகம், ப. 721)

என்று அச்சூழலில் தனக்கேற்பட்ட உணர்ச்சியைப் பதிவு செய்கிறார். ஆனால் அதே அளவு உழைப்பைக்கொட்டித் தயாரிக்கப்பட்ட 'கப்பலோட்டிய தமிழன்' எனும் திரைப்படம் அத்தகைய வெற்றி பெறவில்லை.

> காங்கிரஸ்காரர்கள் விடுதலைக்குப் பின்னுள்ள கால் நூற்றாண்டுக் காலத்திலே கடைப் பிடித்த நடைமுறை காரணமாக தேசிய வரலாறு அந்த அளவுக்கு மதிப்பிழந்திருந்தது (இரண்டாம் பாகம், ப. 723)

என்று தமிழகத்தின் அவல நிலையை எடுத்துக் காட்டுகிறார். தமிழனின் வீர வரலாற்றை வெளிக் கொணர்வதில், அவனுக்குப் பெருமை சேர்ப்பதில் போராடி வெற்றி அடைந்தார் என்பது ஒவ்வொரு துறையிலும் வெளிப்படுகிறது.

3. அரசியல்

ம.பொ.சி. அவர்களைப் பொறுத்த மட்டில் போராட்டம் என்பது பொதுப் பண்பு. அதன் வகையும் சூழலுமே மாறுபடுகின்றன.

அரசியல் என்றாலே போராட்டம் தான். எனினும் அதிலும் அவர் இரண்டு களன்களைச் சந்தித்தார். அவையாவன : 1. விடுதலைக்கு முன், 2. விடுதலைக்குப் பின்.

விடுதலைக்கு முன்

பாரதப் பொன்னாடு ஆங்கிலேயரின் வெறியாட்டத்திற்கு ஆட்பட்டிருந்த அவலப் பொழுதிலே ம.பொ.சி.யின் அரசியல் பிரவேசம் தொடங்குகிறது. நாடு அன்றிருந்த நிலையிலே விடுதலைக்காகப் போராடுதலைத் தன் கடமையாக ஒவ்வோர் ஆண் மகனும் எண்ணினான். பொதுமக்களுள் ஒருவராக இருந்து போராட்டத்திற்குப் பலம் சேர்ப்பது, கட்சியில் சேர்ந்து தொண்டனாகவும் தலைவனாகவும் திகழ்ந்து போராட்டத்தில் முன் நிற்பது என ஏதோவொரு வகையில் அனைவரும் போராடத் தலைப்பட்டனர். பிறந்தது முதல் வாழ்க்கையில் வறுமையோடும் வளர்ச்சியோடும் போராடிக் கொண்டிருந்த ம.பொ.சி.க்கு அரசியல் போராட்டத்தில் ஈடுபாடு வந்தது வியப்பொன்றுமில்லை.

அன்றைய இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்து காங்கிரஸ், கம்யூனிஸ்ட் என இரு பெருங்கட்சிகள், இரு வேறு வகையில் போராடின. அகிம்சை முறையை முன்னிறுத்தி அறத்தின் துணையொடு போராடிய காந்தியடிகளின் கொள்கைகளால், போராட்ட நெறிமுறைகளால் ஈர்க்கப்பட்டு 1927 ஆம் ஆண்டு, தன் இருபத்தோராவது வயதில் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார். அதன் பிறகு அவர் வாழ்க்கை முழுவதும் போராட்டங்களும் அதன் பாதிப்புகளும் மட்டுமே நிறைந்திருந்தன.

சைமன் கமிஷன் எதிர்ப்பு - முதல் போராட்டம்

தன் முதல் மனைவியின் மறைவிற்குப் பிறகு 1928 ஆம் ஆண்டு நடைபெற்ற ''சைமன் கமிஷன் பகிஷ்காரம்'' எனும் போராட்டத்தின் மூலம் அரசியலில் கால் பதித்தார்.

இந்தியர்களுக்குச் சுதந்திரம் அளிப்பது குறித்து ஆராய்வதற்காக வந்த சைமன் கமிஷனில் ஒரு இந்தியரும் இடம் பெறவில்லை. இதை எதிர்த்து நடைபெற்ற போராட்டத்தில் தான் 'பாஞ்சாலச் சிங்கம்' லாலா லஜபதி ராய் அவர்கள் காவல்துறையினரால் தாக்கப்பட்டு மரணமடைந்தார். அதையொட்டிச் சென்னையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் புரசைவாக்கம் ராக்ஸி திரையரங்கின் அருகில்

கடையடைப்பைப் பொருட்படுத்தாது திறந்து வைக்கப்பட்டிருந்த 'பல்டானா' எனும் ரொட்டிக் கடை மீது ஆர்ப்பாட்டக்காரர்களோடு சேர்ந்து கல்லெறிந்தார்.

உப்புச் சத்தியாக்கிரகம்

ம.பொ.சி. அதன் பின்னர் நடைபெற்ற உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்து கொண்டார். ஆந்திர கேசரி டி. பிரகாசம் அவர்கள் தலைமையில் சென்னையில் அப்போராட்டம் நடைபெற்றது.

> சென்னை நகரில் உப்பு காய்ச்சிய தொண்டர்களைப் போலீஸார் பிரம்பால் அடித்துக் கலைத்தனர். எனக்கும் சில அடிகள் கிடைத்தன. ஆனால் நான் பெருமைப்பட்டுக் கொள்ளக் கூடிய அளவில் இரத்தக் காயம் ஏற்படவில்லை; தழும்புகள்தான் ஏற்பட்டன (முதல் பாகம், ப. 50)

என்று தன் போராட்டத்தை நினைவு கூர்கின்றார்.

கள்ளுக்கடை மறியல்

ம.பொ.சி. கலந்து கொண்ட போராட்டங்களுள் கள்ளுக்கடை மறியல் தனி இடம் பெற்றுள்ளது. தாய்க்கும் தாரத்திற்குமான வேற்றுமையை உணரச் செய்யும் அறிவையும் குடிப்பிறப்பையும் அழித்து மனிதனை மிருகமாக மாறச் செய்யும் இழி ஆற்றல் பெற்றது கள். எனவே மனிதனை அழிவிலிருந்து காக்கக் காந்தியடிகள் கள்ளுண்ணாமையை வலியுறுத்தினார். அதன் முதல் கட்டமாகக் கள்ளினை விற்கும் கடைகளின் முன் நின்று அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்தக் கட்டளையிட்டார்.

ஒவ்வொரு நாளும் மாலை 5.30 மணி முதல் இரவு 9.30 மணி வரை கள்ளுக்கடைகள் முன் ஆர்ப்பாட்டம் செய்யப்படும். வட சென்னையில் இம்மறியலுக்கென்று அமைக்கப்பட்ட குழுவில் ம.பொ.சி. செயலாளராக இணைக்கப்பட்டார். இக்குழுவில் இணைந்து அவர் எதிர்த்தது யாரோ முகம் தெரியாத மூன்றாம் மனிதர்களை அல்ல. அவர் தன் அண்ணனையும் தம்பியையும் மாமனையும் மைத்துனனையும்தான் எதிர்த்தார். இவர் போராட்டத்தால் அதிகம் பாதிப்படைந்தது இவர் தம் உற்றார் உறவினரே ஆவர். பிறர் குடும்ப நலன் கருதி இவர் செய்த இம்மறியலால் இவரும் இவர் குடும்பமும் அடைந்த துன்பங்கள் பல.

கள் அருந்துவதை வன்மையாக எதிர்த்ததால் மக்களிடத்தும் கட்சியிலும் இவருக்குச் செல்வாக்கு அதிகரித்தது. ஆனால்,

- ★ தன் சுயசாதியினரால் குலத்துரோகியாகக் கருதப்பட்டார்.
- ★ இவர் உயிருக்கே ஆபத்தாக முடியும் எனும் சூழல் ஏற்பட்டது. பெற்றோர் வேண்டுகோளையும் மீறி மறியலில் ஈடுபட்டார்.
- ★ இவர்கள் குடியிருந்த வீட்டின் சொந்தக்காரரும் கிராமணியார் ஆவார். ம.பொ.சி. மீது மிகுந்த அன்பும் மரியாதையும் வைத்திருந்தார். இதனால் தேச பக்தராகவும் மாறினார். ஆனால் இம்மறியலில் ஈடுபட்டதால் குடிக்கூலி தரவில்லை எனும் காரணம் கூறி வீட்டை விட்டு வெளியேற்றினார்.
- ★ இவர் தந்தையும் தம்பியும் கள் தொழிலை விடாததால் அரசியல் எதிரிகளின் ஏளனத்திற்கு ஆளானார்.
- ★ ஊராரின் ஏளனத்திற்கு அஞ்சித் தந்தையையும் தம்பியையும் தொழிலிலிருந்து மீட்ட பிறகு வறுமையின் பிடியில் சிக்கிக் கொண்டனர்.
- ★ ஆறு அங்கத்தினர் உள்ள மிகப் பெரிய குடும்பத்திற்குத் தம்பியின் நெசவும் இவரின் அச்சம் தரும் வருமானமும் போதுமானதாக இல்லை.
- ★ இதன் காரணமாக, தங்கவேல் பிள்ளை சேரி எனுமிடத்தில் பாழடைந்த ஓர் ஓட்டைக் குடிசையில் தன் குடும்பத்தினருடன் சிறிது காலம் வசித்தார்.

இத்தனை சோதனைகளையும் வேதனைகளையும் தாங்கிக் கொண்டு கள்ளுக்கடை மறியலைத் தொடர்ந்தார். இதற்குக் காந்தியின் மீதும் அவர் கொள்கைகள் மீதும் அவர் கொண்டிருந்த ஆழ்ந்த பற்றே காரணமாகிறது. ஆனால் காலம் காலமாக ஒரு தொழிலை மட்டுமே அறிந்து, தலைமுறை தலைமுறையாக அத்தொழிலை மட்டுமே கற்று, அதை மட்டுமே நம்பியிருப்போரிடம் திடீரென அத்தொழிலை விட்டொழிக்கச் சொன்னால் அவர்கள் என்ன செய்வர் என்று தாம் அன்று சிந்திக்கத் தவறியதை எடுத்துரைக்கின்றார்.

> அரசியல் நிர்ப்பந்தம் காரணமாக, அவர்களிடமிருந்து அந்தத் தொழிலை வேறு நிவாரணம் ஏதும் தராமலே முற்றிலும் பிரித்து விடுவதென்பது, பரிதாபகரமான விஷயந்தான். திரும்பவும் சொல்கிறேன், அப்போது இந்த உண்மை என் மனத்தில் படவில்லை. கொக்குக்கு ஒரேமதி என்பதுபோல, காங்கிரஸ் கட்டளையை - காந்தியடிகளின் உபதேசத்தை நிறைவேற்றி வைப்பதொன்றையே எனது கடமையாகக் கருதினேன். அதற்காக என்னையே, என் குடும்பத்தையே, என் குலத்தையே மறந்து செயலாற்றும் உணர்ச்சியுடையவனானேன். உயர்தரக் கல்வி பயிலாத

> தொழிலாளியாக இருந்தேனாதலால், இதைத் தவிர வேறு விதமாக நான் நடந்து கொண்டிருக்க முடியாதல்லவா!
> (முதல் பாகம், பக். 66-67)

என்று காரண காரியங்களைத் தன் நிலை விளக்கமாக அளிக்கின்றார். அக்கள்ளுக்கடை மறியலால் அவர் குடும்பமும் அதிகம் பாதிப்படைந்ததால் இவ்விளக்கம் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகிறது.

தனி நபர் சத்தியாக்கிரகம்

நம் அன்னை பூமியை ஆங்கிலேயர் ஆள எவ்வகையிலும் ஒத்துழைப்பு நல்கக் கூடாது எனக்கூறும் ஒத்துழையாமை இயக்கம் வலுப்பெற்றிருந்த காலக்கட்டம் அது. அதன் ஒரு கூறாகத் தனிநபர் சத்தியாக்கிரகம் தொடங்கப்பட்டது. எங்கும் கூட்டம் சேர்க்காமல், தனி நபராக ஆங்கில ஆட்சியை எதிர்த்துச் சிறை செல்ல வேண்டும். அதிலும் காங்கிரஸ் கமிட்டி நிர்வாகிகள் சிறை செல்ல அவசரப்படாமல் மற்றவர்களை அனுப்பி வைக்க அக்கறை காட்ட வேண்டும் என்ற காந்தியடிகளின் கட்டளையை ஏற்றுச் செயல்படத் தொடங்கினார் ம.பொ.சி.

இதைச் செய்வதிலும் ஓர் உத்தியைப் பயன்படுத்தினர். வெளியூர்களில் இருந்து சென்னை வந்து இங்கே சத்தியாக்கிரகம் செய்பவர்களைக் காவல்துறை கைது செய்யாது. சென்னை நகரவாசிகளை மட்டுமே கைது செய்யும். எனவே ம.பொ.சி. வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்கெல்லாம் சென்னை விலாசம் ஒன்றினை அளித்தார். அவர்களைச் சத்தியாக்கிரகம் செய்வித்துச் சிறையை நிரப்பினார். அன்று அவருடைய மதிநுட்பம் பாராட்டப் பட்டது. ஆனால்,

> அன்று காந்திய நெறிக்கு மாறாகச் செய்த இந்த ஏற்பாட்டினால்தான் இன்று நூற்றுக்கணக்கானவர்கள் மத்திய - மாநில அரசுகளிடம் ''தியாகிகள்'' என்ற தகுதியால் ''தாமிரப் பத்திரமும், மாதாந்தர மானியத் தொகையும் பெறலாயினர்'' (முதல் பாகம், ப. 217)

என்று தவறுக்குக் கிடைத்த 'பலனை' வருத்தத்துடன் தெரிவிக்கின்றார். இக்குறையை அகற்ற தமிழுக்கும் தேசியத்திற்கும் தொடர்புண்டாக்க முயன்றார். அதன் பலனாக, பன்மொழிப் புலவர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், மறைமலை அடிகளார் மகன் வித்துவான் மறை. திருநாவுக்கரசு ஆகியோரைத் தானே முன் நின்று சத்தியாக்கிரகம் செய்ய வைத்துச் சிறைக்கு அனுப்பினார்.

பிறரைச் சிறையனுப்பித் தேசத் தொண்டராக்கிய இவர், தானும் சிறை செல்ல முடிவு செய்தார். ''அரசுடன் ஒத்துழைக்காதீர்கள். வேலையிலிருந்து விலகிவிடுங்கள்'' என்று உயர் அதிகாரிகளுக்குக் கடிதம் எழுதியதால் இராஜாஜியும், யுத்த நிதிக்குப் பணம் கொடுக்க வேண்டாம் என்று கூறியதால் எஸ். சத்தியமூர்த்தி ஐயரும் சிறை சென்றனர். அதுபோன்று 15.5.41 அன்று ''வந்தே மாதரம்'', ''மகாத்மா காந்திக்கு ஜே'', ''தமிழ் மக்களே! யுத்த நிதிக்குப் பணம் கொடுக்காதீர்கள்'', ''பிரிட்டிஷ் ஆட்சியுடன் ஒத்துழைக்காதீர்கள்'' என்று கூறியதற்காக இவரும் சிறையனுப்பப்பட்டார்.

> **நான் எத்தனையோ போராட்டங்களில் ஈடுபட்டிருக்கிறேனென்றாலும், என் அன்னையர் எனக்கு அன்னமூட்டிய தன் மணிக்கரத்தால் எனது நெற்றியில் திலகமிட்டு, என்னை வாழ்த்தி வழியனுப்பியது இந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தின் போது தான்!** (முதல் பாகம், ப. 220)

எனும் காட்சி அவர் இல்லத்தில் மட்டுமன்றி, எத்தனையோ இடங்களில் நிகழ்ந்திருக்கும் என்பதனை உணர முடிகிறது.

ஆகஸ்டு புரட்சி

1942 ஆம் ஆண்டு இந்திய விடுதலைப் போராட்டத்தில் மிக முக்கியக் காலக்கட்டமாகும். காந்தியடிகள் ''குவிட் இந்தியா'' எனும் கோஷத்தை முன் வைத்தார். ''இந்தியாவிலிருந்து வெளியேறு'' என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்க வேண்டிய இக்கோரிக்கை, ''வெள்ளையனே வெளியேறு'' என்று தமிழகப் பத்திரிகைகளாலும் காங்கிரசாராலும் மொழிபெயர்க்கப்பட்டது. இது பிரிட்டிஷ் ஆதிக்கத்தையன்றி பிரிட்டிஷ் சாதியை வெறுக்கவில்லை என்று கூறும் காந்தியின் கொள்கைக்கு எதிரானதாகும். இத்தகைய ஆராய்ச்சியை அச்சூழலில் மேற்கொள்ள இயலாத நிலையில் தானும் அன்று அதே கோஷத்தை எழுப்பியதை ஒப்புக் கொள்கின்றார்.

உலக மக்கள் அனைவரும் அறிந்த ஆகஸ்டு புரட்சி ஒன்றிருக்க ம.பொ.சி. வேறொன்று குறித்துப் பேசுகின்றார். காந்தியடிகள் திட்டமிட்ட விடுதலைப் போராட்டத்திற்கு அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் ஆதரவைப் பெற 9.8.42 அன்று தான் பம்பாயில் கூட்டம் கூட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால்,

> **அதற்கு முன்பே விடுதலைப் புரட்சியை நடத்துவதற்கான வேலைத் திட்டம் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் பெயரால் மாநில, மாவட்ட காங்கிரஸ் கமிட்டிகளுக்கு அனுப்பப்பட்டுவிட்டது. அந்தத் திட்டம் பற்றிய சுற்றறிக்கை இரகசிய தஸ்தாவேஜாகவே கருதப்பட்டது** (முதல் பாகம், ப. 248)

என்று அதன் மற்றொரு முகம் குறித்துக் கூறுகிறார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராகிய காமராசரிடமிருந்து செயலாளராகிய ம.பொ.சிக்கும் அவ்வறிக்கை கிடைக்கின்றது. அதோடு அமையாது வட ஆற்காடு, சேலம், மதுரை ஆகிய மூன்று பெரிய மாவட்டங்களுக்கும் கொண்டு போய்க்கொடுக்கும் வேலையும் ம.பொ.சி.யை வந்தடைகிறது. ஆங்கிலத்தில் இருக்கும் அவ்வறிக்கையைப் புரிந்து கொள்ளும் மொழியாற்றல் இருந்தாலும் அதன் பின் விளைவுகளை உணர்ந்து கொள்ளும் மனவாற்றலும் மனப்பக்குவமும் இல்லாததால் அவ்வேலையை முடிக்க ஒப்புக் கொள்கிறார். அகிம்சா மூர்த்தியாகிய காந்தியடிகள் வன்முறையைத் தூண்டும் இத்திட்டத்தை அளித்திருப் பாரா எனும் ஐயம் எழுந்தாலும் தலைவர் இட்ட பணியை முடிப்பது தன் கடமை என்றெண்ணி மூன்று மாவட்டங்களுக்கும் காமராசரின் தூதுவனாகச் செல்லத் தலைப்படுகிறார்.

> இரகசியச் சுற்றறிக்கையின் பிரதியாரிடமிருப்பினும், அவர் மரண தண்டனைக்கு உள்ளாகக்கூடும்! என்று இந்தியா மந்திரியும் பயமுறுத்தியிருந்தார் (முதல் பாகம், ப. 251)

என்ற அச்சத்தையும் மீறி நாட்டுப் பணிக்காகத் தன்னை அர்ப்பணித்தார். ஏற்றுக் கொண்ட வேலையைச் செவ்வனே செய்து முடிப்பதற்காகத் தலைமறைவு வாழ்வு மேற்கொண்டார். ஏனெனில் நிர்வாகிகள் தாமாகச் சிறைபட்டுக் கொள்ளக்கூடாது என்றும் கமிட்டி கட்டளை யிட்டிருந்தது. அன்றைய சூழலில் ம.பொ.சி.யின் முகத்தைச் சென்னை தாண்டிய பொது மக்களும் காவல்துறையினரும் அறிந்திருக்கவில்லை யாதலால் இவர் மதுரைக்குச் செல்வது கடினமானதாக அமைய வில்லை. அங்கே புலி மீனாட்சி சுந்தரம் மூலம் தன் பணியை முடித்துக் கொண்டவர், மீண்டும் சென்னை திரும்பினார். திருப்போரூரில் இருந்த தாயையும் மனைவியையும் சந்தித்தவர் தாயிடம் உணவு உண்ணும் ஆசையை அடக்கிக் கொண்டு, மீண்டும் பணிக்குத் திரும்புகிறார். மூன்று நாட்கள் சென்னை நகரில் சில பிரமுகர்களைச் சந்தித்து விடுதலைப் போரைக் குறித்துப் பேசுகின்றார். உயிரைப் பற்றிக் கவலைப்படாமல் இவர் வேண்டுகோள் விடுக்க அவர்களோ, ம.பொ.சி. யைத் துரத்தும் போலீஸார் தம் இல்லம் நுழைந்திடுவரோ என்றஞ்சி அவரைத் துரத்துவதில் அவசரம் காட்டினர். மனம் சோர்வடைந்ததோடு,

> வெளியிலிருந்து எதையும் சாதிக்க முடியாதென்ற தோல்வி மனப்பான்மையை அடைந்தேன். தலைமறைவாக இருந்து புரட்சி நடத்தும் திறமை எனக்கில்லை என்பதையும் மூன்று நாட்களில் நான் பெற்ற அனுபவம் எனக்கு விளக்கியது
>
> (முதல் பாகம், ப. 255)

என்று உண்மை நிலையைக் கண்டறிந்ததைக் கூறுகின்றார். இச்சூழலில் ஆகஸ்டு மாதம் 13 ஆம் நாள் காவல்துறையினர் பிடிவாரண்டுடன் வந்து இவரைக் கைது செய்தனர். இவர்தம் தலைமறைவு வாழ்விற்கு முற்றுப் புள்ளி வைத்ததால் அதையும் மனதார வரவேற்றிருப்பார் எனக் கருதலாம்.

பிற பணிகள்

பணி செய்து கிடப்பதையே கடமையாகக் கொண்டு வாழ்ந்தவர் தன் பணியை ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் நிறுத்தவில்லை. காந்தியடிகளின் தீவிர பக்தரான இவர் அவருடைய கட்டளையை ஏற்று அரிசனப் பணியில் ஈடுபட்டார்.

> **நான் எனது குடும்பத்தினருடன் சேரியில் வாழ்ந்த காலத்திலே, ஒரு அரிசனப் பெண்ணை மணந்து வாழ்க்கை நடத்த வேண்டுமென்ற ஆர்வமும் எனக்கு இருந்தது; ஆனால், காதல் கலையில் தேர்ச்சி பெறாத காரணத்தால், அந்த எண்ணம் ஈடேறவில்லை** (முதல் பாகம், ப. 71)

என்றார். இந்த எண்ணம் வந்ததற்குக் கலப்புத் திருமணங்களால் சாதி அமைப்பு ஒழியும் என்ற எண்ணம் காரணம் என்றும் கூறியிருக்கிறார். இயல்பிலேயே அவர்கள் மீது கொண்ட ஈடுபாடு, காந்தியடிகள் அவர்களைக் 'கடவுளின் மக்கள்' என்றழைத்து அவர்களின் வளர்ச்சிக்காகப் பாடுபடக் கூறியவுடன் அதிகரித்தது. ''அகில இந்திய அரிஜன சேவா சங்கம்'' ஒன்று நிறுவப்பட்டு, சென்னை மாவட்ட அரிஜன சேவா சங்கமும், வடசென்னை அரிஜன சேவா சங்கமும் அதன் கிளைகளாக நிறுவப்பட்டன. அவற்றில் முறையே பிரசாரகனாகவும், செயலாளராகவும் இருந்து பணியாற்றினார். சேரிக்குச் சென்று அங்குள்ள மக்களுக்கு ஆரோக்கியம் குறித்த முக்கியத்துவத்தை உணர்த்தினார். தங்களைப் பாவ ஜென்மங்களாகக் கருதிக் கொண்டிருந்த அம்மக்கள் காங்கிரசாரை மிகுந்த மரியாதையோடு தெய்வத்திற்கு நிகராக நினைத்து வணங்கினார்கள். ஆனால் ம.பொ.சி. அவர்கள் பெரும்பேறாக நினைத்தது தன் கண்கண்ட தெய்வமாகிய காந்தியடிகளைச் சந்தித்ததையே ஆகும். ஒரு மாபெரும் பொதுக்கூட்டத்தில் காந்தியடிகளிடம் நிதி அளிக்கப்பட்டது. அக்கூட்டத்தில் ம.பொ.சி. வரவேற்பு மடல் வாசித்தார்.

> **நான் தமிழில் வரவேற்பு மடல் வாசித்தளித்தேன். ஐயன் தன் இரு கைகளையும் நீட்டி இந்த எளிய தொண்டன் கையிலிருந்து வரவேற்பிதழைப் பெற்றுக் கொண்டபோது எனது ஜென்மம் சாபல்யமடைந்ததைப் போன்ற ஒரு**

> உணர்ச்சி எனக்கேற்பட்டது. இந்தக் கூட்டத்தின் மற்ற நிகழ்ச்சிகள் இப்போது சரிவர நினைவில்லை. ஆனால், எல்லாம் சரியாகவே நிகழ்ந்து முடிந்தன (முதல் பாகம், ப. 99)

என்று நெகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறார். காந்தியடிகளின் மீது இவர் கொண்டிருந்த மட்டற்ற மரியாதையும் பக்தியும் இதன் மூலம் நன்கு பெறப்படுகின்றன.

இயன்ற வகையிலெல்லாம் மக்கள் பணியாற்றக் காத்துக் கொண்டிருந்த இவரிடமே பணிகளும் வந்து சேர்ந்தன. இரண்டாம் உலகப் போர் அதற்கு வழி வகுத்தது. ஜப்பானின் குண்டுவீச்சுக்குப் பயந்து பர்மாவிலிருந்து தமிழர்கள் அகதிகளாகச் சென்னைக்கு வரத் தொடங்கினர். பர்மா அகதிகளுக்குப் புனர்வாழ்வு அளிப்பதற்கென்று சென்னை மாநகராட்சியின் அப்போதைய மேயர் வி. சக்கரை செட்டியார் தலைமையில் அமைக்கப்பட்டிருந்த குழுவின் செயலாளர்களில் ம.பொ.சி. யும் ஒருவர். எனவே கால்கடுக்க நடந்து கல்கத்தா வந்து அங்கிருந்து இரயிலில் சென்னை வரும் அகதிகளை இரயிலடியிலேயே வரவேற்று அவர்களுக்கு வசதி செய்து தருவது இவர் பொறுப்பு.

இப்பணியில் இருக்கும்போதே வேறொன்றையும் செய்தார். அதே ஜப்பானியர்களின் வெடிகுண்டு வீச்சுக்கு அஞ்சி, சென்னையை விட்டுச் செல்லும் நகரவாசிகளின் உடைமைகளைப் பாதுகாக்கும் ''ஊர்க்காவல் சங்கத்திலும்'' செயலாளராக இருந்து அப்பணியையும் செவ்வனே ஆற்றினார்.

உழைத்துப் பிழைக்கும் தொழிலாளியாக இருந்து அரசியலுக்கு வந்தவராகையால் தொழிலாள வர்க்கத்தின் கடின வாழ்வை உணர்ந்தவராய் இருந்தார். எனவே அச்சுத் தொழிலாளர் சங்கத்தில் அங்கத்தினராக இருந்தார். எங்கெல்லாம் தொழிலாளர்களுக்குச் சிக்கல் தோன்றுகிறதோ அங்கெல்லாம் சென்று தொழிலாளர்களுக்கு ஆதரவாக இயங்கினார். காங்கிரஸ் கட்சியிலே இவர் போல மேடையில் முழங்கும் பேச்சாளர் யாரும் இல்லை. மேலும் தொழிலாளிகளின் நிலையை உணர்ந்து பேசுவோரும் யாருமில்லை. இவை இரண்டும் கைவரப்பெற்றவராகையால் தொழிற்சங்கங் களுடன் இவர் தொடர்பு வளர்ந்தது. இதன் காரணமாகவே கட்சிக் கொள்கையையும் மீறி ஜீவாவுடன் நெருங்கிய தோழராக இவரால் விளங்க முடிந்தது.

சிறைப் பறவை

தன் தாய் நாட்டு விடுதலைக்காகப் போரிட்ட இந்தியர்களுக்கு ஆங்கில அரசு தந்த பரிசு சிறை வாசம். அப்பரிசினைப் பெற ம.பொ.சி. தவறவில்லை. அதிலும் பலமுறை அப்பரிசினைப் பெற்றுள்ளார்.

★ நாட்டு விடுதலைக்காக இவர் கலந்து கொண்ட முதல் போராட்டம் சைமன் கமிஷன் எதிர்ப்பு. அதில் கலந்து கொண்டு கலவரம் செய்ததற்காக இவரையும் வேறு சிலரையும் கைது செய்து வேப்பேரி காவல் நிலையத்தில் அடைத்தனர். இது நிகழ்ந்த 1928 ஆம் ஆண்டு தான் இவர் முதன் முதல் சிறை சென்றார். அன்று நள்ளிரவே விடுவிக்கப் பட்டார்.

★ இந்தியர் உணர்வுகளையும் அடக்க முற்பட்ட ஆங்கில அரசு தலைவர்களைக் கைது செய்ததோடு அவர்களுக்கு ஆதரவாகக் குரல்கொடுக்கவும் தடை விதித்தது. அத்தடையை மீறக் கூடாதென்றும் சென்னைக்கு வெளியே செல்லக் கூடாதென்றும் விதிக்கப்பட்ட ஆணையை எதிர்த்துக் கோஷம் எழுப்பியதால் 5.1.1932 அன்று மீண்டும் கைது செய்யப்பட்டார். ஓர் இரவையும் பகலையும் காவல் நிலைய லாக்கப்பில் கழித்தது பற்றி,

> லாக்கப்பில் ஓர் இரவைக் கழிப்பதானது நரகத்திலிருப்பதைப் போலத்தான். காவல் நிலையங்களிலுள்ள 'லாக்கப்பில்' ஒருவன் ஒரு இரவு இருந்துவிட்டால், அவனிடமுள்ள மனிதத் தன்மை முழுவதுமே செத்துப் போய்விடும். 'லாக்கப்' என்பது இருள் சூழ்ந்த இடம், மூத்திர நாற்றமடிக்கும். நிர்வாணமாகத்தான் அதில் தள்ளுவார்கள். (முதல் பாகம், ப. 81)

என்று கூறுகின்றார். விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படுபவர்கள் இத்தகைய கொடுமைக்கு ஆளாக்கப்படக்கூடாது. இக்குறைகளையப்பட வேண்டும் என்று 1970 இல் காவல் துறை ஆய்வுக் குழுவின் அங்கத்தினராகத் தான் இருந்தபோது முறையிட்டது விழலுக்கு இறைத்த நீரானதைக் குறிப்பிட்டுச் செல்கிறார்.

★ இதைத் தொடர்ந்து, மீண்டும் தடை உத்தரவை மீறி ஊர்வலம் சென்றதற்காக 15.5.1932 இல் கைது செய்து போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் நாள் முழுவதும் உணவும் அளிக்கப்படாமல் சிறை வைக்கப்பட்டார்.

★ அதே மாதம் 29.5.1932 அன்று மீண்டும் சட்டத்தை மீறியதற்காகக் கைது செய்யப்பட்டு ஒரு மாதம் விசாரணைக் கைதியாக அடைத்து நிபந்தனை இன்றி விடுதலை செய்யப் பட்டார்.

★ 26.7.1932 - இல் சென்னை ஏழு கிணறு வட்டத்தில் - அங்குள்ள ஆஞ்சனேயர் கோயில் முன்புள்ள திடலில் சட்டத்தை மீறி நடைபெற்ற சென்னை ஜில்லா அரசியல் மாநாட்டில் தண்டையார் பேட்டைக் காங்கிரஸ் கமிட்டியின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார். அதற்காக அவ்விடத்திலேயே அவரைக் கைது செய்து, போலீஸ் உயர் அதிகாரிகளே அடித்துத் துன்புறுத்தியதை எடுத்துக் காட்டுகின்றார்.

★ எத்துணை முறை சிறைப்பட்டாலும் நாட்டிற்காக அல்லலுறுவதை இன்பமாக ஏற்பது அக்காலத்தவர் இயல்பு. எனவே சிறை காக்கும் காப்பு எவன் செய்யும் என்று மீண்டும் மீண்டும் சிறை புகுவதிலேயே ம.பொ.சி. குறியாயிருந்தார்.

★ 20.9.1932 - அன்று 144 தடை உத்தரவை மீறியதற்காக மீண்டும் கைது செய்யப்பட்டார். இம்முறை அவர் மீது வழக்கு தொடரப் பட்டு, விசாரணை நடைபெற்றது. முடிவில் ஒரு ரூபாய் அபராதம், அதைக் கட்டத் தவறினால் மூன்று மணி நேரக் கோர்ட் காவல் என்று தீர்ப்பு கூறப்பட்டது. தண்டனை குறைவாகக் கிடைத்ததால் அதிர்ச்சியுற்ற இவர் காவலில் இருக்கவே முடிவு செய்தார்.

★ இது நடந்து முடிந்த பத்து நாட்களுக்குள் மீண்டும் கைது செய்யப்பட்டார். திருவல்லிக்கேணிக் கடற்கரையில் குழுமியிருந்த மக்களிடையே தமிழா! துள்ளி எழு! எனும் அரசு விரோதப் பிரசுரத்தை வழங்கியதற்காக 30.9.1932 அன்று மீண்டும் கைது செய்யப்பட்டார். எண்ணியது உடனே ஈடேறிவிட்டால் அதில் சுவையிருக்காது. எதையும் போராடியே பெறும் ம.பொ.சி.க்கு இவர் எதிர்பார்த்த அதிக நாள் தண்டனையும் பலமுறை தவறியே வந்தது. ஆம் பலமுறை கடந்து இம்முறை தான், சிறைச்சாலையில் 'சி' வகுப்பில் ஆறு மாதக் கடுங்காவல் தண்டனை கிட்டியது. குடும்பத்தினர் வருந்தினாலும் இவருக்கு மகிழ்ச்சியே - நினைத்தது பலித்ததால்.

★ தனி நபர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டதற்காக 15.5.1941 அன்று மீண்டும் கைது செய்யப்பட்டார். இடைப்பட்ட காலக்கட்டத்தில் இவருடைய அரசியல் செல்வாக்கு உயர்ந்திருந்தாலும் செல்வ நிலை உயராததால் சிறையில் 'சி' வகுப்பிலேயே ஆறு வாரக் காலம் தண்டனை அனுபவித்தார்.

★ ஆகஸ்டு புரட்சியில் ஈடுபட்டதற்காக 13.8.1942 அன்று கைது செய்யப்பட்டதுதான் அவருடைய வாழ்வில் பல மாற்றங்களை ஏற்படுத்தியது. எப்பொழுதும் சென்னை மத்திய சிறையில் அடைக்கப்படும் இவர் இம்முறை வேலூர் மத்திய சிறைக்குள் அடைக்கப்பட்டார்.

கு. காமராசர், எஸ். சத்தியமூர்த்தி, சி.என். முத்துரங்க முதலியார், எம். பக்தவத்சலனார், டி. பிரகாசம், வி.வி. கிரி, மாதவமேனன் போன்ற தென்னிந்தியத் தலைவர்களோடு தன் சிறைவாழ்க்கையைப் பகிர்ந்து கொண்டார். வேலூர்ச் சிறையில் சில நாட்கள் தங்கியிருந்த பிறகு தலைவர்கள் 30 பேர் முன்னறிவிப்பு ஏதுமின்றி அங்கிருந்து அழைத்துச் செல்லப்பட்டனர்.

சென்னை சென்டிரல் இரயில் நிலையத்தில் ம.பொ.சியின் தம்பி ம.பொ. பரசுராமனைத் தவறுதலாக ம.பொ.சி. என்று நினைத்து இரயிலில் ஏற்றிக் கொண்டது; விசயவாடாவில் சத்திய மூர்த்தி ஐயர் அவர்கள் குடிக்க சோடா கேட்டும் கொடுக்காததால் இரயிலைச் சங்கிலியைப் பிடித்து இழுத்து நிறுத்தியது போன்ற சுவையான சம்பவங்களை மறக்காமல் எடுத்துரைக்கின்றார். இவ்வாறு இரயிலில் அழைத்துச் செல்லப்பட்டவர்கள் முடிவில் சென்றது நாகபுரிக்கு 98 மைல் தொலைவிலுள்ள அமராவதிச் சிறைச் சாலைக்கு ஆகும். அதற்குக் காரணமும் உண்டு.

> 1937 முதல் 1939 ஆம் ஆண்டு வரை பல மாநிலங்களிலே காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றதால், திரும்பவும் விரைவில் ஒரு நாள் காங்கிரஸ் அதிகாரத்திற்கு வருவது உறுதி என்ற எண்ணம் அதிகார வர்க்கத்திற்கு ஏற்பட்டிருந்தது. அதனால், சிறை அதிகாரிகளும், சிறையிலுள்ள காங்கிரஸ் கைதிகளின் சதிச் செயல்களுக்குத் துணை புரியக் கூடுமென்று பிரிட்டிஷ் அரசுக்கு ஐயமேற்பட்டது
>
> (முதல் பாகம், ப. 261)

என்கிறார். இதன் காரணமாகச் சிறைக் கைதிகளாய் இருந்த தலைவர்கள் வேறு வேறு பகுதிகளுக்கு மாற்றப்பட்டனர். இவர்கள் அமராவதிக்குச் சென்றது போல விநோபா பாவே போன்ற வட இந்தியத் தலைவர்கள் தென்னிந்தியச் சிறையில் அடைக்கப்பட்டனர். இவ் அமராவதிச் சிறைச்சாலைதான் ம.பொ.சிக்கு மிகப்பெரிய கல்விச்சாலையாக அமைந்தது என்பது முன்னர்க் குறிப்பிடப்பட்டிருந்தது.

காங்கிரஸ் கட்சியில் நிலைத்து நிற்கக்கூடிய கோஷ்டிப் பூசலுக்கு அடி எடுத்துக் கொடுத்ததும் இச்சிறைச்சாலைதான். இங்குத்தான் கிளிக் கோஷ்டி முதலில் உருவானது.

ம.பொ.சியின் உடல்நிலை மிக மோசமான காலக்கட்டத்தை அடைந்ததும் இச்சிறை வாசத்தில்தான். குடற்புண், பசியின்மை, தூக்கமின்மை போன்ற பல நோய்கள் இவரைப் பிடித்திருந்தன. தன் முப்பத்தொன்பதாவது வயதில் அகால மரணத்தை நெருங்கிக் கொண்டிருந்த இவருக்கு மருத்துவச் சிகிச்சையும் அளிக்கப்பட்டது.

ஒரு கட்டத்தில் இரவு தூங்கினால் மட்டுமே உயிர் பிழைக்க முடியும் எனும் நிலை வந்தபோது சுப்ரமணிய சிவாவின் சீடரான மதுரை சிதம்பர பாரதியை அழைத்துத் திருவருட்பாவின் மகாதேவ மாலையைப் பாடச் செய்து உறங்கினாராம்.

சிறையிலுள்ள பிறர் போராடி இவரைச் சிறைச்சாலைக்கு வெளியே உள்ள மருத்துவமனையில் சேர்த்தனர். அண்ணாமலைப் பிள்ளை இவரோடு தங்கியிருந்து தாதி போலப் பணியாற்றியதை நன்றியுடன் குறிப்பிடுகின்றார். மருத்துவமனையிலிருந்து தானே விரும்பிக் கேட்டு மீண்டும் சிறைக்குத் திரும்பினார். ஆனால் சிறைக்குத் திரும்பிய இரண்டே நாட்களில் அவர் மனைவி மரணப்படுக்கையில் அபாயக் கட்டத்தில் இருப்பதால் ம.பொ.சியைப் பரோலில் விடுவிப்பதாக உத்தரவு வருகிறது. இதன் காரணமாக அவருடைய சிறைவாசம் பத்தரை மாதங்களில் தற்காலிக முடிவுக்கு வருகிறது.

★ அடையாளம்கூடக் காணப்பட முடியாமல் கிடந்த தன் மனைவியைத் தானும் அந்நிலையிலேயே நின்று நோக்கினார். எனினும் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு மீண்டும் சிறைச்சாலைக்குத் திரும்பினார். இம்முறை அமராவதி அல்ல. மீண்டும் வேலூர்ச் சிறைச்சாலை. அங்கு ஆர். வெங்கட்ராமனிடம் பொருளாதார வகுப்புப் பயின்றார். அமராவதிச் சிறையைப் போன்று துன்பச் சூழல் இல்லையெனினும் மீண்டும் குடற்புண்ணிற்கும் இரத்த சோகைக்கும் ஆளானார்.

★ இந்நிலையில் காரணம் கூறப்படாமல் வேலூர்ச் சிறையிலிருந்து தஞ்சையிலுள்ள இளங்குற்றவாளிகள் சிறைச்சாலைக்கு மாற்றப் பட்டார். தனி அறையில் வசதியாக இருந்தாலும் உடல் நிலை மோசமாகவே இருந்தது. மருத்துவரின் ஆலோசனையைப் போலீஸ் உயர் அதிகாரி ஏற்றுக்கொள்ளாததால் இவர் உடல்நிலை மோசமாகி உணர்விழந்து விழுந்தார். அவர் உடல் நிலை மோசமானதால் சிறைத் தோழர்கள் கிளர்ச்சியும் போராட்டமும் செய்து விடுதலை பெற்றுத் தந்தனர். இவர் நிச்சயம் உயிரோடிருக்க மாட்டார் என்றே அனைவரும் கருதினர். அவருடைய முகத்தை ஒரு முறையேனும் கண்டுவிட வேண்டும் என்று துடித்தனர்.

அரசியல் கைதி ஒவ்வொருவரும் அவரவர் அறையினருகே நிற்க வேண்டுமென்றும், நான் சிறையின் ஒவ்வொரு பகுதிக்கும் கொண்டு வரப்படுவேன் என்றும் தலைவர்கள் அறிவித்தனர். அதன்படி மருத்துவமனை ஸ்ரெட்சரில் என்னைப் படுக்க வைத்து சிறைக்குள்ளே ஒரு ஊர்வலம் நடத்தி விட்டனர். அந்தக் காட்சியை இன்றும் என் அகக் கண்களால் காண முடிகின்றது.

(முதல் பாகம், ப. 331)

என்று அந்நிகழ்ச்சியைக் கூறுகின்றார். 1942 ஆகஸ்டு 13 இல் வேலூர்ச் சிறையில் புகும்போது 119 பவுண்டு இருந்த அவருடைய உடல் எடை, 1944 ஜனவரி 4 இல் தஞ்சை இளங்குற்றவாளிகள் சிறையிலிருந்து விடுதலை பெறும்போது 88 பவுண்டாக இருந்தது. சரியாக 31 பவுண்டு சதை ஆங்கில ஏகாதிபத்தியக் கழுகுக்கு இரையாகிவிட்டிருந்தது. எனினும் தான் மட்டும் விடுதலை பெறுவதை ஏற்க மனமின்றிக் கண்ணீர் விட்டழுததையும், தொடர்ந்து போர் புரியவேனும் அவர் உயிர் வாழ வேண்டுமென சக தலைவர்கள் சமாதானம் கூறியதையும் நன்றியுடன் நினைத்துப் பார்க்கின்றார்.

விடுதலைக்காகப் போராடியவர்களுக்குச் சிறைவாசம் உறுதிதான். எனினும் அதன் மூலம் தான் அறிந்து கொண்டதை நன்முறையில் ஏற்றுக் கொண்டுள்ளார். தன் அடுத்த தலைமுறையினருக்கும் செய்திகளைத் தந்துள்ளார். சிறையில் அடைக்கப்படும் அரசியல் தலைவர்களும் குற்றவாளிகள் போலவே நடத்தப்பட்டனர். அதனை எதிர்த்து ஜமீன்தாசன், அஜய்குமார் கோஷ் ஆகியோர் உண்ணா விரதமிருந்து, ஜமீன்தாசன் உயிர் விட்டதையும் கூறுகின்றார். இதனால், கைதிகளின் அணுகுமுறையில் மாற்றம் கொண்டு வந்த ஆங்கில அரசு, ஆங்கில அறிவு பெற்ற இந்திய அரசியல் தலைவர்களுக்கு மட்டுமே வசதியான சிறையைத் தந்தது.

சிறைச்சாலை போன்றதொரு சிறந்த பள்ளிக்கூடம் இல்லை என்பது ம.பொ.சி.யின் வாழ்வில் உண்மையாகிறது. விடுதலைக்கு முன் அவர் பெற்ற சிறைவாழ்வு முடிவடைந்தாலும் விடுதலைக்குப் பிறகும் அவரைத் தொடரவே செய்தது.

கட்சிப் பணி

தேசத்திற்கும் தாய் மொழிக்கும் மட்டுமன்றி, தான் சார்ந்த கட்சிக்கும் பெரும் தொண்டாற்றினார். 1927 ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து வட சென்னையில் காங்கிரசின் வளர்ச்சிக்கு வித்திட்டார். தானும் கட்சியில் உயரத் தொடங்கினார்.

> 1935 வரை எனது காங்கிரஸ் பணி வடசென்னைக்கு உட்பட்ட தாகவே இருந்தது. 1936-க்குப் பின் சென்னை மாவட்டம் முழுவதிலும் செல்வாக்குப் பெற்றேன். 1937 இல் நான் முதன் முதலாகச் சென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் அங்கத்தினன் ஆனேன். அதே ஆண்டில், அந்தக் கமிட்டியின் துணைச்செயலாளனானேன். அடுத்த ஆண்டிலேயே செயலாளனானேன். அந்தக் காலத்தில் இந்தப் பதவிகளுக்கெல்லாம் மக்கள் மத்தியிலே பெரிய மதிப்பிருந்தது (முதல் பாகம், ப. 153)

என்று அவர் சுருங்கக் கூறுகிறார். ஆனால் கூறியிருப்பது போல அவ்வளர்ச்சி எளிதில் அவருக்குக் கிடைக்கவில்லை. இராயபுரம் காங்கிரஸ் கமிட்டி தனது தேர்வை எதிர்த்து மனு செய்தபோது அதை எதிர்த்து வென்றார். இவ்வாறாக ஒவ்வொரு கட்டத்திலும், ஒவ்வொரு செயல்பாட்டின் போதும் தலைவர்கள் இவருக்குத் துணையிருந்தனர். கள்ளுக்கடை மறியலின் போதும் எதிர்ப்பாளர் இவருடைய தந்தையைத் தூண்டிவிட்டு இவரை ஏளனம் செய்தனர். இவர் இராஜாஜியோடும் காமராஜரோடும் கொண்டிருந்த உறவு காங்கிரசில் இவர் நிலையை உயர்த்தியது. பெரியாருடனும் அறிஞர் அண்ணாவுடனும் கொண்டிருந்த உறவுநிலை மக்களிடையே இவருடைய செல்வாக்கை உறுதிப்படுத்திற்று. இப்பெருந்தலைவர்களுடன் இவர் கொண்டிருந்த உறவு, விடுதலைக்கு முன்னும் பின்னும் தொடர்ந்ததால் அவை தனியாக விவரிக்கப்படுகின்றன. அவர்களுடனான உறவை, நட்பை, எதிர்ப்பைப் பற்றிக் கூறும்போதே இவராற்றிய கட்சிப் பணியும் உடனியைந்து வரும்.

விடுதலைக்குப் பின்

அன்றைய நாளில் இந்தியக் குடிமகன் ஒவ்வொருவனும் எதிர்பார்த்தது விடுதலை எனும் நறும்பாலைத்தான். ஆனால் மத அடிப்படையிலான பாகிஸ்தான் பிரிவினை எனும் துளி நஞ்சு கலந்தே ஆங்கில அரசாங்கம் நமக்கு அளித்தது. எனவே காந்தியடிகள் அதைக் கொண்டாடவும் மனமின்றி வருந்தினார். விடுதலை பெற்ற திருநாளைக் கொண்டாடுவதிலும் ம.பொ.சி. அவர்கள் போராட்டம் புரிய வேண்டியிருந்தது.

ஆங்கிலேயர் ஆதிக்கத்திலிருந்து மீண்டாலும் வட இந்தியர் ஆதிக்கத்திலிருந்து மீளாத நிலையில் தமிழகத்தில் ஆகஸ்டு 15 ஆம் நாளைத் துக்க நாளாகக் கொண்டாடுமாறு கூறினார் பெரியார்.

> ஏகாதிபத்தியத்தை வெளியேற்றாத நிலையில் வட இந்திய ஆதிக்கத்தை மட்டும் எதிர்த்துத் தமிழர் போராட்டம் நடத்தினால், அது ஏகாதிபத்தியத்துக்குத் துணை செய்யும். உள்நாட்டுக் குழப்பமாக இருக்குமேயன்றி, தமிழருக்குப் பூரண விடுதலையளிக்கும் சுதந்திர இயக்கமாக இருக்க முடியாது (இரண்டாம் பாகம், ப. 67)

என்று அவருக்குச் சமாதானமாக அறிக்கை விடுத்துத் திராவிடர் கழகத் தொண்டர்களையும் சுதந்திரத்தைக் கொண்டாட அழைத்தார். அதே சமயம் தீவிரவாதிகள் என்று முத்திரை குத்தப்பட்டு நாடு விடுதலை அடைந்த பிறகும் சிறையிலிருந்த கம்யூனிசத் தொண்டர்களையும்

விடுவிக்கக் கோரிப் பொதுக் கூட்டம் நடத்தினார். அவர்களையும் விடுவித்து, தமிழகக் காங்கிரசார் மறந்து போயிருந்த தமிழக விடுதலைப் போராட்ட வீரர்களைக் குறித்தும், பெரியார் உட்பட அனைவர் குறித்தும், அவர்களுடைய பங்களிப்பைப் பற்றியும் விரிவான கட்டுரைகளையும் புகைப்படங்களையும் தன்னுடைய ''தமிழ் முரசு'' இதழிலே வெளியிட்டு அஞ்சலி செலுத்தியுள்ளார். சுதந்திரத்தின் முக்கியத்துவத்தைத் தானும் உணர்ந்து பிறருக்கும் தன் செயலால் உணர்த்தி, தான் மேடை ஏறிப் பேசிடாத விடுதலை விழாவினைக் கொண்டாடினார்.

புதிய தமிழகமும் எல்லைக் கிளர்ச்சியும்

தமிழகம், ஆந்திரம், கர்நாடகம், கேரளம் என்று மாநிலங்கள் பிரிக்கப்படாதபோது தென்னிந்தியா மட்டுமே இருந்தது. மொழி வாரியாக மக்களைப் பிரித்து மாநிலங்களை உருவாக்குவது மிகப் பெரிய பொறுப்பான பணியாக இருந்தது. இப்பணியையும் ம.பொ.சி. செவ்வனே செய்து முடித்தார். சாதி அடிப்படையிலோ மத அடிப்படையிலோ மக்கள் பிரிக்கப்படாமல் மொழி அடிப்படையில் எல்லை பிரிக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாயிருந்தார். தமிழர்கள் வாழும் பகுதியில் டி. பிரகாசம், ஓமந்தூர் ரெட்டியார், நாகேசுவரராவ் போன்ற ஆந்திரர்கள் ஆதிக்கம் செலுத்தியதால் 'மதராஸ் மனதே' என்ற கோஷம் தலை தூக்கியது. கேரளரும் கர்நாடகத்தாரும் கூடத் தங்கள் எல்லைகளை அமைத்துக் கொண்டனர். எஞ்சி மிஞ்சி நிற்கும் பகுதியே தமிழகம் என உருவாகும் நிலை ஏற்பட்டது. ஆனால்,

> **தமிழ்நாட்டைத் தாய்நாடாகவும், தமிழ் மொழியைத் தாய்மொழியாகவும் கொண்டு வாழும் தமிழ்நாட்டின் நிரந்தரக் குடிகளனைவரும் தமிழராகக் கொள்ளப்படுவர். தமிழர் எங்கெல்லாம் பெருவாரியாக வசிக்கிறார்களோ, அந்தத் தொடர்ச்சியான பிரதேசங்கள் தமிழ் நாடாகக் கொள்ளப்படும்** (இரண்டாம் பாகம், ப. 15)

என்று ஒரு குறிக்கோளை வகுத்துக் கொண்டார். அதற்காகத் தீவிரமாகப் போராடத் தலைப்பட்டார். சுதந்திர இந்தியாவில் இவர் நிகழ்த்திய மிகப்பெரிய போராட்டம் இதுவே ஆகும்.

★ இந்திய அரசாங்கத்தில் இணையாமல் தனி இராச்சியமாக இருந்த திருவிதாங்கூரைத் தமிழகத்துடன் இணைக்கப் புறப்பட்ட முதல் தமிழர் இவரே. திருவிதாங்கூரைத் தமிழ் தாலுக்காக்களோடு இணைத்து வரைபடமொன்றையும் இவருடைய தமிழ் முரசே முதன்முதலில் வெளியிட்டது.

- ★ தற்போதிருக்கும் தமிழகத்திற்கும் ஆந்திரத் தேசத்திற்கும் இடையேயான எல்லைப் பகுதியில் இருப்பது திருத்தணிகை. திருப்பதிவரை தமிழகத்திற்கே என்று நினைத்திருந்த ம.பொ.சி. தணிகை அடைந்ததுமே மனமுடைந்தார். அங்கே எங்கும் தெலுங்கு மயமாகவே காட்சியளித்தது. அங்கு வாழ்ந்த தமிழர்களும் தாய் மொழியாம் தமிழினை மறந்து தெலுங்கு பேசுவதைக் கண்டு வருத்தமுற்றார். இவருடைய பேச்சாற்றலால் மயக்கம் தெளிந்த தமிழர்கள் நாவிலே தமிழ் உலவத் தொடங்கிற்று. அதைக் கண்ட தெலுங்கு இளைஞர்கள் கலவரத்தில் ஈடுபட அதன் பிறகே தமிழர்களுக்கு இனப்பற்று மிகுந்தது.

- ★ திருத்தணிகையில் இன உணர்வைத் தூண்டிய பிறகு சித்தூரை அடைந்தார். அதற்கு முன்னரே நகரி (புதுப்பேட்டை)யில் தெலுங்குக் கலகக்காரர்களை இவருடைய வீச்சுரை வெற்றி கண்டதால் சித்தூர் வெற்றி சில மணி நேரத்தில் கிட்டியது.

திருத்தணிகை, நகரி, சித்தூர் என அனைத்து இடங்களிலும் கலகக்காரர்களைக் கண்டு மனமொடிந்து புத்தூர் எனும் இடத்திற்கு வந்து,

> வீட்டில் தெலுங்கு பேசினாலும் இங்குள்ள தெலுங்கர் இதர தமிழருடன் சேர்ந்து தங்கள் தாயகமாம் தமிழகத்தின் எல்லையைக் காக்க முயலவேண்டும் (இரண்டாம் பாகம், ப.105)

என்று வேண்டுகோள் விடுத்தார். ஆந்திரர் வேறு, தெலுங்கு பேசும் தமிழ் மக்களாகிய தெலுங்கர் வேறு எனும் வேற்றுமையை மக்களுக்கு உணர்த்தினார். இவ் எல்லைக் கிளர்ச்சியில் ஈடுபட்டதற்காக இவருடைய அபிமானத் தலைவரும் அப்போதைய தமிழக முதலமைச்சருமான இராஜாஜி அவர்களே இவரைக் கைது செய்ய உத்தரவிட்டார். இவரை விசாரித்த நீதிபதி இவருக்கு 'ஏ' வகுப்பும், இவருடன் போரிட்ட வெங்கடேசனுக்கு 'சி' வகுப்பும் அளித்தார். ஆனால் ஒரே குற்றத்தைச் செய்த இருவருக்கிடையே வேற்றுமை வேண்டாமெனக் கூறித் தனக்கும் 'சி' வகுப்பு தரும்படிக் கேட்டார். ஆனால் நீதிபதி, வெங்கடேசனுக்கும் 'ஏ' வகுப்பு அளித்தார். தன்னைச் சேர்ந்தவர்களைக் காக்க வேண்டிய பொறுப்பு மிகுந்த தலைவராக ம.பொ.சி. இருந்தது வெளிப்படுகிறது.

ம.பொ.சி. புத்தூருக்குப் பிறகு கிளர்ச்சி செய்தது திருப்பதிக்காக. மொழி அடிப்படையில் நோக்குங்கால் திருப்பதியைத் தமிழகத்தோடு இணைக்க முடியாது என்று தெரிந்திருந்தும் திருப்பதியைக் கோரச் சில காரணங்களை அடுக்குகின்றார்.

- ★ அந்தத் தாலுக்காவில் வாழ்வோர் சுத்தத் தமிழரும் அல்லர், சுத்தத் தெலுங்கரும் அல்லர்.
- ★ அவர்தம் குடும்ப உறவுகள் ஆந்திரத்தைவிடத் தமிழகத்தில் தான் அதிகம்.
- ★ இயற்கை அரணாகிய திருப்பதி மலை தமிழகத்திற்கும் ஆந்திரத்துக்குமிடையே இயற்கை அரணாக அமைகிறது.
- ★ ஆந்திரத்தின் தலைநகரம் ஐதராபாத்தாக அமையும் போது சித்தூரில் இருப்பவர்கள் மூன்று இரயில் மாறி 500 கல் தொலைவிலுள்ள அந்நகரை அடைய வேண்டும். ஆனால் சென்னையோ 90 கல் தொலைவில் உள்ளது. அவர்களுக்கும் சென்று வருவது சுலபம். எனவே சென்னை எந்த இராச்சியத்தோடு இருக்கிறதோ அங்கு இணைவதற்குச் சித்தூர் மாவட்ட மக்கள் விருப்பம் தெரிவித்தனர்.
- ★ இதை வலியுறுத்திச் சித்தூர் - திருப்பதி வக்கீல் சங்கங்கள், திருப்பதி - திருமலை தேவஸ்தான போர்டு, திருப்பதி, சித்தூர் நகரமன்றங்கள் ஆகியவை தீர்மானம் நிறைவேற்றியிருந்தன.

இவற்றையெல்லாம் மனதில் கொண்டு சான்றாதரங்களோடு போராடினாலும் குறைந்த எண்ணிக்கையில் இருந்தாலும் ஒற்றுமை இல்லாத தமிழ் மொழி பேசுபவர்களின் முறையான ஒத்துழைப்பு இல்லாததால் திருப்பதியைப் பெறமுடியவில்லை. அதற்கு நேர்மாறாகத் தெலுங்கர்கள் நடந்து கொண்டனர். அதன் பிறகு சென்னையா? திருப்பதியா? என்ற கேள்வி வந்த போது தமிழகம் திருப்பதியை விட்டுக் கொடுத்துச் சென்னையைத் தக்க வைத்துக் கொண்டது வரலாறு கண்ட உண்மை.

தெலுங்கர்களும் அவர்கள் நடத்திய இதழ்களும் சென்னையில் தலைதூக்கியதால் அவர்கள் சென்னையைத் தங்களுடையதாக்கிக் கொள்ள முயன்றனர். அதை எதிர்த்தும் இவர் போராடினார். ''தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்'' என்ற பெருத்த கோஷத்தோடு களம் இறங்கினார். கடைசித் தமிழன் உயிருடன் இருக்கும் வரை தற்காலிகமாகக்கூட ஆந்திரர்க்குச் சென்னையில் இடம் தரக்கூடாது என்ற தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. சென்னை மாநகராட்சியில் ம.பொ.சி.யால் நிறைவேற்றப் பட்ட இத்தீர்மானமே இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேருவையும் சென்னை விஷயத்தில் மனமாற்றம் கொள்ளச் செய்திருக்கிறது.

> சென்னை நகர மக்கள் அனைவருக்கும் பிரதிநிதித்துவ ஸ்தாபனமான சென்னை மாநகராட்சி பெரும்பாலான

> உறுப்பினர் ஆதரவோடு நிறைவேற்றியுள்ள தீர்மானத்தைப் புறக்கணிப்பது என்னால் சாத்தியமில்லை
>
> (இரண்டாம் பாகம், ப. 337)

என்று நேரு அவர்களே கூறியதிலிருந்து எடுத்த காரியத்தைத் துணிந்து முடிக்கும் இவர்தம் நெஞ்சுரம் பெறப்படுகிறது.

இத்தகைய எல்லைக் கிளர்ச்சியினால் ம.பொ.சி. யின் செல்வாக்கு மக்களிடையே உயர்வதைக் கண்டு காங்கிரசில் இருந்த பொறாமையாளர் சிலர் ''தமிழ் நாடு எல்லைக் கமிட்டி'' என்ற ஒன்றை அமைத்தனர். ஆனால் இவருக்கு எதிராகத் தொடங்கப்பட்ட அது தேர்தலில் படுதோல்வி அடைந்தது.

இத்தகைய எல்லைகளைப் பிரிப்பதற்காக மொழி வாரி மாநிலங்களை அமைப்பதற்காகக் குழுக்கள் உருவாக்கப்பட்டன. தார் கமிஷன், பசல் அலி கமிஷன் போன்றவை இங்கு அனுப்பி வைக்கப் பட்டன. பசல் அலி பரிந்துரைத்த எந்தவொரு மாநில எல்லையையும் அவ்வவ் மாநில மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை; எதிர்த்துப் போராடினர். 'தட்சிணப் பிரதேசம்' எனும் ஒரு திட்டத்தையும் மத்திய அரசு கொணர்ந்தது. தமிழகம், கேரளம், ஆந்திரம் உள்ளிட்ட மாநிலங்களை ஒன்றிணைக்கும் அத்திட்டத்தால் தமிழகத்தின் தனி உரிமை பாதிக்கப்படும் என்பதை உணர்ந்து அதையும் இவரே முதலில் எதிர்த்தார். அதன் பிறகே தி.க., தி.மு.க. தலைவர்கள் இவருக்குத் துணை நின்றனர். அத்திட்டமும் கைவிடப்பட்டது.

எத்தனையோ வகையான இன்னல்களுக்கும் போராட்டங் களுக்கும் ஆட்பட்டாலும் எல்லைப் பகுதிகள் சில கைவிட்டுப் போனதால் இவரடைந்த வருத்தம் சிறிதல்ல. எனவே இந்தியா குடியரசான அந்நாளைத் துக்க நாளாக அறிவித்தார். ஜனவரி 26 குடியரசு நாளன்று கவர்னர் ஸ்ரீ பிரகாசா தீவுத் திடலில் காவல்துறை அணி வகுப்பைப் பார்வையிட வந்தபோதும், திரும்பிச் சென்ற போதும் இவரே தலைமை ஏற்றுக் கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்தினார்.

இந்திய விடுதலைக்கு மட்டுமன்றித் தமிழக வளங்கள் என்று நாம் பெருமைப்பட்டுக் கொள்ளும் சில உரிமைகளுக்கும் ம.பொ.சி.யின் பங்கு அளவிடற்கரியதாகும். விடுதலைப் போராட்டம் மட்டுமே தன் கடமை என நினைத்திருந்தால் அது கிடைத்தவுடன் இவரும் ஒரு பதவியைப் பெற்று அமைந்திருக்கலாம். ஆனால் தமிழர் உரிமையும் தமிழர் எனும் இன

உணர்வும் மேலோங்கியிருந்ததால் தான் இவர் போராட்டம் தொடர்ந்தது. தமிழினத்துக்குத் தீங்கு நேரும் போதெல்லாம் அவனுக்குக் குரல் கொடுக்க ம.பொ.சி. என்றொருவர் தயாராக இருந்திருக்கின்றார்.

கள் தொழிலாளர்களுக்குத் தொண்டு

விடுதலைப் போராட்டக் காலக்கட்டத்தில் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டதால் இவர் குடும்பத்திற்கு வறுமை மட்டுமே பரிசாகக் கிடைத்ததை முன்னர்க் கண்டோம். 1948 அக்டோபர் இரண்டு முதல் தமிழகத்தில் பூரண மதுவிலக்கு கொண்டு வரப்பட்டபோது வறுமை நிலைக்கு ஆட்படக்கூடிய பிற குடும்பங்களை நினைத்தார். வேலை இழக்கும் கள் தொழிலாளர்களுக்கு மாற்று வேலையோ, கஷ்ட நிவாரணமோ தர அரசு திட்டமிடவில்லை. எனவே ''கள்ளிறக்கும் தொழிலாளர் கஷ்ட நிவாரண சங்கம்'' என்ற ஒன்றை அமைத்தார். அதன் மூலம் சில நூறு பேருக்கு மட்டுமே மாற்று வேலை தேடித் தர முடிந்தது. அத்தொழிலாளர்களுக்கும் வேறு வேலை புரிய விருப்பமில்லை. எனவே மீண்டும் கள்ளுக்கடைகளைத் திறக்க அரசினை வற்புறுத்துமாறு இவரை வேண்டினர். கள்ளுண்ணக் கூடாது என்பதில் மிக உறுதியான கொள்கையுடைய இவர் அச்சங்கத்தையே கலைத்தார். எச்சூழலிலும் கொள்கையில் தவறாத அவர்தம் உறுதியான உள்ளம் பெறப்படுகிறது.

இலங்கைத் தமிழர்

உலகின் எந்த இடத்தில் தமிழர் வாழ்ந்தாலும் அவர்களுக்குப் பணிபுரியும் பேரவா இவருக்குண்டு. தன் 43 ஆவது வயதில் 1949 ஏப்ரல் 4 ஆம் தேதி இலங்கை சென்றார். இவர் இலங்கைக்குச் சென்றது தமிழறிஞர் என்ற முறையில். ஆனால் அங்குள்ள அரசியல் நிலையையும் தமிழர் சிங்களவர் வேறுபாட்டையும் கவனிக்கத் தவறவில்லை. தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் நிலை குறித்தும் பூர்வகுடித் தமிழர் நிலையையும் அவர்கள் சிங்களவர்களோடு கொண்டிருந்த தொடர்பு குறித்தும் கவனித்தார்.

> தமிழரான சர். பொன்னம்பலம் இராமநாதன் என்ற அறிஞர் பெருமகனார் இலங்கைத் தீவு முழுவதிலும் செல்வாக்குப் பெற்ற ஒரே தலைவராக விளங்கினார். அவருக்கு அடுத்தபடியான நிலையில் கூடச் சிங்களத் தலைவர் எவரும் அன்று இருக்கவில்லை
>
> (இரண்டாம் பாகம், ப. 222)

என்ற நிலையைக் காண்கிறார். ஆனால் தமிழர் எவரும் தேசிய அளவில் சிங்களவருடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ளவில்லை. அரசாங்க வேலையிலிருந்த தமிழரும் தங்கள் நலனையே பெரிதும் விரும்பினர். தங்கள் ஆங்கில அறிவைப் பெருக்கிக் கொண்டு தங்கள் நிலையை உயர்த்திக் கொள்வதிலேயே முனைப்புடன் செயல்பட்டனர். அதனால் சிங்கள மொழி மட்டுமே அங்கே ஆட்சி மொழியானதைக் குறித்து அவர்கள் கவலை கொள்ளவில்லை. ஆனால் தமிழ்மொழி மட்டுமன்றித் தமிழர்களும் அங்கே புறக்கணிக்கப்பட்டனர்; உரிமை இழந்தனர் என்பதைப் பிறகே உணர்ந்து திடுக்கிட்டனர். ஆனால் அது கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் ஆயிற்று. அன்று சில சுயநலத் தமிழர்கள் செய்த தவறினால் தான் இலங்கையில் இன்றும் தமிழர்கள் பலியாகிக் கொண்டிருக்கின்றனர். போர் பூமியாக மாறித் தமிழர்களின் குருதியைப் பருகிக் கொண்டே இருக்கிறது.

பர்மாவும் மலேசியாவும்

ம.பொ.சி. பர்மாவிற்குத் தமிழ்ச் சங்கம் சார்பாகச் சென்றார். எனவே, அங்கு அவருக்குச் சிறப்பான வரவேற்பும் நிகழ்வுகளும் அமைந்தன. தேக்குமரக் காடாக விளங்கும் பர்மாவில் தமிழர் தங்கியிருந்த 'மோல்மேன்', 'பெகு', 'மாண்டலே', 'சீரியம்' போன்ற பகுதிகளுக்குச் சென்றதையும், அங்கெல்லாம் தமிழர்கள் சாதி, மதம் கடந்து இவருக்கு வரவேற்பும் விருந்தும் அளித்தது பற்றி மகிழ்ச்சியுடன் பேசுகின்றார்.

இவருடைய மலேசியப் பயணம் சற்றே மாறுபட்டது. இந்தியாவில் இந்துக்களாலும் மத்திய, மாநில அரசுகளாலும் முஸ்லிம் பெருமக்கள் துன்புறுத்தப்படுவதாகப் பாகிஸ்தான் மலேசியாவில் பொய்ப் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தது. அதை எதிர்த்துப் பிரச்சாரம் செய்யும் குழுவில் ம.பொ.சி.யும் இடம் பெற்றிருந்தார். காமராசரின் எதிர்ப்பையும் மீறி அங்குச் சென்று தன் பணியை முடித்தார். அதன் பிறகு 1966-இல் அங்கு நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டிற்காகச் சென்றார். முதல் நாள் நிகழ்ச்சியில் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்'' எனும் தொடர் தவிர மற்ற அனைத்தும் ஆங்கிலத்திலே தான் இருந்ததாம். மாநாட்டின் கருத்தரங்கில் படிக்கப்பட்ட அனைத்தும் ஆங்கிலக் கட்டுரைகள். ஆங்கிலக் கட்டுரைகள் அனைத்தும் அச்சடிக்கப்பட்டு அனைவருக்கும் ஒவ்வொரு பிரதி கொடுக்கப்பட, தமிழ்க் கட்டுரைகள் கேட்பாரற்றுக்

கிடந்ததைக் கண்டு சினமுற்றார். முதல் உலகத் தமிழ் மாநாட்டில் தமிழுக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கப் பெறவில்லை என்று குரல் கொடுத்துள்ளார். ஆனால் தன்னுடைய உணர்வை அங்குக் குழுமியிருந்த தமிழர்களுள் ஔவை சண்முகம் தவிர ஒருவரும் பிரதிபலிக்கவில்லை என்று வருத்தத்தோடு குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு அவர் சென்ற வெளிநாட்டுப் பயணங்களிலும் தமிழுக்காகவும், தமிழருக்காகவும் குரல் கொடுத்த உண்மைத் தமிழராக விளங்கினார்.

தமிழரசுக் கழகம்

ம.பொ.சி. வேறு, தமிழரசுக் கழகம் வேறு என்று பிரித்தறிய முடியாதபடி அவரோடு இரண்டறக் கலந்தது அவர் தோற்றுவித்த இக்கழகம். இவர் சார்ந்த காங்கிரஸ் கட்சி தேசியத்திற்கு மட்டுமே முக்கியத்துவம் அளித்தது. தமிழகத்திற்கும் தமிழருக்கும் தமிழ் மொழிக்கும் உழைப்பதும் குரல் கொடுப்பதும் தங்கள் கடமையல்ல என்று கருதினர். தமிழ் வளர்ச்சிக்காக ம.பொ.சி. குரல் கொடுத்தாலும் அது நிராகரிக்கப்படும். எனவே காங்கிரசும் தமிழர்களோடு இரண்டறக் கலக்கும் ஒரு கட்சிதான் என்பதை உணர்த்துவதற்காகக் காங்கிரஸ் கட்சியில் இருக்கும்போதே இக்கழகத்தைத் தொடங்கினார். 1946 நவம்பர் 21 இல் தமிழரசுக் கழகம் தொடங்கப் பெற்றதும் அது மேற்கொண்ட முதற் பணி ''தமிழர் திருநாள்'' கொண்டாட்டம் ஆகும்.

இக்கழகத்தின் மூலமாக உழவர் திருநாளாம் தைப் பொங்கலைத் 'தமிழர் திருநாள்' என்ற பெயரில் கொண்டாடினார். எங்கெங்கு இருக்கும் தமிழர்களையும் தாம் தமிழர் எனும் இனமான உணர்வைக் கொள்ளச் செய்தார். மாநில எல்லைகளைப் பிரிக்கும் சூழலில் ஆந்திரரும் கேரளரும் தனித்தனியே ஒருமைப்பாடுடன் செயல்படத் தொடங்கினர். ஆனால் தமிழரோ சாதி - வருண - மத - வகுப்புவாதப் பூசல்களிலே ஈடுபட்டிருந்தனர்.

> வகுப்பு வாதப் பூசல்கள் எனது நேரடி மோதலால் மேலும் வளர்ந்து விடக் கூடுமென்றே நான் அஞ்சினேன். அதனால், ஆக்க வழியில் அணுகி, தமிழினத்தை ஒன்று படுத்துவதிலே கருத்து செலுத்தினேன். அதற்கான முதல் முயற்சியாகவே ''தமிழர் திருநாள்'' கொண்டாட முனைந்தேன்
> (இரண்டாம் பாகம், ப. 42)

என்று தன் எண்ணத்தை வெளிப்படுத்துகின்றார். தமிழர்களை ஒன்றுபடுத்தவும் மேம்படுத்தவும் தொடங்கப்பட்ட தமிழரசுக் கழகம்

பெருவளர்ச்சி பெற்றது. ம.பொ.சி.யின் ஒவ்வொரு போராட்டத்திலும் வெற்றியிலும் தமிழரசுக் கழகம் முழு அளவில் ஈடுபட்டிருந்தது.

கழகக் கொடி

கொடியின் மேல் பகுதி - மூன்றில் இரண்டு பங்கு வெண்ணிறம்; அதிலே, நீல நிறத்தில் வில் - புலி - மீன் சின்னங்கள்; கீழ்ப்பகுதி செந்நிறம். தமிழின வளர்ச்சியையும் சோஷலிசக் கொள்கையையும் வெளிப்படுத்தும் வகையில் கொடி அமைக்கப்பட்டது.

பாடல் : கவிஞர் கு.சா. கிருஷ்ண மூர்த்தி அவர்கள் தமிழரசுக் கழகத்தின் கொடி வணக்கப் பாடலைப் புனைந்தார்.

கடமை : கப்பலோட்டிய தமிழராம் வ.உ.சி. யின் புகழ் பரப்புவதையே தன் தலையாயக் கடமையாக இக்கழகம் கொண்டது.

நூல் : தமிழரசுக் கழ்கத்தின் கொள்கையை விளக்கி ''தமிழன் குரல்'' என்ற நூல் ஒன்று வெளியிடப்பட்டது. ''தமிழ் முரசு'' என்ற இதழும் வெளிவரத் தொடங்கிற்று.

கழகத்தில் தமிழ் ஆர்வலர்

மு. வரதராசனார், கு.சா. கிருஷ்ண மூர்த்தி, கா.மு. ஷெரீப், கு.மா. பாலசுப்ரமணியம், 'வானம்பாடி' சுந்தரேசன், சி. வேங்கடசாமி, திருப்பத்தூர் அ.ச. ரகுநாயகம், மதுரை புலவர் மு. ராமலிங்கம், ம.ரா.போ. குருசாமி, கொ.மோ. ஜனார்த்தனம், கோவை ரசிதாசலம், திரு.வி.க., ரா.பி. சேதுப்பிள்ளை, தெ.பொ.மீ., நாஞ்சில் கவிமணி தேசிக விநாயகம், நாமக்கல் கவிஞர், சுத்தானந்த பாரதியார், குயிலன், தமிழ் ஒளி க. தங்கவேலனார் போன்ற தமிழ் ஆர்வலர்கள் தமிழரசுக் கழகத்தோடு நேரடித் தொடர்பு கொண்டு அங்கத்தினர்களாக இருந்தனர். இதன் மூலம் ம.பொ.சி. யின் மீதும் அவர் தமிழினத்துக்கு ஆற்றக் கூடிய தொண்டின் மீதும் தமிழுலகம் கொண்டிருந்த நம்பிக்கை பெறப்படுகிறது.

ம.பொ.சி. தமிழரசுக் கழகத்தைத் தொடங்கினாலும் காங்கிரஸ் கட்சியில் அங்கம் வகித்தார். அவர் கழகத்தின் வளர்ச்சி கண்டு பொறாத பொறாமையாளர் சிலருடைய தூண்டுதலால் 1953 இல் கழகமா? கட்சியா? என்ற நிலை வந்த போது கழகத்தைத் தேர்ந்தெடுத்தார். நேரு, இராஜாஜி, காமராஜர் ஆகிய மூன்று பெரும் தலைவர்களிடையே நடைபெற்ற கடிதப் போக்குவரத்துக்குப் பிறகு இது நடைபெற்றது. அதன் பிறகும் கழகம் வளர்ந்து கொண்டே இருந்தது.

இரு பெருந்தலைவர்களுடன்

தமிழகக் காங்கிரஸ் கட்சியில் மக்கள் மனதில் என்றென்றும் வாழ்பவர் இருவர். அவர்களுள் ஒருவர் சிறந்த இராஜதந்திரி என்றும் மற்றொருவர் கபடறியாப் படிக்காத மேதை எனவும் வெளிப்படுத்தப் படுவார்கள். ஒரே கடிகாரத்தின் இரு முட்கள் தமக்குள் பல வகையில் மாறுபட்டாலும் நேரத்தைக் காட்டும் கடமையை மிக ஒழுங்காகச் செய்யும். இவற்றிற்கிடையே இருக்கக்கூடிய விநாடி முள்ளும் இரண்டிடமும் சிக்காமலும் மோதாமலும் தம் பணியை முடிக்கும். அவ்விநாடி முள் போன்று ம.பொ.சி.யும் திகழ்ந்தார். தமிழகத்திலும் இந்தியாவிலும் காங்கிரஸ் கட்சிக்குத் துணையாயிருந்து அதை வளர்க்கும் பணியைச் செய்து கொண்டிருந்த இராஜாஜி, கு. காமராசர் எனும் இரண்டு தலைவர்களுடனும் பணியாற்றினார். இருவரைப் பற்றியும் பல சுவையான தகவல்களை வெளிப்படுத்துகிறார். பல சமயங்களில் அவர்களுக்குத் தோள் கொடுத்து நின்றதையும், சில சமயங்களில் துணிவுடன் அவர்களை எதிர்த்துச் செயலாற்றியதையும், இவரை வீழ்த்த ஒருவர் செய்த சூழ்ச்சியை மற்றொருவர் துணையுடன் முறியடித்ததையும் சுவைபடப் பல இடங்களில் கூறுகின்றார்.

இராஜாஜியுடன்

காந்தியடிகளுக்கு அடுத்தபடியாக இவர் மனமுவந்து ஏற்றுக் கொண்ட இரண்டாவது தலைவர் இராஜாஜி அவர்கள். இவர் மீது இராஜாஜிக்கும் தனிப் பற்றுண்டு.

கப்பலோட்டிய தமிழனாம் வ.உ.சி. அவர்கள் கொள்கை மாறுபாட்டின் காரணமாகக் காங்கிரசிலிருந்து வெளியேறியவர். எனவே அவரோடு பழகியிருந்த இராஜாஜிக்கு அவர் மீது மனக்கசப்பு உண்டு. ஆயினும் வ.உ.சி. நினைவு நாளை ம.பொ.சி. அனுசரித்தபோது விருப்பமின்றிக் கலந்து கொண்டு தன் போக்கிலே பேசினார். ஆனால் ம.பொ.சி.யின் நட்பு அவர் மனதை மாற்றியது. அதன் காரணமாகப் பிற்காலத்தில் தூத்துக்குடியில் வ.உ.சி. யின் பெயரால் ஒரு கல்லூரி அமையவும், 9.2.1949 இல் 'வி.ஓ. சிதம்பரம்' என்ற பெயரில் வ.உ.சி. யின் கப்பலை மீண்டும் தூத்துக்குடி கடலில் மிதக்க விடவும் பேருதவி புரிந்தார்.

இந்தியாவிற்கு விடுதலை அளிக்கப் பாகிஸ்தான் பிரிவினையை ஏற்க வேண்டும் என்று ஆங்கிலேயர் கட்டுப்பாடு விதித்தனர். இதைக் காங்கிரஸ் தலைவர்கள் பலரும் எதிர்க்க, இராஜாஜி மட்டும் இப் பிரிவினையை ஏற்றுக் கொண்டார். இதன் காரணமாக ம.பொ.சி.

இருதலைக் கொள்ளி எறும்பாக இருந்தார். ஆயினும் மனம் துணிந்து இராஜாஜியை, அவருடைய பிரிவினைக் கொள்கையைக் கடுமையாக எதிர்த்தார். ஆனால் அதையும் பொறுமையாக ஏற்றுக் கொண்ட இராஜாஜியின் பண்பைப் புகழ்கின்றார்.

இவர் இராஜாஜி ஆதரவாளர் என்கின்ற காரணத்தால் அடைந்த துன்பங்கள் கொஞ்சமல்ல. இவர் இராஜாஜிக்கு ஆதரவாகச் செயல்பட்டு அவருக்கு ஆதரவாகக் கோஷ்டி சேர்க்க முற்படுகின்றார் என்று குற்றம் சாட்டப்பட்டது. காந்தியடிகள் பாகிஸ்தான் பிரிவினையை ஏற்றுக் கொண்டு இராஜாஜியுடன் கலந்து பேசியதால் ம.பொ.சி.யும் இராஜாஜியை ஏற்றுக் கொண்டார். காந்தி விழாவில் பேசுமாறு அழைத்து இராஜாஜியும் பேசினார். இராஜாஜி அவர்களுக்குக் கம்யூனிஸ்டுகளோடு கொள்கை ரீதியான தோழைமை இருந்ததால் ம.பொ.சி., இராஜாஜி, கம்யூனிஸ்டு என அனைவரும் கூட்டுசேர்ந்து திட்டமிட்டுச் செயல்படுவதாகக் கருதி இவருக்கு எதிராக ஒரு அணி அமைக்க இராஜாஜியின் விரோதிகள் கருதினர். ஆனால் இராஜாஜி மீண்டும் காங்கிரசில் இணைந்து அசைக்க முடியாத பெருந்தலைவராக வளர்ந்தார்.

காமராசர் உள்ளிட்ட தலைவர்கள் அமராவதிச் சிறையிலிருந்த போது தமிழ்நாடு காங்கிரஸ் இரு பிரிவாக இருந்தது. ம.பொ.சி. தலைமையில் சென்னை ஜில்லாக் காங்கிரஸ் கமிட்டி, சி.என். முத்துரங்க முதலியார் தலைமையில் சென்னை ஜில்லா காங்கிரஸ் சங்கம் என இரண்டிருந்தன. இதில் கமிட்டி இராஜாஜியின் வரவை ஆதரித்தும், சங்கம் இராஜாஜியின் வரவை எதிர்த்தும் பிரச்சாரம் செய்தன.

1945 ஜுன் 3 ஆம் தேதியன்று 'கல்கி' ரா.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் பெருமுயற்சி காரணமாக எட்டயபுரத்தில் பாரதியார் நினைவு மண்டப அடிக்கல் நாட்டு விழா நடந்தது. இராஜாஜி அவர்கள் அடிக்கல் நாட்டினார். அந்நிகழ்ச்சிக்கு அவருடன் ம.பொ.சி. யும் சென்றார். எட்டயபுரத்திலிருந்து, திருநெல்வேலி மாவட்டம் முழுவதும் பல ஊர்களில் பொதுக் கூட்டங்களில் பேசினர். துணையும் கூட்டும் தேவைப்படாத இராஜாஜிக்கு அச்சூழலில் ஒரு துணை தேவைப்பட, அத்துணையாக ம.பொ.சி. மாறினார். இராஜாஜியின் துணையாக, நிழலாக இருக்கும் ம.பொ.சி.யை அகற்றினால் இராஜாஜி பலமிழந்துவிடுவார் என்றெண்ணி மதுரைத் திருப்பரங்குன்றத்தில் ம.பொ.சி.யைக் கொலை செய்யவும் முயற்சி நடந்தது. அந்நகரக் காவல்துறையினர் மூலம் இதை அறிந்துகொண்டு ம.பொ.சி. யைப்

பாதுகாப்பாக ஓரிடத்தில் தங்க வைத்தனர். ஆனால் மறுநாள் இவர் பேசிய பொதுக் கூட்டத்தில் போக்கிரிகள் சிலர் விஷமத்தனம் செய்து பலரைக் காயப்படுத்தினர். இவர் நண்பர் குழுவினரால் பத்திரமாக மீட்கப்பட்டார். இத்தனை துயரங்களை இவர் ஏற்றுக் கொண்டது இராஜாஜி மீது கொண்ட பற்று காரணமாகத்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

> என் தலைமையை எதிர்ப்பவர்கள் என்னைவிட அதிகமாகக் கிராமணியாரையே தாக்குகிறார்கள். அதற்குக் காரணமுண்டு. கிராமணியார் வீர அபிமன்பு போன்றவர். என்னால் உடைக்க முடியாத எதிரிகளின் வியூகத்தை உடைத்து அவர் என்னை உள்ளே அழைத்துச் செல்கிறார். அதனால், என்னை எதிர்ப்பவர்கள் அவர்மீது அதிகமாக ஆத்திரப்படுகிறார்கள். (முதல் பாகம், ப. 382)

என்கிறார் இராஜாஜி. இதன் மூலம் இராஜாஜியும் ம.பொ.சி.யும் கொண்டிருந்த உறவு நிலை புலப்படும்.

இத்தகைய நெருங்கிய நிலையிலிருந்த இராஜாஜியே ம.பொ.சி. யைப் புறக்கணித்த நிகழ்ச்சியும் உண்டு. இராஜாஜியும் காமராசரும் காங்கிரசின் இருவேறு அணியைச் சேர்ந்தவர்கள். எனவே இராஜாஜி மீண்டும் திருச்செங்கோடு பகுதியின் உறுப்பினராகக் காங்கிரசுக்குள் நுழைவதைக் காமராசர் எதிர்த்தார். எனவே ம.பொ.சி. யைப் புறக்கணித்து இராஜாஜியுடன் பேசித் திருச்செங்கோடு தேர்தல் பற்றிய தீர்மானங்களைக் கைவிடுமாறு காமராசர் வேண்டினார். இராஜாஜியும் தேவையற்றவை வேண்டாம் என ஏற்றுக் கொண்டார். ஆனால் காமராசர் புத்திசாலித்தனமாக நடந்து தனக்குச் சாதகமாக அக் கூட்டத்தை முடித்துக் கொண்டார். இதனால் உழைப்பு வீணாக்கப் பட்டதை உணர்ந்த ம.பொ.சி., இராஜாஜியுடன் குற்றாலம் செல்ல மறுத்து விட்டார்.

> யாருக்காக எனது உயிரையும் பணயம் வைத்து, பிரதிபலனை எதிர்பாராமல் நான் பாடுபட்டுக் கொண்டிருந்தேனோ, அவரே மனமறிந்து என்னைப் புறக்கணித்து, என் முயற்சிகளைப் பாழ்படுத்தும் வகையில் எதிரியோடு திரைமறைவில் சமரசம் செய்து கொண்டது எனக்கு வெட்கத்தையும் வேதனையையும் தந்தது (முதல் பாகம், ப. 394)

என்று தனது உணர்வுகளை வெளிப்படுத்துகின்றார். ஆனால் இவ்வூடல், இராஜாஜி இவருக்காகக் குற்றாலத்தில் தங்குவதை விடுத்துச் சென்னை வருவதுடன் முடிகிறது.

எச்சூழலிலும் இராஜாஜியுடன் இருந்ததால் பயனடைந்ததையும் கூறுகின்றார். இவர் நடத்தி வந்த தமிழ் முரசு மாத இதழாக இருந்து மாதமிரு முறை இதழாக வளர்ந்தது. அதற்காக அரசினரின் காகிதக் கோட்டா தேவைப்பட்டது. பத்திரிகைக் காகிதத்திற்கு அனுமதி பெற 1946 செப்டம்பரில் டில்லி சென்றார். அப்போது வர்த்தகத் துறை அமைச்சராக இருந்த இராஜாஜி அவர்கள் உடனே அதற்கு அனுமதி அளித்ததை நன்றியுடன் நினைவுகூர்கின்றார். ம.பொ.சி. எல்லைக் கிளர்ச்சியில்ஈடுபட்டதற்காகக் கைது செய்ததும், இந்தியர்வின் நல்லெண்ணத் தூதுவராக மலேசியாவிற்கு அனுப்பி வைத்ததும் முதலமைச்சராக இருந்த இராஜாஜி அவர்கள்தான்.

அதன் பிற்கு இராஜாஜி அவர்கள் மத்திய அரசிலும் மாநில முதலமைச்சராகவும் இருந்த போதும் இவர்களுடைய நட்புறவு தொடர்ந்தது. ம.பொ.சி.யின் தமிழரசுக் கழக விழாக்கள் இராஜாஜியின்றி நடைபெறா. வ.உ.சி., கட்டபொம்மன், தமிழர் திருநாள் போன்ற அரசியல் சார்புடைய விழாவாயினும், மணிவிழா போன்ற ம.பொ.சி.யின் தனிப்பட்ட விழாவாயினும் இராஜாஜி இன்றி அது நடந்தேறவில்லை.

தலைவனுக்கேற்ற தொண்டனாக, இடுக்கண் களையும் நண்பனாக, இடித்துரைக்கும் அமைச்சனாக, பல பரிமாணங்களில் இவர்கள் உறவு இறுதிவரை களங்கமற்ற முறையில், போலித்தன்மை சிறிதுமற்ற உண்மை அன்புடன் தொடர்ந்தது. இந்நட்புறவினால் அவ்விருவரைக் காட்டிலும் பயனடைந்தது தமிழகமும் காங்கிரசும் எனில் அது மிகையன்று.

காமராசருடன்

ம.பொ.சி. காமராசருடன் கொண்டிருந்த உறவு வேறு வகையானது. அதில் அன்பு எனும் அடிப்படை கிடையாது. தான் சார்ந்த கட்சியின் மாநிலத் தலைவர் என்கின்ற மரியாதை மட்டும் உண்டு. ஆனால் காமராசரின் அரசியல் எதிரியான இராஜாஜியின் நண்பர் என்பதால் ம.பொ.சி. மீது காழ்ப்புணர்ச்சியும் பழி வாங்கும் பண்பும் உண்டு என்பது இந்நூலில் வெளிப்படுகிறது.

தொடக்கக் காலத்தில் சாதிப்பற்றற்ற தேசியவாதியாகத் திகழ்ந்த காமராசர் காலப்போக்கில் மாறியதையும் குறிப்பிடுகின்றார். 1937 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தேர்தலில் கு. காமராசர், சத்தியமூர்த்தி அவர்களின் தலைமையின் கீழ்ச் செயல்பட்டதால் ம.பொ.சி. காமராசரை ஆதரித்தார். அதிலே வெற்றி பெற்று, தொடர்ந்து 1940 இல் முதன் முதலில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவரானார்.

> அன்று நான் செய்த ஒரு சிறிய காரியத்தால் பிற்காலத்தில் இந்தியாவின் அரசியலிலே நானே விரும்பாத பல மாறுதல்கள் ஏற்படப் போகிறதென்றோ, என்னால் ஆதரிக்கப்படுபவர் என்னுடைய வளர்ச்சிக்கு எதிரியாக இருக்கப் போகிறார் என்றோ நான் எண்ணிப் பார்க்க வில்லை. ..... தமிழ்நாடு காங்கிரசுக்கு இப்படி ஒரு விபத்து ஏற்படுமென்று 1940 இல் காமராசரை ஆதரித்தவர்களில் ஒருவர்கூட எண்ணிப் பார்த்திருக்க முடியாதல்லவா!
>
> (முதல் பாகம், ப. 202)

என்று கிண்டலும் கவலையும் வெளிப்படக் கூறுகின்றார். சத்தியமூர்த்தி ஐயரின் நிழலாக, அதிகாரமற்ற தலைவராக இருந்த காமராசர், ஐயரின் மறைவுக்குப் பிறகு சுதந்திரமாகச் செயல்படத் தொடங்கினார். தலைவரானாலும் மிகவும் அடக்கமானவராக, பெருமை விரும்பாதவராக, மேடைப் பேச்சை விரும்பாதவராக இருந்திருக்கின்றார். காமராசர் துணிவுடன் மேடையேறிப் பேசிட வேண்டும் என ம.பொ.சி. நினைத்து அதற்கான முயற்சியிலும் ஈடுபட்டார். இராயப் பேட்டைக் காங்கிரஸ் பொதுக்கூட்டத்தில் தலைமை தாங்குமாறு அழைக்கப்பட்ட போது, தொகுப்பாளராக மட்டுமே அவர் பேசியதைக் குறிப்பிடுகின்றார். ஆனால் காலப்போக்கில் மிகச் சிறந்த பேச்சாளராகவும் இராஜ தந்திரியாகவும் மாறினார்.

ஆகஸ்டு புரட்சியில் ஈடுபட்டு அமராவதிச் சிறையில் இருந்த போது அவரைப் பெருந்தலைவராக்கிட முயற்சி மேற்கொள்ளப் பட்டது.

காமராசர், பக்தவத்சலம், மாதவ மேனன், சஞ்சீவி ரெட்டி ஆகிய நால்வரும் சேர்ந்து 'கிளிக் கோஷ்டி' என்ற ஒன்றை அச்சிறையிலே உருவாக்கினர். காமராசர் இவர்களுடைய நண்பர்களாகச் சில சமயம் கைப்பாவையாகச் செயல்பட்டதால் தான் எல்லைக் கிளர்ச்சியில் உறுதியுடன் இவர்களை எதிர்க்கத் தயங்கினார். அதுமட்டுமன்றி அமராவதிச் சிறையிலிருந்து தலைவராக வெளிவந்தும் தமிழகக் காங்கிரஸ் கமிட்டிக்கும் சங்கத்திற்கும் இடையே நடைபெற்ற போட்டியை, ஆர்ப்பாட்டத்தைத் தீர்க்க முயலவில்லை.

பிற தலைவர்கள்

காங்கிரஸ் தலைவர்கள் மட்டுமல்லாமல் பெரியார், அண்ணா, கலைஞர் போன்ற திராவிடர் கழகத் தலைவர்களுடனும் உறவு

கொண்டிருந்தார். திராவிடத் தனி நாடு கோருவதில் பெரியாருடன் கருத்து வேற்றுமையும் கொள்கை மாறுபாடும் கொண்டிருந்தாலும் அவர் மீது மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார். அக்காலத்தில் பெரியார் மணியம்மையை மணந்து கொண்டபோது அதை விமர்சிக்காத ஒரே இதழ் இவருடைய தமிழ் முரசு தான் என்பதையும் குறிப்பிடுகின்றார். ஆனால் அறிஞர் அண்ணாவுடன் நல்ல தோழமை கொண்டிருந்தார். அவருடைய 'ஓர் இரவு' நாடகத்தை அவருடன் சேர்ந்து பார்த்து அனுபவித்ததை விவரிக்கின்றார். ம.பொ.சி.யின் பொன்விழாவிற்குத் தி.மு.க. நிதிக்கொடை அளிக்க முன் வந்ததையும் அதைப் பொன் விழாக்குழு ஏற்க மறுத்ததையும் எடுத்துரைக்கின்றார்.

அரசியல் வாழ்வில் பல, தேர்தல் களத்தில் பல வெற்றி தோல்விகளைச் சந்தித்தவர், அவை அனைத்தையும் தன்னுடைய வாழ்க்கை வரலாற்றில் பதிக்கின்றார். 1962 பொதுத் தேர்தலில் தியாகராய நகர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றியடைந்ததோடு தன்னுடைய போராட்ட வரலாற்றை நிறுத்தி வைக்கின்றார்.

> **நான் உழைத்துப் பிழைக்கும் தொழிலாளியாக இருந்துகொண்டு அரசியலில் புகுந்ததால், எதிலும் உணர்ச்சி பூர்வமாகச் செயல்படுபவனாகவே இருந்து வந்திருக்கிறேன். சொல்வேறு; செயல் வேறு என்ற பிழை என் வாழ்க்கையில் இது வரையில் ஏற்பட்டதில்லையென்று நான் உறுதியாகக் கூறுவேன்** (இரண்டாம் பாகம், ப. 179)

என்று அவர் கூறுவதற்கேற்பவே அவருடைய வரலாறு அமைந்துள்ளது. எனது போராட்டம் எனும் தமது வாழ்க்கை வரலாற்று நூலை,

> **எனது பொது வாழ்க்கை முடிவடையாத தொடர்கதை போல நீளுகிறது. ஆகவே, "எனது போராட்ட" வரலாற்றை முற்றுப்புள்ளி வைத்து நான் முடித்து விடுவதற்கில்லை. கமா போட்டு இந்த அளவில் நிறுத்தி வைத்து, வாசகர்களிடம் தற்காலிகமாக விடை பெறுகிறேன்...** (இரண்டாம் பாகம், ப.818)

என முடிக்கின்றார்.

> **உழைக்கப் பிறந்தாய்; உணர்வெடுத்தாய்; வெற்றி முடிக்கப் பிறந்தாய்; முரசெடுத்தாய்; எல்லை அமைக்கப் பிறந்தாய்; அரும்புகழை என்றும் சுமக்கப் பிறந்தாய், சும!**
>
> (இரண்டாம் பாகம், ப. 756)

என்ற சௌந்தரா கைலாசத்தின் பாடல் வரிகளுக்கேற்ப இவருடைய வாழ்க்கைப் போராட்டம் அமைந்த தன்மை 'எனது போராட்டம்' எனும் சுயசரிதை நூல் வழியாகப் புலனாகிறது.

ம.பொ.சி. யின் வாழ்வு என்பது இந்திய அரசியல், தமிழக அரசியல், தமிழ் இன வரலாறு, தமிழ்ச் சமூக வரலாறு, தமிழ் மொழி வரலாறு, தமிழ்ப் பண்பாட்டு வரலாறு எனப் பலவற்றைத் தழுவிச் சென்றுள்ளதையும் அவை தாழ்ந்திருந்த தன்மைகளைக் களைந்து உயர்வுக்குப் போராடுதலே அவரது மூச்சாக இருந்ததையும் சொந்த வாழ்வின் இழப்புக்களைத் தாங்கி நின்று அவரது பொதுவாழ்வு மலர்ந்ததையும் உணரமுடிகிறது.

வீரபாண்டிய கட்டபொம்மன்

தமிழ் கூறு நல்லுலகில் சுதந்திரக் காற்றைச் சுவாசிப்போர் நினைவில் கொள்ள வேண்டிய தியாகிகள், வீரர்கள் பலர் உள்ளனர். அவர்களுள் என்றென்றும் தமிழன் உள்ளத்தில் வாழும் பெயர் 'வீரபாண்டிய கட்டபொம்மன்' என்பதாகும். அவ்வீரனது வரலாற்றைக் கூறுவதே "வீரபாண்டிய கட்டபொம்மன்" எனும் நூலாகும். அவனுடைய வரலாற்றுடன் அவன் தம்பி ஊமைத்துரை வரலாற்றையும் அவர்கள் முன்னின்று நடத்திய இந்தியாவின் முதல் விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றையும் ம.பொ.சி. அவர்கள் இந்நூலின் வாயிலாக விவரிக்கிறார்.

கட்டபொம்மன் குடியிருப்பு

கட்டபொம்மனின் முன்னோர்கள் தெலுங்கைத் தாய் மொழியாகக் கொண்ட ஆந்திரர்கள் ஆவர். ஆந்திர மாநிலத்தின் பல்லாரி மாவட்டத்தில் கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் பஞ்சம் தலைவிரித்து ஆடியது. எங்கும் பசியும் பட்டினியும் காணப்பட்ட அச்சூழலில் தன் மனைவி மக்களைத் துன்புறுத்த அஞ்சிய பால்ராஜா எனும் ஆந்திரர் தெற்கே திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சாலிகுளம் எனும் சிற்றூரில் குடியேறினார். வீரத்தையும் விருந்தோம்பலையும் தலையாய பண்பாகக் கொண்டு வந்தாரை வாழவைக்கும் தமிழர்கள் பால்ராஜா குடும்பத்தை அன்போடு ஏற்றனர். மொழியால் வேறு பட்டிருப்பினும் மனத்தால் வேற்றுமை பாராட்டாது உறவாடினர். இப்பால்ராஜின் மகனான 'பொம்மு' என்பவன் சாலிகுளத்தை அடுத்துள்ள அழகிய வீரபாண்டியபுரம் எனும் ஊரை ஆண்டுவந்த ஜகவீரபாண்டியனின் தளபதியானான். இந்த ஜகவீரபாண்டியன் வேகமும் வீரமும் ஆற்றலும் எங்கிருந்தாலும் அதைக் கண்டுணர்ந்து தனதாக்கிக் கொள்ளும் திறன் படைத்தவன். வீரம் என்பது தன் படையின் தனிச் சொத்தாக இருக்க வேண்டும் எனும் விருப்பம் கொண்டவனாதலால் பொம்முவைத் தன் தளபதியாக்கினான். பகைவரை ஒடுக்குவதில் பொம்முவிற்கிருந்த வீரத்தையும் விவேகத்தையும் மெச்சி உற்றார் உறவினர் அவனைக் கொட்டி பொம்மு என்று அடை கொடுத்து அழைக்கலாயினர். அத்தெலுங்குப் பெயரே நாளடைவில் கட்டபொம்மன் எனும் தமிழ்ப் பெயராக மாற்றம் கொண்டது.

இக்கட்டபொம்மன் மீதும் அவன் ஆற்றல் மீதும் நம்பிக்கை கொண்டவனாகிய, வாரிசற்ற ஜகவீரபாண்டியன், கட்டபொம்மனையே தனக்கடுத்த அரசனாக அறிவித்தான். தான் பெறும் செல்வத்தையும் சிறப்பையும், பெருமையையும் தன்னைச் சேர்ந்தாரோடு சேர்ந்து அனுபவித்தால் பயன் இரட்டிக்கும் என்பதை உணர்ந்த கட்டபொம்மன் தன் மக்கள் பலரை ஆந்திரத்திலிருந்து வருவித்தான். விஜயநகரம், விசாகப்பட்டினம், கஞ்சம் போன்ற ஆந்திர மாநிலத்திலிருந்து வந்தவர்கள் மகிழ்வோடும் நிறைவோடும் திருநெல்வேலியில் குடியேறினர்.

வறுமைக்கு வடிகால் தேடிவந்த மக்களிடையே ஆளும் மன்னனாக ஏற்றம் பெற்ற இக்கட்டபொம்மன் தனக்கென்று கோட்டை அமைக்க எண்ணினான். தன்னுடைய வலிமை நிறைந்த ஏழு வேட்டை நாய்களை முயலொன்று எதிர்த்து நின்ற வீரம் விளைந்த மண்ணிலேயே தன் கோட்டையை அமைக்கத் தலைப்பட்டான். தன் தலைநகராகச் செயல்படக்கூடிய அந்நகருக்குத் தன் பாட்டன் "பாஞ்சாலன்" நினைவாகப் "பாஞ்சாலங் குறிச்சி" என்று பெயரிட்டான்.

இவ்வாறு வீரம் ஒன்றை மட்டுமே அடிப்படைத் தகுதியாகக் கொண்டு அரசனான பொம்முவின் பரம்பரையினர் அனைவருமே "பொம்மு" எனும் பெயராலேயே அழைக்கப்பட்டனர். இந்த அரச மரபில், 46 ஆம் வேந்தனாக வந்தவனே கதைத்தலைவனாகிய வீரபாண்டிய கட்டபொம்மன் ஆவான்.

பிறப்பும் வளர்ப்பும்

வீரபாண்டியன் 1760 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் மூன்றாம் நாள் ஜகவீரக் கட்டபொம்மன் என்ற தந்தைக்கும், ஆறுமுகத்தம்மாள் எனும் தாய்க்கும் மகனாகப் பிறந்தான். இவனுக்குப் பின்னர், குமாரசாமி, துரைசிங்கம் என்ற தம்பியர் இருவர் பிறந்தனர். வீரபாண்டியனைக் கறுத்தையா என்றும், குமாரசாமியைச் சிவத்தையா என்றும், துரைசிங்கத்தைச் சுப்பையா என்றும் மக்கள் அழைத்தனர். அவர்களுள் குமாரசாமி செம்மையாகப் பேசும் திறனற்றிருந்ததால் அவன் "ஊமைத்துரை" என்றும் அழைக்கப்பட்டான்.

உடன் பிறந்தார் மூவரும் உயர் பண்பும் வீரமும் நிறைந்த கட்டிளங் காளைகளாக வளர்ந்தனர். வாட் போரிலே சிறந்து விளங்கிய மூவரும் வாலிபப் பருவமெய்தியதும் திருமணம் செய்து வைக்க எண்ணினர் பெற்றோர். வீரபாண்டியனுக்கு

வீரசக்கம்மாளையும், ஊமைத்துரைக்குச் சௌந்தரவடிவையும், துரைசிங்கத்திற்கு ஞானமுத்தம்மாளையும் திருமணம் செய்து வைத்தனர். அவர்களுள் வீரபாண்டியன்-வீரசக்கம்மாளுக்கு மக்கட்பேறு வாய்க்கவில்லை.

மன்னன் வீரபாண்டியன்

1760 ஆம் ஆண்டு பிறந்த வீரபாண்டியன் தன்னுடைய முப்பதாவது வயதில் 1790 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் இரண்டாம் நாள் பாஞ்சாலங்குறிச்சியின் மன்னனானான். வாழையடி வாழையென வந்த மரபின்படி வீரபாண்டியன் மன்னனானாலும், அவன் அரசப் பணி மலர்ப் பாதையாக அமையவில்லை. வரி என்னும் கலி அவனுக்குக் கூற்றுவனாக அமைந்தது. சிற்றரசனாக இருந்தாலும் தன்னை ஆட்சி செய்யும் ஆற்காடு நவாபிற்கு வரி கொடுக்க மறுத்தான். நவாபிடம் தொடங்கிய இப்போர் ஆங்கிலேயரை எதிர்த்தபோது விரிவடைந்தது.

வரிகொடா வைர நெஞ்சன்

தனக்குக் கீழிருக்கும் பாளையக்காரர்களைத் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கத் தகுதியற்றவராகவும், அவர்களிடமிருந்து கப்பம் எனப்படும் வரிப்பணத்தை முறையாகப் பெற வழி தெரியாதவராகவும் இருந்தார் ஆற்காடு நவாப். எனவே 1792 ஆம் ஆண்டு ஆங்கிலேயருடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார். முன்னர்த் தாம் பெற்றிருந்த கடனுக்காகக் குறுநில மன்னர்களிடமிருந்து கப்பப் பணத்தை வாங்கிக் கொள்ளும் உரிமையைக் கிழக்கிந்தியக் கம்பெனியாருக்கு வழங்குவதே அந்த ஒப்பந்தத்தின் சாரமாகும். இவ் ஒப்பந்தத்தின்படி வீரபாண்டியன் ஆங்கிலேயருக்கு வரிகொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் நாடாளும் மன்னனாக வலம் வருபவன் நாடோடிகளாய் வந்தவர்களுக்கு வரி செலுத்துவதா என்று வீரபாண்டியன் மனம் கொதித்தான்.

அஞ்சாநெஞ்சம் கொண்ட வீரபாண்டியனைப் போரிலும் சந்திக்கத் துணிவில்லாமல் வஞ்சகச் சதியிலும் வீழ்த்த முடியாமல் தவித்தனர் வெள்ளையர்கள். என்ன நேரினும் ஆங்கிலேயர்களுக்குக் கப்பம் கட்டப் போவதில்லை என்ற முடிவில் வீரபாண்டியன் இருந்தான்.

உட்பகையைப் பெருக்குதல்

வீரபாண்டியனை நேரடியாக எதிர்க்க முடியாத ஆங்கிலேயர்கள் அவனுக்கு எதிராக உட்பகையைப் பெருக்கத் தொடங்கினர். பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும் உலகில்

ஏழை பாமர மக்கள் என் செய்வர்? எனவே, வீரபாண்டியனுடைய குடிமக்களுள் சிலருக்குக் கையூட்டுக் கொடுத்தும், வஞ்சகம் பேசியும் நட்புக் கொண்டனர். அவர்களை வீரபாண்டியனுக்கு எதிராகப் பழி பரப்பும்படி செய்தனர். அவன் மக்களே அவனைக் கொடுங்கோலன் என்று பழி சுமத்தும் போது மாற்றரசர்கள் அவனை வஞ்சகன் என்பதில் வியப்பில்லை. அவன் அண்டை நாட்டரசன் எட்டப்ப நாய்க்கன் வீர பாண்டியனால் தனக்கும் தன் மக்களுக்கும் ஆபத்து என்று நாடகமாடி ஆங்கிலேயரிடம் தஞ்சம் புகுந்தான். இச்சூழலில் பாஞ்சாலங் குறிச்சிக்குச் சொந்தமான அருங்குளம், சுப்பலாபுரம் ஆகிய ஊர்களைத் தனக்குக் குற்றேவல் புரியும் எட்டையபுரத்தோடு இணைப்பதாக ஆங்கிலேயர்கள் அறிவித்தனர். மார்க்ஸ்வெல் எனும் ஆங்கிலத் தளகர்த்தன் "நிலக்கோட்டை ஏற்பாடு" (செட்டில்மென்ட்) என்னும் பெயரில் இதைச் செய்தான். இவ்வாறாக எல்லாப் பக்கங்களிலிருந்தும் வீரபாண்டியனுக்கு எதிராகச் சதி வலையைப் பின்னத் தொடங்கினர்.

ஜாக்ஸன் சூழ்ச்சியும் முடிவும்

வீரபாண்டியனைத் தன் அதிகாரத்தின் கீழ்க் கொண்டு வரமுடியாத ஆங்கிலேயர்கள் அவனிடமிருந்து வரிப்பணத்தை யேனும் பெற்றுவிட முயற்சித்தனர். எனவே கடந்துபோன ஆறு வருடங் களுக்காக 6000 பொன் மட்டுமே கொடுத்தால் போதும் என்று நயமுடன் கேட்டுப் பார்த்தனர். எத்தனையோ வகையில் முயன்றும் ஆலன் துரை என்பவரால் வரியைப் பெற முடியவில்லை. எனவே கிழக்கிந்தியக் கம்பெனியாரின் சார்பில் வரி வாங்கும் கலெக்டராக இருந்த ஜாக்ஸன் என்பவன் வீரபாண்டியனிடம் தன்னை வந்து சந்திக்கச் செய்தி அனுப்பினான். வீரபாண்டியன் தன்னைச் சுற்றியிருக்கும் பாளையக் காரர்கள் அனைவரும் தனக்குப் பகையாக இருக்கும் சமயம் ஆங்கிலேயருடன் மேலும் பகையை வளர்க்க விரும்பவில்லை. எனவே ஜாக்ஸனின் அழைப்பை வீரபாண்டியன் ஏற்றான். தனித்துச் செல்ல எண்ணிய வீரபாண்டியனின் முடிவைத் தம்பி ஊமைத்துரை மாற்ற மன்னனும் ஏற்றான். 1798 ஆம் ஆண்டு ஆகஸ்டு 24 ஆம் நாள் தளபதிகள் முன் செல்லத் தம்பிமார் புடைசூழக் கலெக்டரைக் காணத் திருநெல்வேலிக்கு வீரபாண்டியன் சென்றான்.

சூழ்ச்சி நிறைந்த ஜாக்ஸன் வீரபாண்டியனை உடனே சந்திப்பதைத் தள்ளி வைக்க எண்ணினான். எனவே அவன் தான் இருக்கும் இடத்தை நெருங்கும் போதெல்லாம் அங்கிருந்து அகன்றான். திருநெல்வேலியில் காணவேண்டிய ஜாக்ஸன் துரையைக்

குற்றாலம், சொக்கம்பட்டி, சிவகிரி, வில்லிபுத்தூர், பேரையூர், பாவாலி, பள்ளமடை, கமுதி முதலிய பல ஊர்களுக்கும் தொடர்ந்து சென்று இராமநாதபுரத்தில் கண்டான். இராமநாதபுரத்தில் நிகழ்ந்த இந்நிகழ்வே வீரபாண்டியன் வாழ்வில் திருப்புமுனையாக அமைந்தது.

வாதப்போரும் வாட்போரும்

இராமநாதபுரத்தில் சேதுபதி மன்னனுக்குச் சொந்தமான இராமலிங்க விலாசம் எனும் மாளிகையில் சந்திப்பு நிகழ்ந்தது. சிங்கத்தை அதனுடைய குகையிலே சென்று சந்திக்கும் துணிவுடைய வீரபாண்டியன், ஜாக்ஸனைத் தனித்துச் சென்று சந்தித்தான். வீரபாண்டியனை மன்னனாக மதிக்காத ஜாக்ஸன் அவனை நோக்கி வரிசையாகக் குற்றச்சாட்டை அடுக்கினான். கிழக்கிந்தியக் கம்பெனிக்கு வரி செலுத்தாதது; ஆங்கிலேயருக்கு அடிவருடும் எட்டையபுரப் பாளையக்காரனுக்கு இணங்கி நடவாதது; தங்களிடம் இசைவு பெறாமல் குடிமக்களிடம் வரி வாங்கியது எனப் பல குற்றங்கள் சுமத்தப்பட்டன. அதனை ஏற்காது மறுத்த வீரபாண்டியனைக் கைது செய்ய ஜாக்ஸன் ஆணையிட்டான். வாதப் போர் அங்கே வாட் போராகியது. போரென்று வந்து விட்டால் வெற்றி என்ற ஒன்றைத் தவிர வேறொன்றைக் கேட்டறியாத வீரபாண்டியன் தன் வாளைச் சுழற்றி விளையாடினான். வீரபாண்டியனுடன் வீரப் போர் புரிந்த கிழக்கிந்தியக் கம்பெனியின் துணைத் தளபதியான லெப்டினென்ட் கிளார்க் என்பான் வீரபாண்டியனின் வாளுக்கு இரையானான். வீரபாண்டியன் அங்கிருந்து தப்பித்துச் சென்றாலும் அவனுடன் வந்த பாஞ்சாலங்குறிச்சியின் தலைமை நிர்வாகியாகிய தானாபதி ஆங்கிலேயரிடம் சிறைப்பட்டார். சுப்பிரமணிய பிள்ளை எனும் இயற்பெயர் கொண்ட இவரே நாட்டின் விடுதலைக்காக, உரிமைக்காகக் கைகளில் முதன் முதல் விலங்கு ஏந்திக் கொண்ட பெருமையைப் பெற்றவர்.

வீரபாண்டியனும் லூஷிங்டனும்

இராமநாதபுரத்தில் வீரபாண்டியனைக் கைது செய்ய முடியாமல் அவனுடைய தலைமை நிர்வாகி தானாபதியைக் கைது செய்த ஜாக்ஸன் அவரைத் திருச்சிக்கு விசாரணைக்காக அழைத்துச் சென்றான். வீரபாண்டியன் ஆங்கிலேயருக்கு வரி கொடுக்க மறுத்ததோடு தளபதிகளுள் ஒருவனைக் கொன்று விட்டதாகக் குற்றம் சுமத்தினான். தானாபதி அவற்றிற்கெல்லாம் ஜாக்ஸன் துரைதான்

காரணம் என்றும், அவன் வீரபாண்டியனைச் சந்திக்க மறுத்த விதத்தையும் எடுத்துரைத்தான். இதன் காரணமாக ஆங்கிலேய நீதிபதிகளுக்கு ஜாக்ஸனிடம் அவநம்பிக்கை ஏற்பட்டது. இந்தியநாடு முழுவதையும் தங்கள் ஆளுகைக்குள் கொண்டுவர நினைத்துக் கொண்டிருந்த ஆங்கிலேயர்களுக்கு ஜாக்ஸனின் பழி வாங்கும் நடவடிக்கை தேவையற்ற இடையூறாகத் தோன்றியது. எனவே தானாபதியை விடுதலை செய்தனர். ஜாக்ஸனையும் இங்கிலாந்துக்குத் திரும்ப அழைத்துக் கொண்டனர். ஜாக்ஸனுக்குப் பதிலாக லூஷிங்டன் என்பவர் கலெக்டராகப் பதவி ஏற்றார்.

கலெக்டராகப் பதவியேற்ற லூஷிங்டன் 1799 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 ஆம் நாள் தன்னை வந்து சந்திக்கும்படிக்கு வீரபாண்டியனுக்குக் கடிதம் எழுதினார். அதில் இராமலிங்க விலாச நிகழ்ச்சியில் மரணமடைந்த கிளார்க் துரையின் குடும்பத்திற்கு வீரபாண்டியன் இழப்பீடு அளிப்பதோடு, செலுத்த வேண்டிய வரித் தொகையையும் எடுத்துக் கொண்டு உடனே வந்து சந்திக்கும்படி குறிப்பிட்டிருந்தான்.

வீரபாண்டியனோ இராமநாதபுரத்தில் ஏற்பட்ட குழப்பத்தின் காரணமாகத் தன்னுடைய பல்லக்கு முதலிய பொருட்கள் அங்கேயே தங்கி விட்டதாகவும் அவைகளை உடனே திருப்பித் தரும்படியும் பதிலுரைத்தான். அத்துடன் பாஞ்சாலங்குறிச்சி மழையின்றிப் பஞ்சத்தில் வாடுவதால் மழை பெற்று வளம் பெருகிய பிறகு வரி செலுத்துவதாகவும் கூறினான். ஏனெனில் இருதரப்பினரும் போரை விரும்பவில்லை. வீரபாண்டியன், லூஷிங்டன் கடிதத்திற்குப் பதில் அனுப்பினானேயன்றி நேரில் சென்று சந்திக்கவில்லை.

ஆங்கிலேயக் கலெக்டரும் பலமுறை அழைத்தார். ஆனால் வீரபாண்டியனோ உடல்நிலை சரியில்லை, நாளும் கோளும் சரியில்லை என்று பதில் கூறினானேயன்றி ஆங்கிலேயன் அதிகாரத்திற்குப் பணியவில்லை. ஒருசமயம் கலெக்டர் தங்கியிருந்த சிவகங்கையிலிருந்து 16 கி.மீ. தூரமுள்ள கமுதி எனும் பகுதிக்கு வீரபாண்டியன் வந்தான். அப்பொழுதும் தன்னைக் காண வரும்படி லூஷிங்டன் அழைப்பு விடுத்தான். ஆனால் வீரபாண்டியனுடன் முப்பதுக்கும் குறைவான வீரர்களே உடன் வரவேண்டும் எனக் கட்டளையிட்டான். இக்கட்டளைக்குப் பணிய மறுத்த வீரபாண்டியன் தான் ஒரு பாளையத்தின் மன்னன் எனும் முறையில் படைகள் புடை சூழ மட்டுமே வரமுடியும்; மறுத்தால் வர முடியாது எனக் கூறி கலெக்டரைச் சந்திக்காமல் திரும்பினான்.

இந்தியத் திருநாட்டின் மாமன்னர்கள் எல்லாம் தங்களுக்கு அடிமைப்பட்டிருக்க, ஒரு சிறு பாளையக்காரன் தன்னை அவமதிப்பதை லூஷிங்டனால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அவன் தன்னை மட்டுமல்ல தங்கள் முழு அரசாங்கத்தையே அவமதிப்பதாக அக்கலெக்டர் கருதினான். தன்மானமும் விடுதலை உணர்வும் நிறைந்த இப்பாளையக்காரனை வளர விட்டால் விடுதலை உணர்வு எனும் தீ பிற பாளையக்காரர்களுக்கும் பரவும் என எண்ணினான். எனவே, வீரபாண்டியனை அழிக்க முற்பட்டு, அதற்குரிய அதிகாரத்தையும் படைபலத்தையும் அளிக்கும்படி சென்னைக் கவர்னருக்குக் கடிதம் எழுதினான்.

போரின் ஆரம்ப நிலை

சென்னைக் கவர்னர் அலுவலகம் கலெக்டர் லூஷிங்டனின் கோரிக்கையை ஏற்றது. இந்தியாவை அடிமைப்படுத்தக் காரண மாயிருந்த லார்டு கிளைவின் மகன் லார்ட் எட்வர்ட் கிளைவ் என்பவரே அப்போதைய கவர்னர். எனவே, லூஷிங்டனின் கோரிக்கையை ஏற்று மேஜர் பானர்மெனின் தலைமையில் நன்கு பயிற்சி பெற்ற படைவீரர்கள் பாளையங்கோட்டைக்கு விரைந்தனர். 1799 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 14 ஆம் நாள் பானர்மென் சர்வாதிகாரம் பெற்றதாகத் திருநெல்வேலிச் சீமையெங்கும் அறிவிக்கப்பட்டது. பானர்மெனும் வீரபாண்டியனைப் பேட்டிக்கு அழைத்தார். இப்பேட்டியும் தன்னைச் சிறை பிடிக்க விரிக்கப்படும் வலை என்பதனை வீரபாண்டியன் உணர்ந்தான். எனினும் குள்ளநரிக் கூட்டத்தில் ஒரு ஆடு போல ஆங்கிலேயக் கூட்டத்தில் இருக்கும் தன் நண்பன் டேவிட்சனின் உதவியை நாடினான். இந்த டேவிட்சனே முன்னர் ஜாக்ஸனின் சூழ்ச்சியிலிருந்து தானாபதியை விடுவிக்க உதவியவனாவான். டேவிட்சனின் ஆலோசனைப்படி வன்னியர் என்பவன் வீரபாண்டியனின் தூதுவனாகப் பாளையங்கோட்டை சென்று பானர்மெனைச் சந்தித்தான். ஆனால் வீரபாண்டியனை அழிக்கும் எண்ணத்தில் இருந்த பானர்மென், தூதுவன் என்றும் பாராமல் அவனைச் சிறை செய்தான்.

பாஞ்சாலங்குறிச்சியின் குலதெய்வமாகிய தேவி ஐக்கம்மாளுக்கு விழா எடுப்பதற்காக வீரபாண்டியனின் தம்பியரும் அமைச்சரும் திருச்செந்தூர் சென்றிருந்த சமயமே வீரபாண்டியனைத் தாக்கத் தகுந்த நேரம் என்பதனை உணர்ந்து, பல துணைத் தளபதிகளுடன் 1799 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4 ஆம் நாள் பாஞ்சாலங்குறிச்சியைப் பானர்மென் முற்றுகையிட்டான்.

ஆங்கிலேயர்கள் இரவோடு இரவாகப் பாஞ்சாலங்குறிச்சியைச் சூழ்ந்து கொள்வர் என்பதை ஒற்றர்கள் மூலம் அறிந்து கொண்ட வீரபாண்டியன் போருக்குத் தயாரானான். கோட்டைக்கு வெளியே இருந்த தன் படை வீரர்களைக் கோட்டைக்குள் அழைத்தான். வெளியே திரண்டிருந்த வீரர் கூட்டம் உள்ளே வருவதற்குள் ஆங்கிலேயப் பீரங்கிப்படை வந்ததால், வீரபாண்டியனின் வீரர்கள் கோட்டையின் உள்ளும் புறமுமாகப் பிளவுற்று நிற்க, கோட்டை வாயில் மூடப்பட்டது.

பானர்மென் 'துவிபாஷி' இராமலிங்க முதலியாரைத் தூதாக அனுப்பி வீரபாண்டியனைச் சரணடையச் சொன்னான். ஆனால் வீரபாண்டியனோ நாடோடிகளாக வந்த கூட்டத்திற்கு நாடாளும் வேந்தன் சரண்டைவதைக் காட்டிலும் போரிலே சாவது மேல் என்று கூறி முழக்கமிட்டான்.

பாய்வதற்காகப் பதுங்கினான்

வீரபாண்டியன் சரணடைய மறுத்தவுடன் கோட்டையின் மீது குண்டுகள் விழத் தொடங்கின. வடக்கு வாயிலை லெப்டினென்ட் டல்லாசும், தெற்கு வாயிலை லெப்டினென்ட் காலின்சும் தாக்கினர். பகைவரின் மிரட்டலுக்குப் பணியாத வீரபாண்டியனின் கோட்டை வாயில்கள் ஆங்கிலேயரின் பீரங்கிக் குண்டுகளுக்குத் திறந்தன. கோட்டையைத் தகர்த்த மகிழ்ச்சி ஆங்கிலேயர்களைச் சென்று அடைவதற்கு முன்னர், வெள்ளையத் தேவனின் ஈட்டிக்கு லெப்டினென்ட் காலின்ஸ் இரையான செய்தி இடியெனத் தாக்கியது. காலின்ஸையும் பிற ஆங்கிலேயப் படை வீரர்களையும் கொன்ற மகிழ்ச்சி இருந்தாலும் கோட்டையைத் தகர்க்க மேலும் பல பீரங்கிகள் வரவழைக்கப்படும் எனும் செய்தி மேலும் குழப்பத்தை ஏற்படுத்தியது.

இரு தரப்பிலும் ஏற்பட்ட உயிர் இழப்புகள் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தின. இப்போர் வீரபாண்டியனுக்கும் பானர்மெனுக்கும் இடையே நடைபெறும் போர் அன்று; இந்தியர்களை அடக்க நினைக்கும் ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கும் அடங்க மறுக்கும் இந்திய வீரர்களுக்கும் நடைபெறும் போர் என்பதனை வீரபாண்டியன் உணர்ந்தான். எனவே தான் மட்டும் தனித்து நின்று ஆங்கிலேயர்களை எதிர்க்க முடியாது எனவும், அதற்குப் படைபலமும் நெஞ்சுரமும் கொண்ட வீரர் கூட்டம் அவசியம் எனவும், அதைத் திரட்டக் கால அவகாசம் முக்கியம் எனவும் தெளிந்தான். எனவே படை திரட்டிக் கொண்டு வரவும், பிற

பாளையக்காரர்களின் உதவியைப் பெறவும் எண்ணி இரவு பத்தரை மணியளவில் தன் தம்பியர், தளபதிகள் மற்றும் தானாபதியுடன் கோட்டையிலிருந்து புறப்பட்டான். ஆங்கிலேயரிடமிருந்து பதுங்கி நேரம் வரும்போது அவர்கள் மீது பாய வீரபாண்டியன் தயாரானான்.

வீரபாண்டியன் சிறைப்பட்டான்

ஆங்கில ஆதிக்கத்தை உறுதியாக எதிர்த்துவரும் வீரபாண்டியனுக்குத் தோள் கொடுத்துத் தாங்கி நிற்க நட்புப் பாராட்டும் பாளையக்காரர்களும், வேரோடு வெட்டிச் சாய்க்கப் பகைமை நிறைந்த பாளையக்காரர்களும் இருந்தனர்.

இதைப் பயன்படுத்திப் பிரித்தாளும் சூழ்ச்சியில் கைதேர்ந்த ஆங்கிலேயர்கள், வீரபாண்டியனைப் பிடித்துத் தருபவர்களுக்கு விலைமதிக்கமுடியாத செல்வம் பரிசாகக் கொடுக்கப்படும் என அறிவித்தனர். ஆங்கிலேயர்களின் பரிசுக்காக ஆசைப்பட்டு வீரபாண்டியனைக் காட்டிக் கொடுக்கச் சில பாளையக்காரர்கள் முன்வந்தனர். அவர்களுள் ஆங்கிலேயருக்கு ஏவல் செய்து வாழ்வதையே தலையாயக் கடமையாகக் கொண்டு வாழும் எட்டப்ப நாயக்கனும் ஒருவன். எனவே தனக்குத் தகுந்த படை பலம் இருந்தால் தன்னால் வீரபாண்டியனைப் பிடித்துத் தர முடியும் என்று பானர்மெனுக்குச் செய்தி அனுப்பினான். இதனால் அவனுக்குப் படைபலமும் வந்து சேர்ந்தது.

பாஞ்சாலங்குறிச்சியிலிருந்து புறப்பட்டுச் சென்னை செல்லும் வழியினிடையில் கோலார்பட்டிப் பாளையத்தை வீரபாண்டியன் வந்தடைந்தான். அங்கே தன் நண்பரும் அப்பாளையத்தின் உரிமைக்காரருமான இராஜகோபால் நாயக்கர் இல்லத்தில் தங்கினான். அதை ஒற்றர் மூலம் அறிந்து கொண்ட எட்டப்பனும், டல்லாஸூம் அங்கு வந்தனர். இக்கட்டான அச்சூழலில் பகைவர்கள் சூழ்ந்தும் அஞ்சாமல் போரிட்டுப் பலரைக் கொன்று அங்கிருந்து தப்பினான். வீரபாண்டியனைச் சிறை பிடிக்க முடியாத ஆங்கிலேயர்கள் தானாபதியைச் சிறை செய்து தங்கள் கோபத்தைத் தணித்துக் கொண்டனர். ஆனால் இரையைத் தவற விட்ட சிங்கம் போல மனத்தில் வஞ்சம் வைத்துக் காத்திருந்தனர்.

வீரபாண்டியன் புதுக்கோட்டைச் சமஸ்தானத்தில் மறைந்து திரிவதாகச் செய்தி கிடைத்த ஆங்கிலேயர்கள் புதுக்கோட்டைச் மன்னனை நண்பனாக்கிக் கொண்டனர். இதை அறியாத வீரபாண்டியன், புதுக்கோட்டைச் சமஸ்தானத்திற்கு உட்பட்ட திருக்களம்பூரிலிருந்து

புதுக்கோட்டை நோக்கிப் புறப்பட்டான். வீரபாண்டியனைப் புதுக்கோட்டைப் பட்டாளத் தலைவன் முத்து வைரவ அம்பலக்காரன் எதிர்கொண்டு அழைத்தான். வீரபாண்டியனிடம் இன்முகத்துடன் உரையாடி அவனைத் தன் மன்னனிடம் அழைத்துச் சென்றான். நயவஞ்சக நண்பனான புதுக்கோட்டை மன்னன் சிறந்த முறையில் விருந்தோம்பி வற்புறுத்திக் கட்டபொம்மனைத் தங்க வைத்தான். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசி ஆங்கிலேயர்களிடம் தூதனுப்பி அவர்கள் வரும்வரை வீரபாண்டியனைத் தன் விருந்தினன் எனும் போர்வையில் வைத்திருந்தான். நண்பனின் பாதுகாப்பில் அச்சமின்றியும் ஆயுதமின்றியும் உறங்கிக்கொண்டிருந்த வீரபாண்டியனை வீரர்கள் சிறை பிடித்தனர். எதிர்ப்பினைக் காட்டும் எதிரிகளைக் காட்டிலும் சிரித்து மகிழும் வஞ்சக நண்பர்கள் ஆபத்தானவர்கள் என்பதை அவன் தாமதமாக உணர்ந்தான்.

மாவீரன் மாண்டான்

கவர்னரின் ஆணைப்படி பாளையக்காரர்களெல்லாம் பார்க்கும் வண்ணம் தானே நீதிபதியாக அமர்ந்து, வீரபாண்டியனைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி வைத்துத் தளபதி பானர்மென் விசாரணை நடத்தினான். வீரபாண்டியன் மீது கீழ்க்கண்ட குற்றச்சாட்டுகள் கூறப்பட்டன.

1. கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆணைப்படி வரி செலுத்த மறுத்தது.
2. கலெக்டர் ஜாக்சன் பேட்டிக்கு அழைத்தபோதெல்லாம் படைகள் புடைசூழ உடைவாளுடன் வர அனுமதித் தாலன்றிப் பேட்டிக்கு வரமுடியாதென்று கூறிக் கம்பெனியை அவமதித்தது.
3. கிழக்கிந்தியக் கம்பெனிப் படைகளை எதிர்த்துப் போரிட்டுத் துணைத்தளபதி காலின்ஸ் உள்பட்டக் கம்பெனி வீரர்கள் பலரைக் கொன்றது.

தளபதி பானர்மெனின் மொழிபெயர்ப்பாளரான இராமலிங்க முதலியார், பானர்மெனின் அவில்தாரான இப்ராகிம்கான், வீரபாண்டியனின் உறவினரான கெடுவட்டூர் நாயக்கர், கீழ் அதிகாரியான சுவாமி ஆகியோர் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டனர். அவர்கள் வீரபாண்டியன் மீதான குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்தினர். வீரபாண்டியன் சாட்சிகள் உண்மை என்று கூறினாலும் அவற்றைக் குற்றமாகக் கருதவில்லை. என்றான். நாடாளும் மன்னன் ஒருவன் நாடோடிகளாய் வந்த நயவஞ்சகக்

கூட்டத்தாரிடம் நடந்து கொள்ள வேண்டிய முறையிலேயே தான் நடந்து கொண்டதாகக் கூறினான். இவ்வழக்கை விசாரித்த நீதிபதி ஆங்கிலேயரின் நீதிப்படி வீரபாண்டியன் குற்றவாளி எனக் கூறி அவனைத் தூக்கிலிடுமாறு கட்டளையிட்டான். அவனை ஏற்றுக் கொள்ளப் புளிய மரம் தயாரானது. பாஞ்சாலங்குறிச்சியின் கடைசி வேந்தனான வீரபாண்டிய கட்டபொம்மன் தன்னுடைய இறுதிக் காலத்தில் சிந்தை நொந்து தன் தம்பி ஊமைத்துரையைக் காணமுடியாத ஏக்கத்தில் பின்வருமாறு கூறினான்:

> அந்நியன் முன்னே கைதியாகி நிற்கவும், அவன் அளித்த தீர்ப்புப்படி புளிய மரத்தில் தொங்கித் துடிதுடித்து மாளவும் நேர்ந்துள்ள இந்நிலையைக் கண்டு நான் மாளவில்லை. ஆனால்,பாஞ்சாலங்குறிச்சியை விட்டு வெளியேறாது இறுதிவரைக் கோட்டைக்குள்ளிருந்தே கம்பெனிப் படையுடன் போராடி இருப்பேனாயின் பகைவரால் வெட்டப்பட்டு வீரமரணம் அடைந்திருப்பேன்; அந்த வாய்ப்பை இழந்ததற்காகவே வருந்துகிறேன்.
>
> (பக். 58-59)

வீரபாண்டிய கட்டபொம்மன் கயத்தாற்றில் உள்ள புளியமரத்தில் தூக்கிலிடப்பட்டான். அந்த இடத்தில் பெரிய கற்குவியல் காணப் படுகிறது. பாஞ்சாலங்குறிச்சி மண் வீர மண் என்பதால் பெண்கள் தங்கள் குழந்தைகளுக்கு உடலுறுதியும் மன உறுதியும் ஏற்படும் எனும் நம்பிக்கையில் கோட்டையிலுள்ள மண்ணைத் தண்ணீரில் கரைத்துக் குடிக்கக் கொடுக்கின்றனர்.

பாளையங்கோட்டைச் சிறைச்சாலை தகர்க்கப்படல்

வீரபாண்டிய கட்டபொம்மனைப் பிடிக்க உதவி புரிந்த புதுக்கோட்டை அரசனுக்குச் சலுகைகள் பல அளித்தனர். பாளையப்பட்டாக இருந்த அந்நாட்டைத் தனி அரசாக அறிவித்தனர். வீரபாண்டியனைத் தேடவும், அவனைத் தூக்கிலிட்ட பின்னர்ப் புரட்சி ஏற்படாமல் இருக்கவும் ,துணைபுரிந்த எட்டப்ப நாயக்கனுக்குச் சிவஞானபுரம் எனும் ஊரைப் பரிசாக அளித்தனர். வீரபாண்டியனைக் கொன்ற ஏழு நாட்களுக்குள் திருநெல்வேலிப் பகுதியில் காணப்பட்ட 42 கோட்டைகளை ஆங்கிலேயர்கள் தரைமட்டமாக்கினர். பாஞ்சாலங்குறிச்சிப் பாளையத்தையும், அதற்குத் துணையாக இருந்த பல பாளையங்களையும் கம்பெனியின் நேரடி ஆட்சியின்கீழ்க் கொண்டு வந்தனர். வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட பத்து நாட்களில் தளபதி பானர்மென் தன்னுடைய இங்கிலாந்து நாட்டிற்குத் திரும்பிச் சென்றான்.

இச்சூழலில் கம்பெனியின் ஆதிக்கத்தை அடியோடு அழித்து ஒழிக்கப் புரட்சிக்காரர்கள் கூட்டம் உருவானது. மணியாச்சி புகைவண்டிச் சந்திப்புக்கு வடகிழக்கே ஒன்றரைக் கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ஓட்டநத்தம் எனுமிடத்தில் ஒன்றுகூடித் திட்டங்கள் பல தீட்டினர். இத்திட்டங்களுள் ஒன்று பாளையங்கோட்டைச் சிறைச்சாலையைத் தகர்த்து அங்கிருக்கும் ஊமைத்துரையையும், அவர்களின் தோழர்களையும் விடுதலை செய்வதாகும்.

1801 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் இரண்டாம் நாள் பாளையங்கோட்டையில் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பல்வேறு உடை அணிந்து, பல்வேறு தொழில் செய்பவர்களைப் போல் நடித்துக் கண்காணித்து வந்தனர். இரவு நேரம் வந்ததும் அனைவரும் ஒன்று திரண்டு பாளையங்கோட்டைச் சிறையினுள் சென்று கோட்டையைத் தகர்த்து அனைவரையும் வெளிக்கொணர்ந்தனர். புரட்சிக்காரர்களும் கைதிகளும் ஒன்று சேர்ந்து வீரபாண்டிய கட்டபொம்மன் புகழ் வாழ்க, வெள்ளை ஆதிக்கம் ஒழிக என்று சத்தமிட்டபடி அங்குள்ள வீதிகளில் வலம் வந்தனர். பின்னர் அன்று இரவுக்குள் பாளையங்கோட்டையிலிருந்து 48 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ஓட்டப்பிடாரத்தைச் சென்றடைந்தனர்.

புதிய பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை

புரட்சிக்காரர்களையும், சிறையிலிருந்து தப்பியோடிய கைதிகளையும் பிடிப்பதற்காகக் கம்பெனிப் படைகளின் தளபதி மெக்காலே தன் படைகளைக் கயத்தாற்றுக்கு அனுப்பினான். படையினர் கயத்தாற்றுக்குச் செல்லும் வழியிலுள்ள குலையநல்லூர் எனும் ஊரில் கூடாரமடித்துத் தங்கினர். திடீரென அங்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட புரட்சிப் படையினர் தோன்றி மெக்காலேயின் படைகளுடன் போரிட்டனர். போரில் இறந்தவர்களை அங்கேயே போட்டுவிட்டுக் காயம் அடைந்தவர்களைத் தூக்கிக் கொண்டு மறைந்தனர். மீண்டும் இரவு புரட்சிக்காரர்கள் அங்கு வந்து அவர்களுடன் போரிட்டனர். ஒருவருக்கும் வெற்றி கிடைக்கவில்லை. சூரிய உதய நேரத்தில் புரட்சிக்காரர்கள் அங்கிருந்து சென்று விட்டனர்.

மெக்காலேயின் படைகள் பாஞ்சாலங்குறிச்சியைச் சென்றடைந்தன. அங்கு அவர்கள் புதியதாகக் கட்டப்பட்ட கோட்டையைக் கண்டனர். புரட்சிக்காரர்களின் திட்டப்படி இரண்டு வாரங்களுக்குள் இக்கோட்டை கட்டப்பட்டது. இதைக் கட்டுவதற்கு 2000 க்கும் அதிகமானோர் பாடுபட்டனர். அவசரத்தில் அக்கோட்டை

கட்டப்பட்டாலும் முன்னர் இருந்த கோட்டையைவிட இது உறுதியானது. இக்கோட்டை பனஞ்சாற்றினால் பிசைந்த மண்ணைக் கொண்டு கட்டப்பட்டதாகும். இக்கோட்டையை உடைக்கக்கூடிய திறன் படைத்த பீரங்கிகள் கம்பெனிப் படையினரிடம் அப்போது இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதனால் சுவரேறிக் குதிப்பதற்காகக் கம்பெனிப் படையினர் தயாராக இருந்தனர். ஆனால் அதேநேரம் கோட்டைக்குள் ஐயாயிரம் புரட்சிக்காரர்கள் பல்வேறு ஆயுதங்களுடன் பதுங்கி இருந்தனர்.

புரட்சிக்காரர்கள் - கம்பெனிப் படையினர் போர்

பாஞ்சாலங்குறிச்சியில் தரைமட்டமாக்கப்பட்ட கோட்டை மீண்டும் பொலிவுடனும் உறுதியுடனும் தலைதூக்கி நின்றதைக் கண்டு ஆங்கிலேயர்கள் திகைத்தனர். மேலும் புரட்சிக்காரர்களின் போர்க்கோலம் ஆங்கிலேயர்களுக்கு மேலும் அச்சத்தைக் கொடுத்தது. இச்சூழலில் போர் செய்வது நல்லதல்ல என்பதை உணர்ந்து கொண்ட கம்பெனிப் படையினர் பாளையங்கோட்டை நோக்கிப் புறப்பட்டனர். கம்பெனிப் படையினரைப் புரட்சிப் படையினர் பின் சென்று தாக்கினர். இத்தாக்குதலை எதிர்பார்த்த கம்பெனிப் படையினரும் எதிர்த் தாக்குதலில் ஈடுபட்டனர். கம்பெனிப் படையினர் பீரங்கி, துப்பாக்கிகளால் தாக்கினர். புரட்சிப் படையினர் பின்வாங்கிக் கோட்டைக்குள் சென்று தஞ்சமடைந்தனர். கம்பெனிப் படையினர் பாளையங்கோட்டைக்குச் சென்றனர்.

பின்னர்க் கம்பெனிப் படையினர் மார்ச்சு மாதம் 31 ஆம் நாள் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைக்கு மேற்கே அரைக் கிலோ மீட்டர் தொலைவில் 1200 செ.மீ. நீளமும் 540 செ.மீ. அகலமும் 480 செ.மீ. உயரமும் உடைய மண் மேட்டை எழுப்பிப் பீரங்கிகளை நிறுத்தி, தாக்குதலைத் தொடர்ந்தனர். கோட்டைக்குள் செல்லக் கம்பெனிப் படைகளால் இயலவில்லை. கோட்டைக்குள் செல்ல முயன்ற கம்பெனிப் படை வீரர்கள் பலர் மாண்டனர். கோட்டைத் தாக்குதலில் தோல்வி அடைந்த கம்பெனிப் படையினர் கோட்டைக்கு வெளியே ஒரு கி.மீ. தொலைவில் கூடாரம் அமைத்துத் தங்கினர். கம்பெனித் தலைவர்கள் பிற கம்பெனித் தலைவர்களிடம் பீரங்கிகளையும், படைகளையும் அனுப்பி வைக்க கேட்டுக் கொண்டனர். இச்சூழலில் புரட்சிப்படையினர் பல பாளையங்களைக் கைப்பற்றி வருவதை அறிந்த கம்பெனிப் படையினர் அச்சமடைந்தனர்.

ஊமைத்துரையை விட வீரபாண்டியனே நல்லவன்; அவனிடம்
சமரசம் செய்து கொள்ளாமற் போனோமே (ப.75)

எனக் கம்பெனித் தலைவர்களில் சிலர் எண்ணினர். கம்பெனிப் படையினர் புரட்சிப் படையினர் கோட்டையிலிருந்து வெளியே வராதவாறும், உணவுப் பண்டங்கள் கோட்டைக்குள் செல்லாத வாறும் பார்த்துக் கொண்டனர்.

இரண்டு மாதங்களுக்குப் பின்னர்க் கர்னல் ஆக்னியூ தலைமையில் திருச்சியிலிருந்து படை பாஞ்சாலங்குறிச்சிக்கு வந்தது. தளபதி மெக்காலேயிடமிருந்து படைத் தலைமையைக் கர்னல் ஆக்னியூ ஏற்றுக்கொண்டான். பலமணி நேரத் தாக்குதலுக்குப் பின்னரே கோட்டையில் உடைப்பு ஏற்பட்டது. ஷெப்பர்டு என்பவனது கருத்துப்படி அன்று போரைத் தொடராமல் மறு நாள் போரைத் தொடர்ந்தனர். கோட்டைக்குள் சென்ற கம்பெனிப் படையினர் மரணமடைந்தனர். இரண்டு நாள் போரில் ஐந்நூறுக்கும் மேற்பட்ட புரட்சிப் படையினரும் உணவின்மையால் பல பெண்களும் உயிர் துறந்தனர். இந்நிலையில் கோட்டையிலிருந்து வெளியேறுவதுதான் நல்லது என நினைத்த ஊமைத்துரை தன் சக தோழர்களுக்குப் பின்வருமாறு கட்டளையிட்டான்:

> புரட்சி வீரர்களே! புற முதுகு காட்டாது போரிட்டுக் கொண்டே கோட்டையிலிருந்து வெளியேறுங்கள். படுகாயமுற்ற வீரர்கள், பெண்கள், குழந்தைகள், முதியவர் ஆகியவரைக் கோட்டைக்கு வெளியே பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு செல்லுங்கள்
>
> (ப.79)

இக்கட்டளையின்படி கோட்டைக்கு வெளியே வந்தவர்களைக் கம்பெனிப்படையினர் கொன்று குவித்தனர். ஏறக்குறைய அறுநூற்றுக்கும் மேற்பட்டவர்கள் குதிரைப் படையினரால் கொல்லப்பட்டனர். பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையின் உள்ளும் புறமும் எங்குப் பார்த்தாலும் பிணக்குவியல்கள். இப்போரில் தப்பியவர்களின் எண்ணிக்கை சுமார் இரண்டாயிரம் பேர். ஊமைத்துரையின் உடல் முழுவதும் காயங்கள். ஒரு தாயின் உதவியால் போர்க்களத்திலிருந்து காப்பாற்றப்பட்டுக் குணமாக்கப் பட்டான். கர்னல் ஆக்னியூ ஊமைத்துரை உயிரோடு இருப்பதுவரை கம்பெனிப் படையினருக்குத் தொல்லை என்பதை அறிந்து அவனையும் அவனது புரட்சிப் படையினரையும் உயிருடனோ பிணமாகவோ கொண்டுவரக் கட்டளையிட்டான்.

இச்சூழலில் சிவகங்கைப் பாளையத்தின் தலைவர்களான சின்ன மருது, பெரிய மருது சகோதரர்களின் துணையுடன்

ஊமைத்துரையும் அவனது வீரர்களும் போரிட்டனர். கம்பெனிப் படையினர் ஊமைத்துரையையும், மருது சகோதரர்களையும் கைது செய்தனர். மருது சகோதரர்களை அவர்களது சொந்த நாட்டிலேயே (திருப்பத்தூர் கோட்டை) தூக்கிலிட்டுக் கொன்றனர். ஊமைத்துரையை 1801 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10 ஆம் நாள் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைக்கு மேற்புறத்தில் உள்ள பீரங்கி மேட்டில் தூக்கிலிட்டுக் கொன்றனர்.

பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை இருந்த இடத்தைக் கம்பெனிப் படையினர் தகர்த்ததால் அது இன்று மண் மேடாகக் காட்சியளிக்கிறது. வீரபாண்டியன் ஆட்சி செலுத்திய நிலத்தில் உப்பையும் ஆமணக்கையும் போட்டு விதைத்தனர். கோட்டை இருந்த இடத்தில் கட்டடங்கள் கட்டக்கூடாதெனக் கம்பெனி அதிகாரிகள் கட்டளை யிட்டனர்.

வாரிசுகள்

பாஞ்சாலங்குறிச்சிப் பாளையப்பட்டாரில் வீரபாண்டிய கட்டபொம்மனுக்குக் குழந்தைகள் இல்லை. வீரபாண்டியனின் சகோதரர்களுக்குக் குழந்தைகள் உண்டு. அவர்கள் இன்றும் செக்காரக்குடி எனும் ஊரில் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் குடும்பத்தில் பிறக்கும் மூத்த ஆண் குழந்தைகளுக்குக் கட்டபொம்மன் என்றும், இளைய ஆண் குழந்தைக்கு ஊமைத்துரை எனவும் பெயரிடுகின்றனர். ஊமைத் துரையின் பெயரன் ஜெகவீரபாண்டியத் துரை பாஞ்சாலங்குறிச்சி அரசைத் தன்னிடம் ஒப்படைக்க வேண்டும் என ஆங்கிலேயர்கள் மீது வழக்குத் தொடுத்திருந்தான். அந்த வழக்குக்காகச் சென்னை வந்திருந்தபோது நோய்வாய்ப்பட்டு இறந்தான்.

ஆண்டியாக வந்து அரசனாக உருவெடுத்த குடியிலே பிறந்து சொந்த மண்ணின் சுதந்திரத்திற்காக இறுதிவரை போராடி மாண்ட அம்மாவீரனின் வீர வரலாற்றை உணர்ச்சிப் பிழம்பாக வடித்துள்ளார் ம.பொ.சி.

வீரபாண்டிய கட்டபொம்மன் எனும் இந்நூல் ஒரு தனிமனிதனின் வரலாற்று நூல் அன்று. பாரதம் எனும் மாபெரும் தேசத்தின் முதல் விடுதலை வேட்கை எழுச்சியின் பதிப்பும் ஆகும்.

வள்ளலார்

வள்ளலாரின் வரலாற்றைச் சிறந்த முறையில் எழுதியது ம.பொ.சி. என்றே கூறலாம். இந்நூல் ஒரு வரலாற்று நூலாக மட்டுமன்றி வள்ளலாரின் அருட்பாடல்களைத் திறனாய்வு செய்யும் நூலாகவும் அமைந்துள்ளது. இராமலிங்க வள்ளலாரின் "வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு" எனும் இந்நூல் சாகித்திய அகாடமியின் பரிசினைப் பெற்றது நூலின் சிறப்புக்கு மணிமகுடமாக அமைகிறது. ம.பொ.சி யை ஆசிரியராகக் கொண்டு வாரம் தோறும் வெளிவந்த செங்கோல் எனும் இதழில் ம.பொ.சி. 23-12-1962 முதல் 1-9-1963 வரை தொடர்ந்து எழுதிய கட்டுரைகள் "வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு" எனும் நூலாக நவம்பர் 1963 இல் வெளிவந்தது. வள்ளலார் பற்றி ம.பொ.சி. ஏழு நூல்களை எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிறப்பு

1823 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஐந்தாம் நாள் தில்லைக்கு வடமேற்கிலுள்ள திருமருதூரில் இராமையா பிள்ளை - சின்னம்மாள் தம்பதியினருக்கு ஐந்தாவது குழந்தையாக இராமலிங்கர் பிறந்தார். இராமையா பிள்ளை தனது முதல் ஐந்து மனைவியரும் ஒருவர்பின் ஒருவராகக் காலமானதால் ஆறாம் தாரமாகச் சின்னம்மாள் எனும் பெண்ணை மணந்தார். இராமலிங்கரின் மூத்த உடன்பிறப்புகள் சபாபதி, பரசுராமன், சுந்தரம்மாள், உண்ணாமுலை என்பவர்களாவர். இராமலிங்கர் பிற்காலத்தில் தம் பிறப்பைப் பற்றிப் பின்வருமாறு பாடியுள்ளார்:

அகத்தே கறுத்துப் புறத்து வெளுத்
திருந்த உலகர் அனைவரையும்
சகத்தே திருத்திச் சன்மார்க்க
சங்கத்து அடைவித் திடவரும்
இகத்தே பரத்தைப் பெற்றுமகிழ்ந்
திடுதற் கென்றே யெனையிந்த
யுகத்தே இறைவன் வருவிக்க
உற்றேன்..... (ப.52)

பெற்றோர்கள் இராமலிங்கரின் ஜாதகத்தை ஒரு சாத்திரியாரிடம் கணித்தனர். அக்கணிப்பு பின்வருமாறு:

> இந்த ஜாதகமுடையோன் சிரஞ்சீவி; இவன் உயிர் போவதில்லை; உலகனைத்தும் வள்ளலாய் வாழ்வான்! தைரியவான்; கனதனங் கருதான்; சுழுத்தி நாட்ட முடையான்; உலகுயிர்பால் பேரிரக்கம் கொண்டவன்; பத்தாவது ஆண்டில் ஒன்றில் காதலனாவான்; கற்பமும், உலகத்தைத் திருத்தும் குணமும் சக்தியால் உணர்வான். முப்பதாம் ஆண்டில் பிறப்பு இறப்பற்ற நிலையடைவான். நாற்பதாம் ஆண்டில் கைவல்ய ஞானம் பெறுவான்; ஞானசித்தியால் ஐம்பதில் பொன்னுடலாகிப் பொலிவான். இவன் ஞான உடலெடுத்த பெரியோன். மந்திரம், யோகம், வைத்தியம், வாதம், நூல் நுணுக்கம் - சிந்தையில் எண்ணியவுடனே எய்துவான். (ப.53)

இளமைப் பருவம்

இராமலிங்கரின் தந்தை இராமையா பிள்ளை ஊரிலுள்ள சிறுவர்களுக்குக் கல்வி கற்றுக் கொடுத்தும், வணிகர்களுக்குக் கணக்கெழுதியும் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு தன் குடும்பத்தைக் காப்பாற்றிக் கொண்டு வந்தார். இச்சூழலில் இராமையா பிள்ளை திடீரெனக் காலமானார். இல்லத் தலைவர் இறந்ததால் அவ்வீட்டின் பொறுப்பு மூத்த மகனான சபாபதியின் மீது வந்தது. எனவே பொன்னேரியிலுள்ள பாட்டியின் இல்லத்திற்கு அனைவரும் வந்தனர்.

சில ஆண்டுகளுக்குப் பின்னர், சபாபதி தன் சகோதர சகோதரிகளுடன் சென்னையில் வந்து குடியேறினார். அவர் மகாவித்துவான் காஞ்சிபுரம் சபாபதி முதலியாரிடம் தமிழ் கற்றார். தானும் தம் தந்தையாரைப் போன்று சிறுவர்களுக்குக் கல்வி கற்றுக் கொடுத்தும், புராணச் சொற்பொழிவுகள் செய்தும் தம் குடும்பத்தைக் காத்து வந்தார். சபாபதி தனது தம்பி இராமலிங்கரை ஐந்தாவது வயதில் பள்ளிக்கு அனுப்பினார். இராமலிங்கருக்குக் கல்வியில் நாட்டம் இல்லாததைக் கண்டு வருந்திய சபாபதி தனது ஆசிரியரிடம் அனுப்பினார். அங்கும் கல்வி கற்பதில் கவனம் செலுத்தவில்லை. கல்வி பயிலவில்லை என்றாலும் வேத ஆகமக்கலைகளைப் படிக்காமலே உணரும் திறன் பெற்றிருந்தார். இராமலிங்கரின் இத்தகைய திறனை அறியாத அண்ணன் சபாபதி கல்வி கற்பதில் விருப்பம் இல்லாத தம்பியை வீட்டைவிட்டுத் துரத்தி விட்டார். இத்தருணத்தில் சபாபதியின் துணைவியார் பாப்பாத்தி அம்மாள் தம் கணவருக்குத் தெரியாமல் இராமலிங்கருக்கு உணவு கொடுத்து வந்தார். தந்தையாரின் திதியன்று மறைவாக உணவு உண்ண வந்த தன்

தம்பியின் நிலை கண்டு வருந்தினார். அண்ணனின் மனத்துயரை உணர்ந்த இராமலிங்கர் அண்ணனின் விருப்பப்படி கல்வி கற்க விருப்பம் தெரிவித்தார். தாங்கள் தங்கியிருந்த் வீட்டின் மேல்மாடியில் தங்கிக் கல்வி கற்க அறிவுரை கூறினர். தமது அண்ணன், அண்ணியின் விருப்பப்படி கல்வி கற்கத் தொடங்கினார். அவர்கள் வாழ்ந்த வீடு சென்னை ஏழுகிணற்றுப் பகுதியில் வீராசாமிப் பிள்ளைத் தெருவிலுள்ள 39 ஆவது எண்ணில் இருந்தது.

வீட்டின் மேல்மாடியில் இருந்த இராமலிங்கருக்குக் கல்வியில் நாட்டம் செல்லவில்லை. மாறாகத் திருத்தணிகைக் கந்தப் பெருமானிடம் உள்ளம் சென்று தினமும் வழிபட்டு வந்தார். தம் கண்ணுக்கு எதிரே கண்ணாடியை வைத்து, தமது உள்ளத்திலே கந்தப் பெருமானை உருவகப்படுத்தி அவரைக் கண்ணாடியிலே காண முயன்றார். இராமலிங்கர் தம்மை மறந்து பார்த்ததனால், அவர் உள்ளத்தில் உருவகப்படுத்தப்பட்ட கந்தப் பெருமான் கண்ணாடியில் காட்சியளித்தார். உடனே மகிழ்ச்சிப் பெருக்கில்,

> சீர்கொண்ட தெய்வ வதனங்கள் ஆறும் திகழ்கடப்பந்
> தார்கொண்ட பன்னிரு தோள்களும் தாமரைத் தாள்களும்ஓர்
> கூர்கொண்ட வேலும் மயிலும்நற் கோழிக் கொடியும்அருள்
> கார்கொண்ட வண்மைத் தணிகா சலமும்என் கண்ணுற்றதே! (ப. 62)

எனப் பாடினார். இராமலிங்கருக்குக் கல்வியில் நாட்டம் இல்லாததைக் கண்டு சபாபதி வேதனையடைந்து அவரை வெறுத்தார். இதனால் மனம் சோர்வடைந்து இறைவனையே தந்தையாகவும் தாயாகவும் கருதிப் பாடினார். எனினும் அண்ணன் சபாபதிக்குப் பயப்பட்டுப் படிப்பது போலப் பாசாங்கு காட்டி வந்தார். ஆனால் மைத்துனர் படிக்காமல் இறைவனைப் பாடிப் பரவசம் அடைந்து வருகிறார் என்பது அண்ணிக்குத் தெரியவந்த பின்னர், அவரது பக்தையாக மாறிவிட்டார்.

சபாபதி சென்னை முத்தியாலுப்பேட்டையிலுள்ள சோமு செட்டியாரின் வீட்டில் வாரம் தோறும் புராணச் சொற்பொழிவு நடத்தி வந்தார். ஒருநாள் நடராசப்பெருமானின் பிரதிஷ்டை விழாவில் ஞானசம்பந்தப் பெருமானின் வரலாற்றைக் கூறச் சபாபதி விருப்பம் தெரிவித்திருந்தார். ஆனால் திடீரென்று உடல்நலக் குறைவு ஏற்பட்டதால் சபாபதியால் அந்நிகழ்ச்சிக்குப் போக இயலவில்லை. சபாபதி தமது மனைவி பாப்பாத்தி அம்மாளின் விருப்பப்படி இராமலிங்கரை அருகில் அழைத்து,

> தம்பி! நீ சென்று இரண்டொரு பாடல்களைப் பாடித் தீப ஆராதனை செய்துவிட்டு என் உடல் நிலையைச் செட்டியாருக்குத் தெரிவித்து மன்னிக்குமாறு வேண்டிக் கொண்டு வா (ப.74)

எனக் கூறினார். இராமலிங்கர், செட்டியாரின் வீட்டில் சென்று இரவு 9 மணியளவில் தொடங்கிப் பன்னிரண்டு மணியளவில் முடித்தார். ஞானசம்பந்தப் பெருமான் புராணத்திலுள்ள இரண்டு வரிகள் மட்டுமே மூன்று மணிநேர அளவில் சொற்பொழிவாக ஆற்ற முடிந்தது. புராணச் சொற்பொழிவுகளுக்குத் தத்துவார்த்த விளக்கம் கொடுப்பதில் வல்லவராக இராமலிங்கர் காணப்பட்டார். இப்புராணச் சொற்பொழிவைக் கேட்ட மக்கள் அனைவரும் முகம் மலர்ந்தனர். அவர்கள் அனைவரின் வேண்டுதலுக்கிணங்கப் புராணப் பிரசங்கத்தைத் தமது தொண்டாகச் செய்து வந்தார். சபாபதி தம் தம்பியின் புராணச் சொற்பொழிவைப் பற்றிப் பலர் மூலம் கேள்விப்பட்டு வியப்படைந்தார். எனினும் அவரால் நம்பமுடியவில்லை. ஒருநாள் இராமலிங்கரின் சொற்பொழிவை மறைந்திருந்து கேட்டார்; மிக்க மகிழ்ச்சியடைந்தார்.

இராமலிங்கர் இளமைப் பருவத்திலேயே தேவார-திருவாசகப் பாடல்களை நன்கு படித்து, ஞானசம்பந்தரையே தம் குருவாகவும் மனதில் பதித்து வைத்திருந்தார். ஞானசம்பந்தரே தம்மை ஞானியாக்கிய குரு என்கின்றார். முருகப்பெருமானே ஞான சம்பந்தராகப் பிறந்தார் என்பது இராமலிங்கரின் கொள்கையாகும்.

இராமலிங்கர் ஏழுகிணற்றிலிருந்து திருவொற்றியூருக்கு நடந்து சென்று அங்குள்ள ஒற்றியூர் தியாகேசரைப் போற்றிப் பாடினார். அங்குப் பாடிய பாடல்கள் திருவருட்பா நூலில் இரண்டாம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

காஞ்சிபுரம் சபாபதி முதலியார் சிறுவர்கள் படிப்பதற்காக உரைநடையில் அமைந்த நூலொன்று இயற்றித்தரக் கேட்டார். அவரது வேண்டுகோளுக்கிணங்க "மனுமுறைகண்ட வாசகம்" எனும் நூலை இராமலிங்கர் இயற்றினார். அன்றைய புலவர்களிடம் தொண்டை மண்டலமா அல்லது தொண்ட மண்டலமா எனும் ஐயம் எழுந்தது. அவர்கள் இராமலிங்கரிடம் வந்து தங்கள் எண்ணத்தைத் தெரிவித்தனர். இராமலிங்கர் தேவையான சான்றுகள் மூலம் தொண்ட மண்டலம் என்பது சரியானது எனத் தீர்ப்பளித்தார்.

இராமலிங்கருக்குப் புராண இலக்கியங்களில் புலமை உண்டே தவிர, சங்க இலக்கியங்களில் புலமை இல்லை எனச் சிலர்

குறைகூறி வந்தனர். தொழுவூர் வேலாயுத முதலியார் சங்க இலக்கியங்களில் இராமலிங்கருக்கு உள்ள புலமையைச் சோதிப்பதற்காகத் தானே நூறு பாடல்கள் எழுதி இவை பழைய ஏட்டுச் சுவடியிலிருந்து தனக்குக் கிடைத்த சங்க இலக்கியங்கள் என்றும், இவற்றைப் பாருங்கள் எனவும் கூறினார். அதைப் படித்த இராமலிங்கர் இப்பாடல்கள் சங்க இலக்கியப் பாடல்கள் அல்ல என்றும், சங்கப்பாடல்கள் என்றால் இவ்வளவு பிழை இருக்காது எனவும் கூறினார். அதைக்கேட்ட தொழுவூர் வேலாயுத முதலியார் தம் தவறு உணர்ந்து அன்று முதல் இராமலிங்கரின் சீடரானார். பிற்காலத்தில் இராமலிங்கருக்குப் பல சீடர்கள் இருந்தாலும் வேலாயுத முதலியாரே தலைமைச் சீடராக விளங்கினார். இறைவனிடம் கொண்ட பக்தியின் காரணமாக இவரது மனம் இல்வாழ்க்கைக்கு எதிரான போக்கில் சென்றதால் எப்போதும் தூய வெள்ளாடையையே அணிந்து வந்தார்.

திருமணம்

இராமலிங்கரின் மனத் தூய்மையை உணராத அவரது அண்ணனும் அண்ணியும் அவருடைய மூத்த சகோதரி உண்ணாமலையம்மாளின் மகளான தனக்கோட்டி எனும் பெண்ணைத் திருமணம் செய்து வைக்க முன்வந்தனர். ஆனால் இராமலிங்கருக்கு இதில் சற்றும் விருப்பம் இல்லை. இராமலிங்கரின் அண்ணனும் அண்ணியும் சிவயோகி ஒருவரின் துணைகொண்டு திருமணத்தை முடித்து வைத்தனர். இராமலிங்கர் தனக்கோட்டியம்மாளைத் திருமணம் செய்தும் அவருடன் கூடி வாழாமல், அவரைத் துறந்து பிரம்மச்சாரியாகவே வாழ்ந்து வந்தார். ஆனால் தன் சீடர்களையெல்லாம் இல்வாழ்க்கையில் ஈடுபடுத்தினார்.

கந்தகோட்டத்தில் வழிபாடு

திருமண வாழ்விலிருந்து தம்மை விடுவித்துக் கொண்ட இராமலிங்கர், பின்னர்ச் சில ஆண்டுகள் சென்னையிலேயே தங்கியிருந்தார். சென்னையிலிருக்கும்போது கந்தகோட்டம் சென்று முருகப் பெருமானைப் பாடல்கள் பாடி வணங்குவதை வழக்கமாகக் கொண்டார். கந்தகோட்டப் பெருமானைப் பல பாடல்களால் புகழ்ந்து பாடியிருப்பினும், கீழ்க்காணும் பாடலை இன்றும் பாடிவருகின்றனர்:

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவுகல வாமை வேண்டும்
பெருமைபெறும் நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை
பேசா திருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்
பிடியா திருக்க வேண்டும்
மருவுபெண்ணாசையை மறக்கவே வேண்டும் உனை
மறவா திருக்க வேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வில்நான் வாழ வேண்டும்
தருமமிகு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே!
தண்முகத் துய்ய மணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே! (ப.102)

இப்பாடலை, கந்தப்பெருமானோடு பக்தர்களை ஒன்றுவிக்கும் உயிர்ப்பாட்டு என்பர்.

தல யாத்திரை

இராமலிங்க அடிகளார் தொண்டர்கள் சூழப் பல இடங்களுக்குப் பாத யாத்திரையாகச் சென்றுள்ளார். தமது தமையனார் பரசுராமப் பிள்ளையின் உடல் நலம் வேண்டி அவரை அழைத்துக் கொண்டு சிதம்பரம் சென்றார். செல்லும் வழியில் புதுவை மாநகரில் மக்களின் வேண்டுகோளுக்கு இணங்கிச் சில நாட்கள் தங்கினார். பின்னர்த் தமையனாருடன் சிதம்பரம் சென்றடைந்தார். அங்குச் சில காலம் தங்கியிருந்து விட்டு மீண்டும் தலயாத்திரையை மேற் கொண்டார். பல இடங்களுக்குச் சென்ற பின்னர்த் தமது சிறிய தமையனார் வாழ்ந்து வந்த கருங்குழி எனும் இடத்தைச் சென்றடைந்தார். சில நாட்கள் அங்குத் தங்கியிருந்தபோது தமையனார் மரணமடைந்தார். அவ்வருத்தத்திலிருந்து மீளுவதற்காக அவ்வூரிலிருந்து புறப்படலானார். ஆனால் அவ்வூரிலுள்ள வேங்கட ரெட்டியாரின் வேண்டுகோளுக்கிணங்க அவர் இல்லத்தில் நீண்ட நாட்கள் தங்கியிருந்தார். அப்போது சென்னையில் தங்கியிருந்த தன் அண்ணன் சபாபதியின் மறைவு கேட்டு மனவருத்தம் அடைந்தார். அடிகளார் வருத்த மிகுதியின் காரணமாகச் சில நாட்கள் மௌன விரதத்தை மேற்கொண்டார்.

கருங்குழியில் வேங்கட ரெட்டியார் வீட்டில் தங்கியிருந்த போது எண்ணற்ற கவிதைகளை இயற்றினார். இன்றும் அவர்

தங்கியிருந்து கவிதைகள் இயற்றிய அறை புனித இடமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. பின்னர்க் கடலூரிலுள்ள அப்பாசாமி செட்டியாரின் அழைப்பை ஏற்றுக் கொண்டு அங்குச் சில நாட்கள் தங்கினார். கடலூரில் தங்கியிருந்த நாட்களில் தினந்தோறும் இரவில் புராணச் சொற்பொழிவு நடத்தினார். தாய், தந்தை, அண்ணன்மார் அனைவரும் மறைந்த பின்னர் மிகவும் வருத்தமடைந்து இறைவனின் திருவடிதான் இனிமேல் அடைக்கலம்; அதனை உயிர்களுக்குத் தொண்டு செய்வதன் மூலம் அடைய விரும்பினார். எனவே எளிமையான வடலூரைத் தம் பணியிடமாகத் தெரிந்து கொண்டு அங்கே சமுதாயத் தொண்டைத் துவக்கத் துணிந்தார்.

வடலூரில் அடிகளார்

இராமலிங்க அடிகளார் நகர வாழ்க்கையின் மீதிருந்த வெறுப்பின் காரணமாக வடலூர் எனும் கிராமத்தைத் தேர்ந்தெடுத்தார்.

> தேட்டிலே மிகுந்த சென்னையில் இருந்தால்
> சிறுகுறும் என்றுளம் பயந்தே
> நாட்டிலே சிறிய ஊர்ப்புறங்களிலே
> காட்டிலே பருக்கைக் கல்லிலே புன்செய்க்
> களத்திலே திரிந்துஉற்ற இளைப்பை
> ஏட்டிலே எழுத முடியுமோ இவைகள்
> எந்தை நீ அறிந்தது தானே (பக். 108-109)

எனும் இப்பாடலில் சென்னையின் மீதிருந்த வெறுப்பை வெளிப்படுத்துகிறார். வடலூருக்குப் பார்வதிபுரம் எனும் வேறொரு பெயரும் உண்டு. வடலூரிலிருந்து பார்த்தால் தில்லை அம்பலவாணர் கோயிலின் நான்கு கோபுரங்களையும் பார்க்க முடியும் எனும் புனிதத் தன்மையை மனத்தில் கொண்டே வசதியற்ற வடலூரை வள்ளலார் தேர்ந்தெடுத்தார். ஆன்ம நேய ஒருமைப்பாட்டுரிமை எனும் சித்தாந்தத்தின் அடிப்படையில்,

> அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ் ஜோதி
> தனிப்பெருங் கருணை அருட்பெருஞ் ஜோதி (ப.111)

எனும் வெளிப்பாடு அவரது வாயிலிருந்து வெளிப்பட்டது. மேலும் தம்மைச் சுற்றி இருந்த அடியார்களுக்குப் பசித்திரு, தனித்திரு, விழித்திரு எனும் மூன்று மந்திரங்களை உபதேசித்தார். வடலூரில் 1867 ஆம் ஆண்டில் சத்தியதருமச்சாலை அமைத்தபோது முதல் நான்கு திருமுறைகள் வெளியாகின.

குணநலன்கள்

அடிகளார் கருணையே வடிவானவர். அவர் பணத்தின் மீது பற்றில்லாதவர். இறுக்கம் இரத்தின முதலியார் போன்ற ஒருசில நெருக்கமான நண்பர்களிடமே தன்னுடைய அற்பத் தேவைகளுக்காகப் பணம் பெற்றார். ஏழை மக்களுக்காகப் பிறரிடம் உதவி கேட்டார். ஏழைமக்களின் கல்வியில் அரசாங்கமே முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும் என்பது அடிகளாரின் கொள்கையாகும். அடிகளார் செல்வச் செருக்குடையவர்களை வெறுத்தார். வள்ளலார் சித்தர்களைப் போன்று மருத்துவக் கலை தெரிந்தவர். ஆதலால் தன்னை நாடி வந்த நோயுற்ற ஏழைகளுக்கு உடல் நோயைத் தீர்த்து உணவும் கொடுப்பது வழக்கம். ஏழை மக்கள் கருணையற்றவர்களால் துன்பமடையும் போது அவர்களுக்கு ஆதரவு காட்டித் துணையாயிருந்தார்.

காட்சிக்கு எளியர்

இராமலிங்கரின் தோற்றம் காட்சிக்கு மிக எளிமையாக இருந்தது. அவரது தலைமாணவரான தொழுவூர் முதலியார் அடிகளாரின் தோற்றம் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

> உருவத்தில் சாதாரண உயரமுள்ளவர். மெலிந்த சரீரமுடையவர். எலும்புகள் தெரியும். ஆயினும் வீரிய பலமுள்ளவர். நிமிர்ந்த தேகம். தெளிந்த மாநிற மேனியர். நீண்ட மெல்லிய நாசியுடையவர். பரந்த பொறி-பறக்குங் கண்களை உடையவர். இவருடைய முகத்தில் சதா சற்று விசனக்குறி காணப்பட்டிருந்தது. இவர் கடைசி காலத்தில் முடியை நீளமாய் வளர விட்டிருந்தார். இவர் யோகிகளுக்கு அடுக்காத வழக்கமாகிய பாதரட்சையைத் தரித்தார். இவருடைய உடை இரண்டு வெள்ளை ஆடையைத் தவிர வேறு இல்லை. ஒரே ஆடையை உடுத்தியிருந்ததாகவும் கேள்வி. (ப.126)

துறவிகள் துவராடை (காஷாயம்) அணிவதுதான் வழக்கம். ஆனால் வள்ளலார் இதற்கு மாறாக வெள்ளை ஆடையை அணிந்து துறவியாகக் காட்சியளித்தார். வள்ளலார் பிறவியிலே தயவு, கருணை, ஞானம் ஆகிய பண்புகளை உடையவராகக் காணப்பட்டதால் வெள்ளாடையை அணிந்தார். வள்ளலார் தம்முடைய தவ வலிமை யினால் பிரணவ தேகம் பெற்றிருந்தார். அதனை ஒளி உடல் என்பர். உலகில் மக்கள் வீண் ஆடம்பர வாழ்க்கை வாழ்வதை வெறுத்தார்.

மக்களுக்கு நகையின் மீது இருக்கும் ஆர்வத்தைக் குறித்துப் பின்வருமாறு கூறுகிறார்:

> காதில் இரண்டு பொத்தல் செய்து வரவிடுத்தவர்- ஆணுக்குக் கடுக்கனிடுதலும் பெண்ணுக்கு மூக்குத்தி முதலியவை போடுதலும் தமக்குச் சம்மதமானால்- காதிலும் மூக்கிலும் அதற்கு வேண்டிய பொத்தல்களிட்டு வரவிட்டிருக்க மாட்டாரா? என்று விசாரித்து தெரிந்து கொள்ளுகிற பக்ஷத்தில், காதில் கடுக்கனிடவும் மூக்கு முதலியவற்றில் நகையிடவும் சம்மதம் வருமா? (ப.134)

இராமலிங்கர் அகமும் புறமும் மனிதப் பண்பு மணக்க வாழ்ந்தார்.

> அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
> ஆரிருள் உய்த்து விடும் (குறள். 121)

எனும் குறளின் விளக்கவுரை வள்ளலாரின் வாழ்க்கை வரலாறு ஆகும்.

சத்திய தருமச்சாலை

அடிகளாரின் காலத்தில் ஆங்கிலேயர்களின் சுரண்டலால் பல இடங்களில் பசிப்பிணி தலைவிரித்து ஆடியது. பசியால், நோயால் துன்பப்படும் மக்களின் நிலை கண்டு வள்ளலார் துன்பம் அடைந்தார். இதை,

> வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
> வாடினேன்; பசியினால் இளைத்தே
> வீடுதோ றிரந்தும் பசியறாது அயர்ந்த
> வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்:
> நீடிய பிணியால் வருந்துகின் றோர்என்
> நேர்உறக் கண்டுளம் துடித்தேன்
> ஈடின்மா னிகளாய் ஏழைக ளாய்நெஞ்(சு)
> இளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்! (ப. 146)

எனப் பாடியுள்ளார். வடலூர்ப் பகுதியில் தினமும் ஏழைகளுக்கு உணவு கொடுக்கும் வகையில் சத்திய தருமச்சாலையை நிறுவத் திட்டமிட்டார். அதற்காக அங்குள்ள மக்கள் தொண்ணூறு காணி நிலத்தை வழங்கினர். சிலர் கட்டடம் கட்டுவதற்கான பொருள்களும், சிலர் பணமும் கொடுத்து உதவினர். இதனால் சத்திய தருமச்சாலையின் திறப்பு விழாவும், அன்னதானப்பணியின் துவக்க விழாவும் 1867 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் நாள் நடைபெற்றன. சத்திய தருமச்சாலை வள்ளலாரின் கையிலிருந்த அக்ஷய பாத்திரமாகக் காணப்பட்டது.

வடலூரில் தொடங்கப்பட்ட இப்பணி உலகம் முழுவதிலும் பரவ வேண்டும் என்பது இராமலிங்கரின் விருப்பமாகும். அன்னதானப் பணிக்காக 1867 இல் அடுப்பில் மூட்டிய தீ அணைக்கப்படாமல் இன்றும் எரிந்து கொண்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

ஜீவகாருண்யம்

வடலூரில் சத்திய தருமச்சாலை தொடங்கிய நாளில் தன் மனதில் உள்ள ஜீவகாருண்ய ஒழுக்கம் பற்றி மக்களிடம் தெளிவாக விளக்கினார். அவர் விளக்கியதிலிருந்து சான்றாகச் சில பகுதிகள்:

> பசியினால் வரும் துன்பத்தையும் கொலையினால் வரும் துன்பத்தையும் நிவர்த்தி செய்விப்பதே ஜீவகாருண்யத்திற்கு முக்கிய இலட்சியமென்றறிய வேண்டும்.
>
> பசியென்கிற நெருப்பானது ஏழைகள் தேகத்தினுள் பற்றி எரிகின்றபோது ஆகாரத்தால் அவிக்கின்றதுதான் ஜீவகாருண்யம்.
>
> கடவுளியற்கை விளக்கத்திற்கு இடமாகிய சீவ தேகங்களென் கின்ற ஆலயங்கள் பசியினால் பாழாகும் தருணத்தில் ஆகாரங் கொடுத்து அவ்வாலயங்களை விளக்கஞ் செய்விப்பதே ஜீவகாருண்யம்
>
> தம் பசியினால் தூக்கம் பிடியாமல் துன்பப்படுகின்ற ஏழை ஜீவர்களுக்கு ஆகாரங் கொடுத்துத் துக்கத்தை நீக்கித் தூக்கம் பிடிக்க வைப்பதே ஜீவகாருண்யம்.
>
> ஜீவகாருண்ய ஒழுக்கமில்லாமல், ஞானம், யோகம், தவம், விரதம், ஜெபம், தியானம் முதலியவைகளைச் செய்கின்றவர்கள், கடவுள் அருளுக்குச் சிறிதும் பாத்திரமாகார்கள். அவர்களை ஆன்ம விளக்கமுள்ளவர் களாகவும் நினைக்கப்படாது. ஜீவகாருண்ய மில்லாது செய்யப்படுகிற செய்கைகளெல்லாம் பிரயோசன மில்லாத மாயாஜாலச் செய்கைகளேயாகுமென்று அறிய வேண்டும்.
>
> சமுசாரிகள் விவாகம் முதலிய விசேஷ காரியங்களில் பந்தலை அலங்கரித்தும், அவ்விடத்தில் வேறு வேறு சடங்குகளைச் செய்வித்தும், ஆடல் பாடல் வரிசை ஊர்வலம் முதலிய வினோதங்களையும் அப்பவர்க்கம், சித்திரான்னம் முதலிய பெருமைப்பாடுகளையும் நடத்தியும் எக்களிப்பில் அழுந்தி யிருக்கும் தருணத்தில் பசித்த ஏழையர் முகத்தைப் பார்க்கவும் சம்மதிக்கவில்லை.
>
> தமது குடும்பச் செலவைக் கூடிய மட்டில் சிக்கனம் செய்து, ஏழைகளின் பசியை நீக்குதல் வேண்டும். (பக். 150-151)

சத்திய தருமச்சாலை தொடங்கிய நான்காண்டுகள் கழித்து 1872 ஆம் ஆண்டு சனவரி மாதம் 11 ஆம் நாள் சமரச வேத பாடசாலை தொடங்கப்பட்டது. சன்மார்க்க சங்கத்தின் பொதுமறை நூலான 1596 வரிகளைக் கொண்ட அருட்பெருஞ்சோதி அகவல் நூலை வள்ளலார் ஒரே இரவில் எழுதினார். 1873 இல் வடலூருக்கு அருகிலுள்ள மேட்டுக்குப்பம் எனும் சிறிய கிராமத்தில் சித்தி வளாகம் எனும் பெயரில் ஒரு குடிசை அமைத்துப் பணிகள் ஆற்றிவந்தார். மேலும் அவ்விடத்தில் தினமும் சொற்பொழிவும் நிகழ்த்தி வந்தார்.

வள்ளலார் நிகழ்த்திய சமயப் புரட்சிக்கு முக்கியமாக விளங்கிய நிறுவனங்கள் சமரச சன்மார்க்க சங்கம், சத்திய தருமச்சாலை, சத்திய ஞானசபை, சித்திவளாகம் என்பனவாகும். வள்ளலார் ஏமசித்தி, சாகாக் கல்வி, தத்துவ நிக்கிரகஞ் செய்தல், கடவுள் நிலையறிந்து அம்மயமாதல் எனும் நான்கு நெறிகளை வலியுறுத்தினார். மேலும் இந்திரிய ஒழுக்கம், ஜீவ ஒழுக்கம், கரண ஒழுக்கம், ஆன்ம ஒழுக்கம் எனும் நான்கு ஒழுக்கங்களையும் வலியுறுத்தினார். மேற்குறிப்பிட்ட நான்கு நிறுவனங்கள், நெறிகள், ஒழுக்கங்கள் என்பவைகள் ஒன்றுபட்டதே "ஆன்மநேய ஒருமைப்பாடு" எனும் பேரியக்கமாகும்.

வழிபாடு

வள்ளலார் இறைவழிபாட்டின்போது பிடில், மத்தளம், பிரம்மதாளம், நகார், கண்டாமணி, நாதசுரம் முதலிய கருவிகளைக் கொண்டு உரத்த சத்தமிட்டு இறைவனை வழிபடுவதை வெறுத்தார்.

> மனநெகிழ்ச்சியோடு ஆண்டவனுடைய தோத்திரங்களை
> அமைதியாக அன்போடு பாடுவதுதான் சன்மார்க்கத்தின்
> முக்கிய இலட்சியத்திற்கு முற்றிலும் உடன்பாடானது (ப.209)

எனத் தம்முடைய அடியவர்களுக்கு எடுத்துரைத்தார். இறை வழிபாட்டின் போது தேங்காய் உடைப்பதையும் வெறுத்தார். சத்திய ஞானசபை அமைத்து அதில் சன்மார்க்க முறைப்படி வழிபாடு தொடங்கிய பின்பும் தம்முடைய சித்தி வளாகத்திலேயே வள்ளலார் தங்கியிருந்தார். இதில் உருவ வழிபாட்டிலிருந்து வேறுபட்ட ஒளி வழிபாட்டு முறையை ஏற்படுத்தினார். இவ்வழிபாட்டில் அனைவரும் வேறுபாடின்றி இறைவனை வழிபடும் வகையில் சன்மார்க்க விண்ணப்பங்கள் எனும் புதிய பெயரில் நான்கு விண்ணப்பங்களை வெளியிட்டார். அவை:

1. சுத்த சன்மார்க்க சத்தியச் சிறு விண்ணப்பம்

2. சமரச சுத்த சன்மார்க்க சத்தியப் பெருவிண்ணப்பம்

3. சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான விண்ணப்பம்

4. சமரச சுத்த சன்மார்க்க சங்க சத்திய விண்ணப்பம்

என்பனவாகும். இந்த விண்ணப்பங்களிலே சன்மார்க்க அடியவர்கள் இறைவனை நோக்கி வழிபடும்போது,

தனித் தலைமைப் பெரும்பதியாகிய பெருங்கருணைக் கடவுளே!

கருணாநிதியாகிய கடவுளே!

களைப்பறிந்துதவும் கருணைக் கடலாகிய கடவுளே!

சர்வ வல்லபராகிய தனித் தலைமைக் கடவுளே!

எல்லாமாகிய தனிப்பெருந் தலைமை அருட்பெருஞ்சோதி ஆண்டவரே!

இயற்கை யுண்மைக் கடவுளே!

இயற்கை இன்பக் கடவுளே!

போன்ற பல்வேறு சமரச உணர்வை உணர்த்தும் பெயர்களால் இறைவனை வழிபடத் தூண்டினார்.

திருவருட்பா

இராமலிங்கர் சென்னைக் கந்தகோட்டத்தில் இறைவனைப் புகழ்ந்து பாடிய பாடல்களைக் கோயிலைச் சார்ந்த ஒருவர் குறித்து வைத்திருந்தார். பின்னர் அப்பாடல்களை ஒன்று திரட்டி ஒரு நூலாக வெளியிட்டார். அதுவே வள்ளலாரின் பாடல்கள் அடங்கிய முதல் நூலாகும்.

தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்கள் அடிகளாரின் பாடல்கள் அனைத்தையும் சேகரித்து ஆறு திருமுறைகளாக வகுத்தார். ஆனால் ஆறாவது திருமுறையை நூலாக வெளியிடக்கூடாதென வள்ளலார் கண்டிப்புடன் கூறினார். ஆறாம் திருமுறையிலுள்ள கருத்துக்கள் மக்களிடம் செல்ல வேண்டாம் என்பது அடிகளாரின் விருப்பம். 1867 ஆம் ஆண்டில் முதல் நான்கு திருமுறைகள் வெளியாயின. அந்நூலில் அடிகளாரின் பெயருக்கு முன்னால் 'திருவருட் பிரகாச வள்ளலார்' எனக் குறிக்கப்பட்டிருந்தது. அதைப் பார்த்த வள்ளலார் அந்நூலைப் பதிப்பித்த தொழுவூர் வேலாயுத முதலியார் மீது கோபம் கொண்டு,

> பின் எங்கானும் திருவருட் பிரகாச வள்ளலார் என்று
> உம்மை யார் போடச் சொன்னது? (ப.222)

எனக் கோபத்துடன் வினவினார். உடனே முதலியார் மௌனமானார். ஐந்து நிமிடங்கள் கழித்து,

> திருவருட் பிரகாச வள்ளல் (பதி) ஆர் என்னும் சிதம்பரம்
> இராமலிங்கம் பிள்ளை (ப.223)

என வள்ளலார் அதற்குப் பொருள் கூறினார். தமது சீடர் தமக்குச் சூட்டிய பட்டப்பெயரைத் தம் தெய்வத்திற்குச் சூட்டினார் இராமலிங்கர். அடிகளார் 1874 இல் மறைந்த பின்னர்த் திருவருட்பாவின் ஐந்தாம் திருமுறை 1880 ஆம் ஆண்டில் முதலியாரால் வெளியிடப் பட்டது. ஆறாம் திருமுறை 1885 ஆம் ஆண்டில் சமரச சுத்த சன்மார்க்க அன்பர்களால் வெளியிடப்பட்டது.

அருட்பாவிற்கு மறுப்பு

இராமலிங்கரின் பாடல்களுக்குச் சூட்டப்பட்ட திருவருட்பா எனும் பெயரை வைதிகச் சைவர்கள் வெறுத்தனர். இச்சூழலில் ஆறுமுக நாவலர் தமிழகத்திற்கு வருகை புரிந்தார். இராமலிங்கரும், ஆறுமுக நாவலரும் சிதம்பரத்திற்கு ஒரே நேரத்தில் வருகை புரிந்தனர். அங்கு நடந்த கூட்டத்தில் இராமலிங்கர் தம்முடைய சமரச சுத்த சன்மார்க்கக் கொள்கைகளை விவரித்துப் பேசினார். இவரை வெறுக்கும் வைதிகர்கள் ஆறுமுக நாவலரைக் கொண்டு போட்டிக் கூட்டம் நடத்திச் சன்மார்க்க இயக்கத்தை வெறுத்துப் பேசுமாறு செய்தனர். இவ்வாறு பல போட்டிக் கூட்டங்கள் நடந்தன. இச்சூழலில் ஆறுமுக நாவலர் கடலூர் மஞ்சக்குப்பம் நீதிமன்றத்தில் வள்ளலார் தம்மை அவமதித்தார் என வழக்குத் தொடர்ந்தார். இந்த வழக்கின் போது நடந்த நிகழ்ச்சி பற்றிய கர்ண பரம்பரைச் செய்தி பின்வருமாறு:

வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நாளன்று நீதிமன்றத்தில் இரண்டு கட்சிக்காரர்களும் திரளாகக் கூடியிருந்தனர். சுவாமிகள் வரப்போவதை எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். திடீரென்று ஜனங்களிடையே ஒரு பரபரப்பு ஏற்பட்டது. இடுப்பில் முழங்காலுக்கு மேலே வெள்ளாடை தரித்து, மேலேயும் அதே ஆடை போர்த்துக் கொண்டிருந்த உருவம் நீதிமன்றத்தை நோக்கி வந்தது. நடுத்தர உயரம், மெலிந்த சரீரம், நிமிர்ந்த தேகம், தெளிந்த மாநிற மேனி, நீண்ட மெல்லிய நாசி, பொறிபரக்கும் கண்கள், விசனக் குறி தோன்றிய முகம், இத்தகைய தோற்றத்தோடு இராமலிங்க சுவாமிகள் நீதிமன்றத்திற்குள் பிரவேசித்தார். அவரைக் கண்டதும் எல்லோரும் எழுந்து நின்றார்கள்!

இதைக் கவனித்த நீதிபதி ஆச்சரியமடைந்தார்.

> வழக்குத் தொடுத்த நீங்களே எழுந்தீர்களே

என்று கேட்டார்.

> அவர் பெரியவர் என்ற முறையில் எழுந்து நின்றேன்

என்று நாவலர் பதிலளித்தாராம் (பக். 238-239).

ஆறுமுக நாவலர் கொள்கை ரீதியாக வள்ளலாரை வெறுத்தாலும் தனிப்பட்ட முறையில் வள்ளலாரை மனதார நேசித்தார்.

அருட்பா தொடர்பாக இரு தரப்பினருக்கும் இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து வாதப் போர் நடைபெற்றது. நாவலர் தரப்பினர் "போலி அருட்பா மறுப்பு" எனும் பிரசுரத்தை வெளியிட்டனர். அதற்கு வள்ளலார் தரப்பினர் "குதர்க்காரணிய நாச மகாபரசு" எனும் பிரசுரத்தை வெளியிட்டனர். அதற்கு எதிராக நாவலர் தரப்பினர் "குதர்க்காரணிய நாச மகாபரசு கண்டனம்" எனும் பிரசுரத்தை வெளியிட்டனர். வள்ளலார் தரப்பினர் "திருவருட்பா தூஷணைப் பரிகாரம்" எனும் நூலை வெளியிட்டனர். இத்தகைய விவாதப் போரினால் வள்ளலார் மனம் வருந்தினார்.

சித்திவளாகப் போதனை

வள்ளலார் வடலூரிலிருந்து இரண்டு கல் தொலைவிலுள்ள மேட்டுக் குப்பம் எனும் பகுதியிலுள்ள சித்திவளாகம் என்று பெயரிடப்பட்ட குடிசையில் வசித்து வந்தார். அந்தச் சித்தி வளாகத்தில் புனிதத்தன்மை உடைய திருவிளக்கை ஏற்றி வைத்தார். அந்த விளக்கொளியைத் தனித்திருந்தும், அடியவர்களுடன் சேர்ந்திருந்தும் வழிபட்டு வந்தார். மனிதன் முடிவில்லாத வாழ்வைப்பெற பசித்திரு, தனித்திரு, விழித்திரு எனும் மூன்று மந்திரங்களைப் போதித்தார் வள்ளலார். விழித்திருப்பது பற்றி,

> தூக்கத்தை ஒழித்தால் ஆயுசு விர்த்தியாகும். ஒருவன் ஒரு நாளைக்கு இரண்டரை நாளிகைக்குத் தூங்கப் பழகினால் அவன் ஆயிரமாண்டுகள் ஜீவித்திருப்பான். எப்போதும் ஆசானுடைய திருவடியை ஞாபகஞ்செய்து கொண்டிருப்பதே சாகாத கல்விக்கு ஏதுவாம் (ப. 314)

எனக் கூறியுள்ளார்.

சித்தர்

இராமலிங்கர் சித்த மார்க்கத்தில் நம்பிக்கை உடையவராகக் காணப்பட்டார்.தமது இளமைப் பருவத்திலேயே நூற்றுக்கணக்கான சித்தர் பாடல்களை மனனம் செய்து வைத்திருந்தார். இவர் இரும்பைப் பொன்னாக மாற்றும் வழிமுறையைத் தெரிந்திருந்தும் அதனைப் பயன்படுத்தவில்லை. வள்ளலாரின் தலைமாணவரான தொழுவூர் வேலாயுத முதலியார் அடிகளாரிடம் காணப்பட்ட சித்து விளையாட்டைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்:

> இவருக்கு மாமிசம் உண்பவர்களை மாற்றும் அற்புத சித்து இருந்ததென்பது அநேகருக்குக் கண்கூடு. இவர் பிறருடைய மனத்தில் நிகழுபவைகளைப் பார்க்க வல்லவர். இவர் அடிக்கடி தம் சீடர்கள் அறியாவண்ணம் மறைந்திருப்பதுண்டு. இவர் எங்கு சென்றாரென்பதை அறிவோர் எவருமிலர். இப்படி வெகுநாள் மறைந்திருப்பார். (ப.331)

வள்ளலார் அற்புதங்கள் புரியும் சித்தராக இருந்தும், அவற்றை மக்களிடையே செய்து காட்டிப் புகழ்பெற விரும்பவில்லை. மேலும் அவர் இறந்தவர்களை உயிருடன் எழுப்பும் சக்தியைத் தாம் பெற்றுள்ளதாகப் பல பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளார். ஆனால் இறந்தவர்களை உயிருடன் எழுப்பித் தருவதாக எந்தப் பாடலிலும் குறிப்பிடவில்லை.

தமிழ்ப்பற்று

வள்ளலார் இறைவனுக்கு அடுத்தபடியாகத் தமிழின் மீது பற்று வைத்திருந்தார். எனினும் சமஸ்கிருத மொழியிலும் நல்ல புலமை உடையவராகக் காணப்பட்டார். சில நூறு தத்துவப் பாடல்களைத் தவிர மீதமுள்ள ஆயிரக்கணக்கான பாடல்களை வடமொழிச் சொற்கள் அதிகமாகக் கலவாத தூய தமிழிலேயே பாடியுள்ளார். சான்றாக,

> கோடையிலே இளைப்பாறிக் கொள்ளும்வகை கிடைத்த
> குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
> ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரே
> உகந்ததண்ணீ ரிடைமலர்ந்த சுகந்தமண மலரே
> மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே
> மென்காற்றில் விளைசுகமே சுகத்தில் உறும்பயனே
> ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
> ஆடுகின்ற அரசேஎன் அலங்கல்அணிந் தருளே
> (பக். 373-374)

எனும் பாடலைச் சுட்டலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டில் இசைத் தமிழ் வளர்த்த பெரியோர்களுள் வள்ளலார் குறிப்பிடத்தக்கவர். ஆனால் இறைவழிபாட்டின்போது இசைக்கருவிகள் இசைப்பதை அவர் விரும்பவில்லை. *1851* ஆம் ஆண்டில் "ஒழிவிலொடுக்கம்" என்ற நூலை அதன் பாயிரப் பாடலுக்குத் தான் எழுதிய உரையுடன் வெளியிட்டார். இராமலிங்கர் இயற்றிய முதல் உரைநடைநூல் மனுமுறை கண்ட வாசகம் என்பதாகும். இந்நூல் *1854* ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இந்நூலில் இவருடைய நடை அனைவரும் எளிதில் படிக்கும் முறையில் எளிதாகக் காணப்பட்டது. சான்றாக, மனுநீதிச் சோழன், தன் மகன் வீதிவிடங்கன் பசுவின் கன்றைத் தேர்க்காலில் கொன்றான் எனும் செய்தியைக் கேள்விப்பட்டு மனவேதனையால் பின்வருமாறு கூறுகிறான்:

> நாம் அரசாட்சி செய்ய ஏற்பட்ட நாள் தொட்டு இந்நாள் வரையிலும் எவ்வுயிரும் எவ்விதத்திலும் யாதொரு குறையுமில்லாமல் வாழ்ந்து மகிழ்ந்திருக்க, நீதியுடன் முறை தவறாது செங்கோல் செலுத்தி வரும்படி சிவாநுக்கிரகம் பெற்றோமே என்பது பற்றி ஒரு நாழிகைக்கு முன் வரையிலும் உண்டாயிருந்த மனக்களிப்பை யெல்லாம் மண்ணிற் கவிழ்த்தேனே!
>
> நாமும் பழி பாவங்களுக்குப் பயந்தே அறநெறி தவறாது அரசு செலுத்தி வருகிறோம், பழைய தரித்திரனுக்குப் பணம் கிடைத்ததுபோல் நமக்கும் சிவாநுக்கிரகத்தால் ஒரு சிறுவன் பிறந்தான். அவனும் கற்றவர் மகிழக் கல்வி கேள்விகளில் நிறைந்து பண்பும் பருவமும் உடையவனானான்; இனி நமக்கென்ன குறை என்று எண்ணி எண்ணி இறுமாப்படைந்தேனே! புத்திரப் பேறு பெற்றுப் புனிதனானோம் என்று பூரித்திருந்தேனே! நமது புத்திரன் இளவரசுப் பட்டத்திற் கேற்ற வனானான், இனி கல்யாணஞ் செய்விப்போம் என்று கனவு கண்டிருந்தேனே! நமது புத்திரன் நற்குணங் களையுடையவனாக விருக்கிறான்; பெற்றெடுத்த நமது பேர் கொண்டு வருவான் என்று மனோராச்சியம் பண்ணி மகிழ்ந்திருந்தேனே! இளங்கன்று எதிர் வரவுங் கண் கெட்டுக் கருத்தழிந்தவன் போல் தேரை நடத்தித் தீராப் பழி பூண்டான்.
>
> ஐயோ! இவன் என் செங்கோலைப் பிடிக்கத்தக்க செல்லப் பிள்ளையாகாமல் தென்னம்பிள்ளையானானே! ஆ! நான் நீதி தவறாது அரசு செய்கிறேன் என்பதை நினைத்தால் எனக்கே ஏளனமாக இருக்கின்றதே! சங்கன்றைத் தெருவிற் சிதைக்கவும் ஒருமித்திருந்த என் செங்கோலை அளவுகோ லென்பேனோ!

> எழுதுகோலென்பேனோ, ஏற்றக்கோலென்பேனோ, கத்தரிக்கோ லென்பேனோ! கன்னக்கோ லென்பேனோ! குருடன்கோ லென்பேனோ! கொடுங்கோ லென்பேனோ! துடைப்பக்கோ லென்பேனோ! துலாக்கோலென்பேனோ! துலாக்கோ லென்பேனோ! அல்லது இன்று இறந்த பசுங்கன்றாகிய பிரேதத்தைப் புரட்டிச் சுடுகின்ற பிணக்கோ லென்பேனோ! என்ன கோலென்று எண்ணுவேன்!
>
> (பக். 376-377)

இப்பகுதி வள்ளலாரின் உரைநடைக்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டாக அமைகின்றது. மேலும் இவர் எழுதிய ஜீவகாருண்ய ஒழுக்கம், சன்மார்க்க விண்ணப்பங்கள் ஆகியன இவரது உரைநடைச் சிறப்பிற்கு எடுத்துக்காட்டுகளாக அமைகின்றன. வள்ளலாரின் தமிழ்ப் புலமையைக் கண்டு மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் வியந்து பாராட்டியுள்ளார்கள்.

ஆன்மநேய ஒருமைப்பாடு

வள்ளலாரின் குறிக்கோள்களுள் மிகச்சிறந்த குறிக்கோள் ஆன்மநேய ஒருமைப்பாடு என்பதாகும். இவரது ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமையானது பேதங்கள் இல்லாத சித்தாந்தமாகும். உலகத்தில் காணப்படும் அனைத்து மதங்களையும் இராமலிங்கர் வெறுத்தார். ஆனால் அம்மதங்களிலுள்ள மனிதர்களிடம் ஒருமைப்பாடு காண்பதற்காக விரும்பினார். மதங்கள் இல்லாத மனித சமுதாய ஒருமைப்பாட்டைக் காண்பதற்காக வள்ளலார் பாடுபட்டார். அனைத்து உயிர்களிடமும் இறைவன் இருக்கின்றார் எனும் உண்மையை உணராதவர்கள், தன்னிடத்திலும் இறைவன் இருக்கிறார் எனும் தன்மையை உணர ஆற்றல் இல்லாதவர்கள் என்பது வள்ளலாரின் கருத்தாகும். இக்கருத்தைத் தன்னுடைய ஜீவகாருண்யம் எனும் நூலில்,

> ஜீவகாருண்யம் ஆன்மாக்களின் இயற்கை விளக்கம். ஆதலால், அந்த இயற்கை விளக்கமில்லாத ஜீவர்களுக்குக் கடவுள் விளக்கம் அகத்திலும் புறத்திலும் வெளிப்படவே மாட்டாது (ப.390)

எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஜீவகாருண்ய ஒழுக்கம்

திருவள்ளுவருக்குப் பின்னர்ப் புலால் உணவு உண்பதை வன்மையாகக் கண்டித்தவர் வள்ளலார் ஆவார்.

துண்ணெனக் கொடியோர் பிறவுயிர் கொல்லத்
தொடங்கிய போதெல்லாம் பயந்தேன்
கண்ணினால் ஐயோ பிறஉயிர் பதைக்க
கண்டகா லத்திலும் பதைத்தேன்
மண்ணினில் வலையும் தூண்டிலும் கண்ணி
வகைகளும் கண்டபோ தெல்லாம்
எண்ணிஎன் உள்ளம் நடுங்கி நடுக்கம்
எந்தைநின் திருவுளம் அறியும் (ப.417)

எனும் பாடலின் வாயிலாகப் புலால் உணவு உண்பதைக் கண்டிக்கிறார். மேலும், வள்ளலார் தெய்வங்களுக்கு உயிர்ப்பலி கொடுப்பதையும் வெறுத்தார். தன்னுடைய சீடர்களுக்கு ஜீவகாருண்யம் குறித்து ஒரு கதை மூலம் விளக்கம் கூறினார். அக்கதை பின்வருமாறு:

> அன்பர்களே! இரு முதியவர்கள் ஒரு வீதி வழியே சென்று கொண்டிருந்தனர். அப்பொழுது அவருள் ஒருவசின் கால்பட்டு வீதியிற் கிடந்த ஒரு மண்கட்டி உடைந்து போனது. அதைக் கண்ட மற்றவர் மூர்ச்சையானார். மூர்ச்சை யடைந்த அவருக்கு உபசாரங்கள் செய்து மூர்ச்சையைத் தெளிவித்து முன்னையவர், 'தாங்கள் மூர்ச்சையுற்றதற்குக் காரணம் என்ன? என வினவ, அதற்கு அம்முதியவர் 'உம்முடைய காலினால் அவ்வழகிய மண் கட்டி உடைந்து உருக்குலைந்து போனதே காரணம்' எனக் கூறினார். (ப.424)

இக்கதையின் மூலம் ஜீவகாருண்யம் என்பது மக்களிடத்தும் மாக்களிடத்தும் மட்டுமின்றி அதையும் கடந்து செல்கிறது என்பது வள்ளலாரின் கருத்தாகும்.

முடிவு

வள்ளலாரின் சமய, சமுதாயக் கொள்கைகளை அவரைச் சுற்றி இருந்தவர்களாலேயே முறையாகப் பின்பற்றப்படவில்லை என்பது குறித்து அவர் வருத்தம் கொண்டார். பின்னர் மிகுந்த மன வேதனையுடன் சத்தியஞான சபையைப் பூட்டி விட்டார். ஐம்பது ஆண்டுகள் வாழ்ந்து, உலக ஒருமைப்பாடு காண உழைத்து அதனால் கிடைத்த அனுபவத்தின் மூலம் தமிழ் மக்களின் குறைபாட்டினைப் புரிந்து கொண்டார். அதனால், உலக மக்களின் பார்வையிலிருந்து மறைந்துவிடத் திட்டமிட்டார். வள்ளலார் தாம் மறைவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் இருந்தே தான் மறைவதற்குத் தக்கவாறு தமது உடலைப் பக்குவப்படுத்தத் தொடங்கினார். தன்னுடைய பிரிவைத் தமது சீடர்களுக்கும் விவரித்துப் பல உபதேசங்களைப் பல நாட்களாகச் செய்தார். இறுதியில் அங்கிருந்த சீடர்களுக்கு ஆசீர்வாதம் வழங்கி,

> நான் உள்ளே பத்துப் பதினைந்து தினம் இருக்கப் போகிறேன். பார்த்து அவநம்பிக்கை அடையாதீர்கள். ஒருக்கால் பார்க்க நேர்ந்து பார்த்தால் யாருக்கும் தோன்றாது, வெறும் வீடாகத் தானிருக்கும்படி ஆண்டவர் செய்விப்பார் (ப.448)

எனக் கூறிவிட்டுச் சித்தி வளாகத்திலுள்ள ஒரு அறையினுள் சென்றார்; கதவு மூடப்பட்டது. 1874 ஆம் ஆண்டு சனவரி மாதம் 30 ஆம் நாள் வெள்ளிக் கிழமை நள்ளிரவு 12 மணிக்கு உயிருள்ள வள்ளலாரின் உடல் மறைந்தது. வள்ளலார் கடைசியாகப் பாடியதாக நம்பப்படும் பாடல் பின்வருமாறு:

> பிச்சுலகர் மெச்சப் பிதற்றிநின்ற பேதையனேன்
> இச்சைஎலாம் எய்த இசைந்தருளிச் செய்தனையே
> அச்சம்எலாம் தீர்ந்தேன் அருளமுதம் உண்கின்றேன்
> நிச்சலும்பே ரானந்த நித்திரைசெய் கின்றேனே (ப.449)

வள்ளலார் மதங்களை வெறுத்தாலும் அம்மதங்களின் கொள்கைகளை வெறுக்கவில்லை. அனைத்து மக்களையும் நல்வழியில் கொண்டுவர வள்ளலார் எடுத்துக் கொண்ட முயற்சிகள் மிகுதி.

நூலின் சிறப்பு

1966 ஆம் ஆண்டிற்கான இந்திய அரசின் சாகித்ய அகாதெமி பரிசினை "வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு" நூல் பெற்றுள்ளமை நூலின் சிறப்பினையும் ம.பொ.சி. யின் உழைப்பினையும் எடுத்துக்காட்டுகின்றன. குடியரசுத் தலைவர் டாக்டர் இராதா கிருஷ்ணன் இந்நூலுக்குப் பரிசு வழங்கிப் பேசியபோது 'என்னைக் கவர்ந்த நூல்' என்று பாராட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நூல் பல பதிப்புகளைக் கண்டுள்ளது நூலின் சிறப்பிற்கு மற்றுமொரு சான்றாகும். நான்காம் பதிப்பாகப் பூங்கொடி பதிப்பகத்தின் மூலம் டிசம்பர் 2001 இல் 528 பக்கங்களுடன் வெளிவந்தது. வள்ளலாரைப் பற்றி மாணவர்களும் அறிந்து கொள்ள வேண்டும் எனும் சீரிய நோக்குடன், 1978 ஆம் ஆண்டு வள்ளலாரின் ஒருமைப்பாடு எனும் இந்நூல் பள்ளிப் பதிப்பாக வெளிவந்தது. ம.பொ.சி. 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' எனும் நூல் எழுதுவதற்கான காரணத்தை,

> தெய்வப்பற்று-தேசப்பற்றுக்களின் அடிப்படையில் வள்ளலாரின் சீர்திருத்தக் கருத்துக்கள் நாட்டில் பரப்பப்பட வேண்டுமென்று என் உள்ளம் கருதியது. சாதி வெறி - மதவெறி களிலிருந்து மனித சமுதாயத்தை விடுவிப்பதற்காக, சாதித் துவேஷம் - மதத் துவேஷம் - தெய்வத் துவேஷங்களுக்குப் புறம்பான ஒரு சீர்திருத்த இயக்கம் தோன்றுவதற்கான

> சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்றும் எண்ணினேன். அதற்கான துவக்கப் பணியாக வள்ளலாரின் பாடல் களிலுள்ள சீர்திருத்தக் கருத்துக்களை, அவருடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளோடு ஒப்புநோக்கி ஆராய்ந்து ஒரு நூல் எழுத வேண்டுமென்று முடிவு செய்தேன் (ப.4)

எனக் குறிப்பிடுகின்றார். வள்ளலாரைக் குறித்தும் நூலின் தலைப்பைக் குறித்தும் ம.பொ.சி.,

> வள்ளலார், பாரத தேசிய ஒருமைப்பாட்டை அடித்தளமாக வைத்து, அதன்மேல் மனித சமுதாய ஒருமைப்பாடு என்ற கட்டிடத்தை எழுப்பி, அதன்மேல் உயிர்க் குலத்தின் ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் 'ஆன்மநேய ஒருமைப் பாடு' என்னும் சமரச சுத்த சன்மார்க்கக் கொடியைப் பறக்க விட்டுள்ளார். இப்படி, மூன்று வகையான ஒருமைப் பாட்டினை அடிகளார் வலியுறுத்தியமையால், இந்த நூலுக்கு "வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு" எனும் பெயரைத் தந்துள்ளேன் (ப. 8)

என விளக்கம் தருகிறார். வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு எனும் நூலைக்குறித்துப் பெ.சு. மணி கீழ்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

> வள்ளலாரின் சமூகச் சீர்திருத்தக் கொள்கைகளோடு, அவருடைய சமயம் கடந்த சுத்த சமரச சன்மார்க்க ஆன்மிகநெறிக் கொள்கைகளையும் ம.பொ.சி. தமது நூலில் விளக்கியுள்ளார். 'மரணமிலாப் பெருவாழ்வு', 'ஆன்மநேய ஒருமைப்பாடு', 'ஜீவகாருண்ய ஒழுக்கம்' முதலான அதிகாரங்களில் வள்ளலாரின் ஆன்மிகக் கோட்பாடுகளை ஆய்வு செய்துள்ளார். ம.பொ.சி. இவற்றுடன் வள்ளலாருடைய வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள் இணைந்து- இழைந்து சென்றுள்ளன.
>
> (பெ.சு. மணி, ம.பொ. சிவஞானம், ப.148)

இராமலிங்க வள்ளலாரைப் பலரும் ஒரு மதவாதியாகவே பார்த்தனர். ஆனால் ம.பொ.சி. தமது நூலின் மூலம் வள்ளலாரை ஒரு சமுதாயவாதியாகக் காண்கிறார்.

சமுதாயத்திலுள்ள மூடத்தனங்களை அகற்றி, சாதி சமயப் பேதங்களை நீக்கி, பொருளாதாரச் சமத்துவத்தை ஏற்படுத்தி, ஆன்மாக்கள் ஒன்றுபட்டு இயற்கை உணர்வில் திளைக்கும் ஆன்மீகமே வள்ளலார் காட்டிய நெறியாகும். அத்தகு நெறிமீது ம.பொ.சி. கொண்ட உள்ளார்ந்த ஈடுபாடே அவரை வள்ளலாரிடம் ஆற்றுப்படுத்தியது என்பதை உணரமுடிகிறது.

சிங்காரவேலர்

தோழர் சிங்காரவேலரின் 125 ஆம் ஆண்டுவிழா 1984 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10ஆம் நாள் சென்னை இராயபுரத்தில் நடைபெற்றது. தோழர் சிங்காரவேலர் பேரவையின் சார்பில் நடைபெற்ற அந்நினைவு நாள் கூட்டத்தில் ம.பொ.சி. அவர்கள் ஒரு மணி நேரம் உரையாற்றினார். அவ்வுரையை விரிவுபடுத்திச் செங்கோல் எனும் வார இதழில் தொடர் கட்டுரை எழுதினார். அத்தொடர் கட்டுரையே "தோழர் சிங்காரவேலரின் வீர வாழ்க்கை" எனும் நூலாக மலர்ந்துள்ளது.

பிறப்பு

சிங்காரவேலர், 1860 ஆம் ஆண்டு பிப்ரவரி 18 ஆம் நாள் சென்னைக் கடற்கரைச் சாலையிலுள்ள அன்றைய மயிலாப்பூரிலுள்ள மீனவர்கள் வாழும் குப்பத்தில் பிறந்தார்.

ம.வெ.சி. - ம.பொ.சி.

ம.பொ.சி. க்கு வழிகாட்டியாக இருந்தவர் ம.வெ.சி. (சிங்காரவேலர்) அவர்களாவார். மயிலாப்பூர் வெங்கடாசலம் மகன் சிங்காரவேலர் என்பதால் அவரை ம.வெ.சி. எனக் குறிப்பிடுவர். அதைப் போன்று மயிலாப்பூர் பொன்னுச்சாமியின் மகன் சிவஞானம் என்பதால் ம.பொ.சி. என இவரைக் குறிப்பிடுவர். இருவருடைய பெயரின் சுருக்கங்களிலும் ஒலி வடிவில் ஒற்றுமை இருப்பதாக ம.பொ.சி. குறிப்பிட்டுள்ளார். இருவரும் மயிலாப்பூரைச் சார்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மூத்த தேசியத் தலைவர்

தமிழகம் பல தேசியத் தலைவர்களை உருவாக்கியிருக்கிறது. அவ்வகையில் வயதிலும் அனுபவத்திலும் சிங்காரவேலர் மூத்தவராவார். இவர் பல்வேறு இயக்கங்களுடன் தொடர்பு கொண்டவர். முதன் முதலாகத் தோன்றிய இயக்கம் நாட்டு விடுதலைக்கான தேசிய இயக்கம் ஆகும். அதற்குப் பின்னர்த் தொழிற்சங்க இயக்கம் தோன்றியது. இவை இரண்டையும் மையமாகக் கொண்டு தோன்றியது வர்க்கப் புரட்சி இயக்கம் என்பதாகும். அதன் பின்னர்ச்

சுயராஜ்யம் தோன்றியது. சிங்காரவேலர் இந்த நான்கு இயக்கங்களிலும் தொடர்பு உடையவராக விளங்கினார். டில்லியிலுள்ள "இந்தியா பப்ளிஷிங் ஹவுஸ்" வெளியிட்டுள்ள ஆங்கில நூலில் 'தென்னிந்தியாவில் சிங்காரவேலர்தான் முதல் கம்யூனிஸ்டு' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மே மாதம் முதலாம் தேதி கொண்டாடப்பட்டுவரும் தொழிலாளர்கள் தினத்தை 1923 ஆம் ஆண்டு சென்னையில் வைத்துத் தொடங்கிவைத்த பெருமை சிங்கார வேலருக்குரியது.

பன்மொழி அறிஞர்

சிங்காரவேலர் தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை பெற்ற ஒரு சிறந்த வழக்கறிஞராகத் திகழ்ந்தார். தமிழிலும் ஆங்கிலத்திலும் அரசியல், வர்க்கப் பிரச்சினைகள், ஆன்மீக உண்மைகள், கலை ஆகியவற்றைப் பற்றிப் பேசினார். மேலும் இந்தி, பிரெஞ்சு ஆகிய மொழிகளிலும் பேசும் திறமை உடையவராக விளங்கினார். தமது சுயமுயற்சியின் மூலம் அறிவை வளர்த்துக் கொண்ட அவரைப் பேரறிஞர் எனச் சொல்லலாம். இத்தகைய சிறப்புகளை உடைய அவர் தாம் வாழ்ந்த எண்பத்தேழு ஆண்டுகளும் மீனவக் குப்பத்திலே ஏழை மீனவர்களுக்கு மத்தியில் வாழ்ந்து சரித்திரம் படைத்தார் என்பது மறுக்க முடியாத உண்மை.

முன்னோடி சிங்காரவேலர்

சிங்காரவேலர் பழமையை எதிர்க்காதவர். எதேச்சதிகார ஆட்சியை விரும்பாதவர். எல்லாரும் எல்லாம் பெறவேண்டும் எனும் பொதுவுடைமைச் சித்தாந்தம் கொண்டவர். பலருக்கு முன்னோடியாகவும், முன்மாதிரியாகவும் விளங்கினார். புரட்சிகள் நிறைந்த சமுதாயம் உருவாக வேண்டும் என்று விரும்பியவர். இவர், மக்கள் தங்கள் தாய் மொழியில் கற்க வேண்டும் என்றும், அறிவு சார்ந்த நூல்கள் எல்லாம் தமிழ் மொழியிலேயே வெளிவர வேண்டும் என்றும் ஆர்வம் கொண்டவர். சிங்காரவேலர் காங்கிரசில் இருந்தபோது தேசத்தின் விடுதலைக்காகப் போராடுகின்ற வீரர்களைச் சமூக விடுதலைக்காகப் பாடுபடவும் வலியுறுத்தினார். இவர் நாட்டு விடுதலை, சமூக விடுதலை, தொழிலாளர் வர்க்க எழுச்சி ஆகியவற்றுக்கிடையில் தொடர்பை ஏற்படுத்த வேண்டும் எனும் எண்ணம் உடையவர். கல்வி கற்றவர்களிடம் காணப்படும் பெருமை சிங்காரவேலரிடம் சிறிதளவும் இருந்ததில்லை. சிங்காரவேலர் பட்டங்கள் பல பெற்றாலும் தான் பிறந்த மீனவக் குப்பத்தை மறக்கவில்லை. தன்னுடைய உயர்விலும் தாழ்விலும் இறுதிவரை மீனவக் குப்பத்திலேயே வாழ்ந்தார்.

பல்வகைத் திறமை படைத்தவர்

சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் பல்வகைத் திறமைகளை ஒருங்கே பெற்றவராகத் திகழ்ந்தார். மீனவக் குடும்பத்தில் வசதி இல்லாத சூழலில் பிறந்த போதும் இளங்கலைப் பட்டத்தைப் பெற்றார். அதன் பின்னர்ச் சட்டம் படித்துப் பட்டம் பெற்றுச் சிறந்த வழக்கறிஞரானார். ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் தெளிவான புலமை பெற்றவராகக் காணப்பட்டார்.

ஏழ்மை நிலையில் இருந்த போதும் படித்து இரண்டு பட்டங்களை இவர் பெற்றது, இவரது உழைப்பின் உயர்வைக் காட்டுவதாக விளங்குகிறது. சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்ட தேசியத் தலைவர்களில் முதலிடம் பெற்றவர். கம்யூனிசத்தில் தீவிர ஈடுபாடு உடையவர். அதன் காரணமாகச் சோவியத் நாட்டைப் படைத்த லெனினுக்கும் அறிமுகமான சிறப்புக்குரியவர்.

நூலறிவு

சிங்காரவேலர் ஓய்வு நேரங்களிலெல்லாம் படித்துக் கொண்டே இருப்பார். அவர் படித்த நூல்களுள் பெரும்பாலானவை ஐரோப்பிய அறிஞர்களால் எழுதப்பட்ட அறிவியல் நூல்களேயாகும். தன்னுடைய வீட்டையே நூலகமாக மாற்றிய சிறப்பு இவருக்கு உண்டு. இவர் தன்னுடைய வாழ்வில் இந்து மதம் தொடர்பான நூல்களைப் படிக்க ஆர்வம் காட்டவில்லை. ஆனால் புத்த சமயத்தில் சிறிது ஈடுபாடு காணப்பட்டது. இவர் சமத்துவம், பொதுவுடைமை எனும் இவற்றை ஆதாரமாகக் கொண்ட நூல்களைப் படிப்பதில் ஆர்வம் உடையவராகக் காணப்பட்டார்.

சதி வழக்கில் சிங்காரவேலர்

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட தீவிரவாத தேச பக்தர்களைப் பல்வேறு சதி வழக்குகளில் குற்றவாளிகளாக்கினர். அவ்வகையில் சிங்காரவேலரும் கான்பூர் சதிவழக்கில் குற்ற வாளியாகச் சேர்க்கப்பட்டார். ஆனால், அந்த வழக்குத் தொடர்ந்த நேரத்தில் அவர் உடல்நலமின்றி வீட்டில் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே அவர் கைது செய்யப்பட்டு வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார். பின்னர்ச் சிறிது நாட்களில் சிங்காரவேலர் மீது தொடரப்பட்ட வழக்கினை அரசு திரும்பப் பெற்றுக் கொண்டது. இதனால் கடுமையான சிறைத் தண்டனையிலிருந்து தப்பினார். எனினும் அவர் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து விலகவில்லை.

கம்யூனிஸ்டு கட்சி மாநாட்டின் தலைவர்

1925 இல் கான்பூரில் வைத்துக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாடு நடைபெற்றது. அப்போது பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த இந்தியரான சக்லத்வாலா என்பவர் உறுப்பினராக இருந்தார். அவர் இம்மாநாட்டிற்குத் தலைமை தாங்குவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். ஆனால் அவரால் வர இயலவில்லை. ஆதலால் தோழர் சிங்காரவேலர் கான்பூர் மாநாட்டைத் தலைமை யேற்று நடத்தினார். இந்தியக் கம்யூனிஸ்டுகளின் முதல் மாநாட்டிற்குத் தலைமை வகித்த பெருமை சிங்காரவேலர்க்கு உரியதானது.

தென்னிந்திய இரயில்வே சதிவழக்கு

நாகபட்டினத்தில் 1928ஆம் ஆண்டு தொடங்கிய தென்னிந்திய இரயில்வே தொழிலாளர் வேலைநிறுத்தம் தென்னிந்தியா முழுவதையும் உலுக்கியது. எனவே சென்னை மாகாண அரசு அதற்குக் காரணமானவர்களுள் சிலரைக் கைது செய்தது. அரசு அவர்கள் மீது தென்னிந்திய இரயில்வே சதிவழக்கு எனும் பெயரில் வழக்கு நடத்தியது. சிங்காரவேலரும், முகுந்தலால் சர்க்கார் என்ற வங்காளியும் குற்றவாளிகள் பட்டியலில் முதலில் இருந்தனர். இவ்வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட அனைவருக்கும் கடுமையான தண்டனை வழங்கப் பட்டது. தோழர் சிங்காரவேலருக்குப் பத்து ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. சென்னை உயர்நீதி மன்றத்தில் அப்பீல் செய்ததால் சிங்காரவேலருக்கும் அவருடன் தண்டனை பெற்றவர் களுக்கும் தண்டனை குறைக்கப்பட்டது.

கயா காங்கிரஸ்

தோழர் சிங்காரவேலர் 1919 ஆம் ஆண்டு இந்தியத் தேசியக் காங்கிரசில் சேர்ந்தார். ஆனால் 1922 ஆம் ஆண்டில் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் முக்கியமான பேச்சாளராக மாறினார். கயா நகரில் 1922 இல் கூடிய காங்கிரஸ் மகாசபையில் , "காங்கிரஸ் மகாசபை உழைப்பாளி வர்க்கத்தின் தாய்ச் சபையாக இருக்க வேண்டும்" எனக் குறிப்பிட்டார். அப்போது தன்னை ஒரு கம்யூனிஸ்டு எனக் கூறிக் கொண்டார். மேலும் ஐரோப்பாவிலுள்ள கம்யூனிஸ்டுகள் காந்தியின் அகிம்சை வழியை எள்ளி நகையாடுவதைக் குறிப்பிட்டு, இந்தியாவின் தற்போதைய நிலைக்குக் காந்தி வழியே சிறந்த வழி எனும் கருத்தை வெளிப்படுத்தினார். கயா காங்கிரசின் தொழிலாளர் அமைப்பை வலிமைப்படுத்த ஏற்படுத்தப்பட்டுள்ள அறுவர் குழுவில்

தோழர் சிங்காலவேலரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் கூட்டத்தில் சிங்காரவேலர் ஆற்றிய வரலாற்றுச் சிறப்புமிக்க சொற்பொழிவு பின்வருமாறு:

தலைவர் அவர்களே, இங்கு குழுமியுள்ள தோழர்களே, ஹிந்துஸ்தானத்தின் விவசாயப் பெருமக்களே, தொழிலாளிகளே! உங்களுடைய சக தொழிலாளி என்ற முறையில் இங்கு பேச நிற்கிறேன். உலகக் கம்யூனிசத்தின் சார்பாக அதன் பிரதிநிதியாக இங்கு நான் வந்திருக்கிறேன். உலகத் தொழிலாளர்களுக்கு கம்யூனிசம் வழங்கும் செய்தியை உங்களுக்கு அளிக்க நான் வந்திருக் கிறேன். சோவியத் ருஷ்யாவிலும் ஜெர்மனியிலும் மற்ற உலக நாடுகளிலுமுள்ள கம்யூனிஸ்டுகள், தொழிலாளர்கள் சார்பாக நான் உங்கள் முன் நிற்கிறேன். உங்களுடைய விடுதலையிலும், உங்கள் உணவு, உடை, இருக்கை ஆகிய உரிமைகளிலும் அவர்களுக்கும் அக்கறை உண்டு.

தோழர்களே, இந்த நாட்டில் நீங்கள் சுதந்திரமான வாழ்க்கையை நடத்தவும், எல்லா உரிமைகளையும் பெறவும் நமது காங்கிரசார் பாடுபடுவதை நீங்கள் அறிவீர்கள். ஒரு சிலர் கையில் அதிகாரம் செல்வதை நாம் விரும்பவில்லை. நமக்கு உரிய முறையில் உணவும் உடையும் வீடும் கிடைப் பதற்கான அதிகாரம் நம் கையில் வந்தாக வேண்டும். இவை நமக்கு முக்கியமானவை. நமது காங்கிரஸ் இயக்கம் இதற்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். இந்த உரிமைகளைப் பெற்றுத் தருவதில் காங்கிரசிற்கு உதவியாக இருக்க உலகக் கம்யூனிஸ்டுகள் தயாராயிருக் கிறார்கள். உங்களுடைய நியாயமான கோரிக்கைகளில் உலகக் கம்யூனிஸ்டுகளுக்கும் ஈடுபாடு உண்டு. ஆகவே, நீங்கள் விடுதலை பெறுவதிலும், உரிமைகளைப் பெறுவதிலும் அவர்கள் உங்களுடன் இருக்கிறார்கள் என்ற உண்மையை நீங்கள் அறிய வேண்டும்.

தோழர்களே, முதல் படியாக நாம் சுதந்திரம் பெற்றாக வேண்டும். இதற்கு, மகாத்மா காந்தியின் சீடர்கள் என்ற வகையில் அகிம்சையையும், ஒத்துழையாமையையும் நாம் கடை பிடிப்போம். இந்த முறைகளில் எனக்குப் பெருத்த நம்பிக்கை இருக்கிறது. உலகக் கம்யூனிஸ்டுகளிடம் நான் இந்த வழியில் எனக்குள்ள நம்பிக்கையையும், இது நமக்கு நடைமுறை சாத்தியமானது என்பதையும் சொல்லியிருக் கிறேன். இதிலே அவர்கள் நம்மிடமிருந்து வேறுபடு கிறார்கள். நாமும் உலகக் கம்யூனிஸ்டுகளிடமிருந்து இந்த அடிப்படையில் வேறுபடு கிறோம். ஆகவே, அகிம்சை, ஒத்துழையாமை ஆகியவற்றில் நமக்குள்ள ஈடுபாட்டையும்,

அவற்றின் மூலம்தான் இங்குள்ள பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்கு எதிராகப் போராடப் போகிறோம் என்பதையும் உலகக் கம்யூனிஸ்டுகளுக்கு நமது செய்தியாக சொல்லிக் கொள்கிறோம். உலகத் தொழிலாளர்கள் இதை அறியவும் புரிந்து கொள்ளவும் வேண்டும்.

தோழர்களே, காங்கிரஸ்காரர்களாகிய நாம் தொழிலாளர் நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். இந்தியத் தொழிலாளர்கள் காங்கிரஸ் இயக்கத்தில் பங்கு பெற வேண்டும். இதனைச் செய்ய நாம் தவறி விட்டோம். இதனால், பர்தோலியில் நாம் தோல்வியுற்றோம். பர்தோலியில் ஏற்பட்ட தோல்விக்குக் காரணம் விடுதலைப் போரில் தொழிலாளர்களை நாம் முழுமையாக ஈடுபடுத் தாததுதான் என்று தைரியமாக நான் சொல்வேன். இதனால் நாம் பல துன்பங்களை அனுபவித்து விட்டோம். ஆகவே, தேசிய அளவில் வேலை நிறுத்தங்கள் நடைபெற அகிம்சை, ஒத்துழையாமை ஆகிய கருவிகளை காங்கிரஸ் தலைமை பயன்படுத்த வேண்டும்.

தேசிய அளவில் வேலைநிறுத்தங்கள் நடத்துவதன் மூலமாக அல்லாது பிரிட்டிஷ் ஆதிக்கத்தை மயிரிழைகூட நம்மால் அசைக்க முடியாது. இதற்காக இந்திய தொழிற்சங்க காங்கிரசுடன் உள்ள உறவைத்த வி ர , நேரடியாக காங்கிரஸ் இயக்கத்தின் பகுதியாகவே தொழிற் சங்கங்களை நாட்டில் ஏற்படுத்த வேண்டும்.

தோழர்களே, உங்கள் சக்தி உங்களுக்குத் தெரியாது. உங்கள் பலத்தை நீங்கள் அறிந்திருக்கவில்லை. உங்கள் சக்தியை நீங்கள் அறிகின்ற கணத்திலே உங்கள் கண்களை மறைத் திருக்கும் திரை அகலும்; உலகம் உங்களுக்குச் சொந்தமாகும்.

எல்லைகளைத் தாண்டி மலைகளையும் கடல்களையும் தாண்டி இப்போது தொழிலாளி பார்க்க ஆரம்பித்து விட்டான். ரஷயத் தொழிலாளர்கள் மூலமாக இந்திய, ஆசிய, அமெரிக்க, ஆஸ்திரேலியத் தொழிலாளர்கள் இப்போது தோழமை பூண்டு நிற்கிறார்கள். இந்தத் தோழமையைக் காக்க அவர்கள் விரதம் பூண்டிருக்கிறார்கள். மனித இன சகோதரத்துவத்தில் உலகக் கம்யூனிஸ்டுகளுக்கு நம்பிக்கை உண்டு. இந்தியத் தொழி லாளர்கள் இந்த மனித ஒருமைப்பாட்டிற்கு உதவ வேண்டும்.

முதலாளித்துவ சக்திகளே, கேளுங்கள்! இந்தியத் தொழிலாளர்கள் விழித்துக்கொண்டு விட்டார்கள். மற்ற உலகத் தொழிலாளர்களைப் போல, இந்தியத் தொழி லாளர்களும் கடல், மலை, எல்லை கடந்து உண்மையான

தோழமை பூண்டு நிற்கிறார்கள். அவர்களை நீங்கள் இனி அலட்சியப் படுத்த முடியாது. தங்கள் பலத்தை இன்று அவர்கள் உணர ஆரம்பித்து விட்டார்கள்.

இன்று இந்தியத் தொழிலாளி மிக இழிவான நிலையில் இருக்கின்றான். உலகத்தின் கீழ்மைகள் எல்லாம் அவன் தலையில். உலகத்தின் பஞ்சம், பட்டினி, பிணி, துயர் எல்லாமே அவனிடம். பணக்காரர்களே! பெரிய மனிதர்களே! மறவாதீர்!! உலகத்திலுள்ள நல்லவற்றை யெல்லாம் நீங்கள் பெறுவதற்கு உழைத்தவன் தொழிலாளி. அவனைப் பின்னுக்குத் தள்ளாதீர். உங்களுக்காக உழைத்தவனை உதாசீனம் செய்கிறீர்கள். அவனுடைய அறிவால், உழைப்பால், சக்தியால் இந்த உலகத்தின் வாழ்வு மலர்ந்திருக்கிறது. காலம் மாறுகிறது. திமிர் பிடித்த முதலாளித்துவம் சீக்கிரமே சரண்டையும். மதிப்பும் பெருமையும் மிக்க இந்தியத் தொழிலாளர் வர்க்கம் சீக்கிரமே அரசோச்சும்.

முதலாளிகளே, இந்தியத் தொழிலாளர் விழித்துக் கொண்டதை அறிவீர்கள். உலகைக் காப்பாற்ற, தன் உரிமையைப் பேண விரைவில் உழைப்பாளி வர்க்கம் முயலும். இந்தப் பேரவை முன் வைக்கப்பட்டுள்ள தீர்மானத்தை முழுமையாக நான் ஆதரிக்கிறேன்.

(ம.பொ.சி., விடுதலைப் போரில் தமிழகம், பக்.523-526)

நாத்திகர்

தோழர் சிங்காரவேலர் மிகுந்த தன்னம்பிக்கை நிறைந்தவர். ஆனால் தெய்வத்தின் மீது தனக்கு எவ்விதப் பற்றுமில்லை என வெளிப்படையாகப் பல இடங்களில் கூறியவர். இவர் "கடவுளும் பிரபஞ்சமும்" எனும் நூலை எழுதியுள்ளார். அந்நூலில் தனக்குக் கடவுள் நம்பிக்கை ஏன் ஏற்படவில்லை என்பதற்கான காரணங்களை அறிவியல் முறைப்படி விவரித்துள்ளார். கான்பூர் மாநாட்டுத் தலைமையுரையில்,

சகல மதங்களும் கற்பனைகளே. மதங்களுக்கு ஆதாரமாக வைத்திருக்கும் கடவுளரும் கற்பனைகளே. இதுபற்றி விவாதிப்பதில் பயனில்லை. விசாரணையில்தான் மதங்கள் கற்பனைகளில் ஒன்று என்று ஏற்படும். அதுவரையில் மதங்கள் உண்மை என்று சாமான்ய மக்கள் நம்பி வருவார்கள். பொய் நம்பிக்கையைப் போக்குவது அசாத்தியமான காரியம். மெய்ஞ்ஞானம் பாமர மக்களுள்ளும் தொழிலாளர்களுள்ளும் பரவப் பரவத்தான் மதங்களின் உண்மை வெளிப்படும் (ப.54)

என விவரித்தார். சென்னை ஒயிட்ஸ் மெமோரியல் மண்டபத்தில் 1933 சனவரி மாதம் முதலாம் நாளில் நடத்தப்பெற்ற நாத்திகர் மாநாட்டில் தலைமை வகித்து "இந்தியாவிலேயே முதன்முதலில் நடைபெறும் நாத்திகர் மாநாடு" எனக் குறிப்பிட்டுப் பேசினார். தான் எழுதிய நூல்கள் மூலமாகவும், சொற்பொழிவுகள் மூலமாகவும் நாத்திகப் பிரச்சாரம் செய்து வந்தார். ஆனால் எந்தவொரு சூழ்நிலையிலும் பாமரர்களைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டு நாத்திகப் பிரச்சாரத்தில் ஈடுபட்டதில்லை. அவருடைய நாத்திகப் பிரச்சாரம் விஞ்ஞான வழிப்பட்டது என்பது மட்டும் உண்மை. இவரது மத நம்பிக்கை குறித்து ம.பொ.சி.,

> திரும்பவும் சொல்லுகிறேன்; தோழர் சிங்காரவேலரின் நாத்திக வாதம் விஞ்ஞான வழிப்பட்டது. அவர் சூன்ய வாதியல்ல; மார்க்ஸியவாதி! மதங்களும் தெய்வங்களும் இருக்குமிடத்தில், மார்க்சியப் பொதுவுடைமை இருப்பதை அவர் விரும்பினார். ஆனால், தெய்வ நிந்தனையாளர் நிலை இதிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும் (ப. 55)

எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், இவருடைய தனிச் சிறப்பு என்னவென்றால், தெய்வத்தின் மீது பற்றுதலும் மதநம்பிக்கையும் கொண்ட சான்றோர்களால் மனம் விரும்பி மதிக்கப்பட்டவர். சான்றாக, இராஜாஜி, சத்தியமூர்த்தி போன்றோர்களால் பெரிதும் மதிக்கப் பெற்றவர். தோழர் சிங்காரவேலருக்குப் பௌத்த மதத்தின் மீது ஓரளவு ஈடுபாடு உண்டு. அதன் காரணமாக மணிமேகலை காப்பியத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு விளங்கினார். 1902 ஆம் ஆண்டு இலண்டனில் நடந்த உலக புத்தமத மாநாட்டில் சிங்காரவேலர் கலந்து கொண்டார். சமயங்கள் எல்லாம் பொய் எனப் பேசிவந்த சிங்காரவேலனார், புத்த சமயத்திடம் மட்டும் பற்று வைத்ததற்கான காரணம் தெரியவில்லை.

மாநகராட்சி தேர்தலில் வெற்றி

1925 ஆம் ஆண்டு நடைபெற்ற சென்னை மாநகராட்சி தேர்தலில் சுயராஜ்யக் கட்சியின் சார்பில் யானைக் கவுனி வட்டத் தொகுதியில் போட்டியிட்டார். அந்தத் தொகுதியில் அவரைப் பெற்றெடுத்த மீனவ சாதி வாக்காளர்கள் ஒருவரும் இல்லை. தனது சாதி, சமய சார்பற்ற அரசியல் சமுதாயக் கொள்கைகளை மக்களிடையே எடுத்துக்கூறி வெற்றி பெற்றார். தனது பதவிக் காலங்களில் நகரின் முன்னேற்றத்திற்காகவும், மீனவக் குப்பங்களின்

முன்னேற்றத்திற்காகவும் அரும்பாடுபட்டார். மேலும் 1927 ஆம் ஆண்டு சென்னைக்கு வருகை புரிந்த பிரிட்டிஷ் பார்லிமெண்டின் அங்கத்தினரும், உலகப் புகழ் பெற்ற கம்யூனிஸ்டுமான எஸ். சக்லத்வாலாவுக்குப் பல தடைகளையும் தாண்டி மாநகராட்சியில் சிறப்பான வரவேற்புக் கொடுத்தார்.

தொழிலாளர்-விவசாயி கட்சி

தோழர் சிங்காரவேலர் 1924 ஆம் ஆண்டு "லேபர்-கிசான் பார்ட்டி"(தொழிலாளி-விவசாயி கட்சி) எனும் பெயரில் ஒரு புதிய கட்சியை ஆரம்பித்தார். காங்கிரசில் இருந்து கொண்டுதான் வர்க்கப் போராட்டம் தொடர்பான இக்கட்சியை ஆரம்பித்தார். இந்தப் புதிய கட்சிக்காக லேபர்-கிசான் கெசட் எனும் மாதம் இருமுறை வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகையையும் நடத்தினார். மேலும், தொழிலாளி எனும் தமிழ்ப் பத்திரிகையைத் தன் தோழர்களான கே. முருகேசன், டி.என். இராமச்சந்திரன் ஆகியோர் மூலம் தொடங்கச் செய்து ஆதரவு அளித்தார். ஆனால் அரசாங்கத்தின் தடை உத்தரவால் அப்பத்திரிகை தொடங்கப்பட்ட ஆண்டே நிறுத்தப்பட்டு விட்டது.

தமிழ்ப்பற்று

மக்கள் தங்களின் சொந்த மொழியில்தான் கல்வி கற்க வேண்டும் எனும் கொள்கையுடையவராகச் சிங்காரவேலர் காணப் பட்டார். அறிவுக்குப் பயன்தரும் நூல்கள் அனைத்தும் தாய்மொழியிலே வெளிவர வேண்டும் என்பது அவரது கொள்கையாகும். இத்தகைய கொள்கைகளின் அடிப்படையில் திரு.வி.க. அவர்களிடம் நட்புக் கொண்டிருந்தார். சுமார் 90 ஆண்டுகளுக்கு முன்னரும் புத்தமதக் கொள்கை, மார்க்க அரேலியரின் தத்துவம், காரல் மார்க்சின் பொதுவுடைமைச் சித்தாந்தம் ஆகியவற்றைத் தமிழில் பேசிவந்தார்.

சிங்காரவேலர் மயிலாப்பூரில் வாழ்ந்ததால் திருவல்லிக்கேணி துளசிங்கப் பெருமாள் கோவில் தெருவில் வாழ்ந்த பாரதியாரிடமும், ஐஸ்அவுஸ் பகுதியில் வாழ்ந்த சுப்பிரமணிய சிவாவிடமும் நண்பராகப் பழகி வந்தார்.

இராஜாஜியுடன் கடைசிச் சந்திப்பு

இராயப்பேட்டைக் காங்கிரஸ் திடலில் நடைபெறும் தேசியக் கொடியேற்று விழா நிகழ்வில் தன்னுடைய பழைய நண்பர் இராஜாஜி தேசியக் கொடியை ஏற்றி வைத்துப் பேசப் போகிறார் என்பதைக் கேள்விப்பட்டு, அவரைப் பார்ப்பதற்காகத் தள்ளாத எண்பது வயதில்

சிங்காரவேலர் இராயப்பேட்டைக்குச் சென்றார். சென்னை ஜில்லா காங்கிரசின் செயலாளராக இருந்த ம.பொ.சி., கொடிக்கம்பத்தின் அருகிலிருந்த வயதான பெரியவரிடம் பேசிய பின்னர் அவர் தோழர் சிங்காரவேலர் என்பதைப் புரிந்து கொண்டார். சிங்காரவேலரிடம் நெருக்கமாகப் பழகியிருந்த போதும் அவரது வயது முதிர்ச்சி காரணமாக ம.பொ.சி.யால் அவரைத் தெரிந்துகொள்ள இயல வில்லை. தோழர் சிங்காரவேலர் தனது விருப்பத்தை ம.பொ.சி.யிடம் தெரிவித்தார். நிகழ்ச்சி முடிந்தவுடன் தாமதம் செய்யாமல் இராஜாஜி அவர்கள், தோழர் சிங்காரவேலர் இருந்த இடத்திற்குச் சென்று பார்த்துப் பேசி மகிழ்ந்தார். அது தான் இராஜாஜியும் ம.பொ.சி.யும் சிங்காரவேலரைக் கடைசியாகப் பார்த்த நிகழ்வாகும். சிங்காரவேலர் தமது 87 ஆவது வயதில் காலமானார். அவர் மறைந்தபோது இராஜாஜி,

> அன்பர்களில் ஒருவரும், சுதந்திரப் பித்தர்களில் ஒருவரும்,
> யோக்கியர்களில் ஒருவரும் மறைந்துவிட்டார் (ப. 22)

எனக் குறிப்பிட்டார்.

சிந்தனைச் சிற்பியாக வாழ்ந்து மறைந்த தோழர் சிங்காரவேலு சுயநலமின்றிப் பொதுநலத்திற்காகத் தன்னையே தேய்த்தவர். பொதுவுடைமைச் சிந்தனையோடு பல போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர். மீனவக் குப்பத்தில் பிறந்தாலும் அம்மண்ணை மறக்கவில்லை. இந்தியத் தேசியக் காங்கிரஸ் மகாசபையின் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் கூட்டத்தில் உலகத் தொழிலாளர் சார்பில் சிங்காரவேலர் பேசியது வரலாற்றில் குறிப்பிடத்தக்கது. ம.பொ.சி. எழுதிய இவ்வாழ்க்கை வரலாற்று நூலின் மூலம் இன்றைய சமுதாயம் சிங்காரவேலரைப் பற்றி ஓரளவாவது தெரிந்து கொண்டது பாராட்டுதலுக்குரியதாகும். அதற்கு இச்சமுதாயம் ம.பொ.சி.க்குக் கடன்பட்டுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

வ.உ. சிதம்பரம் பிள்ளை

சிலம்புச் செல்வர் ம.பொ.சி.யின் சாதனைகளில் ஒன்று வெள்ளையரின் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நின்று போராடி, சிறைக்குச் சென்று செக்கிழுத்த செம்மலான வ.உ.சிதம்பரனாரைப் பற்றி எழுதி வெளியிட்ட கப்பலோட்டிய தமிழன் எனும் நூலாகும். இந்நூலின் முதல் பதிப்பு சுமார் 60 ஆண்டுகளுக்குமுன் வெளிவந்தது. வ.உ. சிதம்பரம் பிள்ளையின் வரலாற்றை விரிவாகத் தெரிந்தவர்கள் ஒருவரும் எழுதவில்லை எனும் உணர்வே இந்நூல் எழுத அடிப்படைக் காரணமாக விளங்கியது. ம.பொ.சி. இந்நூலை வ.உ.சி. எழுதிய 'தனிப்பாடல் திரட்டு', 'எனது அரசியல் பெருஞ்சொல்' முதலிய நூல்களிலிருந்தும், 1906 ஆம் ஆண்டு முதல் 1908 ஆம் ஆண்டு வரை தினப்பத்திரிக்கைகளில் வ.உ.சி. பற்றி வெளியான பல தகவல்களி லிருந்தும் கருத்துக்களைச் சேகரித்துக் "கப்பலோட்டிய தமிழன்" எனும் நூலை வெளியிட்டார்.

வ.உ.சி. யின் சிறப்பு

வீரம் நிறைந்த மன்னர்கள் ஆண்ட தமிழகத்தில் ஆங்கிலேயரின் ஆட்சியை எதிர்த்து யாராலும் போராடமுடியவில்லை. காங்கிரஸ் சபைதான் அவர்களை எதிர்த்து நேரடியாகப் போராடத் தொடங்கியது. அதன் பயனாக வடநாட்டில் திலகரும் தென்னாட்டில் வ.உ.சி. யும் தீவிரமாகப் போராடினார்கள். வ.உ.சி. ஒரு தளபதி போல் இருந்து சுதேசிக் கப்பல் கம்பெனியைத் தொடங்கி ஆங்கிலேயர்களை எதிர்த்தது இவருடைய சிறப்பாகும். மேலும், தூத்துக்குடி ஹார்வி மில் தொழிலாளருக்காகக் குரல் கொடுத்து, முதலாளிகளை எதிர்த்து, வேலைநிறுத்தம் என்னும் வெடியை வைத்து அவர்களின் சூழ்ச்சியைத் தகர்த்தவர்.

தமிழன் என்று சொல்லடா
தலை நிமிர்ந்து நில்லடா

எனும் நாமக்கல் கவிஞரின் அடிகளுக்கு ஏற்ப, அனைத்துத் தமிழர்களிடத்திலும் சுதந்திரத்தீயை மூட்டிய சுதந்திர வீரர். அறிவு நுட்பமும், பிறரின் துயரம் கண்டு மனம் உருகி வேதனைப்படு பவருமான ஒரு தலைவர் வ.உ.சி. என்பதே இவருடைய சிறப்பாகும்.

பிறப்பு

தமிழகத்தின் ஒரு பகுதியான பாண்டி நாட்டில் ஓட்டப்பிடாரம் எனும் ஊரில் உலகநாத பிள்ளைக்கும், பரமாயி அம்மையாருக்கும்

மகனாக 1872 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஐந்தாம் நாள் வியாழக்கிழமையன்று பிறந்தார். இவருக்குப்பின் நான்கு ஆண்களும் இரண்டு பெண்களும் பிறந்தனர். இவர் பிறந்த ஊரும், அதன் சுற்றுப்புறமும் வீரர்கள் பலரைப் பார்த்த ஊர் என்பது குறிப்பிடத் தக்கது. இவ்வூரில்தான் வீரமுழக்கமிட்ட வீரபாண்டிய கட்டபொம்மன் தோன்றினார். இவ்வூரிலிருந்து 8 கி.மீ. தொலைவிலுள்ள எட்டைய புரத்தில் மகாகவி பாரதியார் தோன்றினார். இவர்கள் அனைவரின் காலச்சுவடுகளையும் மனதில் கொண்டு நாட்டுப் பற்றுடன் விளங்கியவர்தான் வ.உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள்.

கல்வி

வ.உ.சி. முதன்முதலாகத் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் கல்வி பயின்றார். இவருடைய ஆசிரியர் வீரப்பெருமாள் அண்ணாவியார் வ.உ.சி.க்குத் தமிழ் நூல்களைக் கற்றுக் கொடுத்தார். அவ்வூரில் ஆங்கிலம் கற்கப் பள்ளி இல்லாததால் வ.உ.சி. யின் தந்தை உலகநாத பிள்ளை, தன் மகன் ஆங்கிலக் கல்வி கற்க வேண்டும் எனும் எண்ணத்தில் தன் மகனுக்காக ஒரு பள்ளியைக் கட்டினார். அப் பள்ளியில் அறம்வளர்த்த நாதபிள்ளை என்பவரை ஆசிரியராக்கினார். ஊரிலுள்ள அனைவரின் கல்விக் கண்ணைத் திறக்க இப்பள்ளி உதவியாக இருந்தது. வ.உ.சி. இந்தப் பள்ளியில் சிறிது காலம் பயின்ற பின்னர், தூத்துக்குடியிலுள்ள செயின்ட் பிரான்சிஸ் சேவியர் உயர்நிலைப் பள்ளியிலும், அதன் பின்னர், கால்டுவெல் கல்லூரியில் சேர்ந்து மெட்ரிகுலேஷன் தேர்விலும் வெற்றி பெற்றார்.

வீரவிளையாட்டுகள் அறிந்தவர்

வ.உ.சி. இளமைப் பருவத்திலிருந்தே வீரவிளையாட்டுகளில் ஈடுபாடுடையவராகக் காணப்பட்டார். வ.உ.சி. தனக்குத் தெரிந்த விளையாட்டுகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகிறார்:

சுவர்மேல் நடத்தல், தொன்மரம் ஏறுதல்,
கவண்கொடுங்கை கொடுங் கல்லெறி பழகுதல்,
கண்ணினைப் பொத்திக் காட்டில் விடுதல்,
எண்ணினைச் சுவாகம் இழுக்கா தியம்பல்,
குதிவட்டாடுதல், கோலி தெறித்தல்,
குதிரைமீ தூர்தல், கோலேறி நடத்தல்,
காற்றிரி எறிதல், கான்மாறி யோடுதல்,
மேற்றிரி பந்தின் விளையாட்டுப் பற்பல,
சடுகுடு, கிளியந் தட்டு, பல்லி,
நெடுகடு மோட்டம், நீர்விளை யாட்டம்,
கம்பு சுற்றுதல், கத்தி வீசுதல்,
தம்மினை அடக்கித் தலைகீழ் நடத்தல்,
கசரத்து, பஸ்கி, கலப்புறு குஸ்தி,

நிசத்துச் சண்டையில் நிற்கும் முறைகள்,
வெடிகொடு சுடுதல், வில்லொடு தெறித்தல்
அடிபிடி சண்டை அளவில் புரிந்தேன். (ப. 21)

செய்யும் தொழிலே தெய்வம்

வ.உ.சி. யின் பாட்டனார், பெரிய தந்தையார், தந்தையார் அனைவரும் வழக்கறிஞர்களாக விளங்கியதால் வ.உ.சி.யின் வீட்டை வக்கீல் ஐயா வீடு என்பர். அதற்கேற்றாற்போல் வ.உ.சி. 1895 ஆம் ஆண்டில் வழக்கறிஞரானார். தான் மேற்கொண்ட வழக்கறிஞர் தொழிலைத் தெய்வமாக மதிப்பவர் வ.உ.சி. அவர்கள். இத்தொழிலில் தன்னுடைய வருமானத்தைப் பெரிதாகக் கருதாமல் ஒழுக்கம், வாய்மை, பிறர் நலம் பேணல் முதலியவற்றைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தார். பெரும்பாலும் தான் மேற்கொண்ட வழக்குகளில் வெற்றி பெறுவார். வெற்றி பெறாத வழக்குகளில் எதிர்க் கட்சியினரிடம் பேசிச் சமரசம் செய்து கொள்வார். வ.உ.சி. கடமை உணர்வும், நேர்மை உள்ளமும் கொண்டவராக இருந்ததால் நீதிபதிகள் அவரைப் பாராட்டினர்.

வக்கீலாய் நின்று வழிப்பறியே செய்யும் திக்கிலார் (ப.25)

என்று ஒழுக்கம் தவறிய வழக்கறிஞர்களைப் பற்றித் தாம் எழுதிய பாடலில் குறிப்பிடுகிறார்.

அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில் (குறள், 428)

எனும் வள்ளுவரின் அடிகளுக்கு ஏற்பக் காவல்துறையினராலோ அல்லது அதிகார வர்க்கத்தினராலோ துன்பம் ஏற்படும்போது அஞ்சா நெஞ்சினனாக விளங்கினார். அதிகாரிகளுக்கு எதிராக வ.உ.சி. நடந்து கொள்வது அவரது தந்தையாருக்குப் பிடிக்கவில்லை. எனவே தந்தையாரின் கட்டளைப்படி 1900 ஆம் ஆண்டில் தூத்துக்குடிக்குச் சென்று வழக்கறிஞராகப் பணியாற்றினார்.

இல்லற வாழ்க்கை

வ.உ.சி. தமது 23 ஆவது வய்தில் திருச்செந்தூரிலுள்ள சுப்பிரமணிய பிள்ளையின் மகள் வள்ளியம்மையைத் திருமணம் புரிந்தார். இவ்வம்மையார் தம் கணவருக்கு உற்றுழியுதவும் ஊன்றுகோல் போலவும், அறுசுவை உணவு அளிப்பதில் அன்னை போலவும் விளங்கினார். வள்ளியம்மையார் தமிழ்க் கல்வியில் புலமையுடையவராகக் காணப்பட்டார். இவ்வித நல்ல குணங்கள் பொருந்திய வள்ளியம்மையார் 1901 ஆம் ஆண்டில் அகால மரணமடைந்தார். பின்னர் வள்ளியம்மையாரின் குடும்பத்திலேயே மீனாட்சியம்மை எனும் பெண்ணைத் திருமணம் செய்தார்.

சமத்துவ உணர்வு

வ.உ.சி. அவர்கள், இராமையா தேசிகர் எனும் பார்வையற்றவர் ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவராக இருந்தபோதிலும், அவரை ஆதரித்து வந்தார். மேலும், சாமி சகஜானந்தர் என்பவர் நந்தனார் வகுப்புப் பிள்ளையைச் சேர்ந்தவர். அவரைத் தன்னுடைய வீட்டில் தங்கவைத்து, தொல்காப்பியம், திருக்குறள் முதலிய நூல்களைக் கற்றுக் கொடுத்து அவரைக் கல்வியில் சிறந்தவராக்கினார். வ.உ.சி. சென்னையை விட்டு நீங்கி, தனது சொந்த ஊராகிய ஒட்டப்பிடாரம் சென்றபோது சாமி சகஜானந்தரையும் தன்னுடன் அழைத்துக் கொண்டு சென்று தங்க வைத்தார். வ.உ.சி. செல்லும் இடங்களுக்கெல்லாம் சாமி சகஜானந்தரையும் தன்னுடன் அழைத்துச் செல்வது வழக்கம். அவ்வாறு அழைத்துச் செல்லும்போது சாமி சகஜானந்தரின் சாதியைப் பற்றி வ.உ.சி. யிடம் கேட்டால் இவர் ஒரு துறவி; இவருடைய சாதி பற்றி விசாரிக்கக்கூடாது என்பார். வ.உ.சி. யின் குணநலன்கள் குறித்து சாமி சகஜானந்தர் எழுதிய கடிதத்திலிருந்து ஒருபகுதி சான்றாகக் கீழே தரப்படுகிறது:

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றா ரெனக்கழறும்-மாமறைக்குச்
சான்றாச் சிதம்பரமென் தந்தை நினைக்கண்டேன்
நான்மா றென்செய்வேன் நவில்.

கைம்மாறு வேண்டாக் கடப்பாட்டி னென்றனுக்கு
மெய்ம்மாட்டி நின்றருளும் வித்தகனே- செம்மறையின்
பாவனைத்துஞ் சிந்தை பதிவித்தேன், சிதம்பரமென்
தேவநின தின்னருளால் தேர்ந்து.

சாவா மருந்தெனவே தற்பரனார் வள்ளுவர்செய்
பாவால் அறிவெனக்குப் பாலித்த-தேவா!
சிதம்பரமென் சற்குருவே! சிந்தையினில் நின்னின்
பதம்பெற்றேன் என்றும் பணிந்து (பக். 31-32)

எனும் இக்கடிதத்தில் வ.உ.சி. யைத் தந்தையாய், ஆசிரியராய், தெய்வமாய் நினைத்துப் போற்றுகிறார்.

அந்நியர்களை எதிர்த்துப் போராட்டம்

ஒரு காலத்தில் கப்பலோட்டும் கலையில் வல்லவர்களாகத் தமிழர்கள் சிறந்து விளங்கினர். வாணிபத்தில் பொருளையும், புகழையும் அடைவதற்காகக் கப்பல்களைப் பயன்படுத்தினார்கள். நம்முடைய அனைத்து வளர்ச்சிகளையும் பறிப்பதற்காக ஆங்கிலேயர்கள் நம்மை அடிமைப்படுத்தினார்கள். இதனால் நம்முடைய செல்வத்தை அவர்கள் எடுத்துச் சென்றனர்.

நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்து விட்டால்

என்று கூறிய பாரதியாரைப் போலவே சிதம்பரனாரும் அடிமைத் தனத்தை நினைத்து மனம் கொதித்து இருந்தார். இந்தியாவை ஆண்டுவந்த ஆங்கிலேயர்களை நாட்டைவிட்டு விரட்டுவதற்குத் தருணம் பார்த்துக் கொண்டிருந்தார்.

வடஇந்தியாவில் திலகர் அவர்கள் அதர்வணமந்திரத்தைக் கூறி அந்நியத் துணியில் தீ வைத்தார். இச்செய்தியைக் கேள்விப்பட்டவுடன் வ.உ.சி. அவர்கள் தான் மேற்கொண்டிருந்த வழக்கறிஞர் தொழிலை விட்டுவிட்டு, தன் மக்களின் அடிமைத் தனத்தை உணர்த்தும் விதமாக அந்நிய ஆடைகளுக்குத் தீ வைத்தார்.

எரிவது ஆடையன்று; ஏகாதிபத்தியமே! (ப. 35)

என நினைத்து மகிழ்ந்தார். இனிமேல் அந்நியப் பொருள்கள் எதையும் வாங்குவதில்லை என உறுதியெடுத்தார். அந்நியக் கத்தி வைத்திருப் பவரிடம் முகச் சவரம் செய்து கொள்வதில்லை. இவ்வாறு அந்நியர்களை எதிர்த்துத் தன்னுடைய முதல் போராட்டத்தை நிகழ்த்தினார்.

சுதேசிக் கப்பல் தோற்றம்

ஆங்கிலேயர் இந்தியாவிற்கு வந்தது இந்தியர்களை ஆளுவதற்கு மட்டுமன்று, இங்குள்ள செல்வத்தையெல்லாம் எடுத்துக் கொண்டு செல்வதற்காக என்பதை வ.உ.சி. உணர்ந்தார். எனவே வணிகக் கூட்டத்தை அடக்கவேண்டும் என எண்ணினார். தூத்துக்குடிக்கும் இலங்கைக்கும் இடையில் வாணிபப் பொருள்கள் அனைத்தையும் 'பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி' யிலுள்ள கப்பல்களே ஏற்றுமதி இறக்குமதி செய்து வந்தன. இந்தியாவில் தோன்றிய தேசிய இயக்கத்தை அவ்வெள்ளையர் கம்பெனி எதிர்த்தது. வெள்ளையர் கம்பெனியின் தவறான எண்ணம் இந்திய வணிகர்களிடையே பரவியது.

பிரிட்டிஷ் கம்பெனியின் இச்செயலை அடக்கவேண்டும் எனும் நோக்குடன் வ.உ.சி. 1906 ஆம் ஆண்டு சுதேசிக் கப்பல் கம்பெனியைத் தோற்றுவிக்க ஏற்பாடு செய்தார். ஆங்கிலக் கப்பலுக்கு எதிர்க் கப்பல் விடுவது முடியாத செயல் எனப் பலரும் அச்சுறுத்திய போதும், அஞ்சா நெஞ்சம் உடையவரான வ.உ.சி. அதனைப் பொருட்படுத்தவில்லை. சுதேசிக் கப்பல் கம்பெனி 1906 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 16 ஆம் நாள் பதிவு செய்யப்பட்டது. பங்குதாரர் களிடமிருந்து பங்கு ஒன்றுக்கு இருபத்தைந்து ரூபாயாக நாற்பதினாயிரம் பங்குதாரர்களிடமிருந்து பத்து இலட்சம் ரூபாய் சேர்ப்பதெனத் திட்டமிடப்பட்டது. மேலும், இலங்கை உட்பட

ஆசியாக் கண்டத்திலுள்ளவர்கள் பங்குதாரர்களாகச் சேரலாம் என விதி அமைக்கப்பட்டது. கம்பெனியின் தலைவராக மதுரைத் தமிழ்ச் சங்கத் தலைவர் பாண்டித்துரைசாமியும், செயலராக வ.உ.சி.யும் பொறுப்பேற்றுக் கொண்டனர். சுதேசிக் கம்பெனியின் குறிக்கோள் பரந்துபட்டது. அதாவது, இந்தியர்களின் நலனுக்காக மட்டுமன்றி ஆசியாக் கண்டத்திலுள்ளவர்கள் அனைவருக்கும் உதவும் வகையில் இக்கம்பெனி செயல்பட்டது.

சுதேசிக் கப்பலுக்கு எதிரான சூழ்ச்சி

தொடக்கத்தில் சுதேசிக் கப்பல் கம்பெனியைச் சேர்ந்தவர்கள் சொந்தமாகக் கப்பல் வாங்காமல் ஷாலைன் ஸ்டீமர்ஸ் கம்பெனியிடம் குத்தகைக்குக் கப்பல் வாங்கி ஓட்டினார்கள். இதையறிந்த பிரிட்டிஷ் கம்பெனியார் ஷாலைன் கம்பெனியின் உரிமையாளர் எஸ்ஸாஜி டாஜ்பாய் என்பவரை மிரட்டினர். இவ்அச்சுறுத்தலுக்குப் பயந்து டாஜ்பாய் வ.உ.சி. யிடம் செய்த ஒப்பந்தத்திலிருந்து விலகிக் கொண்டார். இதனால் கப்பல் இல்லாமல் சுதேசிக் கம்பெனியார் கலங்கினார்கள்.

ஆனால் தோல்வியைக் கண்டு துவளாத நெஞ்சம் கொண்ட வ.உ.சி. இதனைக் கண்டு அஞ்சவில்லை. இலங்கைக்குச் சென்று பெரிய கப்பல் ஒன்றைக் குத்தகைக்குப் பேசிக் கொண்டு வந்தார். அதன் பின்னர் வ.உ.சி. மும்பை, கல்கத்தா முதலிய இடங்களுக்குப் பொருள் திரட்டச் சென்றார். அப்போது,

> **மீண்டும் என் தமிழகம் திரும்புங்கால், கப்பலுடன் திரும்புவேன்; இல்லையேல், அங்கேயே கடலில் விழுந்து மாள்வேன்** (ப.40)

என்று மனவலிமையுடன் கூறிச் சென்றார். சிறிது நாட்களுக்குப் பின்னர்க் "காலியா" எனும் கப்பலுடன் தூத்துக்குடி துறைமுகம் வந்து சேர்ந்தார். எஸ். வேதமூர்த்தி "லாவோ" எனும் கப்பலைப் பிரான்சு நாட்டிலிருந்து வாங்கி வந்தார். அதேநேரத்தில் இரண்டு இயந்திரப் படகுகளும் வாங்கப்பட்டன. பாரதியார் தாம் நடத்தி வந்த "இந்தியா" எனும் பத்திரிக்கையில் வ.உ.சி. யைப் பற்றிப் புகழ்ந்து எழுதினார். சுதேசிக் கப்பலின் வளர்ச்சியைக் கண்டு பொறாமைப்பட்ட ஆங்கிலேயர், தங்கள் கப்பலின் கட்டணத்தை மிகவும் குறைத்தார்கள். அதன் பின்னர், இலவசமாகத் தங்கள் கப்பலில் பயணம் செய்யலாம் என்றும் அறிவித்தனர். சுதேசிக் கப்பலைப் பற்றிப் பொய்கள் பலவற்றைக் கூறிச் சூழ்ச்சிகள் பல செய்தனர். ஆங்கிலேயர்களால் மக்களின் மனதை மாற்றமுடியவில்லை. வேறுவழியின்றி, பிரிட்டிஷ் கப்பல் கம்பெனி முதலாளிகள் வ.உ.சி. யிடம் சுதேசிக் கப்பல் கம்பெனியை விட்டு விலகுவதானால் ஒரு இலட்சம் ரூபாய்

தருவதாகக் கூறினர். ஆங்கிலேயரின் வஞ்சகத்தை உணர்ந்து அவர்களை விரட்டியனுப்பினார்.

அரசியல் வாழ்க்கை

வ.உ.சி. சுதேசியின் மறுமலர்ச்சிக்குப் போராடுவது மட்டுமல்லாமல், அரசியலிலும் தம் பணியைச் செய்தார். காங்கிரசில் பலரும் மிதவாதிகளாக இருந்தார்கள். மிதவாதிகளுக்கும் தீவிரவாதி களுக்கும் இடையே ஏற்பட்ட குழப்பத்தில், தீவிரவாதிகள் நாடெல்லாம் சென்று சுதந்திரப் போருக்குத் தயார்ப்படுத்த வேண்டும் என்றனர். அதற்கு ஆதரவு தேடும் பொறுப்பினைப் பாலகங்காதர திலகர் சிதம்பரனாரிடம் ஒப்படைத்தார். இச்சூழலில், வ.உ.சிக்குச் சுப்பிரமணிய சிவா எனும் நண்பர் ஒருவர் கிடைத்தார். அவர் தமிழறிவும், ஆங்கில அறிவும் ஒருங்கே பெற்ற புரட்சி உள்ளம் கொண்டவர். சுப்பிரமணிய சிவாவின் துறவுக் கோலமும், துடிப்பான பேச்சும் வ.உ.சி. யின் உள்ளத்தையும் எண்ணத்தையும் கவர்ந்தன.

வ.உ.சி. யும் சிறந்த பேச்சாளர். மக்கள் மனத்தில் நாட்டுப் பற்றை ஏற்படுத்தும் வகையில் புரட்சிகரமாகப் பேசினார். ஒவ்வொருவரும் சுதேசிப் பொருள்களின் அவசியத்தை உணர்ந்து அதனை ஆதரிக்க வேண்டும் என உணர்ச்சியுடனும், உத்வேகத்துடனும் பேசுவார். அந்நியப் பொருள்களைவிடச் சுதேசிப் பொருள்களின் விலை அதிகமாக இருக்கிறதே எனக் கேட்பவர்களுக்கு,

> அதிக விலையா? யாருக்குக் கொடுக்கிறீர்கள்? உங்கள் நாட்டு மக்கள் உங்கள் சகோதரர்களுக்குத்தானே (ப.49)

என்று பதில் கூறும் பேச்சு வன்மை கொண்டவர் வ.உ.சி.. அவர் சில நேரங்களில் அழுகையுடன் ஆவேசமாகப் பேசுவார்.

> ஆளப்பிறந்த மக்கள் அடிமைகளாக வாழ்வதா? பண்டம் விற்க வந்த வணிகக் கூட்டம் பாரத நாட்டை ஆள்வ தென்றால், அதை நாம் பார்த்திருப்பதா? முப்பது கோடி மக்களை ஆறாயிரம் மைல் களுக்கப்பாலிருந்து வந்த ஐந்து லட்சம் வெள்ளையர்கள் ஆள்வ தென்றால் இதைவிட அவமானம் வேறு என்ன இருக்க முடியும்? (ப. 51)

எனப் பேசியதால் மக்கள் மனத்தில் புரட்சி எண்ணம் தோன்றியது. அதன் விளைவுதான் திருநெல்வேலிப் புரட்சியாகும்.

சிறைப்படல்

வ.உ.சி.யின் அனல் பறக்கும் பேச்சினால் பொதுமக்களிடையே அவருக்கு மிகுந்த செல்வாக்கு ஏற்பட்டது. இதனால் ஆங்கிலேய அதிகாரிகள் அச்சமடைந்தனர். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை

நிலைபெறச் செய்ய வேண்டும் என்பதற்காகச் சிதம்பரனாரைச் சிறையில் அடைக்க வேண்டும் என முடிவு செய்தனர். வ.உ.சி. யைத் தூத்துக்குடியில் கைது செய்தால் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் இறங்குவர் என்று கருதிய கலெக்டர் விஞ்சு என்பவர், தன்னைத் திருநெல்வேலியில் வந்து சந்திக்குமாறு வ.உ.சி.க்கும் சுப்பிரமணிய சிவாவிற்கும் ஆணை அனுப்பினார். மக்கள் அனைவரும் இருவரையும் திருநெல்வேலிக்குச் செல்லவேண்டாம் எனத் தடுத்தனர். ஆனால், வ.உ.சி. யும் சிவாவும் கலெக்டரின் அழைப்பை அவமதிக்க விரும்பாமல் சென்றனர்.

கலெக்டருக்கும் வ.உ.சி.க்குமிடையே வாக்குவாதம் மிகக் கடுமையாக நடந்தது. கலெக்டர் விஞ்சுவின் குற்றச்சாட்டுகளை எதிர்த்துச் சிதம்பரனார்,

> எங்கள் நாட்டில் நாங்கள் கூடிப்பேச அன்னியரான உங்கள் அனுமதி வேண்டுமோ? இந்த அநீதி எந்த நாட்டிலேனும் உண்டோ? தெய்வம்தான் ஏற்குமோ? வந்தேமாதரம் என்று கோஷிப்பதுமா குற்றம்? வந்தேமாதரம் என்பதன் பொருள் தானென்ன? எமது தாய்நாட்டை வாழ்த்துகிறோம்-தலையார வணங்குகிறோம் என்பதன்றோ? தாய்நாடு வாழ்க எனக் கோஷிப்பது குற்றமானால் அந்தக் குற்றத்தை எங்கள் இறுதி மூச்சு இருக்கும்வரை செய்துகொண்டே இருப்போம். தாயகத்தை வாழ்த்துவது ஈனச் செயலன்று (ப.57)

என்றெல்லாம் பதிலடி கொடுத்தார். இறுதியில் கலெக்டர் வ.உ.சி. யையும், சிவாவையும் திருநெல்வேலியை விட்டு வெளியேற வேண்டும் எனக் கட்டளையிட்டார். ஆனால் இருவரும் இக் கட்டளைக்கு அடிபணியவில்லை. எனவே, இருவரும் கைது செய்யப்பட்டனர்.

திருநெல்வேலியில் ஏற்பட்ட குழப்பம்

சிதம்பரனார் கைது செய்யப்பட்டு விட்டார் என்பதைக் கேள்விப்பட்டவுடன் திருநெல்வேலி மக்கள் கொதித்தெழுந்தனர். திருநெல்வேலியில் உள்ள கடைகள் அடைக்கப்பட்டன. தேசபக்தர்கள் அனைவரும் சிதம்பரனாரை விடுதலை செய்யும்படி பொதுக் கூட்டங்கள் நடத்தினர். வீதியிலுள்ள முனிசிபல் விளக்குக் கம்பங்கள் எல்லாம் பிடுங்கி எறியப்பட்டன. முனிசிபல் மண்ணெண்ணெய்க் கிடங்கு தீக்கிரையானது. சர்ச் மிஷன் கல்லூரிக்குள் சென்று பொருள்களைச் சேதப்படுத்தினர். காவல்நிலையத்திற்குள் சென்று துப்பாக்கி முதலிய ஆயுதங்களைச் சேதப்படுத்தியதுடன் கட்டடத்தையும் தீ வைத்துக் கொளுத்தினர். உதவிக் கலெக்டர் ஆஷ் தம் கைத் துப்பாக்கியால் சுட்டதில் நான்கு

பேர் இறந்தனர். இந்தக் குழப்பம் தொடர்ந்து மூன்று நாட்கள் நடந்தது. இதே நேரத்தில் தூத்துக்குடியிலும், தச்சநல்லூரிலும் கடையடைப்பும் குழப்பமும் நடந்தன. இந்தக் குழப்பத்தில் ஈடுபட்டதாகக் கூறி திருநெல்வேலி, தூத்துக்குடி, தச்சநல்லூர் ஆகிய இடங்களிலிருந்து 89 பேரைக் கைது செய்தனர்.

தண்டனை

1908 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23, 26 ஆகிய நாட்களிலும், மார்ச் மாதம் 1, 3 ஆகிய நாட்களிலும் அரசை எதிர்த்துப் பேசிய குற்றத்திற்காகவும், சுப்பிரமணிய சிவாவிற்குத் தங்க இடமும் உணவும் அளித்ததற்காகவும் வ.உ.சி. மீது வழக்கு தொடரப்பட்டது. சுப்பிரமணிய பாரதியார் உட்படப் பலர் வ.உ.சி. க்காகச் சாட்சி கூறினர். எனினும், அரச நிந்தனைக் குற்றத்திற்காக 20 வருடத் தண்டனையும், சிவாவிற்கு ஆதரவாக இருந்ததற்காக 20 ஆண்டுத் தண்டனையும் நீதிபதி பின்ஹே என்பவரால் வ.உ.சி. க்கு வழங்கப்பட்டன. வ.உ.சி. இத்தண்டனையைக் கண்டு அஞ்சாமல் தமது 35 ஆம் வயதிலிருந்து தண்டனையை அனுபவிக்க ஆரம்பித்தார். இத்தண்டனைச் செய்தியைக் கேட்ட அப்போதைய இந்திய மந்திரியாக இருந்த லார்டு மார்லி என்பவர் மனம் வருத்தப்பட்டுச் சிதம்பரனாருக்கு விதிக்கப்பட்ட தண்டனைக்குக் கண்டனம் தெரிவித்து இராஜப் பிரதிநிதி லார்டு மிண்டோவுக்கு கடிதம் எழுதினார். பலரது முயற்சியால் மொத்தத் தண்டனைக் காலமும் 10 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது. வ.உ.சி. யின் நண்பர்கள் உயர்நீதி மன்றத் தீர்ப்பில் திருப்தி அடையாததால் பிரிவி கவுன்சிலுக்கு அப்பீல் செய்தனர். அதன் பிறகு அந்தமான் சிறைவாசத் தண்டனை ஆறு வருடக் கடுங்காவல் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

செக்கிழுத்த செம்மல்

செல்வக் குடும்பத்தில் பிறந்த சிதம்பரனார் சிறையில் சொல்ல முடியாத பல துன்பங்களை அனுபவித்தார். இன்றைய அரசியல் கைதிகளைப் போன்று தனி உரிமைகள் எதுவும் அவருக்கு வழங்கப் படவில்லை. அறுசுவை உணவு உண்ட சிதம்பரனார் கேழ்வரகுக் கூழ் உண்டார். சிதம்பரனாரின் உடல் பலம் சிறையில் நடந்த கொடுமை களால் குறையத் தொடங்கியது. ஆறு மாதத்தில் அவருடைய உடல் எடை 27 பவுண்டுகள் குறைந்து விட்டன. சிறையில் தாம் அனுபவித்து வந்த துன்பங்களை, வேதனைகளைத் தம்முடைய தந்தைக்கும், மனைவிக்கும் கவிதை வடிவில் பல கடிதங்களாக எழுதினார். சிதம்பரனார் உடல் நலிவடைந்த நிலையிலும் அதிகாரிகளின் கட்டளைக்கிணங்கச் செக்கிழுத்தார். ஒரு நாள் கடும் வெயிலில் செக்கிழுக்கும் போது மயங்கிய நிலையில் கீழே விழுந்து விட்டார். வ.உ.சி. செக்கைச் சுற்றும் போதெல்லாம் சுதந்திர

அன்னையின் கோயிலைச் சுற்றுவதாகக் கற்பனை செய்து கொண்டிருப்பார்.

துன்பத்திலும் சோராத மனம்

வ.உ.சி. சிறையில் இருக்கும் போது அதிகாரிகள் அவருக்குத் துன்பம் கொடுத்துக் கொண்டே இருந்தனர். இச்சூழலில் சுதேசிக் கம்பெனி நிர்வாகிகள் போட்டியைச் சமாளிக்க இயலாததாலும், அரசாங்கம் தங்களையும் சிறைக்குள் அடைத்துவிடும் எனும் அச்சத்தினாலும் கம்பெனியைக் கலைத்ததோடு இரண்டு கப்பல் களையும் விற்று விட்டனர். இதைவிடக் கொடுமை வ.உ.சி. வடநாடு சென்று வாங்கி வந்த 'காலியா' எனும் கப்பலைப் பிரிட்டிஷ் கப்பெனிக்கே விற்று விட்டனர் என்பதாகும். அதுமட்டுமன்றி, கம்பெனி நிலைகுலைந்ததற்குச் சிதம்பரனாரின் அரசியல் நடவடிக்கைகளேகாரணம் எனவும், பொருள் இழப்பிற்கு வ.உ.சி. யின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கூறினர். இதைக் கேள்விப்பட்ட வ.உ.சி. மனம் நொந்து சுதேசிக் கம்பெனித் தோழர்களுக்குப் பின்வருமாறு கவிதையாகக் கடிதம் எழுதினார்:

எண்ணரிய துன்பங்கள் எய்தியுள வெஞ்சிறையை
நண்ணிடினும் நானஞ்சேன்; நாவாயின்-எண்ணறியா(து)
என்னோரென் தாள்நிதியை ஈயா தெனைக்கொடுக்கச்
சொன்னாலும் யானஞ்சேன் சோர்ந்து.

என்மனமும் என்னுடலும் என்சுகமும் என்அறமும்
என்மனையும் என்மகவும் என்பொருளும்-என்மனமுங்
குன்றிடினும் யான்குன்றேன் கூற்றுவனே வந்தாலும்
வென்றிடுவேன் காலால் மிதித்து. (ப. 77)

எனும் இப்பாடலின் அடிகள் எத்தகைய சோதனைகள் வந்தாலும் அதனைக் கண்டு அஞ்சாத, சோர்வடையாத மனம் உடையவராக வ.உ.சி. நிலைத்து நின்றதைத் தெளிவாக்குகின்றன.

கண்ணனூர் சிறைக்கு மாற்றம்

வ.உ.சி. கோயம்புத்தூர் சிறையில் தண்டனை அனுபவித்து வரும்போது, தினமும் சிறை அதிகாரிகளுடன் போராட வேண்டி யிருந்தது. சிறை ஜெயிலரைப் பார்த்துச் சிரித்ததற்காக மேலும் இரண்டு வாரத் தண்டனை பெற்றார். இதனால் கோபமடைந்த கைதிகள் ஜெயிலரைக் கொன்றுவிடத் தீர்மானித்தனர். அதன் முதல் கட்டமாக ஜெயிலரின் அலுவலகம் தாக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து சிறைக்குள்ளே கலகம் ஏற்பட்டது. கைதிகளை அடக்க ரிசர்வ் போலீசார் வந்தனர். அப்போது போலீசாருக்கும், கைதிகளுக்கு மிடையே கடும் மோதல் நடந்தது. போலீசார் சுட்டதில் ஒரு கைதி

இறந்தான். இக்கலவரத்தில் ஜெயிலர் படுகாயமடைந்தார். இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் வ.உ.சி. கண்ணனூர்ச் சிறைக்கு மாற்றப்பட்டார்.

வ.உ.சி. யும், பாரதியும்

திலகரின் வழிமுறைகளைப் பின்பற்றும் வ.உ.சி.யும், பாரதியும் சிறந்த நண்பர்கள் ஆவர். சிதம்பரனார் சிறையில் படும் துன்பங்களை அறிந்து பாரதி மனம் கலங்கினார். சிறைச்சாலையில் வ.உ.சி. செக்கிழுப்பதைப் பாரதியாரால் பொறுக்கமுடியாமல் இறைவனிடம்,

> மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதுவும்
> நூலோர்கள் செக்கடியில் நோவதுவுங் காண்கிலையோ!
> மாதரையும் மக்களையும் வன்கண்மை யாற்பிரிந்து
> காதல் இளைஞர் கருத்தழிதல் காணாயோ! (ப.80)

என விண்ணப்பம் செய்கிறார்.

மனித நேயம்

திருநெல்வேலிக் கலெக்டர் ஆஷ் 1911 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17 ஆம் நாள் கொடைக்கானலுக்குப் புகை வண்டியில் பயணம் செய்தார். அப்போது, உடன் பயணம் செய்த வாஞ்சிநாதன் மணியாச்சி இரயில் நிலையத்தில் கலெக்டரைச் சுட்டுக் கொன்று, தன்னைத் தானும் சுட்டுக் கொன்று உயிரை மாய்த்தான். இச்செய்தி கேட்ட வ.உ.சி. இச்செயலுக்காக மிகவும் மனம் வருந்தினார். சுதந்திரத் தாகம் ஒவ்வொரு இளைஞனுக்கும் இருக்க வேண்டும் என்ற வ.உ.சி.க்கு, அத்தாகமே பழி வாங்கும் எண்ணமாக மாறியது பிடிக்கவில்லை. வ.உ.சி. சிறையிலிருந்து கொண்டு சி. விஜயராகவாச்சாரியாருக்கு,

> ஆங்கில அதிகாரிகளைக் கொலை செய்வதால் அன்னிய ஆட்சி அழிந்துவிடாது. கொடியவர்களாயினும், அவர் களது உயிருக்கும் தீங்கு செய்யக் கூடாதென்பதே எனது கோட்பாடு. இதைப் புரட்சியில் விருப்பமுடையாருக்கு அறிவியுங்கள் (ப.86)

எனக் கடிதம் எழுதினார். பகைவனுடைய உயிரையும் மதித்த மனித நேயம் உடையவராக வ.உ.சி. விளங்கினார்.

மனச்சாட்சி

வ.உ.சி. 1912 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கண்ணனூர்ச் சிறையிலிருந்து விடுதலை அடைந்தார். விடுதலை பெற்று வந்த வ.உ.சி. யை அவரது உற்ற நண்பன் சுப்பிரமணிய சிவா வரவேற்றார். சிறைத்தண்டனை அனுபவித்ததால் வ.உ.சி. யின் நீதிமன்றத்தில் வழக்காடும் உரிமையான 'சன்னத்து' அரசாங்கத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆதலால் வறுமையினால் துன்பமடைந்தார்.

இச்சூழலில் பெரம்பூர் இரயில்வே தொழிலாளர் சங்கத்தின் துணைத் தலைவராக இருந்து தொழிலாளர்களுக்காக உழைத்தார். மீண்டும் நீதிமன்றத்தில் வழக்காடும் உரிமையைத் திரும்பப் பெற்று, கோயில் பட்டியில் வழக்கறிஞராகப் பணியாற்றி, பின்னர்த் தூத்துக்குடியில் தங்கினார். காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தின்மீது வ.உ.சி.க்கு விருப்பமில்லை. மட்டுமன்றிக் காந்தியடிகளின் தலைமை மீதும் வ.உ.சி.க்கு நம்பிக்கையில்லை. காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்திற்கு ஆதரவு இருந்தபோதிலும், ஒத்துழையாமை இயக்கத்தினால் விடுதலை கிடைக்காதென அறிக்கை வெளியிட்டதுமன்றிக் காங்கிரசை விட்டு விலகினார். ஆனால் காந்தியடிகளிடமும் பிற தலைவர்களிடமும் நட்புடனே காணப்பட்டார். வ.உ.சி. காந்தியடிகளிடம் கடிதம் மூலம் அடிக்கடி தொடர்பு கொண்டிருந்தார். ஒத்துழையாமை இயக்கத்தைப் பற்றி வ.உ.சி. அவர்கள்,

> நாம் அடைய விரும்பும் நமது உரிமைகள் அனைத்தையும் அரசாங்கத்தார் நமக்கு ஒருங்கே தரும் வரையில் நாம் அவரோடு நமது தேச நிர்வாக விஷயத்தில் ஒத்துழைக்க மறுக்க வேண்டு மென்று நமது தற்காலத் தலைவர்கள் (காந்தியடிகளும் அவரைப் பின்பற்றுவோரும்) கூறுகின்றனர். இந்த "ஒத்துழையாமை" தின்பண்டம் முழுவதும் தமக்குத் தரும் வரையில் அதன் ஒரு பகுதியை ஏற்காது தாய் தந்தையரோடு கோபித்துக் கொண்டிருக்கும் குழந்தைகள் செயல் போன்றது (ப.91)

எனக் குறிப்பிடுகின்றார். வ.உ.சி. 1927 ஆம் ஆண்டு மீண்டும் காங்கிரசில் இணைந்து சேலம் மாவட்ட மூன்றாவது அரசியல் மாநாட்டில் தலைமை வகித்தார். ஆனால் இந்த மாநாட்டிற்குப் பிறகு காங்கிரசுடன் தொடர்பு வைத்துக் கொள்ளவில்லை. எனினும், இறுதிவரை ஏகாதிபத்திய எதிர்ப்பாளராகவே இருந்து வந்தார். தேசியம் ஒன்றையே தமது மூச்சாகக் கொண்டிருந்ததால், பிற கட்சிகளின் அழைப்பை மறுத்துவிட்டார்.

நற்குணங்கள்

வ.உ.சி. யிடம் அன்பு, அருள், உழைப்பு, ஊக்கம், கொடை எனும் ஐங்குணங்களும் நிரம்பியிருந்தன. அவருடைய உபதேசங்கள் வறுமையை நீக்கு, உரிமைக்குப் போரிடு, சிறைக்குச் சிறிதும் அஞ்சாதே என்பனவாகும். வ.உ.சி. க்கு சுதேசிக் கப்பல் கம்பெனி வளர்ச்சியில் ஊக்கமூட்டி உதவிய ஆறுமுகம் பிள்ளை, வக்கீல் சன்னத்தைத் திரும்பப் பெற்றுக் கொடுத்த நீதிபதி வாலஸ் துரை, பொருளுதவி புரிந்த வேதியப்ப பிள்ளை ஆகியோர்களின் பெயர்களைத் தம் குழந்தைகளுக்கு ஆறுமுகம் பிள்ளை, வாலீஸ்வரன், வேதவல்லி எனச் சூட்டி நன்றியினைப் புலப்படுத்தினார்.

வ.உ.சி. சிறந்த ஒழுக்க சீலராக வாழ்ந்தார். அவரது மனத்தில் தற்புகழ்ச்சி, ஆடம்பரம், பொறாமை, புறங்கூறல் முதலிய தீய அழுக்குகளுக்கு இடம் இல்லை. அவரிடம் உண்மை உணர்தல், உணர்ந்தவழி நிற்றல், தீமையை எதிர்த்தல், பகைவருக்கும் அருளல் முதலிய நன்னெறிகள் நிரம்பியிருந்தன. வ.உ.சி. தன்னலம் காக்காமல் பிறர் நலம் பேணுபவர். வறுமையில் வாடியபோதும் பிறருக்கு உதவி செய்த வள்ளலாக விளங்கினார். வ.உ.சி.யைத் தண்டித்த நீதிபதி பின்ஹே அவர்கள் வ.உ.சி. யைப் பற்றி,

> பிள்ளையின் பிரசங்கத்தையும் பாரதியாரின் பாட்டையும் கேட்டால், செத்த பிணம் உயிர்த்தெழும்; அடிமைப்பட்ட நாடு ஐந்தே நிமிடங்களில் விடுதலை பெறும்; புரட்சி ஓங்கி எழும் (ப.97)

எனக் கூறியிருப்பதிலிருந்து வ.உ.சி. யின் வீரம் தெரியலாகிறது.

தமிழ்த்தொண்டு

வ.உ.சி. ஒரு சிறந்த கலைஞர். பேச்சுக்கலை, இலக்கியக் கலை, காவியக்கலை, நாடகக்கலை, வீரக்கலை எனும் பல்வேறு கலைகளைத் தன்னிடத்து ஒருங்கே கொண்டவராகக் காணப்பட்டார். தமிழ் மொழிக்குப் பல இலக்கியங்களைப் படைத்து வளம் சேர்த்துள்ளார். கோயம்புத்தூர், கண்ணனூர்ச் சிறைச்சாலைகளில் இருக்கும்போது தனது தாய், மனைவி, நண்பர்களுக்குக் கவிதைகள் மூலம் தன் நிலையை வெளிப்படுத்தியுள்ளார். மேலும், ஈகை, உண்மை முதலிய ஒழுக்கப் பாக்களும், பதி பசு பாசச் செயல்கள், கடவுள் உண்மை, கடவுளுக்குக் காவற்றொழிலை அளித்தல் முதலிய சமயப் பாடல்களுமாகப் பல தனிப் பாடல்களை இயற்றியுள்ளார். பண்டைக்கால நீதிநூற்களுக்கு இணையாக மெய்யறிவு, மெய்யறம் ஆகிய நீதிபோதனை நூல்களைப் படைத்துள்ளார். திருக்குறள் - மணக்குடவர் உரை - அறத்துப்பால், தொல்காப்பியம் எழுத்து - சொல் பொருள் - இளம்பூரணம், இன்னிலை ஆகிய நூல்களைப் பதிப்பித்துள்ளார். ஜேம்ஸ் ஆலன் என்பவரின் ஆங்கில நூல்களை மனம் போல் வாழ்வு, அகமே புறம், வலிமைக்கு மார்க்கம் என மொழிமாற்றம் செய்து வெளியிட்டுள்ளார். மருத்துவத்துறையில் சித்த வைத்தியத்தின் சிறப்பினைப் பறைசாற்றி வந்தார்.

மறைவு

1935 ஆம் ஆண்டில் தூத்துக்குடிக்கு வந்திருந்த காங்கிரஸ் தலைவர் பாபு இராசேந்திரப் பிரசாத் அவர்கள், வ.உ.சி. உடல்நலம் குன்றிக் காணப்பட்டதைக் கேள்விப்பட்டு அவருடைய இல்லத்தில் சென்று நலம் விசாரித்தார். வ.உ.சி. தமது உயிர் பிரியும் நேரத்தில்

'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே' , 'என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்' எனும் பாடல்களைப் பாடச் சொல்லிக் காதுகுளிரக் கேட்டார். பின்னர், தான் இறப்பதற்கு முன்னர்ச் சுதந்திரத்தைக் காணமுடியவில்லையே எனும் ஏக்கத்துடன் 1936 ஆம் ஆண்டு நவம்பர் 18 ஆம் நாள் நள்ளிரவில் காலமானார்.

1939 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21 ஆம் நாள் சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியினர் இராயப்பேட்டையிலுள்ள காங்கிரஸ் மைதானத்தில் வ.உ.சிதம்பரனாருக்கு முக உருவச் சிலை வைத்தனர். எஸ். சத்தியமூர்த்தி தலைமையின் கீழ் டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன் வ.உ.சிதம்பரனாரின் சிலையைத் திறந்துவைத்துப் பேசும்போது,

> சிதம்பரனார் தூய தமிழர். தமிழருக்குரிய ஆண்மையும், ஆற்றலும் ஒரு வடிவமெடுத்து கண்ணுக்குத் தோன்றுமானால், அது சிதம்பரம் பிள்ளையைப் போலத்தான் தோன்றும். நான் இங்கிலாந்தில் இருந்தபோதும், அதற்குப் பின்னர் கொஞ்சநாள் வரையிலும் அரசியலில் புரட்சிக்காரனாகவே இருந்தேன். அதற்குக் காரணம் சிதம்பரம் பிள்ளை நடத்திய தூத்துக்குடிப் புரட்சியே ஆகும். எனவே சிதம்பரனார், எனது முதல் அரசியல் குரு என்பதைப் பெருமையுடன் சொல்லிக் கொள்கிறேன். சிதம்பரனார் நம் கண்ணிலிருந்து மறைந்தாலும் அவரது ஆவி நம்மைச் சுற்றி உலவுகின்றது. நாம் நடத்தும் சுதந்திரப் போரில் சிதம்பரனார் ஆவி வடிவில் வந்து நின்று நமக்குத் துணை புரிகிறார் என்று நான் திடமாக நம்புகிறேன். (ப. 109)

எனக் குறிப்பிட்டார்.

1949 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 9 ஆம் நாள் கவர்னர் ஜெனரல் இராஜாஜி தூத்துக்குடிக்கும் இலங்கைக்கும் போக்குவரத்திற்குப் பயன்படும் வகையில் கப்பலை மிதக்க விட்டார். அக்கப்பலின் பெயர் "வி.ஓ. சிதம்பரம்" என்பதாகும். கப்பல் போக்குவரத்து துவக்க விழாவில் வ.உ.சி.யின் பெருமையை, உழைப்பை, கனவை இராஜாஜி புகழ்ந்து பேசினார். வ.உ.சிதம்பரனார் கண்ட கனவு பலித்தது.

இந்திய நாட்டு விடுதலை வரலாற்றில் வ.உ.சி. யின் தாகம் எல்லையற்றது. அத்தகு ஒரு தியாகச் செம்மலின் வாழ்வில் ம.பொ.சி. யின் உணர்வு இரண்டற ஒன்றிக் கலந்த தன்மையை இவ் வரலாற்று நூலில் காணமுடிகிறது.

இராஜாஜி

இராஜரிஷியாகவும், தீர்க்கதரிசியாகவும், அறிவின் சிகரமாகவும் விளங்கி, உலகப் புகழ் பெற்றவர் இராஜாஜி ஆவார். இவருடன் ம.பொ.சி. சுமார் 40 ஆண்டுகளுக்கும் மேலாக அரசியல், ஆன்மிகம், இலக்கியம் ஆகிய பல்வேறு துறைகளில் தொடர்புடையவராகக் காணப்பட்டார். இத்தொடர்பை ஆதாரமாகக் கொண்டு செங்கோல் எனும் இதழில் ம.பொ.சி. 15-12-1985 முதல் 11-1-1987 இதழ் வரை 41 தொடர் கட்டுரைகள் எழுதினார். இக்கட்டுரைகளைத் தொகுத்து ம.பொ.சி. "நானறிந்த ராஜாஜி" எனும் தலைப்பில் நூலாக வெளியிட்டார்.

நூலின் சிறப்பு

இராஜாஜியின் வரலாற்றுத் தொடர்புடைய நிகழ்ச்சிகளை மறைக்காமல் ம.பொ.சி. இந்நூலில் நடப்பியலுடன் விவரித்துள்ளார். அரசியல், பொருளாதாரம், மொழிப் பிரச்சினைகளிலே ம.பொ.சி.க்கும் இராஜாஜிக்கும் இடையில் நிலவிய ஆழமான கருத்து வேற்றுமைகளையும் விமரிசனம் செய்துள்ளார். சான்றாக, இராஜாஜி வாழ்ந்த காலத்திலேயே அவரால் எழுதப்பட்டும் பேசப்பட்டும் பத்திரிகைகளில் வெளியான செய்திகளைச் சேகரித்தும் தந்துள்ளார். இந்நூலின் சிறப்புப் பற்றிப் பதிப்புரையில் வே.சுப்பையா அவர்கள்

> **சரித்திர புருஷர் ஒருவரைப் பற்றிச் சரித்திரம் படைக்கின்ற ஒரு மகான் எழுதிய இந்நூல் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகும்** (ப.8)

எனக் குறிப்பிட்டுள்ளார்.

நூலின் நோக்கம்

மூதறிஞர் இராஜாஜி அவர்களையும் சாதாரண மக்களையும் இணைக்கும் பாலமாக விளங்கியவர் ம.பொ.சி. அவர்களாவார். விடுதலைப் போரில் சிறைபுகுந்த இராஜாஜி எனும் தியாகியின் அருமை பெருமைகளைப் பாமர மக்களும் புரிந்து கொள்ள வேண்டும் எனும் ஆவலுடன் இந்நூலைப் படைத்துள்ளார்.

> **தமிழர் ஒவ்வொருவரும் இந்நூலைப் படிக்க வேண்டும் என்பது என் விருப்பம். அரசியலிலே கருத்து**

> வேற்றுமை களுக்கு இடையேயும் ஒரு தலைவரும், அவரைப் பின்பற்றும் அரசியல்வாதியும் எப்படி அன்போடு பழக வேண்டும் என்பதற்கு ராஜாஜியும் நானும் வழிகாட்டிகளாக அமைந்திருக்கிறோம் (ப.6)

எனும் ம.பொ.சி. யின் கருத்து, நூல் எழுதப்பட்டதன் நோக்கத்தைத் தெளிவுறுத்துகிறது. எனவே அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள் நானறிந்த இராஜாஜி எனும் இந்நூலைத் தவறாமல் படித்துப் பயனடைய வேண்டும் என்பது ம.பொ.சி. யின் கருத்தாகும்.

நுழைவாயில்

இந்நூலின் நோக்கம் இராஜாஜியின் வாழ்க்கையைப் பற்றியதாக இருந்தாலும், குறிப்பாக இராஜாஜியிடம் ம.பொ.சி. கொண்டிருந்த 40 ஆண்டுகால அனுபவமும் இணைந்துள்ளது. இராஜாஜியின் வாழ்க்கையுடன் தொடர்புடைய சேலத்தை இந்நூலின் நுழைவாயிலாக்கி இருப்பதாகக் கூறுகிறார்.

இந்நுழைவாயிலில் சேலம் நகரம் இருவேறு சக்கரவர்த்தி களால் பெருமைப்பட்டு இருப்பதாகக் குறிப்பிடுகிறார். அவர்களில் காலத்தால் முற்பட்டவர் சேலம் சி. சக்கரவர்த்தி விஜயராகவாச் சாரியார்; காலத்தால் பிற்பட்டவர் சக்கரவர்த்தி இராஜகோபாலாச் சாரியார் ஆவார். இவர்கள் இருவருமே இந்து சமுதாயத்தில் இருக்கும் தீண்டாமையை ஒழிக்க அரும் பாடுபட்டவர்கள். இந்திய அரசியலிலே சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பல திருப்பங்களை ஏற்படுத்தியவர்கள். தேசவிடுதலையைத் துரிதப்படுத்தியவர்கள். தேசத்தின் தந்தை எனப் போற்றப்படும் காந்தியடிகளின் அன்பிற்குப் பாத்திரமானவர்கள். சேலத்துக் கிழவர் என அழைக்கப்படும் சி. விசயராகவாச்சாரியார் வகுப்புக் கலவர வழக்கில் இந்து-முஸ்லீம் மக்களுக்கிடையே சமரசத்தை ஏற்படுத்த நீதிமன்றம் சென்றார். இதை விரும்பாத அதிகார வர்க்கத்தினர் குற்றவாளிகளில் அவரையும் ஒருவராக்கிக் கிரிமினல் வழக்கு தொடர்ந்தனர். வ.உ.சி. தொடங்கிய சுதேசிக் கப்பல் கம்பெனிக்குச் சேலம் நகரிலுள்ள பங்குதாரர்களைத் திருப்பித் தந்த சிறப்பிற்குரியவர்க்கு 10 ஆண்டுக் காலம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அதைக் கண்டு அஞ்சாமல் நீதிபதியின் தீர்ப்பை ஆட்சேபித்துச் சென்னை உயர் நீதி மன்றத்தில் மேல் வழக்குத் தொடுத்து நீதிபதி விடுத்த தண்டனையை ரத்து செய்தார்.

ஒத்துழையாமைப் போரின் தொடக்கத்தில் தேசியக் காங்கிரசின் பெருந்தலைவர்களிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டது. இராஜாஜியின் தலைமையிலேயே மற்றொரு சாரார் ஒத்துழையாமைப் போர் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்று வற்புறுத்தினர். இச்சூழலில் சேலத்துக் கிழவர் விஜயராகவாச்சாரியார் தேசியக்

காங்கிரஸ் பிளவுபடுவதை விரும்பாததால் அரசியல் வாழ்க்கையிலிருந்து விலகிக் கொண்டார். சேலம் தந்த இரட்டையர்களில் இளையவரான சி. இராஜகோபாலாச்சாரியார் தமது இறுதி மூச்சு உள்ளவரை அரசியல் வாழ்வோடு தொடர்பு உடையவராகக் காணப்பட்டார்.

பெயருக்குத் தனி வரலாறு

இராஜாஜியின் இயற்பெயர் இராஜகோபாலன் என்பதாகும். இவர் வாழ்ந்த 95 ஆண்டுக் காலத்தில் அடைந்த மாறுதல்களை நினைவு கூர்ந்தால் அதில் இராஜாஜியின் தனி வரலாறு இருக்கிறது என ம.பொ.சி. குறிப்பிட்டு அதனை விளக்குகிறார்.

தொரப்பள்ளி எனும் குக்கிராமத்தில் பிறந்த இராசகோபாலன் சென்னைச் சட்டக் கல்லூரியில் பட்டம் பெற்றுப் பலராலும் புகழ்ந்து பேசப்படும் அளவிற்குப் பாராட்டுக்குள்ளானார். குடும்பப் பருவத்தை அடைந்தபோது இராசகோபாலச்சாரி என அழைக்கப்பட்டார். சட்டத்தில் தமக்குள்ள நுண்ணறிவை வெளிப்படுத்தியவுடன் இராச கோபாலச்சாரியார் எனும் பெயர் ஆச்சாரியார் என்னும் அளவில் சுருங்கியது. பின்னர், அரசியல் உலகில் ஆச்சாரியாரின் செல்வாக்கு மிகுந்தவுடன் சக்கரவர்த்தி இராசகோபாலச்சாரியார் எனும் பெயராக மாறியது.

ஆங்கில மரபு, அரசியல் உலகில் இந்தியரின் நாகரிகத்தில் சில மாற்றங்களை ஏற்படுத்தியபோது சக்கரவர்த்தி இராசகோபாலச் சாரியார் “சி.ஆர்” எனச் சுருங்கியது. ஒத்துழையாமைக் கொள்கையில் காட்டிய உறுதியும் காந்தியாசிரமம் அமைத்துக் காந்தியைப் பின்பற்றிய பண்பும் இருந்ததால் “தென்னாட்டுக் காந்தி” என்று அழைக்கப் பட்டார். இது தவிரப் பட்டப்பெயர்கள் பலவும் உண்மைப் பெயருக்கு அடைமொழிகளாயின. அவை ‘சக்கரவர்த்தி இராஜாஜி’, தென்னாட்டுக்காந்தி இராஜாஜி’, ‘பாரதரத்னா இராஜாஜி’, ‘மூதறிஞர் இராஜாஜி’, ‘டாக்டர் இராஜாஜி’ என்பனவாகும்.

இராஜாஜி - பெரியார் நட்பு

பெரியார் காங்கிரசில் இருந்த காலத்தில் அவரும் இராஜாஜியும் சேர்ந்து நாட்டின் விடுதலைக்காகத் தொண்டாற்றினர். அப்போது பக்தி விசுவாசத்தோடு இராஜாஜியைப் பெரியார் ஆச்சாரியார் என அழைப்பது வழக்கம். ஆச்சாரியார் எனும் சாதிப் பெயருக்குக் குருநாதர் எனும் பொருளும் உண்டு. பொது மேடைகளிலும் ‘இராஜாஜி என் அரசியல் குரு’ எனப் பெரியார் சொல்லியுள்ளார். அரசியலில் இராஜாஜியும், பெரியாரும் சந்திக்க முடியாத இரு துருவங்களாக வாழ்ந்த போதிலும், அன்பும் பண்பும்

உடையவர்களாகவே இருந்தனர். பெரியார் தமது அரசியல் குருவாக இராஜாஜியைக் கருதினார் என்றால், இராஜாஜியும் பெரியாரைத் தம் அன்புக்குரிய சீடராக ஏற்றுக் கொண்டு தமது வாழ்நாள் முழுவதும் அவரிடம் அன்பு காட்டி வந்தார்.

இராஜாஜியின் நூலும் ம.பொ.சியும்

தமிழ்நாட்டுத் தலைவர்களிலே திலகர் சகாப்தத்தில் முதன் முதலில் சிறை சென்று கடுந் தண்டனை பெற்றவர் வ.உ.சிதம்பரனார் ஆவார். அதேபோல் 1919 இல் தோன்றிய காந்தி சகாப்தத்தில் முதன் முதலில் சிறைபுகுந்த தமிழர் இராஜாஜி ஆவார். வேலூர்ச் சிறையில் எழுதிய நாட்குறிப்பிலே தான் 'ஸோக்ரதர்' பற்றிய நூல் எழுதி யிருப்பதாகக் கூறுகிறார். அவருடைய நாட்குறிப்பு 'சிறையில் தவம்' எனும் பெயரில் வெளிவந்தது.

சாக்ரட்டீஸ் என்னும் பெயருடைய கிரேக்க ஞானியைத்தான் தமிழில் ஸோக்ரதர் என்று இராஜாஜி திருத்தியிருக்கிறார். ஞானியர்கள் பற்றிய வரலாற்று நூல்கள் என்றால் உணவையும் மறந்து ம.பொ.சி. படிப்பார். இராஜாஜி எழுதிய இந்நூலைப் படிக்க ம.பொ.சி. விரும்பினார். வறுமையின் காரணமாக இரவலாகத்தான் அந்நூலினை வாங்கிப் படிக்க முடிந்தது. இந்நூலுக்குத் திரு.வி.க. எழுதிய அணிந்துரையே ம.பொ.சி. இந்நூலைப் படிப்பதற்கு மற்றுமொரு காரணமாகும். இவ்அணிந்துரையில் திரு.வி.க.,

> அன்பர் இராசகோபாலாச்சாரியார் இந்நூலின் ஊடே
> பொன் சுவரில் மணியிழைத்தாற்போல வரைந்துள்ள சில
> அரிய கருத்துகளும், எடுத்துக்காட்டியுள்ள ஆன்றோர்
> மொழிகளும் பொன்னே போல் போற்றத்தக்கன (ப.45)

என்று குறிப்பிடுவதோடு மட்டும் அல்லாமல் இராஜாஜியைத் 'தமிழ் நாட்டு ஸோக்ரதர்' எனவும் கூறுகிறார். நூலின் தொடக்கத்திலே திரு.வி.க.வின் அணிந்துரையைப் பத்துப் பக்கங்களில் தந்த நூலின் நாயகர், நூன்முகத்தின் இரண்டு பக்கங்களில் சத்தியாகிரகி பற்றிப் புது விளக்கம் தருகிறார்.

> சத்திய நெறியில் நின்று அச்சம் என்பது சிறிதும் இல்லாமல்,
> அதர்மத்தைக் கண்டவிடத்து அதனிடத்துப் போர்புரிந்து
> நிற்கிறவன் சத்தியாகிரகி எனப்படுபவன் (ப.49)

என்கிறார் தன்னுடைய நூலில் இராஜாஜி. மேலும் இவர் சத்தியாக்கிரகி எவ்வாறு வாழவேண்டும் என்றால்,

> இன்னா செய்தாரை யொறுத்த லவர்நாண
> நன்னயஞ் செய்து விடல் (குறள். 314)

என்ற திருக்குறள் கருத்தின் வழி நிற்றலும், அநீதி செய்வாருடைய வலிமையைக் கண்டு அஞ்சாமல், தனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அநீதிக்கு இரையாக்கி மற்றவர்களைக் காத்தலும் வேண்டும் எனக் கூறுகிறார்.

உயர் பண்பு கொண்டவர்

அடிமை வாழ்வு ஒழியப் பாடுபட்ட இராஜாஜி உயர் பண்பு கொண்டவராக வாழ்ந்தார். பிறந்த குடும்பத்தால் வந்த சக்கரவர்த்தி எனும் பெயரால் மக்கள் அழைத்த போதும், குருநாதர் எனும் பொருளைத் தரும் ஆச்சாரியார் என்று அழைத்த போதும், மனித குலத்தின் மாணிக்கமான காந்திஜியுடன் ஒப்பிட்டுத் தென்னாட்டுக் காந்தி என அழைத்த போதும் தன்னுடைய பெயருக்கு அடைமொழியாக அவை நிலைத்துவிட அவர் அனுமதிக்கவில்லை. இராஜாஜி புகழுக்கு மயங்காத உயர் பண்பு கொண்டவர்.

இயற்கையாகவே அதிகாரப் பதவிகளை ஏற்கும் சுபாவம் இராஜாஜிக்கு இருக்கவில்லை. அதிகாரப் பொறுப்பைத் தம்முடன் ஒத்துப் போகும் மனமுடையவர் தலையிலே சுமத்தி விட்டு, அவரிடம் வேலை வாங்கவே விரும்புவார். தமது வாழ்நாளில் எந்த ஒரு பதவியையும் தாமாக விரும்பி, பிறரிடம் போட்டியிட்டுப் பெற்றதில்லை.

பதவியில் நாட்டமில்லாதவர்

இராஜாஜி தாம் வகித்த எந்த ஒரு பதவியிலும் முழுமையாக அமர்ந்து இருந்ததில்லை. தமிழ்நாடு காங்கிரஸ் தலைமைப் பதவியில் தொடர்ந்து இருப்பதை விரும்பாதவர். தலைவர் பொறுப்பில் இரண்டு முறை இருந்தபோதும் இருவேறு காரணங்களுக்காக இடைக் காலத்திலேயே அப்பதவியைத் துறந்தார். மட்டுமன்றி, பிறர் அப் பதவியில் இருக்கவும் உறுதுணை புரிந்தார். 1937 இல் சென்னை மாகாண முதலமைச்சர் பதவியில் அதற்குரிய காலம் முழுவதும் அவர் இருக்கவில்லை. சுமார் இரண்டரை ஆண்டுக் காலம் இருந்தபின், காங்கிரஸ் மேலிடத்தின் முடிவுப்படி இராஜினாமா செய்தார். 1947 இல் மேற்கு வங்க மாநிலத்தின் ஆளுநர் பதவியில் ஓராண்டுக் காலம்கூட அமர்ந்திருக்கவில்லை. 1952 இல் இரண்டாவது முறையாகச் சென்னை மாகாண முதல்வர் பதவியை அவர் ஏற்று இரண்டாண்டுக் காலத்தில் அப்பதவியிலிருந்து தாமாகவே விலகிக் கொண்டார். 'இராஜினாமாவைச் சட்டைப் பையில் வைத்துக் கொண்டுதான் பதவியிலிருக்கிறேன்' என்று அடிக்கடி சட்ட மன்றத்தில் சொன்ன ஒரே முதல்வர் இராஜாஜிதான்.

1934 இல் அனைத்திந்தியத் தேசியக் காங்கிரஸ் மகாசபையின் தலைவர் பதவிக்கு இராஜாஜியை நியமனம் செய்யக் காந்திஜியும், சர்தார் படேலும் விரும்பினர். ஆனால், இராஜாஜி தன்னால்

அத்தலைமைப் பதவியை ஏற்க முடியாது என மறுத்துக் காந்திஜிக்கு எழுதிவிட்டார். அதற்கு அவர் குறிப்பிட்ட காரணம்,

> இந்தி தெரியாத நான் காங்கிரஸ் தலைவர் பதவியி லிருந்தால், சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள சாமான்யர் களோடு என்னால் தொடர்புகொள்ள முடியாமல் போய் விடும். அதனால் காங்கிரஸ் பலவீனப்பட்டுவிடும் (ப.100)

என்பதாகும். 1936 இல் இரண்டாவது முறையாக மேலிடத்துத் தலைவர்கள் தலைமைப் பொறுப்பை ஏற்க வற்புறுத்தினர். அப்போதும் அதை மறுத்து விட்டார். இராஜாஜி தம் வாழ்க்கையில் ஒரு தடவையும் காங்கிரஸ் தலைவர் பதவியை வகித்ததில்லை.

எளிதில் நம்பமாட்டார், நம்பினால் விடமாட்டார்

இராஜாஜி பிறரைச் சந்தேகக்கண் கொண்டு பார்க்கும் குணம் உடையவர். இவர் ஒரு கிரிமினல் வக்கீல். அதனால்தானோ இவர் தன்னை நெருங்கி வருபவர்களைப் பல முறை சந்தேகித்து, அதன் பின்னர் அவர்களைச் சோதித்து, பின்னரே நண்பராக்கிக் கொள்வார் என ம.பொ.சி. குறிப்பிட்டுக் கூறுகிறார். காரணம் என்னவெனில், தன்னை முதல் சந்திப்பிற்குப் பின்னரும் நண்பராக ஏற்றுக் கொள்ளாமையே ஆகும். ம.பொ.சி. ஏற்பாடு செய்யும் ஜில்லா காங்கிரஸ் கூட்டங்களிலே இராஜாஜி கலந்து கொள்ளும்போது, செயலாளன் என்ற முறையில் கூட்டத்தின் முடிவில் ம.பொ.சி. நன்றி சொல்ல முற்பட்டால் அதற்கு முன்னரே தாம் பேசி முடிந்ததும் 'இத்துடன் இக்கூட்டம் முடிந்தது' என்று இராஜாஜி கூறிவிடுவார். 'நன்றியுரை நிகழ்த்துவது திட்டமிட்டுச் செய்யும் சுயவிளம்பர ஏற்பாடு' என்பது இராஜாஜியின் கருத்து. இதுபோல எத்தனையோ சோதனைகளைச் சந்தித்த பின்னர்தான் ம.பொ.சி. இராஜாஜியின் நம்பிக்கைக்குரியவர் ஆனார். ஆனால் அதன் பிறகு ம.பொ.சி.யிடம் வாழ்நாள் முழுவதும் பேரன்பும் பெருமதிப்பும் உடையவராகக் காணப்பட்டார். பெரியோர்கள் ஆராய்ந்த பிறகு நட்புக் கொள்வார்களே தவிர நட்புக் கொண்டபின் ஆராய மாட்டார்கள். இக்கருத்திற்குச் சிறந்த முன்மாதிரி இராஜாஜி என்றால் மிகையாகாது.

தமிழ்ப்பற்று நிறைந்தவர்

அமுதம் போன்ற மொழியான தமிழ்மொழியின் மேல் பற்று நிறைந்தவர் இராஜாஜி ஆவார். தமது பெயருக்கு முன்னே வரும் தலையெழுத்தைத் தமிழ்ப்பற்று முதிர்ச்சி அடைந்தபோது 'சி' என்று எழுதாமல் 'ச' என்னும் தமிழ் எழுத்தையே எழுதி வந்தார். அதுபோலத் தம் பெயரை 'ராஜாஜி' என எழுதாமல் 'இராஜாஜி' என்றே எழுதினார். ஆனால் அவர் இராசாசி என எழுதுவதை விரும்பவில்லை. தமிழின் தனிச்சிறப்புகள் என்றும் உலக அளவில்

நிலைத்து நிற்க வேண்டும் எனும் விருப்பத்தால் தனித்தமிழ் எனும் கொள்கையினரானார்.

இராஜாஜி, ஆரம்பக் கல்வி முதல் பட்டப் படிப்புவரை பயிற்று மொழியாகத் தமிழ்மொழியே இருக்க வேண்டும் என்ற உறுதிப்பாடு உடையவர். மட்டுமன்றி மருத்துவம், பொறியியல் ஆகிய தொழில் கல்விக்கும் தமிழே பயிற்று மொழியாக இருக்க வேண்டும்; இல்லாத சொற்களைப் படைத்துக் கொள்ள முடியும்; அதற்கான வேர்ச்சொற்கள் தமிழில் இருக்கின்றன என்பது இராஜாஜியின் தமிழ்மொழிக் கொள்கையாகும்.

சென்னை மாகாணத்தின் பிரதமராக 1937 இல் பதவியேற்ற போது மூன்றாம் வகுப்பு முதல் ஆங்கிலம் கட்டாயப் பாடமாக இருந்ததனை மாற்றினார். பள்ளிக் குழந்தைகளுக்கென, 'தம்பி, வா!', 'இதையும் படி' எனும் பெயர்களில் பாடநூல்களை எழுதி அவற்றைப் பள்ளிகளில் பாடமாக ஆக்கினார். தமிழின் மீது தமக்கிருந்த பற்றினை நிரூபித்துக் காட்டத் 'தமிழில் முடியுமா?' எனும் பெயரில் ஒரு நூல் எழுதி வெளியிட்டார். வடமொழி - ஆங்கிலம் கலப்பின்றித் தூய தமிழிலேயே விஞ்ஞான நூல்களை எழுத முடியும் என்பதனை அந்நூலில் விவரித்துள்ளார். இவ்வாறு தமிழ்ப்பற்று நிறைந்தவராக இராஜாஜி காணப்பட்டார் என்பதை ம.பொ.சி. தம் நூலில் குறிப்பிடுகிறார்.

இராஜாஜி முதலமைச்சராக இருந்தபொழுது பள்ளிகளில் தாய்மொழியின் மூலம் கற்றுக் கொடுக்க முயற்சிகள் பல எடுத்தார். 1939 இல் அதற்கான உத்தரவைச் சென்னை மாகாணக் கல்வித்துறை இயக்குனர் ஸ்டாத்தம் எனும் ஆங்கிலேயருக்கு அனுப்பினார். அவர் தாய்மொழியின்மூலம் கல்வி கற்பதால் உண்டாகும் இடையூறுகளைச் சுட்டிக்காட்டி, ஆங்கிலமே போதனா மொழியாகத் தொடர வேண்டும் எனக் குறிப்பு எழுதி அனுப்பினார். அதற்கு இராஜாஜி 19-10-1939 அன்று மறுப்புக் கடிதம் எழுதினார். அதிலிருந்து சில பகுதிகள் பின் வருமாறு:

> தென்னிந்திய மொழிகளில் தக்க பாடப் புத்தகங்கள் பிரசுரமாகி, விஞ்ஞானத் துறைகளுக்கான அகராதிகள் வழுக்கப்படுகிற வரையில், பௌதிக விஞ்ஞான கணிதங்களைக் கற்பிக்க தாய்மொழியை உபயோகிக்க இயலாது' என்று நீங்கள் சொல்லு கிறீர்கள். இது ஒரு இக்கட்டான நிலை. அவ்வளவு அசௌகரிய மாகவும் துப்புரவில்லாமலும் இருப்பினும், ஏதாவது ஒரு கட்டத்தில் ஆரம்பித்தாலொழிய இந்த இக்கட்டுத் தீராது. பாடபுத்தகங்கள் எழுதுவோர் துறவிகளல்லர், அவற்றிற்குக் கிராக்கி உண்டானால் ஒழிய அவை எழுதப்படும் என்று

எதிர்பார்ப்பதற்கில்லை. தமிழில் போதிப்பது தொடங்கினாலன்றி, தமிழில் எழுதிய பாடப் புத்தகங்களின் தேவை புலப்படாது.

நாட்டு மொழிகளில் பௌதிக விஞ்ஞானங்களைக் கற்பித்தால், மாணவர் ஆங்கில இலக்கணத்தையும் தேர்ந்து கொள்வதில் இடையூறு ஏற்படுமா என்ற விஷயத்தைப் பற்றி நாம் ஒரு திடமான முடிவுக்கு வர வேண்டும். தற்போது உலக வழக்கத்திலுள்ள ஆங்கிலக் கலைச் சொற்களை அந்தந்தப் பிரதேச மொழிகளுக்கு ஏற்ப எடுத்து ஆள்வதில் குற்றமொன்று மில்லை. இப்படிச் செய்வதால் ஆங்கில அறிவுக்குப் பாதகம் ஒன்றும் விளையாது. சில பாடங்களைக் கற்பிக்கும்போது மணிப்பிரவாளம் ஏற்படுவதால் ஆங்கில மொழிப்பயிற்சி அப்படி யொன்றும் கெட்டுப் போகாது. அப்படியே கொஞ்சம் நேரிட்டாலும் நஷ்டத்தைவிட லாபமே அதிகம். (பக். 176-177)

இவ்வாறு எழுதியதோடன்றி, அதற்கான உத்தரவையும் உடனடியாகப் பிறப்பிக்கக் கட்டளையிட்டார். ஆனால் இது நடைபெறவில்லை. காரணம், இராஜாஜி ஆணை அனுப்பிய ஒரு மாதத்திற்குள்ளாகக் காங்கிரஸ் அமைச்சரவை பதவிப் பொறுப்பிலிருந்து வெளியேறியது. ஆங்கில ஆதிக்கத்தை அகற்றி, அந்த இடத்தில் தமிழைக் கொண்டுவர இராஜாஜி தமது கடைசிநாள் வரை தீவிரக் கொள்கை உடையவராக விளங்கினார்.

ஆங்கிலத்தை அகற்றித் தமிழுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என 5-3-1955 இல் சென்னையிலுள்ள மாதவபுரம் இளைஞர் சங்க ஆண்டுவிழாக் கூட்டத்தில் அறிஞர் உ.வே. சாமிநாதையரின் உருவப்படத்தைத் திறந்து வைத்து இராஜாஜி பேசினார். அதிலிருந்து சில பகுதிகள்:

ஒருவர் இன்னொருவருடன் சாதாரணமாகத் தமிழில் பேசும் போதுகூட ஆங்கிலச் சொற்களைக் கலந்து பேசும் வழக்கத்துக்கு நாம் அடிமையாகிவிட்டது கண்டிக்கத்தக்கது.

தமிழ் மொழி உயிர்க் களையுள்ளது. வளர்ந்தோங்கும் தன்மை வாய்ந்தது. இது குறித்துத் தமிழர்கள் பெருமையடையலாம். ஆனால், பேசும்போது அதில் ஏராளமான ஆங்கிலச் சொற்களைக் கலந்துவிடுகிறோம். 'நேரம்', 'வேகம்' போன்ற வார்த்தைகளிருக்க, படிக்காதவர்கள்கூட 'டைம்','ஸ்பீட்' என்று சொல்லத் தொடங்கிவிட்டனர். இது உயிருள்ள மொழியின் அறிகுறியல்ல. தமிழ் மொழியின் வளர்ச்சி என்று இதனைக் கருத முடியாது. இது கோரமான ராட்சஸ வளர்ச்சிதான்.

வெகுநாள்பட்ட நோயாளி அந்த நோய்க்குப் பழக்கப் பட்டவனாகி விடுகிறான். அந்த வியாதியையே தனது உடலின் இயற்கை நிலை என்று கருதிவிடுகிறான். தாய்மொழியுடன் ஆங்கிலத்தைக் கலந்து பேசுவது நாள்பட்ட நோயாகிவிட்டது. இந்த நோயை உடனே குணப்படுத்திக் கொள்ள வேண்டும்.

'மோட்டார்' போன்ற சில வார்த்தைகளை நாம் ஏற்றுக் கொள்வதில் தவறில்லை. ஆனால் 'குளிக்கிறார்' என்பதற்கு 'பேத்திங் பண்ணுகிறார்' என்று சொல்வது ஆபாசமாக இருக்கிறது.

நீங்கள் இந்தக் கூட்டத்திலிருந்து வெளியே போகும்போது உங்களுடைய சொந்தச் செருப்புக்களைத் தேடி மாட்டிக் கொண்டால்தான் பொருத்தமாக இருக்கும். பிறருடைய செருப்புக்களை உங்கள் கால்களில் மாட்டிக்கொண்டு நடந்தால் ஆபாசமாகத்தான் இருக்கும். அதுபோல, தமிழில் பேசும்போது கண்டபடி அந்நியச் சொற்களைக கலந்து பேசுவது ஆபாசமாகும். (பக். 190-191)

ஆன்மஞானி

இராஜாஜியின் இல்லத்தில் சென்று அவரோடு உரையாடிப் பழகிய ஒவ்வொரு சூழலிலும் ஒரு ஞானியின் தவச்சாலைக்குள் சென்று தரிசனம் காண்பது போல் தன் மனம் கருதியது என்று ம.பொ.சி. குறிப்பிடுகிறார். வடமொழியில் உள்ள பகவத் கீதையைப் பழகு தமிழில் மொழிபெயர்த்து அதற்குக் 'கைவிளக்கு' எனப் பெயரிட்டார். இந்நூலைப் பலமுறை படித்திருப்பதாக ம.பொ.சி. குறிப்பிடுகிறார். கீதா உபதேசங்களைப் பளிச்சென இந்நூல் காட்டுகிறது என்கிறார்.

இராஜாஜி எழுதிய 'ஸோக்ரதர்' எனும் நூலைப் படிப்பதற்கு முன்னர் ம.பொ.சி. ஸோக்ரதரை நாத்திகராகவே கருதினார். ஸோக்ரதரைப் பற்றிக் குறிப்பிடுவதற்குப் பற்றற்றவர்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்குப் பட்டினத்தடிகளின் பாடலைக் குறிப்பிடுகின்றார்.

மாத்தா னவத்தையு மாயாபுரியின் மயக்கத்தையு
நீத்தார் தமக்கொரு நிட்டையுண்டோ நித்த னன்புகொண்டு
வேர்த்தாற் குளித்துப் பசித்தாற் புசித்து விழிதுயின்று
பார்த்தா லுலகத் தவர்போலிருப்பர்பற் றற்றவரே (ப.56)

என்று எடுத்துக்காட்டியதுடன் உண்மையான துறவுக்கு 'மழித்தலும் நீட்டலும் வேண்டா' என்ற வள்ளுவர் வாக்கையும் பயன்படுத்து கிறார் இராஜாஜி. இதனைப் படித்த பிறகுதான் ம.பொ.சி.க்கு

இராஜாஜி தெய்வ நம்பிக்கை உடையவர்; மூடநம்பிக்கைகளைக் கண்டிப்பவர் என்பது புலனானதாகக் கூறுகிறார். இவ்வாறு பட்டினத்தாரின் பாடலை எடுத்துக்காட்டும் ஆன்மஞானியாகவே காணப்படுகிறார்.

இதுமட்டுமன்றி இராஜாஜி 'உபநிடதப் பலகணி' எனும் நூலும் எழுதியுள்ளார். இதனைப் படித்த ம.பொ.சி. தம் மனத்தில் படிந்து கிடந்த அக இருளைப் போக்க இந்நூல் பயன்பட்டது என்கிறார். மேலும் தமிழ் மொழியில் வியாச பாரதத்தையும், வான்மீகி இராமாயணத்தையும் எழுதினார். இதற்கு முன்னர் இவ்விரு காப்பியங்களையும் பலர் எழுதியிருந்தாலும் இராஜாஜியின் நூலில் ஆங்காங்கே விளக்கங்கள் கொடுத்திருப்பதினால் படிப்பதற்குச் சுவையாகக் காணப்படுகின்றன.

உயர் சாதியில் பிறந்திருந்தும் தாழ்ந்த சாதியிடம் காட்டிய அன்பும், பாரத தேசத்தின் கவர்னர் ஜெனரலாக இருந்த போதும், மிதிலாபுரி மன்னன் ஜனகனைப் போன்று அந்தப் பதவியிலே பற்றுக் கொள்ளாமல் ஆன்மிகத்தில் ஆழ்ந்து, விளாம்பழமும் ஓடும் போல வாழ்க்கை நடத்தியதும் அவரை ஆன்ம ஞானியாகக் காணும்படிச் செய்தன என்கிறார் ம.பொ.சி.

தாழ்த்தப்பட்டவர்களிடம் அன்பு காட்டும் அறிவாளர்

இராஜாஜி பிறப்பால் உயர் குலத்தைச் சேர்ந்தவராக இருந்த போதிலும், தம்மிலும் தாழ்ந்தோராகக் கருதப்பட்ட வி.ஐ. முனுசாமி பிள்ளை, ஜே. சிவசண்முகம்பிள்ளை ஆகியோரிடம் அன்புடையவராக இருந்தார். அவர்களை மிகவும் மதிப்புடன் நடத்தி, அவர்களுக்கு உயர் பதவிகள் கொடுத்து, அவர்கள் உயர்வுக்கு உதவினார்.

இந்தியாவின் கவர்னர் ஜெனரலாகப் பதவிவகித்தபோது இராஜாஜி தமக்கு உதவியாக ஏ.டி.சி. என்னும் உயர் பதவியில் ஒரு தாழ்த்தப்பட்ட சமூகத்தினரையே நியமித்தார். இராஜாஜி முதல்வராக இருந்தபோது அவர் கொண்டு வந்த சமூக, சமய, பொருளாதாரச் சட்டங்கள் சான்றாக ஆலயப் பிரவேசச் சட்டம், மதுவிலக்குச் சட்டம், விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம், தஞ்சை-பண்ணையாள் உழவர் பாதுகாப்புச் சட்டம், அரைநாள் கல்வித் திட்டம் போன்ற சட்டங்கள் பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு, மிகமிகப் பிற்படுத்தப் பட்ட சாதியினருக்கு நன்மை செய்வதாக இருந்தன.

சிறந்த சமதருமவாதி

இராஜாஜி சமுதாயத்தில் சமத்துவம் ஏற்படவேண்டும் என்ற எண்ணம் உடையவர். உயர்வு தாழ்வோடு கூடிய சாதி

வேற்றுமைகளை இராஜாஜி வெறுத்து வந்ததோடு கொடுமையை ஒழிக்கப் பலவிதமான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

சேலம் நகர மன்றத்தின் தலைவராக இருந்த போதும், பழைய பெரிய சென்னை மாகாணத்தில் இருமுறை முதலமைச்சர் பதவி வகித்த போதும், சமுதாயத்தில் சமத்துவத்தையும், பொருளாதாரச் சமதருமத்தையும் ஏற்படுத்தக்கூடிய சட்டங்கள் பலவற்றைச் செய்தார். குறிப்பாக, 'அபேதவாதம் அல்லது பொதுவுடைமை' எனும் பெயரில் இராஜாஜி நூல் ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

தலைமை தாங்கும் தகுதி

சுதந்திரம் நெருங்கிக்கொண்டிருக்கும் வேளையில் இராஜாஜியின் தலைமை வேண்டாம் என்று தமிழ்நாட்டுக் காங்கிரசில் எதிர்ப்பு அலைகள் எழுந்தன. அதனைக் கேட்டு ம.பொ.சி. அதிர்ச்சி அடைந்து, சுதந்திர இந்தியா இராஜாஜியின் தலைமையை இழந்தால் எத்தகைய நலங்களை இழக்கும் என்பதனை எடுத்துக்காட்டி 14-10-1945இல் வெளிவந்த கல்கி இதழில் கட்டுரை எழுதினார். அக்கட்டுரையில்,

> தலைமை தாங்கும் தகுதியானது கடையில் வாங்கும் சரக்கல்ல; பிறர் கொடுத்துப் பெறுவதுமன்று. ஒழுக்கம், அறிவு, ஆற்றல், ஆண்மை, தியாக உணர்வு ஆகிய அனைத்தும் ஒருங்கே பெற்றவர்களே தலைமைப் பதவிக்குத் தகுதியுடையவர்கள்.
>
> தமிழ் நாட்டில் மேற்சொன்ன தகுதி வாய்ந்த ஒருவர் உண்டென்றால் அவர் ராஜாஜிதான். அவரைப் போன்ற தலைவர்களை நாம் நினைத்த மாத்திரத்தில் சிருஷ்டித்து விட முடியாது. பல தலைமுறைகளுக்கு ஒரு தடவைதான் அத்தகையவர்கள் தோன்றுகின்றனர். காலம்தான் அவர்களை நமக்குத் தருகின்றது. (ப.261)

எனச் சுட்டிக் காட்டியுள்ளார். இதில் தலைமை தாங்கும் தகுதியைக் கொண்ட இராஜாஜியைப் பற்றி, அவருடைய தனித்துவத்தைப் பற்றி ம.பொ.சி. கூறும் கருத்துகள் கருத்தாழம் உடையன. தமிழ் நாட்டில் தலைமையேற்கத் தகுதிவாய்ந்த ஒருவர் இராஜாஜி எனத் தம் கருத்தை நிலைநிறுத்துகிறார். மேலும் இராஜாஜியைப் போன்ற தலைவர்களை நாம் நினைத்த நேரத்தில் பெறமுடியாது எனவும் அவர் தமிழகத்தில் தோன்றி நம்மிடையே வாழ்ந்து வருவது நாம் செய்த புண்ணியமாகும் எனவும் அத்தகைய தலைவரை நாம் உள்ளன்புடன் வரவேற்று அவரது சேவையை நாட்டின் நன்மைக்குப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் எனவும் குறிப்பிடுகிறார்.

அற்புதங்கள் செய்த முதல்வர்

அரசியல் வாழ்க்கையில் இராஜாஜி அற்புதங்கள் செய்த அதிசய முதல்வர் என ம.பொ.சி. குறிப்பிடுகிறார். இராஜாஜி முதல்வரானவுடன் சட்டப்பூர்வமான ரேஷன் கடைகளைச் சம்பிரதாயப் பூர்வமான நியாயவிலைக் கடைகளாக மாற்றினார். இதன் காரணமாகக் கள்ளச் சந்தையில் பதுங்கியிருந்த அரிசி வெளிச் சந்தைக்கு வந்தது. மேலும், இராஜாஜி தஞ்சை மாவட்டத்தில் உழுவோருக்கும் உழச் செய்யும் முதலாளிகளுக்கும் இடையில் 1947 முதல் 1951 வரை உருவாகியிருந்த வர்க்கரீதியான போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர எண்ணினார். எனவே 1952 செப்டம்பரில் 'தஞ்சை குத்தகைக்காரர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம்' என்னும் புதியதொரு சட்டத்தைக் கொண்டு வந்தார். தஞ்சாவூரிலுள்ள இராமநாதன் செட்டியார் மண்டபத்தில் மிராசுதார்கள் அனைவரும் வந்திருந்தனர். அங்கு முதல்வர் போன்று இல்லாமல் ஞானியின் நிலையில் இருந்து மிராசுதாரர்களின் குற்றங்களைத் துணிவோடு எடுத்துக்கூறி நடுநிலையில் நின்று பேசினார். அப்பேச்சிலிருந்து சில பகுதிகள் பின்வருமாறு:

> உங்கள் பண்ணையிலே பாடுபடும் உழவர்கள் குந்தக் குடிசையும் அற்றவர்களாக அவதியுறும் நிலையிலே நீங்கள் பங்களாக்களில் வாழ்கிறீர்கள். சுகவாசஸ்தலங்களான சென்னையில் ஒரு பங்களா; உதகையில் ஒரு பங்களா; கொடைக்கானலில் ஒரு பங்களா எனப் பல பங்களாக் களைப் பெற்றிருக்கிறீர்கள்; தனக்கொரு மோட்டார் கார்; பிள்ளைக்கொரு கார்; மாப்பிள்ளைக்கொரு கார்- என எத்தனையோ கார்களை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். இதையெல்லாம் பார்க்கும் ஏழை உழவர்கள் உங்களிடம் நல்லெண்ணம் கொள்வார்களா? மிராசுதாரர்களும் குத்தகை தாரர்களும் உழவர்களும் உடன் பிறந்தாரைப் போல வாழ்கின்றோம் என்கிறீர்களே! அது உண்மை யானால் பண்ணையிலே விவசாயத் தொழிலை நடத்த போலீஸ் பாதுகாப்புக் கோரி தந்திக்கு மேல் தந்தியாக எனக்குக் கொடுத்திருக்கிறீர்களே, ஏன்?
>
> நான் கொண்டுவந்துள்ள சட்டத்தை நீங்கள் ஏற்றால்தான் உங்களுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்குமிடையில் நல்லுணர்வு ஏற்படும். உற்பத்தியைப் பெருக்கவும், பெருக்கிய உற்பத்தியை நியாயமான அளவில் பிரித்துக் கொள்ளவும் எனது அவசரச் சட்டம் உதவி புரியும். யாரிடமும் பாரபட்சம் காட்டாது. இதனை நீங்கள் ஏற்கா விடில் என் வாழ்நாளிலேயே உங்கள் விளைநிலங்கள் உங்களிடமிருந்து பறிக்கப்படுவதை என் கண்கள் காணப்போவது உறுதி. (ப.142)

மேலும், நவீன ஆலைகள் தடைசெய்யப்பட்டு, நெசவாளர்களுக்கு அரசின் உதவி தேவை என வாதாடினார். பின்னர் ஆண்டுதோறும் மாநிலத் தலைநகரங்களிலும், மாவட்டத் தலைநகரங்களிலும் கைத்தறித் துணிக் கண்காட்சிகள் நடைபெற ஏற்பாடு செய்ததும், அயல் நாடுகளில் கைத்தறித் துணிக்குச் சந்தை தேடும் முயற்சிகளும் முதல்வர் பதவி வகித்த காலத்தில் இராஜாஜி செய்த பாராட்டத்தகும் செயல்களாகும்.பிச்சை எடுத்தாவது கல்வி கற்க வேண்டும் என்று கல்வியின் அவசியத்தை உணர்ந்த இராஜாஜி 1953 இல் ஆரம்பக் கல்வியில் மாறுதல் காண அரைநாள் கல்வி எனும் புதிய திட்டம் ஒன்றை வெளியிட்டார். குழந்தைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்ப முன்னர் ஏற்பாடு செய்திருந்த பல திட்டங்கள் தோல்வியுற்றதால் அதிக எண்ணிக்கையில் குழந்தைகள் பள்ளிக்கு வருவார்கள் எனும் தொலைநோக்குப் பார்வையில் இத்திட்டத்தை இராஜாஜி கொண்டு வந்தார். இவ்வாறு அனைத்துத் துறைகளிலும் இராஜாஜி சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்திற்குப் பல அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்தாலும், தமிழரசுக் கழகம் தனது கல்விக் கொள்கைவழி ஆதரவு நல்கியது.

எழுதா உடன்படிக்கை

ஆன்மஞானியாக அறிமுகமான இராஜாஜிக்கும், ம.பொ.சி. க்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் இருந்தன. இராஜாஜி காங்கிரசை விட்டு விலகிய பின் அக்கட்சிக்கு எதிர்க் கட்சி ஒன்று இல்லாதது கண்டு இராஜாஜியே எதிர்க் கட்சி ஒன்றைத் தொடங்கினார். இந்திய ஆட்சி மொழியாகவும், தொடர்பு மொழியாகவும் வரவேண்டியது இந்தியா? ஆங்கிலமா? என்ற பிரச்சினையை எதிர்த்துக் குரல் கொடுத்தார். 'எதிரியைச் சந்திக்க நேர்ந்தால் கிடைத்ததை எடுத்து அடித்து வெற்றிகொள்' என்னும் பழமொழிக்கு ஏற்ப இந்தி எதிர்ப்பில் வெற்றிகாண திராவிட இயக்கத்தாரின் துணையைப் பெற்றார். மத்திய அரசின் ஆட்சி மொழியாக இந்தி இருப்பதை ம.பொ.சி. யும் தமிழரசுக் கழகமும் விரும்பவில்லை. இக்கருத்தின் மூலம் இருவருக்கும் இடையில் உடன்பாடு இருந்தது என்பதை அறிய முடிகிறது.

எனினும், அரசியல் பீஷ்மரான இராஜாஜி எதிர்க்கட்சித் தலைவருக்குரிய உணர்ச்சியோடு இந்தி எதிர்ப்பை அரசியல் ஆயுதமாகக் கொண்டு காங்கிரஸ் ஆட்சியை எதிர்த்தது ம.பொ.சி.க்குப் பிடிக்கவில்லை. இது தொடர்பாக இராஜாஜியின் போக்கில் ம.பொ.சி. யும், ம.பொ.சி. யின் போக்கில் இராஜாஜியும் தலையிடாத 'எழுதா உடன்படிக்கை' இருந்ததாக ம.பொ.சி. குறிப்பிடுகிறார்.

ம.பொ.சி. பற்றி இராஜாஜி

தமிழரசுக் கழகத்தார் ம.பொ.சி. யின் பிறந்தநாள் விழாவை 20-6- 1960 இல் தியாகராய நகரிலுள்ள கிருஷ்ணகான சபையில் நடத்தினர். அவ்விழாவில் இராஜாஜியும் கலந்து கொண்டு ம.பொ.சி. யை வாழ்த்திப் பேசினார். அதிலிருந்து ஒரு பகுதி பின்வருமாறு:

> சிலருக்கு அரசியல் தெரியும்; இலக்கியம் தெரியாது. தெய்வபக்தி அவர்களுக்குப் பிடிக்கவே பிடிக்காது. பலருக்கு இலக்கியம் மட்டும் தெரிந்திருக்கும்; அரசியல் தெரியாது. ஏதோ கட்டுரை எழுத வேண்டும் என்பதற்காக அரசியல் தெரிந்தது போலப் பாசாங்கு செய்வார்கள். 1905 ஆம் ஆண்டிலே நடந்ததை 1915 ஆம் ஆண்டில் நடந்ததாக எழுதுவார்கள். இன்னும் சிலரிடம் அன்பு இருக்கும். ஆனால் அவர்களுக்கு அரசியலோ, இலக்கியமோ தெரியாது. நமது ம.பொ.சி. அவர்களிடத்திலே அன்பு, பண்பு, அரசியல், இலக்கியம், தெய்வ பக்தி எல்லாம் இருக்கின்றன. (ப.216)

இப்பகுதி ம.பொ.சி. எனும் பெரியவரின் பண்பைத் தெளிவாகக் காட்டுகிறது.

உணர்வுப்பூர்வமான நட்பு

இராஜாஜிக்கும் ம.பொ.சி.க்கும் இடையே கருத்து வேறுபாடுகள் இருந்த போதிலும் இவர்கள் இருவரும் உணர்வுப் பூர்வமான நட்பு உடையவர்கள். ம.பொ.சி.யின் வாழ்க்கையில் கடுமையான எதிர்ப்புகள் பல நேரங்களில் ஏற்பட்டபோது இராஜாஜி அவர்கள், ம.பொ.சி. க்கு ஆதரவாகத் தாங்கி நின்று பேசுவார். சான்றாக, தமிழ்வாணன் தமது கல்கண்டு எனும் வார இதழில் 'கொள்ளைக்காரன் கட்டபொம்மன்' எனும் தலைப்பில் வாரந்தோறும் ம.பொ.சி. யை எதிர்த்து எழுதினார். இதுபோன்ற தவறான பிரச்சாரங்களை முறியடிக்கும் வகையில் ம.பொ.சி. 'சுதந்திரவீரன் கட்டபொம்மன்' எனும் தலைப்பில் செங்கோல் பத்திரிகையில் வாரம்தோறும் தொடர் கட்டுரை எழுதினார். ம.பொ.சி. கேட்டுக் கொள்ளாமலேயே அவரது மனநிலையை அறிந்த இராஜாஜி, தாம் நடத்தி வந்த ஆங்கில வாரப் பத்திரிகையான சுயராஜ்யா இதழில் முட்செடிகள் எனும் தலைப்பில் கட்டபொம்மன் சுதந்திர வீரன்தான் என்பதை வலியுறுத்திச் சிறப்புக் கட்டுரை ஒன்றை எழுதினார். மேலும் தங்கள் இருவருக்கும் இடையில் உள்ள நட்பைப் பற்றி அவர் கலந்து கொண்ட கூட்டத்தில் பின்வருமாறு கூறினார்:

> கொள்கைகளில் ஒருமைப்பாடு இருந்திருக்குமானால் அப்போது எங்களிடையே உள்ள அன்புக்கு விசேஷம்

> ஒன்றுமில்லை. கொள்கை வேறுபாடு இருக்கும் போதும் நாங்கள் மிகுந்த அன்பு கொண்டிருக்கிறோமே அதுதான் விசேஷம். அன்பு விலை கொடுத்து வாங்கும் பொருளல்ல. அது தானாக உள்ளத்தில் தோன்ற வேண்டும். மாறாமலும் இருக்க வேண்டும். எங்களிடையே அப்படிப்பட்ட அன்பு இருக்கிறது (ப.224)

எனும் இக்கூற்று இராஜாஜிக்கும் ம.பொ.சி.க்கும் இடையே உள்ள உணர்வுப்பூர்வமான நட்பை எடுத்துக்காட்டுகிறது.

ம.பொ.சி.யின் அரசியலில் இராஜாஜி

1967 பிப்ரவரியில் நான்காவது பொதுத் தேர்தல் நடைபெறும் என்று இந்தியத் தேர்தல் கமிஷன் அறிவித்தது. ம.பொ.சி. யின் தமிழரசுக் கழகமும் பொதுத் தேர்தலில் கலந்து கொள்ள வேண்டும் என்று இராஜாஜி தன் விருப்பத்தைத் தெரிவித்தார். சுதந்திராக் கட்சியின் தமிழ் மாகாணத் தலைவரான காரைக்குடி சா. கணேசன் மூலமாக

> ம.பொ.சி. நமக்குக் கிடைத்துள்ள சொத்து. அவருக்கு எப்படியும் சென்னை நகரில் ஒரு தொகுதியைக் கொடுத்தாக வேண்டும். எந்தத் தொகுதி என்பதை அவருடன் பேசி முடிவு செய்து கொள்ளட்டும். தி.மு.க.- சுதந்திரா தேர்தல் உடன்பாட்டுக்கு உட்பட்ட விஷயம் இது (ப.336)

என்று அறிஞர் அண்ணா அவர்களை இராஜாஜி வற்புறுத்தினார். ம.பொ.சி. விஷயத்தில் இராஜாஜி காட்டிய அக்கறை தி.மு.க. தலைவரை வியப்பில் ஆழ்த்தியது.

> இராஜாஜி மீது என் நண்பர் ம.பொ.சி. பெற்றுள்ள செல்வாக்கு கண்டு நான் பொறாமைப்படுகிறேன் (ப.336)

என்று அறிஞர் அண்ணாவே குறிப்பிடுவது சிறப்பிற்குரியது.

தமிழரசுக் கழகத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் ம.பொ.சி.க்காக இராஜாஜி தேர்தல் பிரச்சாரம் செய்தார். அப்போது,

> தியாகராயநகர் தொகுதி வாக்காளர்கள் அதிருஷ்ட சாலிகள். மற்ற 233 தொகுதிகளுக்குக் கிடைக்காத ஒரு சிறந்த அபேட்சகர் உங்களுக்குக் கிடைத்திருக்கிறார். சாஸ்திரம் படித்தவர். யோக்கியதைக்கு ஒன்றும் குறைவு கிடையாது

எனக் குறிப்பிட்டார். அதன் பிறகு, தமிழரசுக் கழகத்தின் முயற்சியாலும், இராஜாஜியின் ஆதரவாலும் தேர்தலில் 10,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இராஜாஜியின் வற்புறுத்துதல் இல்லையென்றால் ம.பொ.சி. அரசியலில் புகுந்திருக்க மாட்டார்.

1964 இல் இந்திய அரசு சார்பில் மலேசிய நாட்டிற்கு இந்திய-மலேசிய நட்புறவு தூதுக்குழு ஒன்றை அனுப்ப டில்லியில் முயற்சி எடுக்கப்பட்டது. மூவரைக் கொண்ட அக்குழுவில் ம.பொ.சி. இடம்பெற முதல்வராக இருந்த இராஜாஜி முயற்சி செய்தார். இவ்வாறு ம.பொ.சி. யின் அரசியல் முன்னேற்றத்தில் இராஜாஜியின் பங்கு அளவிடற்கரியது.

ம.பொ.சி. உடல்நலத்தில் ஆர்வம்

1942 ஆம் ஆண்டு ஆகஸ்டு 13 இல் நடந்த ஆகஸ்டு கிளர்ச்சியின் விளைவாக ம.பொ.சி. அமராவதிச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார். அப்போது குடற்புண் நோயால் பாதிக்கப் பட்டதால் அவரது உடலின் எடை குறைந்தது. ம.பொ.சி.யின் தோற்றத்தைப் பார்த்த இராஜாஜி மனம் உடைந்து போனார். உடனே பெரிய மருத்துவமனை மருத்துவர் சீனிவாசனுக்குத் தாம் கைப்படக் கடிதம் எழுதி ம.பொ.சி. யிடம் கொடுத்து ‘எப்படியும் நீங்கள் பிழைத்தாக வேண்டும். டாக்டர் சொல்கிறபடி நடந்து கொள்ளுங்கள்’ எனச் சொல்லி அனுப்பி வைத்தார். மட்டுமன்றி, கம்யூனிஸ்டு தலைவர் பி. இராமமூர்த்தி அவர்களிடம் மருத்துமனையில் தினமும் சென்று ம.பொ.சி. யைப் பார்த்து நலம் விசாரிக்கவும் உதவிகள் செய்யவும் கூறினார். இராமமூர்த்தியும் மருத்துவர் சீனிவாசனும் நண்பர்களாதலால் சிகிச்சை சிறப்பாக நடந்தது. ம.பொ.சி. அவர்கள் இராஜாஜியின் உதவியால் உடல் நலமடைந்தார்.

இராஜாஜியும் ம.பொ.சி. யும் சேர்ந்து பேசிய மேடைகளில் ம.பொ.சி. ஆவேசமாகக் குரலை உயர்த்திப் பேசும்போது அருகிலிருக்கும் இராஜாஜி, ம.பொ.சி. யின் சட்டையைப் பிடித்து இழுத்து அவருடைய ஆவேசத்தைக் குறைக்க முயலுவார்.

> எதிரே ஒலிபெருக்கி இருப்பதைக்கூட மறந்து சப்தம் போட்டுப் பேசுகிறீர்களே; குடற்புண் அதிகப்பட்டு, இரத்தம் வெளிப்படும் அபாயநிலை வந்துவிடுமே (ப. 301)

எனவும் எச்சரிப்பார். இச்செய்கை ம.பொ.சி. யின் உடல்நலத்தில் இராஜாஜி கொண்ட அக்கறையை மேலும் எடுத்துக்காட்டுகிறது.

ம.பொ.சி. யின் முன்னேற்றத்தில் இராஜாஜியின் பங்கு

ம.பொ.சி. யின் குடும்பம் வறுமையில் வாடுவதை இராஜாஜி நன்கு அறிவார். எனவே, ம.பொ.சி. யின் வாழ்க்கையில் பொருளாதாரத்தை உயர்த்தி வறுமையிலிருந்து உயர்வு பெறவேண்டும் என்பதற்காக இராஜாஜி பல முயற்சிகளை மேற்கொண்டார்.

முதலாவதாக, 1946 இல் சின்ன அண்ணாமலை நடத்தி வந்த தமிழ்ப்பண்ணையில் பதிப்பாசிரியர் வேலையில் சேர்த்துவிட வேண்டும் எனும் முயற்சியை இராஜாஜி முதலில் எடுத்தார். ஆனால் வேலைக்குச் சேர்ந்தபின் அண்ணாமலை அதிகார மனப்பான்மையுடன் ம.பொ.சி. யிடம் நடந்து கொண்டதால் ஒரு நாள் மட்டும் அவரிடம் பணிபுரிந்தார்.

இரண்டாவதாக, கல்கி இதழின் துணை ஆசிரியர் பொறுப்பைக் கொடுக்க வேண்டும் என்று கல்கி கிருஷ்ணமூர்த்தியிடம் வேண்டினார். ஆனால் அப்போதுதான் தமிழ் முரசு எனும் மாதப் புத்தகம் வெளியிடத் தொடங்கி முதல் புத்தகம் வெளியானது. அதனால் கல்கியில் பணிபுரிய இயலவில்லை.

மூன்றாவதாக, 1946 இல் சேலம் மாவட்டத்தில் மதுவிலக்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது. அத்திட்டத்தில் மதுவிலக்குப் பிரச்சாரப் பிரிவில் ம.பொ.சி. யை நியமனம் செய்யுமாறு முதலமைச்சர் திருவாளர் பிரகாசம் அவர்களுக்குக் கடிதம் எழுதினார். ஆனால் ம.பொ.சி. தமது அரசியல் வளர்ச்சி பாதிப்படையும் எனும் எண்ணத்தில் மாத ஊதியம் பெறும் அப்பணியை ஏற்கவில்லை.

நான்காவதாக, 1955 ஆம் ஆண்டு கல்கி இதழின் ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி காலமானபோது அவருடைய பதவியை வகிக்குமாறு கேட்டுக் கொண்டார். ம.பொ.சி. யும் அப்பதவியை ஏற்க விருப்ப முடையவராக இருந்தார். ஆனால் தமிழரசுக் கழகத்தின் தலைமைப் பொறுப்பில் ம.பொ.சி. செல்வாக்குடன் இருந்ததால் கல்கியின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றால் தமிழரசுக் கழகத்தில் உள்ள சிறப்பிடம் இரண்டாவது நிலைக்குத் தள்ளப்பட்டு விடுமோ எனும் எண்ணத்தால் தன் இயலாமையை இராஜாஜியிடம் ம.பொ.சி. தெரிவித்தார்.

ஐந்தாவதாக, 1960 இல் சுதந்திராக் கட்சியின் தமிழ் மாகாணக் கமிட்டித் தலைமைப் பொறுப்பை ஏற்க ம.பொ.சி. யிடம் இராஜாஜி அறிவுறுத்தினார். ஆனால் நல்ல வசதி வாய்ப்புடைய அப்பொறுப்பை ம.பொ.சி. ஏற்றுக் கொள்ளவில்லை. காரணம் என்னவெனின், அக்கட்சியின் கொள்கையில் ம.பொ.சி. க்கு உடன்பாடில்லை.

ம.பொ.சி. தமிழரசுக் கழகத்தைத் தொடங்குவதற்கு முன்னோடியாக, தமிழ்முரசு எனும் பெயரில் மாத இதழை

வெளியிட்டார். அதனைத் தொடர்ந்து பத்திரிகைக்குத் தேவையான காகிதத்திற்கு அனுமதி வேண்டும் என்று ம.பொ.சி. கொடுத்த விண்ணப்பத்தை இராஜாஜி ஏற்றுக் கொண்டார். இவ்வாறு ம.பொ.சி. யின் வாழ்வின் முன்னேற்றத்தில் இராஜாஜி எடுத்துக் கொண்ட பங்கு எல்லையில்லாதது.

கவர்னர் ஜெனரல் இராஜாஜி

கவர்னர் ஜெனரலாக இராஜாஜி பதவியேற்ற பிறகு கிண்டியிலுள்ள ராஜ்பவனுக்கு அவரைப் பார்க்க ம.பொ.சி. முதன்முதலாகச் சென்றார். பல பெரியவர்கள் இராஜாஜியைப் பார்க்கக் காத்திருந்தபோதும் ம.பொ.சி.யை உடனே அழைத்து, அவருடன் அன்பாகப் பேசி மகிழ்ந்தார். அவ்வாறு உரையாடும் போது ம.பொ.சி. யின் உடல்நலத்தையும் குறிப்பாக அவரது வயிற்று வலியையும் குறித்து விசாரித்தார். அதிக நேரம் உரையாடிய பின்னர் ம.பொ.சி. பல பெரிய மனிதர்கள் வரவேற்பு அறையில் காத்துக் கொண்டிருப்பதை இராஜாஜிக்கு நினைவூட்டி, விடைபெற முயன்றார். அதற்கு இராஜாஜி,

> அவர்களெல்லாம் யார் கவர்னர் ஜெனரலாக வந்தாலும் பேட்டி காண்பதை வழக்கமாகக் கொண்டவர்கள். நீங்கள் அப்படியல்லவே! நானே விரும்பியல்லவா உங்களை அழைக்க வேண்டியிருந்தது (ப.330)

எனச் சொல்லி வாய்விட்டுச் சிரித்தார். 1950 ஆம் ஆண்டு சனவரியில் கவர்னர் ஜெனரல் பதவிக்காலம் முடிவுக்கு வரும்போது கல்கி அலுவலகத்தில் விருந்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் ம.பொ.சி.க்கு அழைப்பிதழ் அனுப்பவில்லை. விருந்து தொடங்கும் போது அங்கு இராஜாஜி ம.பொ.சி.யைத் தேடினார். அவர் அங்கு இல்லாததைக் கண்டவுடனே ம.பொ.சி.யைக் கார் அனுப்பி அழைத்துவரக் கட்டளையிட்டார். அங்கு ம.பொ.சி. சென்றதும் அருகில் உட்கார வைத்து உணவருந்தச் செய்தார். அன்றைய விருந்தில் கு. காமராசர், அமைச்சர் எம். பக்தவத்சலம் உட்படப் பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர். இத்தகைய பெரியோர்கள் மத்தியில் இராஜாஜி அவர்கள் ம.பொ.சி.யைக் கௌரவப்படுத்தியது இராஜாஜியின் உண்மையான நட்பை வெளிக்காட்டுகிறது. இவ்விரு நிகழ்வுகளும் ம.பொ.சி. எனும் குசேலனுக்கு இராஜாஜி எனும் கிருஷ்ண பரமாத்மாவிடம் கிடைத்த அனுபவங்களாகும்.

இராஜாஜியின் வாழ்க்கையில் ம.பொ.சி. யின் பங்கு

சோதனைகளைச் சந்தித்து, அதன் பிறகு இராஜாஜிக்கு நண்பரான ம.பொ.சி. அவர்கள், இராஜாஜியின் அரசியல் வாழ்க்கையிலும், பொது வாழ்க்கையிலும் முக்கியப் பங்கு வகித்தார். இராஜாஜியைப்

பற்றி மக்களிடையே நிலவிவரும் தவறான கருத்தை மாற்றுவதற் காகவே இந்நூலை ம.பொ.சி. எழுதியுள்ளார். இராஜாஜி மறைந்த பின்னரும் அவரைப் பற்றி நூல் எழுதி வெளியிட்டிருப்பது அவர் மீது ம.பொ.சி. கொண்ட அன்பின் ஆழத்தை வெளிப்படுத்துகிறது.

இராஜாஜிக்கும் ம.பொ.சி. க்கும் இடையேயிருந்த தொடர்பு புனிதமானது. இராஜாஜியிடம் கொண்டிருந்த நட்பின் காரணமாகப் பல பழிகளை ம.பொ.சி. சுமந்தார். 'பார்ப்பனர்களிடம் பணம் பெற்றுக் கொண்டு ஒரு பார்ப்பனத் தலைவனைப் பதவியில் அமர்த்த ம.பொ.சி. பாடுபடுகிறான்' எனும் குற்றச்சாட்டு ம.பொ.சி. மீது விழுந்தது. இதற்குத் 'தமிழினத்திற்குத் தெய்வம் தந்த தலைவராக அவரை நான் கருதியதுதான்' என்று ம.பொ.சி. விளக்கம் அளித்தார்.

இராஜாஜியின் கடைசி வாழ்த்து

இராஜாஜியின் பிறந்த நாளில் ம.பொ.சி. அவருக்கு வாழ்த்துச் சொல்லி மாலை அணிவிக்க அவருடைய இல்லத்திற்குச் சென்றிருந்தார். அப்போது அங்குச் சுதந்திராக் கட்சியாளர் இருந்தனர். ம.பொ.சி. அவருக்கு மாலை அணிவித்து வாழ்த்துக் கூறியவுடன் மகிழ்ச்சி பொங்கத் தழுவி அருகில் ம.பொ.சி. யை அமர வைத்தார். அங்கிருந்த சுதந்திராக் கட்சித் தோழர்களைப் பார்த்து,

> உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? ராஜாஜியும் ம.பொ.சி. யும் பல விஷயங்களில் ஒத்துப்போகாமல் இருந்தும், நேரில் சந்தித்து விட்டால் இப்படிக் குழைகிறார்களே என்று நினைக்கிறீர்கள் அல்லவா? எங்களுடைய உணர்ச்சி பூர்வமான நட்பை உங்களால் புரிந்து கொள்ள முடியாது (பக். 365-366)

என்றார். ம.பொ.சி. இராஜாஜியிடம் பெற்ற வாழ்த்தும் கடைசியாகக் கேட்ட குரலும் இதுவே ஆகும்.

மூதறிஞர் இராஜாஜியின் வாழ்க்கை வரலாறு தமிழ் நாட்டுக்குக் கிடைத்த பெருஞ்சொத்து. தமிழர் அவரை என்றென்றும் தங்கள் இதயத்தில் வைத்துப் போற்றி வர வேண்டும் என்பதற்காக எழுதப்பட்ட இந்நூல் இராஜாஜியின் அரசியல் வாழ்க்கை, அவரது பண்பு நலன்கள், இவை எல்லாவற்றிற்கும் மேலாக இராஜாஜி - ம.பொ.சி. யின் உணர்வுப்பூர்வமான நட்பை விளக்குகிறது. பாரதியார் கண்ணனைப் பல நிலைகளில் வைத்துப் பார்ப்பது போல் ம.பொ.சி. அவர்கள் இராஜாஜியைக் குருநாதராக, தலைவராக, நண்பனாக, மதிப்பிற்குரியவராகப் பார்க்கிறார்.

கிருஷ்ணசாமி பாவலர்

நிலையாமை நிறைந்த இவ்வுலக வாழ்க்கையில் மனிதர்கள் பிறக்கின்றனர், இறக்கின்றனர். சிலர் வாழ்கின்ற வாழ்க்கையில் சிறந்த செயல்களைச் செய்து புகழைத் தேடுகின்றனர். அச்சிலரையும் உலகிற்கு அறிமுகப்படுத்துவது நூல்கள். அத்தகைய நூல்களில் இடம் பெறாமல் போனவர்களும் சிலர் உண்டு. அத்தகையவர்களைத் தன்னால் இயன்றவரை உலகிற்கு அறிமுகப்படுத்த வேண்டும் எனும் எண்ணத்தைத் தன் மனத்தில் கொண்டவர்தான் சிலம்புச் செல்வர் என்றழைக்கப்படும் டாக்டர் ம.பொ.சி. அவர்கள். இவர் தமது 83 ஆவது பிறந்தநாள் வெளியீடாக "நாடகப் பேராசிரியர் சதாவதானி கிருஷ்ணசாமி பாவலர் வாழ்க்கை வரலாறு" எனும் நூலை எழுதியிருக்கிறார். இந்நூலின் சிறப்பு என்னவெனில் பாவலரைப் பற்றிய முதல் நூல் இதுவேயாகும்.

பெற்றோர்

செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள தென்பட்டினம் என்னும் ஊரிலுள்ள பொன்னுசாமி கிராமணியார் - ருக்மணி அம்மையார் தம்பதியினருக்குக் கிருஷ்ணசாமி பாவலர் முதல் மகனாக 29-08-1890 இல் பிறந்தார். இவருடைய உடன்பிறந்தோர் தெ.பொ. மீனாட்சி சுந்தரன், தெ.பொ. முத்துக் குமாரசாமி ஆகியோராவர். கிருஷ்ணசாமி பாவலரின் தந்தையார் அறிவு மிக நிரம்பியவர். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளில் புலமை பெற்றவர். அது மட்டுமன்றி, தமிழ் இலக்கண, இலக்கியங்களைத் திருவாவடுதுறை ஆதீனத்தின் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் தலைமாணாக்கரான சோடசாவதானம் சுப்பராய செட்டியாரிடம் கற்றுப் புலமை பெற்றார். பொன்னுசாமி அவர்கள் தம்முடைய தமிழாசிரியரின் குருவான மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின்பால் கொண்டிருந்த பற்றின் காரணமாகத் தமது இரண்டாவது மகனுக்கு மீனாட்சிசுந்தரன் எனப் பெயரிட்டார். இவரே பிற்காலத்தில் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக விளங்கிய தெ.பொ. மீனாட்சிசுந்தரன் ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்வி

தெ.பொ. கிருஷ்ணசாமி பாவலர் ஆங்கிலத்தை முதன்மை மொழியாகக் கொண்டு பத்தாம் வகுப்புவரை படித்தார். அதன் பிறகு

வேதாந்தகேசரி என்று சிறப்புப் பெற்றிருந்த சென்னை இந்து தியாலஜிகல் உயர்நிலைப் பள்ளியின் தலைமைத் தமிழாசிரியரான கோ. வடிவேலு செட்டியாரிடம் முறையாகத் தமிழ் பயின்று மாநிலத்திலேயே முதல் மாணவராக வெற்றி பெற்றார். மேலும், சமஸ்கிருதம், இந்தி, தெலுங்கு ஆகிய மொழிகளிலும் பயிற்சி பெற்றார்.

ஆசிரியப்பணி

தெ.பொ. கிருஷ்ணசாமி பாவலர் சென்னை முத்தியாலுப் பேட்டை உயர்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியராகப் பல ஆண்டுக்காலம் பணியாற்றினார். மேலும், சிந்தாதிரிப் பேட்டை நடுநிலைப் பள்ளியின் வளர்ச்சிக்காக அயராது உழைத்தார். சிந்தாதிரிப்பேட்டைப் பள்ளியின் வளர்ச்சி நிதிக்காக வேதாள உலகம், பொன்விலங்கு, போஜன், மனோகரா, நந்தனார், சபாபதி ஆகிய நாடகங்களை மேடையேற்றிப் பொருள் திரட்டினார். இன்று இப்பள்ளி பல கட்டடங்களுடன் மேல்நிலைப் பள்ளியாக வளர்ச்சி யடைந்ததற்கு உழைத்த பலரில் தெ.பொ. கிருஷ்ணசாமி குறிப்பிடத் தகுந்தவர். இவர் சிவகாசி உயர்நிலைப் பள்ளியின் தலைமைத் தமிழாசிரியராகப் பணியாற்றியபோது சாரணர் இயக்கத்தில் ஈடுபாடு கொண்டு அவ்வியக்கத்தில் ‘பாண்டியன் பிரிவு’ எனும் ஒன்றை ஏற்படுத்தினார். அதன் மூலம் சாரணத் தலைமை அதிகாரியாகவும் இருந்து தொண்டாற்றினார். இவரது திருமணம் 1911 ஆம் ஆண்டு நடைபெற்றது. இவரது மனைவியின் பெயர் தனலெட்சுமி ஆகும்.

பட்டங்கள்

தெ.பொ. கிருஷ்ணசாமி ஒரு முருக பக்தராக விளங்கினார். இவர் யோகநிலையில் அமர்ந்து ஐம்புலன்களையும் அடக்கும் தன்மை பெற்றிருந்தார். ஆறு வகையான நினைவாற்றலை வெளிப்படுத்தும் சோடசாவதானம் செய்து ‘சோடசாவதானி’ எனும் சிறப்புப் பட்டத்தைப் பெற்றார். மேலும், நூறு வகையான நினைவாற்றல்களை வெளிப்படுத்தும் சதாவதானம் செய்து ‘சதாவதானி’ எனும் பட்டத்தையும் பெற்றார். மேலும் இவர் பாவலர், சங்கத்வனி, பிரசங்க சிந்தாமணி முதலிய பட்டங்களையும் பெற்றுள்ளார்.

அரசியல் வாழ்க்கை

தலைமை ஆசிரியராகத் தம் பணியைத் தொடங்கி, பல்வேறு பட்டங்களைப் பெற்ற தெ.பொ. கிருஷ்ணசாமி பாவலர் 1917 இல் அரசியலுக்குள் நுழைந்தார். அதற்குக் காரணம் 1915 இல் அன்னி பெசன்ட் அம்மையார் ஹோம்ரூல் இயக்கத்தைத் தோற்றுவித்ததாகும்.

அந்தப் பேரியக்கத்தைக் கண்டு அஞ்சிய ஆங்கில அரசு அம்மையாரைக் காவலில் வைத்தது. இந்த நிகழ்வு கிருஷ்ணசாமி பாவலரை அரசியலுக்குள் நுழையத் தூண்டியது. அதன் பின்னர், .பெசன்ட் அம்மையாரின் சுயாட்சி இயக்கத்தில் இணைந்தார்.இதன் காரணமாக இந்தியத் தேசியக் காங்கிரசில் சேர்ந்தார். இவர் காங்கிரசில் இணைந்த பின்னர் ஆண்டுதோறும் நடந்து வந்த காங்கிரஸ் மாநாடுகளில் தவறாமல் கலந்து கொண்டார்.

வாழ்க்கையில் நாடகத்தின் தொடக்கம்

சிந்தாதிரிப் பேட்டைப் பள்ளியின் தலைமை ஆசிரியராகப் பணியாற்றியபோது பள்ளியின் வளர்ச்சி நிதிக்காகப் பல நாடகங் களைப் பாவலர் நடத்தினார். பள்ளியின் ஆசிரியர்களை நாடகங்களில் நடிக்க வைத்துத் தானும் அவர்களோடு சேர்ந்து நடித்தார். இதுதான் அவரது வாழ்க்கையில் நாடகப் பிரவேசம் ஆகும்.

நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்த முதலியார் தம் நண்பர்களுடன் சேர்ந்து சென்னை சுகுண விலாச சபையை நிறுவினார். 'ஒரு தொழிலும் இல்லாதவன் நாடகத் தொழிலில் சேர்ந்தான்' எனும் பழமொழி இருந்த சமயத்தில், பாவலர் வருவாய் தேடுவதற்காக மேடை ஏறவில்லை. மாறாக, தான் மேற்கொண்டிருந்த பல பதவிகளைத் துறந்துதான் மேடை ஏறினார். அதன் பின்னர்ப் பம்மல் சம்பந்த முதலியார், பிரபல வக்கீல் வி.வி. சீனிவாச ஐயங்கார், நாவலர் சத்திய மூர்த்தி ஆகியோருடன் சேர்ந்து தமிழ் நாடகங்களில் நடித்தார். ஷேக்ஸ்பியர் எழுதிய ஆங்கில நாடகங்களிலும், காளிதாசன் இயற்றிய சமஸ்கிருத நாடகங்களிலும் தெ.பொ. கிருஷ்ணசாமி நடித்தார். இவர் தமிழ் நாட்டில் மட்டுமன்றித் திருவனந்தபுரம், பெங்களூர் முதலிய இடங்களுக்கும் சென்று நடித்தார்.

கலைஉலகில் புரட்சி ஏற்படுத்தியவர்

நாடகக் கலையை மீட்பதற்காகச் சுகுண விலாச சபை தோற்றுவிக்கப்பட்ட போதும் பாவலருக்கு அச்சபையிலும் குறை தென்பட்டது. காரணம் அச்சபை நடுத்தர மக்களையும், பாமர மக்களையும் திருப்திப் படுத்துவதாக அமையவில்லை. எனவே சமூகச் சீர்திருத்தக் கருத்துகளை மையமாகக் கொண்டு நாடகங்கள் எழுத முடிவு செய்து 'பால மனோகர நாடக சபா' எனும் சபையை நிறுவினார். அதன் பிறகு மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு, குதிரைப் பந்தய ஒழிப்பு, கலப்பு மணம் ஆகியவற்றை மையமாகக் கொண்டு நாடகங்கள் நடத்திப் புரட்சியை ஏற்படுத்தினார். எனினும் புராணக் கதைகளையும் நாடகங்களாக்கி நடிக்கத் தவறவில்லை. வள்ளி திருமணம், நல்ல தங்காள், அரிச்சந்திரன், பர்த்துரு ஹரி, கோவலன் முதலிய பெயர்களில் முன்னோர்கள் நடத்திய புராண நாடகங்களை

மேடையேற்றினார். இவ்வாறு நாடகங்கள் நடத்துவதற்கு வழிகாட்டியாக இருந்தவர் நாடகப் பேராசிரியர் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள். பின்னர் நாளடைவில் பால மனோகர நாடக சபையைக் கைவிட வேண்டியநிலை ஏற்பட்டது. ஏனென்றால் வயது வந்தவர்களைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்வது கடினமாக இருந்தது. மேலும் நடிப்பில் பயிற்சி கிடைத்து மக்கள் மத்தியில் புகழ் பெற்றவுடன் அச் சிறுவர்கள் வேறு நாடகக் கம்பெனிக்குச் சென்று விடுவதால் பாவலர் நாடக சபாவைக் கைவிட்டார்.

பாவலர் பாய்ஸ் கம்பெனி

பால மனோகர நாடக சபையைக் கைவிட்ட பின்னர், 'பாவலர் பாய்ஸ் கம்பெனி' எனும் ஒரு நாடகக் குழுவை ஆரம்பித்தார். இக்கம்பெனி சிறுவர்களை நடிகர்களாகக் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது. சிறுவர்கள் அனைவரும் பதினெட்டு வயதிற்குக் குறைவானவர்களாகவே இருந்தனர். சிறுமியர்கள் ஒருவரும் இக்குழுவில் இல்லை. இக்குழுவில் உள்ள சிறுவர்கள் அனைவரும் வறுமையான குடும்பத்திலிருந்தே வந்தனர்.

திரைப்படத் துறையில் புகழ் பெற்றவர்களான மக்கள் திலகம் எம்.ஜி. இராமச்சந்திரன், நடிகர் திலகம் சிவாஜி கணேசன், ஔவை டி.கே. சண்முகம், டி.கே. பகவதி, இயக்குனர் ஏ.பி. நாகராஜன் ஆகியோரெல்லாம் சிறுவர் நாடகக் கம்பெனியைச் சேர்ந்தவர்களாவர்.

பாவலர் ஆரம்பித்த இந்த நாடகக் கம்பெனிக்கு எதிர்ப்பு ஏற்பட்டது. சமுதாயப் பொதுநலனில் ஈடுபாடு கொண்ட பலர், சிறுவர்களை வைத்து நாடகம் நடத்துவதை எதிர்த்தார்கள். அங்ஙனம் எதிர்ப்புக் காட்டியவர்களில் ஒருவர் சுகுணவிலாச சபை நடிகரும், விடுதலைப் போரில் பங்கு பெற்றவருமான எஸ். சத்தியமூர்த்தி ஐயர் ஆவார். அவர் தன்னுடைய கண்டனத்தை,

> பன்னிரண்டு வயது முதல் பதினைந்து, பதினாறு வயதுக்குட்பட்ட சிறுவர்களையெல்லாம் பெரிய வயது வந்த ஆண்களைப் போலவோ, பெண்களைப் போலவோ வேடம் போட்டு நடிக்கச் சொல்லுகின்றனர். இதன் பலன் என்ன தெரியுமா? சிறுவர்கள் பக்குவம் வருமுன்னர் நடிக்க வேண்டி வருகிறது. அவர்களுக்கு என்ன செய்கிறோம், பேசுகிறோம், என்று அர்த்தம்கூடத் தெரிவதில்லை. நாடகமேடை மீது ஏதோ இயந்திரம் போல நடிக்கின்றனர். இவர்களில் சிலர் முன் எச்சரிக்கையாயிருந்து நடிக்கின்றனர் என்பது வாஸ்தவம் தான். ஆனால் மொத்தத்தில் பார்த்தால் நடிப்பு இயற்கைக்கு மாறாகவே இருக்கிறது. தத்ரூபமாக இல்லை. இது ரசிகர்களுடைய ருசியின் தரத்தைக் குறைத்துவிடுகிறது. எனவே நாடகத்தின் தரமும் சீர்கெட்டு விடுகிறது.
> (பக்.16-17)

எனத் தெரியப்படுத்தினார். மேலும், இதனைத் தடுக்கக் காவல் துறையினரும், நீதிமன்றமும், அரசாங்கமும், சமூகச் சீர்திருத்தவாதி களும் கவனிக்காமல் இருப்பதற்கு வருந்துவதாகவும், இத்தகைய கொடுமைகளைத் தடுப்பதற்காகப் பதினெட்டு வயதிற்கு உட்பட்டவர் களை நடிக்க வைக்கக்கூடாது எனத் தடைச் சட்டம் ஏற்படுத்த வேண்டும் என்றும் தமது கருத்தை எடுத்துரைத்தார். அதன் பின்னர்ப் பாய்ஸ் கம்பெனி என்ற பெயரே மறைந்து விட்டது.

ஏகாதிபத்தியத்தை எதிர்த்தவர்

காங்கிரஸ் நடத்திய விடுதலை இயக்கத்தில் கலந்து கொண்ட கிருஷ்ணசாமி பாவலர் விடுதலை இயக்கத்திற்கு வலுவூட்டினார். பாவலர் தம் மனத்தில் ஏற்பட்ட விடுதலைக் கனவைத் தன்னுடைய நாடகங்களின் மூலம் வெளிப்படுத்தினார்.

'கதரின் வெற்றி', 'பதிபக்தி' எனும் பெயர்களில் புதிய நாடகங்களை எழுதி, சிறுவர் நாடகக் குழுவின் மூலம் தமிழ்நாடு முழுவதும் விடுதலை உணர்வைப் பரப்பினார். 'கதரின் வெற்றி' என்ற நாடகம் நடக்க இருக்கிறது எனும் சுவரொட்டி விளம்பரத்தைப் பார்த்துக் காவல்துறையினர் அந்நாடகத்திற்குத் தடை விதித்தனர். அத்தடையை நீக்கி விளம்பரம் செய்தபடி குறிப்பிட்ட நாளில் நாடகத்தை வெற்றிகரமாக நடத்தினார். பின்னர்க் காந்தியடிகளின் விருப்பப்படி காவல்துறையினர் நீக்கக் கூறிய காட்சிகளை நாடகத்தி லிருந்து நீக்கினார். மேலும் நாடகத்தின் பெயரையும் காந்தியடிகளின் ஆலோசனைப்படி 'கதர் பக்தி' என மாற்றினார்.

1924-25 இல் இங்கிலாந்தில் நடைபெற்ற வெம்பிளிக் கண்காட்சியில் பங்கேற்கப் பாவலர் பாய்ஸ் கம்பெனியும் அழைக்கப் பட்டிருந்தது. இக்கண்காட்சி ஐந்தாம் ஜார்ஜ் அரசர் பதவியேற்று 25 ஆண்டுகள் நிறைவடைந்ததைக் கொண்டாடும் வகையில் ஏற்படுத்தப் பட்டதாகும். இந்தியாவில் அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட 'கதரின் வெற்றி' எனும் நாடகத்தைத் தேசபக்தி நிறைந்த பாவலர், ஆங்கிலேயர்களின் நாடான இங்கிலாந்தில் சென்று நடத்தினார். தன்னுடைய ஏகாதிபத்திய எதிர்ப்புப் பிரச்சாரத்தை ஆங்கிலேயரின் நாட்டில் சென்று நடத்திய நெஞ்சுரம் பாவலரைத் தவிர வேறு ஒருவருக்கும் இல்லை.

தேசியக்கொடி நாடகம்

நாகபுரி என்னும் நகரத்தில் வெள்ளையர்கள் வாழ்ந்து வரும் வீதியில் தேசியக்கொடியைப் பறக்க விடுவதையும், எடுத்துச் செல்வதையும் காவல்துறையினர் தடுத்தார்கள். அதனைக் கண்ட காங்கிரஸ் தொண்டர்கள் 'தேசியக்கொடிப் போராட்டம்' எனும்

ஒன்றை நடத்தினார்கள். இப்போராட்டத்தில் இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலுமிருந்து மக்கள் கலந்து கொண்டனர்; பின்னர்ச் சிறையில் அடைக்கப்பட்டனர். தமிழ் நாட்டிலிருந்தும் என்.எஸ். வரதாச்சாரியின் தலைமையில் தொண்டர்கள் சென்று போராட்டம் நடத்திச் சிறை சென்றனர்.

இக் கொடிப்போராட்டத்தைக் கருப்பொருளாகக் கொண்டு 'தேசியக்கொடி' எனும் நாடகத்தை நடத்தினார். இதனால் பாவலர் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அதன் பின்னரும் அந்நாடகத்தைப் பல்வேறு எதிர்ப்புகளுக்கு நடுவிலும் நடத்தினார். இச்சூழலில் தேசியக்கொடியை ஏந்திச் செல்வதற்குரிய தடை அகற்றப்பட்டது. வடக்கே நடந்த இப்போராட்டத்திற்குத் தெற்கில் உள்ளவர்கள் மத்தியிலும் ஆதரவு கிடைத்தது பாவலருக்குக் கிடைத்த வெற்றியாகும்.

நாடகங்களின் தனித்தன்மைகள்

தெ.பொ. கிருஷ்ணசாமி பாவலர் மொழி, நாடு எனும் இரண்டையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போலக் கருதி வாழ்ந்தவர். 'கலை கடவுளுக்காக' என்று வாழ்ந்தவர்கள் மத்தியில் 'கலை கலைக்காகவே' என்று வாழ்ந்து காட்டிய பாவலர், 'கலை கடவுளுக்காகவும்' என்ற கொள்கையை அரிதாகச் சில நேரங்களில் கடைப்பிடித்து 'வள்ளி திருமணம்' முதலிய நாடகங்களையும் நடத்தினார். இவர் தாம் நடத்திய பல நாடகங்களில் தமிழின் மூலம் தேசியத்தையும், தேசியத்தின் மூலம் தமிழையும் வளர்க்க முயன்றார் என்பது உண்மையாகும்.

இவரது கதரின் வெற்றி, தேசியக்கொடி, தேசபக்தி எனும் நாடகங்கள் இந்தியாவை ஆங்கிலேயர்களின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப் பயன்பட்டன. பம்பாய் மெயில் எனும் நாடகம் கலப்பு மணத்திற்கு ஆதரவாக மேடையேற்றப்பட்டது. பதிபக்தி எனும் நாடகம் மதுவிலக்குப் பிரச்சாரத்திற்குப் பயன்பட்டது. 'கவர்னர்ஸ் கப்' எனும் நாடகம் குதிரைப் பந்தயத்தினால் ஏற்படும் தீமைகளை விவரித்து அதிலிருந்து மக்களை மீட்கப் பயன் பட்டது.

நாடகத்தினால் ஏற்பட்ட இன்னல்

நாடகத்தைத் தன் மனதில் தொழிலாக எண்ணாமல், சீர்திருத்தத்திற்காகப் பயன்படுத்திய பாவலர், நாடகத்தில் கொண்ட ஈடுபாட்டினால் தம் தந்தையின் அன்பை இழந்தார். செல்வந்தரான பொன்னுசாமி கிராமணியாருக்குத் தன்னுடைய மூத்த மகன் நாடகத்தில் ஈடுபாடு கொண்டு ஊர் ஊராகச் சுற்றுவது அறவே பிடிக்கவில்லை. எனவே, தம் மகனை அவர் வெறுத்தார்.

தமிழுக்கும், இந்திய நாட்டிற்கும் தம் மகன் தொண்டாகக் கருதிச் செய்ததைத் தந்தையார் கவனிக்கவில்லை. தம் மகன் கூத்தாடிகளிடமிருந்து பிரிந்து வரவேண்டும் என்று விரும்பினார். ஆனால் அவருடைய எண்ணம் ஈடேறவில்லை.

பாவலர் நாடகக்குழு ஏற்படுத்தி, சமூக நாடகங்களில் நடித்த பிறகு, தம் குடும்பத்திற்குச் சொந்தமான தென்னந் தோட்டங்களைக் கள்ளிறக்குவதற்காகக் குத்தகைக்கு விடுவதை நிறுத்தச் செய்து விட்டார். அதனால் அவரது குடும்பம் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான ரூபாய் வருமானத்தை இழக்க நேர்ந்தது. எனினும், பாவலர் நாடகத்தில் இணைந்ததால் தந்தையின் அன்பை இழந்ததே அவருடைய பேரிழப்பாகும்.

நாத்திகத்தை எதிர்க்கும் ஆத்திகவாதி

தமிழகத்தில் முதன் முதலாக ஈ.வெ. ராமசாமி அவர்கள் சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்து, தெய்வ நம்பிக்கையை ஒழித்து, நாத்திக உணர்வைப் பரப்பி வந்தார். சமய,. சமுதாய சீர்திருத்தத்தை விரும்புபவரே பாவலர். ஆனால் பெரியாருடைய நாத்திகக் கொள்கை பாவலருக்குப் பிடிக்கவில்லை. இந்தியச் சமுதாயம் தெய்வ நம்பிக்கையைக் கொண்டுதான் பொருளாதாரத்தில் உயர்ந்திருக்கிறது. மத, தெய்வ நம்பிக்கையை அழித்துவிட்டால் சமுதாயம் சூன்யமாகிவிடும். காந்தியவாதியான பாவலர், பெரியாரிடம் இருக்கும் இந்தத் திட்டம் சமுதாயத்தினை மாற்றி அமைக்கும் சிறந்த திட்டமாக அமையவில்லை என்றார். மேலும், சிறந்த சமுதாயவாதியான பாவலர், பெரியாருடைய சூன்யவாதத்தை எதிர்த்துப் போராடினார். மனித சமுதாயம் தெய்வ நம்பிக்கையைக் கொண்டே வாழ்ந்தும் வளர்ந்தும் வருகிறது என்று பாவலர் கூறினார். இவ்வாறு பாவலர் கூறுவதிலிருந்து அவர் சிறந்த ஆத்திகவாதி என்பது புலனாகிறது. இதுதவிர 'ஆத்திக சங்கம்' எனும் பெயரில் சென்னையில் ஒரு அமைப்பையும் தோற்றுவித்தார்.

பக்தி நிறைந்தவர்

தெ.பொ. கிருஷ்ணசாமி பாவலர் ஒரு சிறந்த முருக பக்தர். தாம் அணிந்திருந்த கோட்டின் வலதுபுறப் பையில் வெள்ளியிலான வேல் ஒன்றை எப்பொழுதும் வைத்திருப்பார். இவர் பக்திப் பனுவல்கள் பல எழுதியிருந்தாலும் ஒருசில மட்டுமே இன்று கிடைக்கின்றன. அதில் ஒன்றுதான் 'திருக்கழுக்குன்றம் ஸ்ரீ திரிபுர சுந்தரியம்மன் பதிகம்' ஆகும். இருமல் நோயினால் பாதிக்கப் பட்டிருந்த காலத்தில் தெ.பொ. கிருஷ்ணசாமி பாவலர் திருக்கழுக்குன்றம் சென்று தங்கி அங்குக் கோயில் கொண்டுள்ள திரிபுர சுந்தரி அம்மனைப் புகழ்ந்து தான் நலம் பெறப் பாடிய பாடலே

இப்பதிகம் ஆகும். அப்பதிகத்தில் அவர் பாடிய பாடலில் அவருடைய பக்திநெறி தெளிவாக விளங்குகிறது. பாடலின் சில அடிகள் பின்வருமாறு:

சக்திநீ சிவமுநீ அன்புநீ அருளுநீ
சராசர மான வளுநீ
தாயுநீ தந்தைநீ மாமிநீ மாமநீ
தவத்துடன் பிறந்தவளும்நீ
பக்திநீ என்னிருகண் மணியுநீ உயிருநீ
பாரினில் விருப்ப மிக்க
பணியுநீ மணியுநீ பணமுநீ குணமுநீ
பராபர மான வளுநீ
முக்திநீ முதல்விநீ வேதகிரி தன்னிலே
முளைத்திட்ட ஞான வுருநீ
மூதண்ட கோடிகள் ஈன்றளித் தழித்திடும்
முத்தேவர் தங்கள் உயிர்நீ
சித்திநீ எனைவாட்டும் தீவினைகள் பொன்றிடச்
செய்தருளும் தேவி தாயே
சீதரன் சோதரி மாதவி மஹேஸ்வரி
திரிபுர சுந்தரி யன்னையே! (ப.70)

பத்துச் செய்யுள்கள் கொண்ட பாடலின் தொகுதி பதிகம் என அழைக்கப்படும். ஆனால் இந்நூலின் பதிகம் எட்டு விருத்தப் பாக்களையே கொண்டுள்ளது. மேலும் சான்றாக ஒரு பாடல் தரப்பட்டுள்ளது. அப்பாடல் பின்வருமாறு:

தஞ்சமென வந்தவரை ஆதரித் தாளுமுன்
தயவினுக் கெல்லை யுண்டோ?
சாபமோ என்மட்டில் நீயிரங் காதது
தனயனிடம் வழக்கு முண்டோ?

கொஞ்சமல நான்படுந் துயரமது பாழான
கொடியநோய் வாதை நீக்கிக்
குவலயத் தேயுனது புகழ்பேச நல்லருள்
கொடுத்துவாழ் விக்க வேண்டும்.

கஞ்சமலர் வேதனும் மாயனும் காணாத
கழுக்குன்ற மேவி நின்ற
கண்மூன் றுடைக்கடவுள் எண்ணூன்றும் செல்வியே
கந்தனைப் பெற்ற தாயே!

செஞ்சரண மன்றிவே றென்றனக் குற்றதுணை
செப்புதற் கில்லை யம்மா
சீதரன் சோதரி மாதவி மஹேஸ்வரி
திரிபுர சுந்தரி யன்னையே! (ப.73)

ஆங்கிலத்தை வணிகத்தின் மொழி என்றும் தமிழைப் பக்தியின் மொழி என்றும் கூறுவர். இறைவனுடைய அற்புதங்களை,

சிறப்புகளை உணர்த்தவல்ல மொழி தமிழ்மொழி என்பதனை உணர்ந்து அன்னை திரிபுரசுந்தரியைப் பாடும் பக்தித் திறம் வியத்தற்குரியது. திருப்போரூரிலுள்ள முருகப்பெருமான் கோவிலுக்கு மாதம்தோறும் வரும் கிருத்திகை நாளில் சென்று வழிபடும் வழக்கத்தை உடையவர்.

பாவலர் தம் பக்தியை வெளிப்படுத்தும் விதமாக, தான் வாழ்ந்த சிந்தாதிரிப் பேட்டையிலுள்ள ஆதிபுரீஸ்வரர் திருக்கோயிலில் பழனி ஆண்டவர் திருச்சிலையை நிறுவினார். மேலும், ஆதிபுரீஸ்வரருக்குத் தங்க முலாம் பூசிய கயிலையங்கிரி விமானத்துடன் கூடிய அதிகார நந்தி வாகனத்தைச் செய்து வைத்தார். தம்மைப் போலவே முருக பக்தரான பாம்பன் சுவாமிகள் மீதும், பால சுந்தர சுவாமிகள் மீதும் பக்தி செலுத்தினார். ஸ்ரீசொர்ணமுத்து மாரியம்மன் கோவில் அறங்காவலராக இருந்து அக்கோயில் வளர்ச்சிக்குப் பணிபுரிந்தார்.

சிறந்த கவிஞர்

பாவலர் காங்கிரசின் வளர்ச்சிக்கும் நாடகக் கலையின் வளர்ச்சிக்கும் தம்முடைய ஆற்றல் முழுவதையும் பயன்படுத்தினார். எனினும் சிறந்த கவிஞராகவும் விளங்கினார். பாவலர் தாம் எழுதிய நாடகங்களுக்குத் தேவையான செய்யுள்களையும், கீர்த்தனைகளையும் தாமே சிந்தித்து எழுதியுள்ளார். இதுதவிரப் பக்தி நூல்கள் பலவும் இயற்றியிருக்கிறார். 'திருக்கழுக்குன்ற திரிபுரசுந்தரி பதிகம்', 'போரூர் முருகர் அபிஷேகமாலை', 'வேம்படி விநாயகர் பஞ்சரத்தினம்', 'கந்தர் கவசம்', 'கொன்றை மாநகர்ப் புராணம்' முதலியன அவர் படைத்த பக்திக் கவிதை இலக்கியங்களாகும். இக்கவிதைகள் அனைவருக்கும் புரியும் எளிய நடையிலே அமைந்துள்ளன.

பாடநூல்கள்

பாவலர் பள்ளி மாணவர்களுக்குத் தேசபக்தியை ஊட்டும் வகையில் பாடநூல்கள் பல எழுதியுள்ளார். ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடிய வீரர்களான தேசிங்கு, நெப்போலியன், ஹைதர் அலி ஆகியோர்களின் வீர வரலாறுகளை எழுதினார். மேலும் கிருஷ்ண தேவராயன் எனும் மன்னனின் வீர வரலாற்றையும் பாடநூலாக எழுதினார். இதுதவிரத் திருக்குறள் நீதிக்கதைகள், ஆத்திசூடி நீதிக்கதைகள், பழமொழி நீதிக்கதைகள் போன்ற நூல்களையும் எழுதிப் பாடநூலாக்கினார்.

உரைநடைத் தமிழ் வித்தகர்

தெ.பொ. கிருஷ்ணசாமி பாவலர் தமது வாழ்வில் பலவிதமான புரட்சிகளைச் செய்தவர். அக்காலத்தில் நாடகத்தில்

பாடலுக்கு முக்கியத்துவம் காணப்பட்டது. ஒரு நாடக மாந்தர் அழும்போதும், சிரிக்கும் போதும் பாடிக்கொண்டுதான் நடிக்க வேண்டும். இது நடப்பியலுக்கு முற்றிலும் மாறுபட்டதாக இருந்ததால், காலம் மாறமாற இரசிகர்களுக்குச் சலிப்பை ஏற்படுத்தியது. எனவே இதை உணர்ந்த பாவலர், பாடல்களுக்கு மாற்றாக உரைநடைத் தமிழுக்கு முக்கியத்துவம் கொடுத்து, உரைநடை வசனங்களைப் பயன்படுத்தினார். நாடகங்களில் நீண்ட வசனங்களைக் குறைத்துப் புதிய எளிய வசன நடையைக் கையாண்டார். இதற்குத் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் முன்னோடியாக இருந்தாலும், எளிய வாக்கியங்களைக் கொண்ட வசனத்திற்குச் சிறப்புக் கொடுத்தவர் தெ.பொ. கிருஷ்ணசாமி பாவலர் எனில் மிகையாகாது.

தெ.பொ. கிருஷ்ணசாமி பாவலர் சிறந்த உரையாசிரியராக விளங்கினார் என்பதற்குத் தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர் இயற்றிய சிலேடை வெண்பா இலக்கியங்களில் சிறந்ததெனப் புலவர்களால் போற்றப்படும் 'கலைசைச் சிலேடை வெண்பா' எனும் நூலுக்கு அவர் எழுதிய உரையே சான்றாகும். அவர் சிறந்த உரை நடையில் 'இந்தியக் கிராம வாழ்க்கை' எனும் நூல் ஒன்றையும் எழுதி வெளியிட்டார். இங்ஙனம் உரைநடைத் தமிழின் வித்தகராக விளங்கினார்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று கூடலூர்கிழார் இயற்றிய முதுமொழிக் காஞ்சி என்பதாகும். இந்நூலுக்கு தெ.பொ. கிருஷ்ணசாமி பாவலர் விளக்கவுரை எழுதியுள்ளார். இந்நூல் ஸ்ரீசாது இரத்தின சற்குரு புத்தக சாலையால் 1929 இல் வெளியிடப்பட்டது. இந்நூலுக்கு தெ.பொ. கிருஷ்ணசாமி பாவலர் எழுதிய முன்னுரையின் ஒரு பகுதி அவரது உரைநடை வடிவத்திற்குக் கீழே சான்றாகத் தரப்படுகிறது:

> இந்த நூலுக்குப் பழையதோர் உரை சில வருடங்களுக்கு முன்னர்தான் அச்சில் வெளிவந்திருக்கிறது. 1909 ஆம் ஆண்டு மெட்ரிகுலேஷன் பரீட்சை மாணவர்கட்கெனப் பாடபுஸ்தகமாகச் சென்னையில் பல்கலைக் கழகத்தவரால் வெளியிடப்பட்ட புஸ்தகத்துள் இந்நூலும் ஒரு நூலாக இருந்தது. யான் வழக்கப்படி அப்பாடபுஸ்தகத்துக்கு உரை கண்டு வெளியிட்ட புஸ்தகத்துள் உள்ள உரை பாகமே இது. இதனை மட்டும் தனிபுத்தகமாக அச்சிட சென்னை ஸ்ரீசாது இரத்தின சற்குரு புத்தகாலயத்தார் விரும்பியதால் அதற்கு உடன்பட்டேன்.
>
> எனதிளமைப் பருவத்தே எழுதிய அவ்வுரையில் இது போழ்து ஒரு மாறுதலும் செய்திலேன். இதுபோலவே யான் எனது இளமையில் உரை கண்ட கலைசைச் சிலேடை வெண்பா விரிவுரை, திருமுருகாற்றுப்படை ஆராய்ச்சி

> போன்ற நூல்களையும் மேற்படி புஸ்தகாலயத்தார் விரைவில் அச்சியற்றி வெளியிட முருகன் பொன்னருளை வேண்டுகிறேன். (ப.77)

பத்திரிகை ஆசிரியர்

பாவலர் நாடகக் குழுவை நடத்தியதுமன்றி, ஒரு புகழ்பெற்ற பத்திரிகை ஆசிரியராகவும் விளங்கியதே அவருடைய மிகப்பெரிய சாதனையாகும். இவர் 'பாரதி' என்ற பெயரில் வார இதழும், 'தேசபந்து' எனும் பெயரில் மாத இதழும், 1914 முதல் 1918 வரை காலணா விலையில் 'இன்றைய சமாச்சாரம்' எனும் பெயரில் நாளிதழையும் நடத்தினார். நாடகத்துறையில் இருந்து கொண்டு பத்திரிகைத்துறையில் அதிசயம் நிகழ்த்தியவர் இவர் ஒருவரே ஆவார். இவர் ந. முனுசாமி முதலியார் நடத்திய 'ஆனந்த போதினி' என்ற மாத இதழுக்கும், 'பிரசண்ட விகடன்' எனும் வார இதழுக்கும் ஆசிரியராக இருந்தார்.

பாவலரின் 'இன்றைய சமாச்சாரம்' என்ற நாளிதழ் மிதவாதத்தை வெறுக்கும் தீவிரவாதச் சார்புடையதாக இருந்தது. இவ்விதழ் காங்கிரசின் போர் முரசாக விளங்கியது. பாவலர் 'விகட ரத்தினம்', 'வித்யா பூஷண்', 'நாரதன்' எனும் பெயர்களில் நகைச்சுவைப் பருவ இதழ்களையும் நடத்தினார். மேலும் உயிரோவியம், வள்ளலார் முதலிய நாடகங்களையும், 'நான் ஏன் பெண்ணாகப் பிறந்தேன்' போன்ற பல நாவல்களையும் படைத்துள்ளார்.

ஔவை தி.க. சண்முகனார் கருத்து

தெ.பொ. கிருஷ்ணசாமி பாவலரைப் பற்றி ஔவை தி.க. சண்முகனார் தம்முடைய கட்டுரையில் கூறியுள்ளவற்றிலிருந்து சில கருத்துகள் பின்வருமாறு:

> தேசிய உணர்ச்சியூட்டும் மேடை நாடகங்களை உருவாக்கிய மேதைகள் வரிசையில் முதல் இடம்பெறத்தக்க பெருமகனார் சதாவதானம் திரு.தெ.பொ. கிருஷ்ணசாமி பாவலர் ஆவார். இவர் தேசியப் பெரும் புலவராக மதிக்கப்பெற வேண்டிய சிறந்த மேதை. இப்பெரியார் கைராட்டையின் பெருமையையும் கதராடையின் புனிதத்தையும் மேன்மையையும் மக்களுக்கு உணர்த்துவதை லட்சியமாகக் கொண்டு ஒரு சிறந்த நாடகம் எழுதினார். நாடகத்தின் பெயர் கதரின் வெற்றி. இந்நாடகம் சென்னை சால்ட் கொட்டகை அருகில் அந்நாளில் பிரசித்திப் பெற்ற நாடக அரங்காக அமைந்திருந்த ராயல் தியேட்டரில் 1922 ஆம் ஆண்டில் அரங்கேறியது. பாவலர் தாமே ஆசிரியராக இருந்து நடத்திவந்த தமது சொந்தக் குழுவாகிய பால

மனோகரா சபாவில் இதனை அரங்கேற்றினார். அதனால் திரு. தெ.பொ. கிருஷ்ண சாமிப் பாவலரை தேசியப் புரட்சி வீரர் என்றே சொல்லவேண்டும் .....பொதுவாக மேடை நாடகங்களில தேசியம் வளர்த்தவர்களில் முதல்வராகக் குறிப்பிடத் தகுந்த தேசிய வீரர் சதாவதானம் தெ.பொ. கிருஷ்ணசாமிப் பாவலர் அவர்களே என்பதில் ஐயமில்லை. (பக்.90-91)

கவிஞர் எஸ்.டி. சுந்தரத்தின் கூற்று

கவிஞர் எஸ்.டி. சுந்தரம் ஒரு சிறந்த நாடக ஆசிரியராவார். இவர் தமிழக இயலிசை நாடக மன்றத்தின் செயலாளராகப் பணி புரிந்தவர். மேலும், ஆகஸ்டு கிளர்ச்சிக் காலத்தில் திருவையாறு சதி வழக்கில் சேர்க்கப்பட்டுச் சிறைத் துன்பத்தை அனுபவித்த தியாகி. இத்தகைய கவிஞர் எஸ்.டி. சுந்தரம் அவர்கள், பாவலர் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்:

நாடகப் பேராசிரியர் சதாவதானம் தெ.பொ. கிருஷ்ணசாமி பாவலர், நாடகத்தை நாட்டுணர்வுக்கும் சமுதாய எழுச்சிக்கும் பயன்படச் செய்த பெரியவர். செந்தமிழ்வல்ல செம்மல். விடுதலைப் போரில் முன்னின்ற தளபதிகளில் ஒருவர். அவர் எழுதிய பதிபக்தி என்ற நாடகம், குடியால் நற்குடிப் பெண்டிற்கு ஏற்படும் கொடுமைகளைச் சித்தரிக்கும் சிறந்ததொரு சமூக ஓவியம். (ப.82)

ம.மாசிலாமணியின் கருத்து

தெ.பொ. கிருஷ்ணசாமி பாவலரால் வளர்ச்சியடைந்த சிந்தாதிரிப்பேட்டை மேனிலைப் பள்ளியிலிருந்து தலைமைத் தமிழாசிரியராக ஓய்வு பெற்ற வித்துவான் ம. மாசிலாமணி கிராமணியார் தெ.பொ. கிருஷ்ணசாமி பாவலரைப் பற்றி,

அவருடைய தேக வளம் போலவே சொல் வளமும் பொருள் வளமும் மிக்கிருக்கும். கற்றதுணர விரித்துரைக்கும் விற்பன்னர். சொற்பொழிவில் சோர்வில்லாதவர். கேட்போர் கனிந்துருகத் தமிழ் மணங்கூட்டிப் புகலும் அருந்திறல் வாய்ந்தவர்.

எழுதுவதிலும் ஏற்றம் பெற்றவர். நகைச்சுவை ததும்ப நற்றமிழ் பேசும் நாவலர். பாட்டில் வல்ல பாவலர். இயலிசை நாடக மாம் மூவா முத்தமிழ்க் களஞ்சியம். இயற்றமிழோர்க்கு இலஞ்சியம். வேதாந்த சைவர். வேலவற்கேயன்பு செய்பவர். பலராலும் போற்றப்பெற்ற பத்திரிகாசிரியர். குன்றமெறிந்தோன் குறையாச் சீர் பெற்றவர். (பக்.78-79)

எனக் குறிப்பிட்டுள்ளார்.

டாக்டர் எம்.ஜி.ஆர். வழங்கிய புகழுரை

பாவலரின் நாடகக்கலைத் தொண்டு பற்றி டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், தவத்திரு சங்கரதாசர் நூற்றாண்டுவிழா மலரில் எழுதியுள்ளார். அதில்,

> பாவலர் அவர்கள் தம்முடைய திறமையைத் தமக்குச் சொத்து சேர்ப்பதற்காகப் பயன்படுத்திக் கொண்டவரல்லர். தம்முடைய உள்ளத்திலே எழுகின்ற சுதந்திர உணர்ச்சி நாட்டு மக்களிடையே ஏற்படவேண்டுமென்று விரும்பினார். சமூகத்தில் மாற்றம் தோற்றுவிக்கப்பட வேண்டுமென்று ஆசைப்பட்டார். அவருடைய நாடகங்களின் பெயர்களைச் சொன்னாலே, அவர் எப்படிப்பட்ட நாடகங்களை அமைத்தார் என்பதை நாம் உணர முடியும்.
>
> நான் முதன்முதலாகக் கலந்துகொண்டு நடித்த அவருடைய நாடகத்தின் பெயர் 'பதி பக்தி'. மதுவைக் குடித்துக் கெட்டுப் போன ஒரு பெரிய பணக்காரனுடைய வாழ்க்கையைச் சித்திரித்து அதனால் அவனுடைய குடும்பம் பாழாகும் நிலையை எடுத்துக்காட்டி மக்களைத் திருத்துவதற்காக அமைக்கப்பட்ட ஒரு நல்ல நாடகம் அது. அந்த நாடகத்தைத் தயாரிப்பதற்காக அவர் எடுத்துக்கொண்ட முயற்சியையும், உழைப்பையும் நான் நேரிலே கண்டு உணர்ந்தவன்
>
> ....
>
> சாதாரண மனிதர்களால் செய்ய முடியாத ஒரு பெரும் செயலை மனிதன் செய்து காட்டும்பொழுது, அவன் கடவுளாக மதிக்கப்படுகிறான். பாவலர் அவர்கள் அத்தகையப் பெருஞ் செயலைச் செய்த பேராசிரியராவார். இன்று நம்முன் அவர் இல்லையென்றாலும் நாம் அவரைப் பற்றி பேச வேண்டிய அளவில்-நினைத்துப் போற்ற வேண்டிய அளவில்-உணர்ந்து பின்பற்றக் கூடிய அளவில் ஒரு மகத்தான சாதனையை அவர் செய்திருக்கிறார். எனவே, நிச்சயமாக அவர் கடவுளாக மதிக்கப்படும் நிலைக்கு உயர்ந்திருக்கிறார் என்று நாம் நினைத்துப் பார்ப்பதில் தவறில்லை என்றே கருதுகிறேன். (பக், 94-97)

எனக் குறிப்பிட்டுள்ளார்.

பாவலரின் தனிச்சிறப்பு

பல்வேறு தனிச்சிறப்புகளைத் தன்னகத்தே கொண்டவர் கிருஷ்ணசாமி பாவலர் ஆவார். சமுதாயத்தின் பார்வையில் நாடகக் கலைஞர்கள் மிகத் தாழ்ந்தவர்களாகக் கருதப்பட்ட நிலை இருந்தது. அத்தகைய சூழ்நிலையை மாற்றிய கிருஷ்ணசாமி பாவலர் செல்வம்

மிக்க குடும்பத்தில் பிறந்தார். கல்வியில் சிறந்த புலமை பெற்றார். நாடகப் பேராசிரியராக விளங்கி நாடகக் கலைஞர்களுக்குச் சமுதாயத்தில் மிகச் சிறந்த மதிப்பைப் பெற்றுத் தந்தார். அதுமட்டுமன்றி, அவர்களை விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுத்திய பெருமையை உடையவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

> தமிழாசிரியராக வாழ்க்கையை தொடங்கியவர் என்பதற்காகத் தமிழாசிரியருலகமும், நடிகராக இருந்தவர் என்பதற்காக கலைஞர்களும், தன்னலங் கருதாத தேச பக்தர் என்பதற்காக தேசியவாதிகளும், நாடகமேடையில் சமூகச் சீர்திருத்தக் குரலை முதன்முதலில் எழுப்பியவர் என்பதற்காக சமூக சீர்திருத்த வாதிகளும், நாத்திகர்களை எதிர்த்துப் போராடியவர் என்பதற்காக ஆத்திகர்களும், பருவ வேறுபாடுடைய பத்திரிகைகளை நடத்தியவர் எனபதற்காகப் பத்திரிகையாளர்களும் சதாவதானி தெ.பொ. கிருஷ்ணசாமி பாவலரைத் தங்கள் நெஞ்சில் வைத்துப் போற்றவேண்டும் (ப.93)

என்பது மா.பொ.சி. யினுடைய அவா.

பாவலரின் இறுதி வாழ்க்கை

பாவலர் தேசத் தொண்டில் ஈடுபட்டதாலும், இரவு நேரங்களில் அதிகமாகக் கண்விழித்துப் படித்ததாலும் 1932 வரைதான் அவரால் பொதுத் தொண்டில் ஈடுபட முடிந்தது. இறுதியில் சயரோகத்தால்மிகவும் துன்பப்பட்டார். மதனப்பள்ளி மருத்துவ மனையில் தங்கிச் சிகிச்சை பெற்றார். எனினும் அங்கே பயன் கிடைக்கவில்லை. இறுதிக் காலத்தில் தம் தந்தையின் அன்பைத் தேடினார்.

பல அறிஞர்களால் புகழப்பெற்றவரும், பலருடைய மனதில் இடம்பெற்றவரும், நாடகத்துறையைப் புகழேணியில் ஏற்றியவருமான தெ.பொ. கிருஷ்ணசாமி பாவலர் 1934 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் நாள் இம்மண்ணுலகில் இருந்து மறைந்தார்.

சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் கிருஷ்ணசாமி பாவலருடன் நெருங்கிய நட்புக் கொண்டதால் பாவலரின் சிறப்புகளை அறிந்து இந்நூலை எழுதியுள்ளார். அனைத்துத் திறன்களையும் தன்னகத்தே கொண்டு பல்துறைகளிலும் சிறப்புப் பெற்ற கிருஷ்ணசாமி பாவலரின் சிறப்புகளைக் குறித்து இப்படியொரு வாழ்க்கை வரலாறு நூல் எழுதப்பட்டதால் பாவலர் எனும் மாமனிதரின் புகழைத் தமிழக மக்களால் அறிய முடிந்தது.

ம.பொ.சி. யின் படைப்பாளுமைத் திறன்

தமிழ் கூறும் நல்லுலகிற்குக் கிடைத்த மாபெரும் புதையல் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள். ம.பொ.சி. யின் வாழ்க்கை வரலாற்று நூல்களின் மூலம் இவருடைய அரசியல், இலக்கியப் புலமையை அறிந்து கொள்ள முடிகின்றது. ஆரம்பப் பள்ளியில் மட்டும் கல்வி கற்ற ம.பொ.சி. அவர்களால் ஏராளமான நூல்கள் படைப்பதற்குக் காரணம் அவருடைய படைப்பாளுமை எனில் மிகையாகாது. இவர் தமிழ் மொழியையும் தமிழ் இனத்தையும் தம்மிரு கண்களாகக் கொண்டவர். இந்தியத் திருநாட்டின் விடுதலையைத் தலையாய கடமையாகக் கொண்டு செயல்பட்டவர். தாயைக் காப்பது மக்கள் கடன் எனின், தனக்கு அறிவுப் பாலூட்டிய தமிழன்னைக்குக் கடமையாற்றுவதைத் தன் தலையாய கடமை என உணர்ந்து செயல்பட்டவர். தாயாம் தமிழ் அன்னையின் சிறப்பை மட்டுமல்ல, தன்னைப்போல அவளைப் போற்றியோரையும் பாதுகாத்தோரையும் சகோதர வாஞ்சையுடன் போற்றி, அவர்களையும் உலகறியச் செய்திருக்கிறார். அதற்காக வாழ்க்கை வரலாறு எனும் தமிழ் இலக்கிய வகையினை ஆயுதமாகக் கையிலேந்தினார்.

வாழ்க்கை வரலாறு எனும் படைப்புக்களின் மூலம் ம.பொ.சி தமிழ் மண்ணும் மனங்களும் மக்களும் மறந்து போயிருந்த பல நல்ல தேசத் தலைவர்களை உலகறியச் செய்துள்ளார். மேலும் தம் மொழி அறிவையும் வெளிப்படுத்தியுள்ளார். தமிழால் ம.பொ.சி.யும், ம.பொ.சி. யால் தமிழும் பயனடைந்ததை வெளிப்படுத்தும் இவ்வாழ்க்கை வரலாறுகளின் மூலம் ம.பொ.சி. யின்,

1. அயரா உழைப்பு
2. மொழி ஆளுமை
3. பன்னூல் புலமை

ஆகியவை வெளிப்படுகின்றன.

1. அயரா உழைப்பு

எத்துறையில் உயர்ந்தவராயினும் அவர்களுக்கு அடிப்படையாக அமைவது கடின உழைப்பேயாகும். இலக்கிய உலகில் ம.பொ.சி. யின் வெற்றிக்கும் உயர்விற்கும் அடித்தளம் அமைத்துக் கொடுத்தது அவரது ஆர்வம் மேலிட்ட அயரா உழைப்பு என்பது புலப்படுகிறது.

தரவு சேகரிப்பு

ஒருவருடைய வாழ்க்கையில் நடந்த நிகழ்வுகளை வேறொருவர் கூறும்போது அதில் பல ஐயங்கள் எழுவது இயற்கை. ஆனால் அந்நிகழ்வுகளைப் பல ஆவண ஆதாரங்களுடன் விளக்கும் போது அதன் நம்பகத் தன்மை குறித்த ஐயம் எழ வாய்ப்பில்லை. தாம் கூறப்போகும் தலைவருடைய வாழ்க்கையைப் பற்றி, தான் தெளிந்த பின்னரே பிறருக்குக் கூறவேண்டும் எனும் கருத்துடையவரான ம.பொ.சி., தான் தெளிவதற்காகப் பல ஆதாரங்களை முயன்று சேகரித்திருக்கிறார் என்பது அவர்தம் நூல்களில் வெளிப்படுகிறது.

தானே நேரடித் தொடர்புடைய செய்திகளைக் கூறும்போது அதற்கு ஆதாரமாக, அதைப் பற்றி அன்றைய நாளில் வெளிவந்த செய்தித் தாள்களைப் பயன்படுத்துகிறார். தன்னுடைய கட்டுரைச் செய்திகளையும், பிற இதழ்களினுடைய கருத்துக்களையும் வெளிப் படுத்துகின்றார். 'எனது போராட்டம்', 'நானறிந்த ராஜாஜி' ஆகிய இரண்டு நூல்களும் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக விளங்கு கின்றன. தனக்கும் இராஜாஜிக்கும் இடையே மொழிக்கொள்கையால் ஏற்பட்ட கருத்து வேறுபாடு, அதைப் பிற அரசியல் தலைவர்கள் கையாண்டமுறை, தன்னுடைய செயல்பாடு குறித்து, பிற தலைவர்களின் கூற்றுகள், அதனால் ஏற்பட்ட விளைவுகள் என அனைத்திற்கும் பல ஆதாரங்களை வெளிப்படுத்தி எழுதுகின்றார்.

'நானறிந்த ராஜாஜி' எனும் நூலில் அவர் வெளியிட்டுள்ள எழுத்துப்பூர்வமான ஏராளமான ஆதாரங்களிலிருந்து சில சான்றுகள் பின்வருமாறு:

- சாக்ரடீசின் வாழ்க்கையை 'ஸோக்ரதர்' எனும் பெயரில் இராஜாஜி எழுதிய நூலுக்குத் திரு.வி.க. எழுதிய அணிந்துரை. இதன் மூலம் திரு.வி.க. வின் தமிழ் மொழி ஆளுமையோடு இராஜாஜியின் சிறப்பும் பெருமையும் திரு.வி.க. வின் வாய்மொழியாக வெளிப்படுகின்றன.
- ம.பொ.சி. 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' எனும் நூலை எழுதி இராஜாஜிக்கு அனுப்பி வைக்க, அதைப் பெற்றுக்கொண்ட இராஜாஜியின் கடிதம்.
- தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 1-9-1937 இல் உறுப்பினர்களுக்கு ஊதியம் வழங்குவது குறித்த சட்ட முன்வடிவின்படி முதலமைச்சர் இராஜாஜி ஆற்றிய உரை.
- இராஜாஜியின் அரசியல் எதிரியான முத்துராமலிங்கத் தேவர் இராஜாஜியைப் பெருமைப்படுத்திப் பேசியது.
- சென்னை வானொலியில் 6-6-1952இல் முதலமைச்சர் இராஜாஜி வெளி யிட்ட உணவுக் கட்டுப்பாடு மற்றும் பங்கீட்டுமுறைப் பிரகடனத்தின் முக்கியப் பகுதிகள்.

- மிராசுதார் கூட்டத்தில் துணிவுடன் முதல்வர் போலன்றி ஞானி போல் அவர்கள் செய்யும் குற்றங்களை எடுத்துரைத்ததை ம.பொ.சி. தொகுத்தளிக்கும் தன்மை.
- அரைநாள் கல்வித் திட்டத்தின் நோக்கம், செயல்படுமுறை, அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் குறித்து இராஜாஜி வெளியிட்ட அறிக்கை.
- 1960க்குள் எல்லோருக்கும் கல்வி எனும் அரசியல் சட்ட விதிக்கு வெற்றி தேடுவதற்காக அதைப்பற்றி 7-6-1953 செங்கோல் இதழில் எழுதிய தலையங்கத்தின் ஒரு பகுதி.
- இராஜாஜியின் அரைநாள் கல்வித் திட்டத்திற்குக் கிளம்பிய எதிர்ப்பிற்காக இராஜாஜி முதல்வர் பதவியிலிருந்து வெளியேறினார். இதை ம.பொ.சி. யும் வரவேற்றார். அதை ஆதரித்துச் செங்கோலில் ம.பொ.சி. இயற்றிய தலையங்கத்தின் ஒரு பகுதி.
- உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலமே பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்று சென்னை மாகாணக் கல்வி இயக்குநர் ஸ்டத்தம் கூறினார். அதற்கு 19-10-1939 ஆம் தேதியில் முதலமைச்சர் இராஜாஜி எழுதிய மறுப்புக் கடிதம்.
- "ஆங்கிலம் மற்றும் அபிப்பிராய பேதம்" எனும் பகுதி முழுவதும் இராஜாஜி, ம.பொ.சி. யின் மறுப்புக் கடிதங்களும்; அவர்களுடைய கருத்துக்களாகத் தினமணி மற்றும் செங்கோலில் வெளிவந்த தலையங்கங்களும் கட்டுரைகளும் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.
- 1954க்குப் பின்னர்க் காங்கிரசை விட்டு ஒதுங்கிய இராஜாஜி கன்சர்வேட்டிவ் கட்சி தொடங்கப் போவதாக அறிவித்ததை எதிர்த்து 3-9-1959 செங்கோலில் ம.பொ.சி. எழுதிய சிறப்புக் கட்டுரையின் முக்கியப் பகுதியும் அதற்கு இராஜாஜி எழுதிய பதில் கடிதமும்.
- இராஜாஜியின் சுதந்திராக் கட்சி பற்றி 21-6-1959 செங்கோலில் எழுதிய தலையங்கத்தின் முக்கியப் பகுதி.
- சுதந்திராக் கட்சி தொடங்கப்பட்டபோது கொண்டாடப்பட்ட இராஜாஜியின் பிறந்தநாள் விழாவில் ம.பொ.சி. பேசியது.
- ம.பொ.சி. யின் தமிழரசுக் கழக வடக்கெல்லை வெற்றிவிழாவில் இராஜாஜி பேசியதாக மெட்ராஸ் மெயில் எனும் ஆங்கில நாளிதழ் (18-1-1960) வெளியிட்ட செய்தியின் மொழிபெயர்ப்பு.
- இந்தி மொழி ஆதிக்கம் குறித்து மயிலாப்பூர் யுவர் கலாச்சார சங்க ஆதரவில் சஞ்சீவிகாமத் ஹாலில் 23-10-1957இல் நடைபெற்ற கூட்டத்தில் இராஜாஜி பேசியது தினமணியில் 24-10-1957 அன்று வெளியானது. இந்தி மொழி திணிப்புக் குறித்து இராஜாஜியின் கருத்து.
- காங்கிரசாரின் கோஷ்டிப் பூசலுக்கு அடித்தளமிட்ட சீர்காழி கூட்டத்திற்கு வர மறுத்த ம.பொ.சி.யின் கடிதமும், வற்புறுத்தி அழைத்த இராஜாஜியின் கடிதமும்.
- சுதந்திரம் நெருங்கிக் கொண்டிருந்த நேரத்தில் இராஜாஜியின் தலைமை வேண்டாம் என்று கூறியவர்களை எதிர்த்து, இராஜாஜியின் தலைமையால் ஏற்படும் நன்மைகளை எடுத்துக்காட்டிக் கல்கி 14-10-1945 இதழில் எழுதப்பட்ட கட்டுரை.

- ம.பொ.சி. யின் தமிழ் முரசு இதழ், தமிழரசுக் கழகம், இளங்கோவடிகள், கட்டபொம்மன் விழா ஆகியவற்றை வாழ்த்தி இராஜாஜியும் பெரியாரும் எழுதிய கடிதங்கள்.
- கட்டபொம்மன், சிதம்பரனார் ஆகியோரின் வீரவரலாற்றை எதிர்த்தவர்களை எதிர்த்து, செங்கோலின் 26-10-1956 மற்றும் 16-11-1958 ஆகிய தேதிகளில் வெளிவந்த கட்டுரைகளும், ம.பொ.சி. க்கு ஆறுதல் அளித்த இராஜாஜியின் கடிதங்களும்.

மேற்குறிப்பிட்ட சில சான்றுகளை மேலோட்டமாகப் பார்க்கும்போது பல தரவுகளின் தொகுப்புப் போலத் தோன்றும். ஆனால் இவற்றின் மூலம் பல செய்திகள் பெறப்படுகின்றன. ம.பொ.சி.க்கும் இராஜாஜிக்கும் இடையே இருந்த உணர்வுப்பூர்வமான, தூய்மையான, ஆழமான நட்பினை அறிந்து கொள்ளமுடிகின்றது. ம.பொ.சி. யின் அரசியல் தலைவராக, குருவாக இராஜாஜி விளங்கினார் எனினும், ம.பொ.சி. அவரது அடிமையாக இருக்கவில்லை. எதிர்க்க வேண்டிய இடத்தில் இருவரும் ஒருவரை யொருவர் எல்லைக்குட்பட்டு வரம்பு மீறாமல் எதிர்த்துள்ளனர். கை கொடுக்க வேண்டிய நேரங்களில் தயங்காது இருவரும் துணையாக இருந்துள்ளனர். இராஜாஜியின் அரசியல் அறிவு, புத்திசாலித்தனம், நேர்மை, ஆற்றல் என அனைத்தையும் இத்தரவுகள் மூலமாக ம.பொ.சி. விவரிக்கிறார்.

ம.பொ.சி. எழுதிய பிறர் வாழ்க்கை வரலாற்று நூல்களுள் இராஜாஜியைப் பற்றி எழுதியுள்ள வாழ்க்கை வரலாற்று நூல் சிறப்பாக அமைவதற்கு மேற்குறிப்பிட்ட கருத்துக்கள் சான்றுகளாக அமைகின்றன.

இராஜாஜியுடன் மட்டுமல்ல, வ.உ.சிதம்பரனார், வீரபாண்டிய கட்டபொம்மன், வள்ளலார், தெ.பொ. கிருஷ்ணசாமி பாவலர், சிங்காரவேலர் போன்றவர்களின் வரலாற்றினையும் எழுதும்போது அவர்களைப் பற்றிய தரவுகளையும், பிறர் கூற்றுக்களையும் அளித்துள்ளார். வ.உ. சிதம்பரனாரைப் பற்றிக் குறிப்பிடும்போது அவருக்கும் ஆங்கிலேயருக்கும் நடைபெற்ற உரையாடல், வ.உ.சி. யின் மேடைப் பேச்சுகள் ஆகியவற்றைக் குறிப்பிட்டுள்ளார். கட்டபொம்மனது வரலாற்றை விவரிக்கும்போதும் இதுபோன்று விவரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இராமலிங்க வள்ளலாரைப் பற்றி விவரிக்கும் போது அவரை எதிர்த்தவர்களையும், அவர்தம் குரலையும், வள்ளலாரை எதிர்த்துப் போடப்பட்ட வழக்கையும் ஆவணங்களி லிருந்து எடுத்துரைக்கின்றார். தெ.பொ. கிருஷ்ணசாமி பாவலரைப் பற்றி அன்றைய நாடக உலகிலிருந்த டி.கே. பகவதி, எம்.ஜி.ஆர். போன்றோர் கூறியவற்றை இணைப்புகளாக அளித்து விவரித்துள்ளமை வரலாற்றை முழுமைப் படுத்துகின்றது.

இத்தரவுகள் ம.பொ.சி. யின் அயரா உழைப்பை மட்டும் உணர்த்தவில்லை. இதன் மூலம் கூறப்படுபவரது வாழ்க்கை வரலாறு நம்பகத் தன்மையுடனும் ஆதாரங்களுடனும் படிப்பவரைப் போய்ச் சேர்கின்றது. ம.பொ.சி. செங்கோல் இதழில் எழுதியிருப்பது சான்றாக மட்டும் பயன்படவில்லை. அவ்விதழை இலக்கியப் பணிக்காகவும் பயன்படுத்திக் கொண்டார்.

> தமிழ் இனக்கண் கொண்டு பழைய தமிழ் இலக்கியங்களை ஆராயும் பணியைச் செங்கோல் தான் தொடங்கி வைத்தது. அரசியல் நோக்குடனும், சமூகச் சீர்திருத்தக் கண் கொண்டும், சோஷலிசப் பார்வையிலும் இலக்கியங்களை ஆராய்ந்து இலக்கியத் துறையிலே மறுமலர்ச்சி ஏற்படுத்தும் தொண்டையும் செங்கோல்தான் தொடங்கியது. அதுவும் ஆக்க வழியிலே; அழிவுமுறையில் அல்ல (பெ.சு.மணி, ம.பொ.சி. யின் பார்வையில் தமிழ்மொழி இலக்கியம் பண்பாடு, ப.60)

என்று ம.பொ.சி. அவர்களே கூறிக் கொள்கிறார்.

2. மொழி ஆளுமை

பள்ளி சென்று பயிலாதவர்கள் ஓதாமல் உணர்வு பெற்று இறையருளால் 'இம்' என்றால் இருநூறு, 'அம்' என்றால் அறுநூறு என்று கவிதை இயற்றியதைச் சான்றுகள் உணர்த்துகின்றன. இத்தகைய கவிஞர்கள் மட்டும் மொழி ஆளுமை பெற்றவர்கள் அல்லர். பள்ளிக் கல்வி கற்கவில்லையெனினும், ஆர்வ மிகுதியால் இலக்கியங்களைக் கற்று, தான் கற்றதைப் பிறரும் விரும்பி ஏற்குமாறு படைப்பவர்களும் மொழி ஆளுமை பெற்றவர்களே ஆவர். அவ்வகையில் ம.பொ.சி. தமிழ் மொழியின் மீது கொண்டிருந்த ஆளுமை, வாழ்க்கை வரலாறுகளை எழுதுவதில் அவர் கையாண்ட மொழிநடையிலும், உத்திகளிலும், மேற்கோள்களிலும் வெளிப்படுகிறது.

மொழி நடை

கற்பனைக் கதைகள் எழுதுவதைக் காட்டிலும் உண்மை நிறைந்த வரலாறுகளையும் கட்டுரைகளையும் எழுதும்போது சிறந்த மொழிநடை அவசியமாகிறது. படிப்பவர்களின் கவனம் சிதறாமலும் ஆர்வம் குறையாமலும் சோர்வடையாமலும் இருக்கும் முறையில் உண்மைச் சம்பவங்களைக் கோத்துத் தருவதற்கு மொழிநடை சிறந்த ஆயுதமாகக் கருதப்படுகிறது. அதனால்தான்,

> நடை என்பதுஓர் ஆசிரியரின் தனித் தன்மையை வெளிப் படுத்தவல்லது. அவரை இனங்கண்டு கொள்ளும்வகையில், அவருக்கே உரியதாக இருக்கும் வெளிப்பாட்டு மொழிப் பாங்கே அது இலக்கியத்தில் அதுவே மிகப் பெரிய சாதனை (Murry, Problem of Style, P. 8)

எனக் கூறப்படுகின்றது. ம.பொ.சி. தான் கூறவரும் வரலாற்றைப் பிறப்பில் தொடங்கி இறப்புவரை ஒரே கதையாக இல்லாமல் சிறு சிறு உட்தலைப்புகள் மூலம் ஓர் ஆய்வுக் கட்டுரை போல் எழுதுகின்றார். நிகழ்ச்சிகளை வரிசையாகச் சேர்க்காமல் முன் பின்னாகச் சேர்த்தும், பின் வருவதை முன் உணர்த்தும் உத்தியைப் பயன்படுத்தியும், பிற கவிஞர்களின் கவிதைகளையும், கதைத் தலைவருடைய படைப்பு களையும், அவரைக் குறித்துப் பிறர் கூற்றுக்களை மேற்கோளாகப் பயன்படுத்தியும் எழுதியிருக்கிறார்.

உத்தி

தன் எழுத்திற்குச் சுவை கூட்டவும், ஆதாரம் சேர்க்கவும் எழுத்தாளன் பயன்படுத்திக் கொள்ளும் வெளிப்பாடு உத்தி எனப்படுகிறது. அவ்வகையில்,

> காதலர் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல்
> தீதறுக (மங்கல வாழ்த்துப் பாடல், அடி. 61-62)

என இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தின் கதைச் சுருக்கத்தைச் சில சொற்களில் கூறுவதை உத்தி எனக் கொள்ளலாம். சிலம்புச் செல்வர் ம.பொ.சி.யும் சிலம்பால் ஈர்க்கப்பட்டு அவ்வுத்தியைப் பயன்படுத்து கிறார். தன்னுடைய வாழ்க்கை வரலாற்றைப் பற்றிக் கூறத்தொடங்கும் முன்னதாகவே,

> என் கடந்தகால வாழ்க்கை, போராட்ட மயமாகவே இருப்பதால் எனது விருப்பத்துக்கு மாறாக, போராட்டச் சூழ்நிலையிலேயே இந்தச் சமுதாயம் என்னை வைத்து விட்டதால் "எனது போராட்டம்" என்னும் தலைப்பையே நான் தேர்ந்தெடுக்க லானேன். (முதல் பாகம், பக்.3-4)

என்று கூறுகின்றார். இதன் மூலம் குடும்பம், அரசியல், இலக்கியம் பயிலுதல் என அனைத்து வகையிலும் தான் போராடி வென்றதையும், தோல்வியடைந்ததையும் நூலில் கூற இருப்பதை உணர்த்துகிறார். தன்னுடைய வரலாற்றைக் கூறுமிடத்து மட்டுமில்லை, வள்ளலாரின் வாழ்க்கையைப் பற்றிக் கூறும்போது,

> இந்த ஜாதகமுடையோன் சிரஞ்சீவி; இவன் உயிர் போவதில்லை; உலகனைத்தும் வள்ளலாய் வாழ்வான்! தைரியவான்; கனதனங் கருதான்; சுழுத்தி நாட்டமுடையான்; உலகுயிர்பால் பேரிரக்கம் கொண்டவன்; பத்தாவது ஆண்டில் ஒன்றில் காதலனாவான்; கற்பமும், உலகத்தைத் திருத்தும் குணமும் சக்தியால் உணர்வான். முப்பதாம் ஆண்டில் பிறப்பு இறப்பற்ற நிலை யடைவான். நாற்பதாம் ஆண்டில் கைவல்ய ஞானம் பெறுவான்; ஞான சித்தியால் ஐம்பதில் பொன்னுடலாகிப் பொலிவான் (ப. 53)

என்றுரைக்கும் ஜாதகத்தை எடுத்துக் காட்டுகிறார். இச்சாதகக் குறிப்பில் காணப்பட்ட முறையில் இராமலிங்கர் முருகன் மீது காதல் கொண்டு, உலக உயிர்களைக் காக்கும் வள்ளலாக உயர்ந்து தன் பொன்னுடல் நீத்த வரலாற்றை எடுத்துரைக்கின்றார். வள்ளலாரின் வாழ்க்கை வரலாற்றைக் கூற அவருடைய ஜாதகக் குறிப்பைப் பயன்படுத்திக் கொண்டவர், கப்பலோட்டிய தமிழனைப் பற்றியுரைக்கப் பாரதியைத் துணைக்கு அழைத்துக் கொள்கிறார்.

> கண்ணீரால் காத்த பயிர் கருகத் திருவுளமோ? என்றாரே, அந்தப் பயிர்தான் வ.உ.சி. ஓராயிர வருடம் ஓய்ந்து கிடந்த பின்னர், வாராது போல வந்த மாமணியைத் தோற்போமோ? என்றாரே, அந்த மாமணிதான் வ.உ.சி. எண்ணமெல்லாம் நெய்யாக எம் முயிரின் உள்வளர்த்த வண்ண விளக்கிஃது மடியத் திருவுளமோ? என்றாரே அந்த வண்ண விளக்குதான் வ.உ.சி. (ப. 81)

என்கிறார். அடிமைப்பட்டுக் கிடந்த இந்திய மக்களிடையே ஆற்றல் மிகுந்த தலைவராய் உருவெடுத்து அரசியலில் மட்டுமன்றி வணிகத்திலும் ஆங்கிலேயரை எதிர்த்தார். பிறகு நாட்டிற்காகத் தன் செல்வம், இளமை, வாழ்க்கை, வணிகம், குடும்பம் என அனைத்தையும் இழந்தார். தன்னைத்தானே அழித்துக் கொண்டு பிறருக்கு ஒளிதரும் மெழுகுத்திரி போல இவருடைய வாழ்க்கை அமைந்ததை உணர்த்துகின்றார்.

இவ்வாறாக, பின் வருவதை முன் உணர்த்தியும், தான் கூற வரும் வாழ்க்கை வரலாற்றைச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தும் தன் மொழிநடையை மேம்படுத்துகிறார். வாழ்க்கை வரலாற்றைத் தொய்வின்றிக் கூறும் முகமாக ஏற்புடைய இடங்களில் பிற அறிஞர் மற்றும் கவிஞர்களுடைய கவிதை வரிகளை மேற்கோளாக எடுத்தாளுகிறார். இதன் மூலம் அவருடைய மொழிநடை சிறப்படைவதோடு அவர் கூறவரும் கருத்தும் வலுப்பெறுகின்றது.

கப்பலோட்டிய தமிழனின் வரலாற்றை எழுதத் தொடங்கும் போது, தூத்துக்குடியில் உள்ள ஆலைத் தொழிலாளர்களை உரிமைக்காகப் போராட வைத்து, போராட்டத்திற்கும், போராடிய தொழிலாளர் குடும்பத்திற்கும் உதவி செய்து, போராட்டம் பிற மாவட்டத்திற்கும் பரவி வெற்றிபெற வழி வகுத்து, போராட்டத்தை எதிர்த்து ஒடுக்க நினைத்த ஆங்கிலேயருக்கும் அவர்களுக்குத் துணைநின்ற சில இந்தியர்களுக்கும் அச்சத்தை ஏற்படுத்திய ஒரு வீரர் இருந்தார். அவர் தான் வ.உ.சி. என்று இறுதியில் குறிப்பிடுகின்றார். அதன் பிறகு வ.உ.சி. யின் வரலாற்றை எழுதத் தலைப்படுகின்றார். இத்தகைய சிறந்த மனிதனை நன்முறையில் காக்கத் தவறிய தமிழக

மக்களைப் பற்றியும் பின்னர்க் குறிப்பிடுகின்றார். வரலாற்றுத் தலைவனின் ஆற்றலையும், பிற்காலத்தில் அவருக்கு ஏற்பட்ட துன்ப நிலையையும் இடையிடையே கூறி, ஏன் அவ்வாறு ஆயிற்று எனும் எதிர்பார்ப்புடன் படிக்கத் தூண்டும் உத்தியை மிகச் சிறப்பாகக் கையாண்டுள்ளார்.

மேற்கோள் பயன்பாடு

ஓர் எழுத்தாளன் மேற்கோள்களைப் பயன்படுத்துவது மொழி நடை சிறப்படைதல், சுவை கூடுதல் ஆகியவற்றைக் கருதித்தான் என்பது கருத்தாகும். அதனுடன் இணைந்து அவ்வாசிரியரின் மொழி ஆளுமையும் பன்னூல் புலமையும் வெளிப்படுகின்றன. இவ்வகையில் நோக்கின், ம.பொ.சி. அவர்கள் இரண்டு வகையாக மேற்கோள்களை வெளிப்படுத்துகிறார். அவை,

அ) பிற அறிஞர் கூற்றுகள்

ஆ) பேசப்படும் தலைவனின் சொந்தப் படைப்புகள்

என்பதாகும். இம்மேற்கோள்களை எடுத்தாளும் முறையில் ம.பொ.சி. அவர்களின் பன்னூல் புலமையும் அவற்றைக் கற்றுணர்ந்து தகுந்த இடத்தில் பயன்படுத்தும் அயரா உழைப்பும் வெளிப்படுகின்றன.

அ) பிற அறிஞர் கூற்றுகள்

நாடறிந்த நல்லவர்களைப் பற்றிய கதையைக் கூற இயலும் போதெல்லாம் வான் புகழ் வள்ளுவனையும், பாட்டுக்கொரு புலவன் பாரதியையும் துணை சேர்த்துக் கொண்டு தம் பணியைச் செம்மையாக்குகிறார். குறிப்பாக, திருவள்ளுவரைத் துணைக்கு அழைக்காத எழுத்தாளரே இல்லை எனலாம். வீரபாண்டியன் வஞ்சகம் நிறைந்த ஆங்கிலேயருக்குப் பணிந்து வரி செலுத்தி வாழ்வதைக் காட்டிலும், அவர்தம் வாள் முனைக்கு இரையாவது மேல் என்று முடிவெடுக்கும் நிலைக்கு,

> ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே
> கெட்டான் எனப்படுதல் நன்று (ப.14)

எனும் குறளையும், ஆங்கிலேயருடன் சமரசம் செய்து கொள்ளக் கூறப்பட்ட ஆய்வுரையை மறுத்த போது,

> எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்பது அறிவு (ப. 33)

எனும் குறளையும் எடுத்துரைக்கின்றார். நண்பன் என்று நம்பி வந்த தங்களைப் புதுக்கோட்டை மன்னன் ஆங்கிலேயருக்குக் காட்டிக் கொடுத்தான் என்பதை அறிந்து ஊமைத்துரை சீறும் போது அவனை

அமைதியாக்கி அச்சூழலிலும் தன் பகைவன் மீது கோபம் கொள்ளாது உரையாற்றும்போது

அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில் (ப.49)

எனும் குறளையும்,

இடுக்கண் வருங்கால் நகுக; அதனை
அடுத்தூர்வது அஃதுஒப்பது இல் (ப.50)

எனும் குறளையும்,

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று (ப.50)

எனும் குறளையும் எடுத்துரைக்கின்றார். கப்பலோட்டிய தமிழனாம் சிதம்பரனாரைக் குறித்து எழுதும்போது வள்ளுவர் வழியில் செல்கின்றார். சிதம்பரனார் தொடங்கிய கப்பல் கம்பெனியால் தங்கள் வாணிபம் வீழுமோ என்றஞ்சிய கம்பெனியார் சிதம்பரனாரை அணுகி அவர் விலகுவதானால் ஒரு இலட்சம் ரூபாய் தருவதாகக் கூறிய போது அவர்களை விரட்டி விட்டார். இதனைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது,

ஈன்றாள் பசிகாண்பா னாயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை (ப.43)

எனும் குறளை மேற்கோளாகக் குறிக்கிறார். திருவள்ளுவரைப் போலவே பாரதியின் பாடல்களையும் ம.பொ.சி. எடுத்தாள்கிறார். வீரபாண்டியன் யாருக்கும் அஞ்சாதவன் என்பதைக் கூறும்போது,

அச்சமில்லை! அச்சமில்லை!
அச்சமென்ப தில்லையே!
உச்சிமீது வானிடிந்து
வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை! அச்சமில்லை!
அச்சமென்ப தில்லை! (ப.27)

எனும் பாரதியின் பாடலை மேற்கோளாகக் காட்டுகின்றார். ஒரு மனிதனின் அச்சமற்ற தன்மையைத் தெளிவாக விளக்க இதைக் காட்டிலும் சிறந்த தொடர்கள் தமிழில் ஏது? அது போன்றே ஆங்கிலேயருக்கு அடங்க மறுத்த சிதம்பரனாருக்கு,

வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர்
வேறொன்று கொள்வாரோ? (ப.43)

என்றும்,

மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதுவும்
நூலோர்கள் செக்கடியில் நோவதுவுங் காண்கிலையோ!

மாதரையும் மக்களையும் வன்கண்மை யாற்பிரிந்து
காதல் இளைஞர் கருத்தழிதல் காணாயோ! (ப.80)

என்றும் சிதம்பரனாருக்காகவே பாடியுள்ள பாரதியின் பாடலையும் எடுத்துக்காட்டுகின்றார்.

இவ்விரு கவிஞர்கள் மட்டுமன்றி, இயன்ற இடங்களில் எல்லாம் வேறு சில கவிஞர்தம் கவிதை அடிகளையும் எடுத்தாளுகிறார். சிறந்த சிவ பக்தராக விளங்கிய சதாவதானி கிருஷ்ணசாமி பாவலரின் பக்திச் சிறப்பை உணர்த்தவருமிடத்தில்,

நாடகத்தா லுன்னடியார்
போல் நடித்து நான்நடுவே
வீடகத்தே புகுந்திடுவான்
மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே
இடையறா அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத்
தந்தருளெம் உடையானே (ப.69)

என்னும் மாணிக்கவாசகரின் பாடலை எடுத்தியம்புகிறார். நாடக மேடையிலும் உண்மை வாழ்விலும் சிவனடியாராகவே வாழ்ந்த பாவலர் தெய்வ நிந்தனையாளரை எதிர்த்துப் போராடியதையும் நினைவுகூர்கின்றார். வ.உ. சிதம்பரனார் அடைந்த துயரங்களைக் குறிப்பிடும் பொழுது,

வல்லாளன் சிதம்பரனார் சிறையிற்பட்ட
வருத்தமெலாம் விரித்துரைக்கில் வாய்விட்டேங்கி
கல்லான மனத்தவரும் கண்ணீர் கொட்டக்
கனல் பட்ட வெண்ணெயெனக் கரைவார் இன்றும் (ப.11)

எனும் நாமக்கல் கவிஞரின் பாடல் அடிகளை எடுத்துக் காட்டுகிறார். துயரங்களை அடுக்கிக் கூறுவதைக் காட்டிலும் ஒரு கவிதையின் அடி துன்பத்தின் ஆழத்தை உணர்த்திவிடும் என்பது பெறப்படுகிறது. சிதம்பரனாரின் குண இயல்புகளை, தன்மையைப் பிறர் மீது அவர் வெளிப்படுத்தும் அன்பை,

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றா ரெனக்கழறும் - மாமறைக்குச்
சான்றாச் சிதம்பரமென் தந்தை நினைக்கண்டேன்
நான்மா றென்செய்வேன் நவில்.

கைம்மாறு வேண்டாக் கடப்பாட்டி னென்றனுக்கு
மெய்ம்மாட்டி நின்றருளும் வித்தகனே - செம்மறையின்
பாவனைத்துஞ் சிந்தை பதிவித்தேன், சிதம்பரமென்
தேவநின தின்னருளால் தேர்ந்து.

சாவா மருந்தெனவே தற்பரனார் வள்ளுவர்செய்
பாவால் அறிவெனக்குப் பாலித்த - தேவா!
சிதம்பரமென் சற்குருவே! சிந்தையினில் நின்னின்
பதம்பெற்றேன் என்றும் பணிந்து (பக். 31-32)

எனும் சகஜானந்தரின் மொழிகளில் உணர்த்துகின்றார். இதன் மூலம் சிதம்பரனாரின் உயர் பண்புநலன்கள் உணரப்படுகின்றன. இச்சான்றுகள் மூலம் ம.பொ.சி. யின் மொழி ஆளுமையும், பன்னூல் புலமையும், தரவுகளை நினைவில் கொள்ளும் அறிவுத் திறனும், அதைத் தேடிப் பெறுவதற்கான அயரா உழைப்பும் வெளிப்படுகின்றன.

ஆ) பேசப்படும் தலைவனின் சொந்தப் படைப்புகள்

ஒருவரின் வாழ்க்கை வரலாற்றை மற்றொருவர் எழுதும் போது அதில் விருப்பு வெறுப்பு கலந்துவர வாய்ப்பு உள்ளது. ஆனால் அவரவர் வாழ்க்கை அனுபவங்களை அவர்களே எடுத்துரைக்கும் போது அதில் உண்மையும் உணர்வும் கலந்துவரக் காணலாம். இது வ.உ.சி. யின் வாழ்வில் இணைந்து வருவதைக் காணலாம்.

வ.உ.சி. தன் மனைவி வள்ளியம்மாள் 1901 ஆம் ஆண்டு அகால மரணமடைந்த போது பல இரங்கற் பாக்களைப் பாடியுள்ளார்.

என்னுடைய நேயர்களும் ஏழைபர தேசிகளும்
என்னுடைய வீடுவந்தால் ஏந்திழைதான் - தன்னுடைய
பெற்றோர்வந் தார்களெனப் பேணி உபசரிப்பாள்
கற்றோரும் உள்ளுவக்கக் கண்டு (ப.30)

என்பதில் வ.உ.சி. யின் புலமையும் அவர் மனைக்கிழத்தியின் மாண்பும் வெளிப்படுகின்றன. மனைவியைப் பிரிந்த போது மட்டுமல்ல, மனையாள் உயிருடன் இருக்கும் போது தன் நிலையை உயர்த்தவும் கவிதை யாத்துள்ளார். தன்னுடைய சிறைப் பறவைத் தோற்றத்தைக் கூறும் பாங்கு அவர் உருவத்தை நம் கண் முன்னே கொண்டு வருகிறது.

திருவும் புகழும் சிறந்தன பிறவும்
மருவுற நிற்குமென் மாசிலா மனைவியே!
....
சிறியவிரு சட்டைகள் தேகத்தில் புனைந்துளேன்
சிறியவோர் குல்லாச் சிரத்தினில் தரித்துளேன்
....
நலமெலாம் எளிதினில் நல்கிடுங் கழலொன்று
வலதுதாள் மேலே மாணுற யாத்துளேன்
சிவனடித் தொண்டர்கள் சிறப்புற அணிந்திடும்
நவமறு மணிநாண் நற்களம் பூண்டுளேன்
தவத்தினில் சிறிது சரீரம் இளைத்துளேன்
உவப்பொடு கண்டெனை உயர்வெலாம் பெறுவையே (பக். 73-74)

என்கிறார். செல்வச் சிறப்பு நிறைந்த அவர்தம் தோற்றம் மாறி, பருத்திச்சட்டையும், கால்விலங்கும், கட்டைத்தாலியும், மொட்டைத் தலையும் கொண்டிருந்ததை உணர்த்துகின்றார். மனைவிக்கு மட்டுமல்லாது உயிர் கொடுத்த தந்தைக்கும் கடிதம் எழுதியுள்ளார்.

சுவாமியே! தந்தையே! தூயநற் பெரியோய்!
அவாவியே வந்தெனை ஆண்டருள் ஈசா! (ப.73)

என்று தந்தையை விளித்து, தன் உடல் எடை குறைந்ததையும், உடல் நலத்தைக் கருத்தில் கொண்டு தனக்கு அரிசிச் சோறு வழங்கப்படு வதையும் கூறி,

உரிமையொடு பெற்றெனை உவப்பொடு வளர்த்த
பெருமைசேர் அன்னைக்கும் பிறர்க்கும் எனது
மெய்மன வாக்கால் விரும்பிஇன் றளித்தேன்
தெய்வ வணக்கமும் சீர்தரும் வாழ்த்துமே (ப. 73)

என்று தாய்க்கும் வணக்கம் கூறி முடிக்கின்றார். வ.உ.சி. யைக் கொண்டே அவர்தம் பண்பை வெளிப்படுத்துவது ம.பொ.சி. யின் படைப்பாக்க உத்தியை வெளிப்படுத்துகிறது. 'மேதையின் சிறந்தன்று கற்றது மறவாமை' என்பர். ம.பொ.சி. யும் தாம் கற்றதை மறவாமல் ஆங்காங்கே பயன்படுத்துவதிலிருந்து அவர்தம் மேதைத் தன்மை புலப்படுகிறது.

மனதைப் புண்படுத்தா மொழி

ஒருவர் தன்னுடைய பன்னூல் புலமையை, மொழி ஆளுமையை வெளிப்படுத்துவதைக் காட்டிலும், பிறர் மனம் புண்படா வகையில் மனித நேயம் மிக்க மொழிநடையை வெளிப்படுத்துவது அவசிய மானது. அவ்வகையில் பிறருடைய, தன்னுடைய வாழ்க்கை நிகழ்வுகளை எழுதும் ம.பொ.சி. மிகக் கவனத்துடன் இதனைக் கையாள்கிறார்.

இராஜாஜியைத் தன் குருவாக ஏற்றுக் கொண்டு பின்னர் எதிர்த்த போதும் தொடக்கக் காலத்தில் காமராசரை ஆதரித்து, பின்னர் மறுத்த போதும் நிகழ்ந்தவைகளை மிக அடக்கமாகக் கூறியிருக்கிறார். பெரியாருடனான தன்னுடைய சந்திப்புகளையும் அவ்வகையிலே வெளிப்படுத்துகிறார். தன்னுடைய வாழ்க்கை ஒரு திறந்த புத்தகம் எனக் கூறிக் கொண்டு படிப்பவர் மனமும் முகமும் வாட்டமடையும் தன்மையிலான உண்மைகளை வெளிப்படையாகக் கூறாமல், சிலவற்றை மென்மையாகக் கூறியிருக்கின்றார். சிலவற்றை மறந்து விட்டதாகக் கூறுகின்றார். பல செய்திகளை நாளோடும் இடத்தோடும் பொழுதோடும் குறிப்பிடும் இவரே, சில செய்திகளை 'எனக்குச் சரியாக நினைவில்லை' என்று கூறுவது இத்தகைய நிலை

கருதித்தானோ என நினைக்கத் தோன்றுகிறது. ம.பொ.சி. அவர்களே இராஜாஜி குறித்து எழுதும் முன்னுரையில்,

> அவர் மறைந்த பின்னர், அவரோடு எனக்கு இருந்த தொடர்பு பற்றி விமர்சன ரீதியில் எழுதி, மக்களுக்கு வழங்கவேண்டி ஏற்பட்டதால், கருத்து வேற்றுமைக்குரிய விஷயங்களிலே சிலவற்றை எழுதாமல் விடவேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்பட்டது. அது, அரசியல் நாகரிகமும் ஆகும்.
>
> (நானறிந்த ராஜாஜி, ப.4)

என்று குறிப்பிட்டுள்ளார். இது மனிதநேயம் மிகுந்த அவருடைய மொழிநடைக்குச் சான்றாக அமைகிறது. ம.பொ.சி. யின் மொழிநடை அவரது நூல்களிலுள்ள பொருளுக்குத் தக்கவாறு அமைந்துள்ளது. இவரது நடை சொல்லும் செய்தியைத் தெளிவாகச் சொல்லும் முறையில் உள்ளது.

> ***எழுத்துகளில் இனிமையைப் பார்க்கலாம்; உயிர்த் துடிப்புடன் கூடிய இனிய எளிய தூயநடை அவருக்கு உடன் பிறப்பு*** *(மு. சுப்பையன், சிலம்புச்செல்வர் ம.பொ.சி., ப.75)*

என்பது கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் மதிப்பீடு.

சமுதாய வரலாறு

ஒருவருடைய வாழ்க்கை வரலாற்றைக் கூறும் போது அவர் பிறந்தார், இவ்வாறு வாழ்ந்தார், மறைந்தார் என்று கூறுவது வரலாறாகாது. இதை உணர்ந்த ம.பொ.சி. பேசப்படுபவரது குடிச் சிறப்பையும் பெருமையையும் சேர்த்து எழுதுகிறார். இது செய்வன திருந்தச் செய்யும் அவருடைய மாண்பையும், அயரா உழைப்பையும் வெளிப்படுத்துகிறது.

தன்னுடைய வாழ்க்கை வரலாற்றைக் கூறும்போது, தான் இன்னாருக்கு மகனாக, இந்தக் குலத்தில், இந்த நாளில், இவ்விடத்தில் பிறந்தேன் என்று கூறியிருக்கலாம். ஆனால் கிராமணி எனும் தமது சாதியைப் பற்றி விரிவாக எடுத்துரைக்கிறார். விசயநகரப் பேரரசின் ஆதிக்கத்தால் ஒடுக்கப்பட்ட வீரர் குலம் நாடார், கிராமணி எனப் பிளவுற்றதையும், அம்மக்கள் வெவ்வேறு இடங்களில் குடியமர்ந்ததையும்,

> தமிழகத்தின் மீது விசயநகரப் பேரரசு ஆதிக்கம் பெறுவதற்கு முன்பு, 'கிராமணி'-'நாடார்' எனப்படுவோர் 'மறவர்' (அரசர்) குலத்தவராகவே இருந்து வந்தனர். விசயநகரப் பேரரசு ஆந்திரப் படை வீரர்களோடு வந்து தமிழகத்தில் ஆதிக்கம் பெற்றபோது, உள்நாட்டிலிருந்த மறவர்களை அது ஒடுக்க முயன்றது.

> அம் மறவர்களிலே பலர், பாண்டிய நாட்டின் உட்பிரதேசங் களிலேயும், பாண்டி நாட்டுக்கு வெளியே கிராமங்களிலேயும் குடிபுகுந்தனர். நாட்டுப் புறத்திலே குடிபுகுந்தவர்கள் 'நாடார்' எனவும், கிராமங்களிலே குடிபுகுந்தவர்கள் 'கிராமணி' எனவும் பெயர் பெற்றனர் என்று சொல்லப்படுகிறது.
>
> (எனது போராட்டம், முதல் பாகம், ப.15)

எனக் கூறுகின்றார். இது அவர்தம் சமுதாய மற்றும் வரலாற்று அறிவை வெளிப்படுத்துகின்றது. இதைப் போன்றே வீரபாண்டிய கட்டபொம்மனின் வரலாற்றைக் கூறுமிடத்தும் அவன் குடி உருவான வரலாற்றை எடுத்துரைக்கின்றார். அதுமட்டுமன்றி வீரபாண்டிய கட்டபொம்மனின் வரலாற்றை எழுதுவதை மட்டும் நோக்கம் எனக் கொள்ளாமல் நாட்டு விடுதலைக்கு வித்திட்டவர்களின் முதல் போர் என்ற முறையிலேயே அந்நூலை எழுதியுள்ளார். எனவே வீரபாண்டிய கட்டபொம்மனின் வீர மரணத்துடன் நூலை முடிக்காமல் அவனுடைய போராட்டத்தைத் தொடர்ந்து நடத்திய ஊமைத்துரையின் வீரத்தையும் ஆங்கிலேயரைக் கலங்கடித்த அச்சமூகத்தின் வரலாற்றையும் எழுதுகிறார். இதன் மூலம் ம.பொ.சி. தாம் கூற வந்த கருத்தை நிலைநிறுத்த மேற்கொள்ளும் விடா முயற்சியும் வெளிப்படுகிறது.

> **தமிழரசுக் கழகத்தைத் தோற்றுவிக்கும்போது சாதி, சமய வேற்றுமையற்ற தமிழினத்தின் பொதுக் கலைகள், இலக்கியங்கள் ஆகியவற்றைப் போற்றி, அவற்றின் வளர்ச்சிக்காகப் பாடுபடுதல்**
>
> *(பெ.சு.மணி, ம.பொ.சி. யின் பார்வையில் தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு, ப.56)*

என்பதைத் தமது கழகத்தின் நான்காவது கொள்கையாகக் கொண்டிருந்தார் என்பதிலிருந்து அவருடைய இலக்கியப் பணி ஆர்வம் தெரியவருகிறது. எனவே ஆண்டுதோறும் கண்ணகிக்கான சிலப்பதிகார மாநாடு நடத்துவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார்.

ம.பொ.சி. யின் வாழ்க்கை வரலாற்று இலக்கியங்களிலிருந்து அவர் ஒரு சிறந்த அரசியல் தொண்டனாக, தலைவனாக, போராளியாக, இலக்கியவாதியாக, பத்திரிக்கையாளராக, உண்மையும் உத்தமமும் நிறைந்த உழைப்பாளியாக, பல்வேறு அறிஞர்கள், தலைவர்களின் பாராட்டுதலைப் பெற்றவராக, நேர்மையானவராக இருந்துள்ளார் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

பின்னிணைப்பு

ம.பொ.சி. யின் நூல்கள்

1. தமிழும் கலப்படமும்
2. தமிழா? ஆங்கிலமா?
3. பாரதியும் ஆங்கிலமும்
4. காந்தியடிகளும் ஆங்கிலமும்
5. இன்பத்தமிழா, இந்தி, ஆங்கிலமா?
6. ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு வரலாறு
7. வள்ளலார் வளர்த்த தமிழ்
8. தமிழிசை வரலாறு
9. மொழிச் சிக்கலும் மாநில சுயாட்சியும்
10. விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு
11. தமிழை வளர்க்கக்கோரி ஆளுநர்க்கு விண்ணப்பம்
12. தமிழகத்தில் பிற மொழியினர்
13. தமிழிசை வாழ்க!
14. விடுதலைக்குப்பின் தமிழ் வளர்த்த வரலாறு
15. நாடகத் தமிழ்
16. கல்விமொழி தமிழா? ஆங்கிலமா?
17. ஆங்கிலம் வளர்த்த மூடநம்பிக்கை
18. தமிழும் சமஸ்கிருதமும்
19. தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்
20. தமிழும் இந்தியும்
21. தமிழும் அரசியலும்
22. எழுத்துச் சீர்திருத்தம் தேவையா?
23. தெய்வத் தமிழ்
24. சிலப்பதிகாரமும் தமிழரும்
25. கண்ணகி வழிபாடு
26. வள்ளுவர் வகுத்த வழி
27. இளங்கோவின் சிலம்பு
28. எங்கள் கவி பாரதி
29. இலக்கியத்தின் எதிரிகள்
30. இலக்கியச் செல்வம்
31. இன்பத் தமிழகம்
32. வீரக் கண்ணகி
33. நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்
34. இலக்கியத்தில் சோசலிசம்
35. கம்பர் கவியின்பம்
36. உலக மகாகவி பாரதி

37. ஔவை-யார்?
38. மாதவியின் மாண்பு
39. கோவலன் குற்றவாளியா?
40. சிலப்பதிகாரத் திறனாய்வு
41. இலக்கியத்தில் இன உணர்ச்சி
42. திருக்குறளில் கலை பற்றிக் கூறாததேன்?
43. பாரதியின் பாதையிலே
44. கலிங்கத்துப் பரணி திறனாய்வு
45. சிலப்பதிகார யாத்திரை
46. சிலப்பதிகார ஆய்வுரை
47. தொல்காப்பியரிலிருந்து பாரதியார் வரை
48. கம்பரிடம் யான் கற்ற அரசியல்
49. பாரதியின் போர்க்குரல்
50. ஔவையார் அருளிச் செய்த கல்வியொழுக்கம்
51. சிலப்பதிகார உரையாசிரியர் சிறப்பு
52. கம்பரும் காந்தியடிகளும்
53. கம்பரின் சமயக் கொள்கை
54. இலக்கியங்களில் இன சமயக் கலப்புகள்
55. இராமன் சீதாப்பிராட்டி வாக்குவாதம்
56. சிலப்பதிகாரத்தில் யாழும் இசையும்
57. சிலப்பதிகாரம் (முழு உரை)
58. இலக்கியங்களில் புத்திர சோகம்
59. சிலம்பில் ஈடுபட்டதெப்படி?
60. தமிழகத்தில் தமிழரசு
61. தமிழர்க்குச் சுயநிர்ணயம்
62. புதிய தமிழகம்
63. தமிழரும் பிரிட்டிஷ் திட்டமும்
64. ஏன் வேண்டும் எதிரணி?
65. ஆந்திரப் பொங்கல்
66. கம்யூனிஸ்டுகள் முடிவை மாற்ற முயல்வார்களா?
67. தமிழரசுக்கழக முதலாவது மாநில மாநாடு தலைமையுரை (1947)
68. தமிழன் குரல்
69. சுயாட்சித் தமிழகம்
70. பிரிவினை வரலாறு
71. மே தினப்புரட்சி
72. திராவிடத்தாரின் திருவிளையாடல்கள்
73. சீர்திருத்தப் போலிகள்
74. திராவிடர் கழகமே! வேங்கடத்திற்கு வெளியே போ!
75. தமிழரசா, திராவிடஸ்தானா?
76. த.அ.க. மாநில மாநாட்டுத் தலைமையுரை (1952)
77. தமிழர் திருநாள்

78. வடக்கெல்லைப் போர்
79. முரசு முழங்குகிறது
80. ம.பொ.சி. கூறுகிறார்
81. பொம்மன் புகழிலும் போட்டியா?
82. தி.மு.க. வின் கொள்கை மாற்றம்
83. சுயாட்சியா? பிரிவினையா?
84. பாரதி கண்ட ஒருமைப்பாடு
85. காந்தியடிகளும் சோசலிசமும்
86. சட்டமன்றத்தில் சுயாட்சிக் குரல்
87. மாநில சுயாட்சிக் கிளர்ச்சியின் வரலாறு
88. வந்தேமாதரம் வரலாறு
89. திருவள்ளுவரும் கார்ல் மார்க்சும்
90. ஆன்மிகமும் அரசியலும்
91. ம.பொ.சி. படைத்த புதிய தமிழகம்
92. பயங்கரவாதமும் காந்தி சகாப்தமும்
93. ஈழத்தமிழரும் நானும்
94. கப்பலோட்டிய தமிழன்
95. தமிழர் கண்ட காந்தி
96. சுதந்திரப் போரில் தமிழகம்
97. வீரபாண்டிய கட்டபொம்மன்
98. கயத்தாற்றில் கட்டபொம்மன்
99. தளபதி சிதம்பரனார்
100. சுதந்திரவீரன் கட்டபொம்மன்
101. முதல் முழக்கம்
102. கப்பலோட்டிய சிதம்பரனார்
103. எனது போராட்டம் (இரண்டு பாகங்கள்)
104. காந்தியடிகள் காலத்துக்கு முற்பட்ட விடுதலைப் போர்
105. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு
106. காந்தியடிகளைச் சந்தித்தேன்
107. புதிய தமிழக வரலாறு
108. விடுதலைப்போரில் தமிழகம் (இரண்டு பாகங்கள்)
109. தோழர் சிங்காரவேலரின் வீர வாழ்க்கை
110. இந்திய தேசியத்திற்கு ஒரு நூறு வயது
111. நானறிந்த ராஜாஜி
112. நாடகப் பேராசிரியர் சதாவதானி கிருஷ்ணசாமி பாவலர் வாழ்க்கை வரலாறு
113. வேதாரண்யத்திலிருந்து டில்லி ராஜ்காட் வரை
114. எனது பார்வையில் நாமக்கல் கவிஞர்
115. நேருஜி என் ஆசான்
116. எனது பார்வையில் ராசராசன்
117. தடைகளை வென்று தலைமை பெற்ற ம.பொ.சி.

118. இராசேச்சுவரியுடன் வாழ்ந்த காலம்
119. எனது பார்வையில் பாவேந்தர்
120. ம.பொ.சி. திருநாவுக்கரசு - நினைவஞ்சலி
121. தேசிய காங்கிரசின் நூறு ஆண்டு வரலாறு
122. வள்ளலாரும் பாரதியும்
123. வள்ளலார் கண்ட சாகாக் கலை
124. வள்ளலாரும் காந்தியடிகளும்
125. முப்பெரும் ஞானியர்
126. வள்ளலார் மீண்டும் வருவாரா?
127. ஆன்மநேய ஒருமைப்பாடு
128. வானொலியில் ம.பொ.சி.
129. பேச்சுக் கலை
130. மேடைப்பேச்சும் பொதுக்கூட்டமும்
131. ம.பொ.சி. பேசுகிறார் (பர்மா நாட்டில்)
132. வானொலியில் வள்ளலார்
133. சென்னைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாப் பேருரை
134. நவபாரதத்தை நோக்கி (காந்தி கிராமத்தில்)
135. பாரதியார் பற்றி ம.பொ.சி. பேருரை
136. சிலம்புச் செல்வரின் பல்கலைப் பேருரை
137. கல்வி நெறியாளர் (நெ.து. சுந்தரவடிவேலு மணிவிழா)
138. வள்ளலார் வகுத்த வழி
139. சுதந்திரப் போர்க்களம்
140. மலேசியாவில் ஒருமாதம்
141. மாஸ்கோவிலிருந்து லண்டன் வரை
142. மொரீசியஸ் தீவில் ஒரு வாரம்
143. அமெரிக்காவில் மூன்று வாரம்
144. வைகுந்தம் திறந்தது (சிறுகதைகள்)
145. கட்டுரைக் களஞ்சியம்
146. சிந்தனை அலைகள்
147. சான்றோரின் சாதனைகள்
148. மகாத்மாவும் மதுவிலக்கும்
149. தமிழர் திருமணம்
150. பாரதியாரின் போர்க்குரல்
151. கல்வியில் மாறுதல் தேவை ஆனால் அணுகுமுறை சரியல்ல
152. எம்.ஜி.ஆருடன் எனக்கிருந்த தொடர்பு
153. சிலம்புச் செல்வரின் தலையங்க இலக்கியம்
154. The Great Patriot V.O. Chidambaram Pillai
155. The First Patriot Veera Pandia Katta Bomman
156. The Universal Vision of Saint Ramalinga
157. History of Freedom Movement in Tamilnadu

துணைநூற்பட்டியல்

1. முதன்மை ஆதாரங்கள்

1. சிவஞானம், ம.பொ., **எனது போராட்டம்**, முதல் பாகம், அன்னை சிவகாமி பதிப்பகம், சென்னை-18, இரண்டாம் பதிப்பு, 2003.

2. மேற்படி.

3. மேற்படி, **கப்பலோட்டிய தமிழன்**, பூங்கொடி பதிப்பகம், சென்னை-4, இரண்டாம் பதிப்பு, 2003.

4. மேற்படி, **கிருஷ்ணசாமி பாவலர் வாழ்க்கை வரலாறு**, பூங்கொடி பதிப்பகம், சென்னை-4, முதல் பதிப்பு, 1988.

5. மேற்படி, **வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு**, பூங்கொடி பதிப்பகம், சென்னை-4, நான்காம் பதிப்பு, 2001.

6. மேற்படி, **வீரபாண்டிய கட்டபொம்மன்**, பூங்கொடி பதிப்பகம், சென்னை-4, இரண்டாம் பதிப்பு, 2003.

7. மேற்படி, **தோழர் சிங்கார வேலரின் வீர வாழ்க்கை**, பூங்கொடி பதிப்பகம், சென்னை-4, முதல் பதிப்பு, 1985.

8. மேற்படி, **நானறிந்த ராஜாஜி**, பூங்கொடி பதிப்பகம், சென்னை-4, இரண்டாம் பதிப்பு, 2003.

2. துணைமை ஆதாரங்கள்

1. இராசபாண்டியன், முகிலை., **தமிழக எல்லைப் போராட்டங்கள்**, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113, முதல் பதிப்பு,2007.

2. சாலினி **இளந்திரையன், வாழ்க்கை வரலாற்று இலக்கியம்**, மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம்-1, இரண்டாம் பதிப்பு, 2002.

3. சிவகாமி,ச., **தமிழ் வாழ்க்கை வரலாற்றிலக்கியம்**, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113, முதல் பதிப்பு, 1985.

4. சுப்பையன், மு., **சிலம்புச் செல்வர் ம.பொ.சி.**, சுரா பதிப்பகம், சென்னை-40, முதலாம் பதிப்பு 2008.

5. சுப்பிரமணியன்,ச.வே., **தமிழ் இலக்கிய வகையும் வடிவும்,** தமிழ்ப் பதிப்பகம், சென்னை-96, முதல் பதிப்பு, 1984.

6. சூரியசந்திரானந்தா (ப.ஆ.), **தமிழரசுத் தந்தை ம.பொ.சி. நூற்றாண்டு விழா மலர்,** உலகத் தெய்வநெறி மன்றம், சென்னை-40, முதல் பதிப்பு, 1995.

7. ஞானசிகாமணி,வீ., **எ.ஆ. கிருஷ்ணபிள்ளையின் நூல்கள்,** வேதாகம மாணவர் பதிப்பகம், சென்னை-60, முதல் பதிப்பு, 1978.

8. மணி, பெ.சு., ம.பொ.சி. **யின் பார்வையில் தமிழ்மொழி இலக்கியம் பண்பாடு,** உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-131, முதல் பதிப்பு, 2004.

9. மேற்படி, **ம.பொ.சிவஞானம்,** சாகித்திய அகாதெமி, புதுதில்லி, முதல் பதிப்பு, 2005.

10. மேற்படி,**தடைகளை வென்று தலைமை பெற்ற** ம.பொ.சி., பூங்கொடி பதிப்பகம், சென்னை-4, முதல் பதிப்பு, 1985.

11. முல்லை முத்தையா,(தொ.ஆ.), **தமிழகம் தந்த** ம.பொ.சி., இன்ப நிலையம், சென்னை-4, முதல் பதிப்பு, 1957.

12. விமலானந்தம்,மது.ச., **வாழ்க்கை இலக்கியம் - ஒரு வளர் கலை,** விஜய் வெளியீட்டகம், தஞ்சாவூர், முதல் பதிப்பு, 1981.

13. மேற்படி,**தமிழ் இலக்கிய வரலாறு,** தொகுதி 2, ஐந்திணைப் பதிப்பகம், சென்னை-5, முதல் பதிப்பு, 1987.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113
அண்மை வெளியீடுகள்

	ரூ.பை.
தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்	200.00
தொல்காப்பியம்-சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும்	200.00
தொல்காப்பியம்-பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்	325.00
தொல்காப்பியம் - பொருளதிகார மூலமும் பேராசிரியர் உரையும்	300.00
தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - தொல்லியல், வரலாறு, சமூகவியல்	100.00
கவிதையியல்	50.00
Bibliography on Translations	175.00
சங்க இலக்கிய ஆய்வு தெ.பொ.மீ.யும் மேலை அறிஞரும்	60.00
திராவிட மொழி இலக்கியங்கள்	200.00
வா.கீ.ச. கலாநிதி கி.வா.ஜகந்நாதன்	60.00
நாசுதிராதிக்-ஞாலமுதன்மொழிஆய்வுகளுக்குப்பாவாணர் தரும் ஒளி	35.00
தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி	45.00
மொழி பெயர்ப்பியல்	45.00
தமிழில் தத்துவ நூல்கள்	40.00
சி.வை. தாமோதரம்பிள்ளை	40.00
சொல்லிலக்கணக் கோட்பாடு தொல்காப்பியம் - முதல் பகுதி	70.00
இசுலாமியச் சிற்றிலக்கியங்கள்	40.00
பாவாணர் கடவுள் நம்பிக்கையும் சமயச் சால்பும்	30.00
மகளிர் முன்னேற்றத்தில் "அவள் விகடன்" இதழின் பங்களிப்பு	35.00
திருக்குறள் உரைச் சிந்தனைகள்	50.00
தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்	120.00
மீனவர் சமுதாய நாட்டுப்புறப் பாடல்கள்	35.00
A Course in Modern Standard Tamil	65.00
இசை மருத்துவம்	45.00
கம்பன் களஞ்சியம்	280.00
மொழியியல் நோக்கில் தொல்காப்பிய சங்க இலக்கிய ஆய்வுகள்	40.00
தமிழர் பண்பாட்டுச் சொற்கோவை	250.00
தமிழிலக்கியக் குறியீடுகள் அகராதி	225.00
அரங்கேற்று காதை ஆராய்ச்சி	140.00
பழந்தமிழ் அமைப்பியல் மற்றும் குறியியல் ஆய்வுகள்	45.00
இந்தியச் சூழலில்மொழிஇழப்பு ஒரு சமுதாய மொழியியல் கண்ணோட்டம்	60.00
பழந்தமிழ் அறிவியல்	45.00
நீறணி பவளக்குன்றம்	35.00
குலோத்துங்கன் பார்வையில் சமுதாயம்	70.00
இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்கள் தொகுதி-1	100.00
இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்கள் தொகுதி-2	100.00
நீறணி பவளக் குன்றம் (ஒன்பதாம் திருமுறை ஆய்வுநூல்)	35.00
உலகப் பகுத்தறிவு நீரோட்டத்தில் பெரியார்	35.00
குலோத்துங்கன் கவிதைகள் ஒரு கோபுர தீபம்	60.00
தமிழறிஞர் அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியப் பாடல்கள்	30.00
நாமக்கல் கவிஞரின் தமிழ்ப்பணி	30.00
ஈழத்தில் கண்ணகி கலாச்சாரம்	30.00
சிறுபஞ்மூலம்-ஒருசமூகவியல் பார்வை	30.00

---

642 ம.பொ.சி.யின் வாழ்க்கை வரலாற்று இலக்கியங்கள் 60.00